# 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்
## பிரிவுகளின் வரிசை
## அத்தியாயம் - 1

**பிரிவுகள்**


1. குறுந்தலைப்பு
2. சொற்களின் பொருள் விளக்கங்கள்


## அத்தியாயம் - 2
## கிராம சபை


3. கிராம சபை


## அத்தியாயம் - 3
## ஊராட்சிகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களையும் மாவட்ட ஊராட்சிகளையும் அமைத்தல்


4. ஊராட்சி கிராமங்களை அமைத்தல்
4.அ பேரூராட்சிகளை கிராம ஊராட்சிகளாக மாற்றி அமைப்பதற்கு சிறப்பு சட்ட வழிமுறைகள்
5. 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவுகள் அல்லது அதன் விதிகளை விரிவுபடுத்துவது.
6. ஊராட்சிகளை அமைத்தலும் அவற்றை நிறுமங்களாகப் பதிவு செய்தலும்
7. கிராம ஊராட்சிகளின் பாகுபாட்டினை மாற்றியமைத்தல்
8. கிராம ஊராட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை
9. கிராம ஊராட்சிகளின் ஆட்சிக் காலம்
9.A தனி அலுவலர் நியமனம்
10. கிராம ஊராட்சிக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்
11. இட ஒதுக்கீடு
12. ஊராட்சி கிராமத்தை வார்டுகளாகப் பிரித்தல்
13. உறுப்பினர்களின் பதவிக்காலம்
14. கிராம ஊராட்சிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள்


### ஊராட்சி ஒன்றிய குழுக்கள்


15. ஊராட்சி ஒன்றியத்தை அமைத்தல்
16. ஊராட்சி ஒன்றியம் அமைத்தலும் அவற்றை நிறுமங்களாக பதிவு செய்தலும்
17. ஊராட்சி ஒன்றியக் குழுவின் அமைப்பும், உறுப்பினர்களின் எண்ணிக்கையும்
18. ஊராட்சி ஒன்றிய குழுவின் ஆட்சிக்காலம்
19. ஊராட்சி ஒன்றிய குழுவிற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்
20. இட ஒதுக்கீடு
21. ஊராட்சி ஒன்றியத்தை வார்டுகளாக பிரித்தல்
22. உறுப்பினர்களின் பதவிக்காலம்
23. ஊராட்சி ஒன்றியத்திற்கான வாக்காளர் பட்டியல்


### மாவட்ட ஊராட்சிகள்


24. மாவட்ட ஊராட்சியை அமைத்தலும் அவற்றை நிறுமங்களாக பதிவு செய்தலும்
25. மாவட்ட ஊராட்சியை அமைத்துருவாக்குதல்
26. உறுப்பினர்களின் தேர்தல்
27. மக்கள் தொகை கணக்கீட்டிற்குப் பின்பு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத் தீர்மானித்தல்
28. மாவட்ட ஊராட்சி வார்டுகளின் எல்லையை வரையறுத்தல்
28A தேர்தல் தொடர்பான சிறப்பு விதிகள் (வார்டு பிரித்தல்)

29. உறுப்பினர்களின் பதவிக்காலம்
30. மாவட்ட ஊராட்சிக்கான வாக்காளர் பட்டியல்
31. மாவட்ட ஊராட்சியின் ஆட்சிக் காலம்
32. இட ஒதுக்கீடு

## உறுப்பினர்களின் தகுதி, தகுதியின்மை முதலியன

33. வேட்பாளர்களின் தகுதி
34. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் தகுதியின்மை
35. தேர்தல் குற்றங்களுக்காக, குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டவர்களின் தகுதியின்மை
36. வாக்காளர்களின் தகுதியின்மை
37. வேட்பாளர்களின் தகுதியின்மை
38. உறுப்பினர்களின் தகுதியின்மை
38.A. சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர் ஊராட்சிகள் தகுதியின்மை
39. உறுப்பினர்களை பதவியில் மீண்டும் சேர்த்தல்
40. உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ள வேண்டிய உறுதி/ஏற்பு அல்லது உறுதியளிப்பு
41. உறுப்பினர்களின் தகுதியின்மை தொடர்பான பிரச்சினையை முடிவு செய்யும் அதிகார அமைப்பு

## கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்

42. கிராம ஊராட்சியின் தலைவரும் துணைத்தலைவரும்
43. கிராம ஊராட்சி தலைவரைத் தேர்ந்தெடுத்தல்
44. கிராம ஊராட்சி துணைத் தலைவரை தேர்ந்தெடுத்தல்
45. தலைவர், துணைத் தலைவரின் பதவி முடிவுற்று போதல்
46. கிராம ஊராட்சி தலைவரின் அலுவல்கள்
47. தலைவரின் அலுவல்கள் வந்தடைதலும் மற்றும் தலைவர் பதவியில் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்புதலும்
48. தலைவரின் அலுவல்களை ஒப்படைத்தல்

## ஊராட்சி ஒன்றியக்குழு மற்றும் மாவட்ட ஊராட்சியின் தலைவர் மற்றும் துணைத்தலைவர்

49. ஊராட்சி ஒன்றிய குழுவின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்
50. ஊராட்சி ஒன்றியகுழு தலைவர் தேர்தல்
51. ஊராட்சி ஒன்றியகுழு துணைத்தலைவர் தேர்தல்
52. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவரின் அலுவல்கள்
53. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் துணைத்தலைவரின் பதவி முடிவுற்று போதல்
54. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவரின் அலுவல்கள் வந்தடைதலும், ஒப்படைப்பு செய்யப்படுதலும் மற்றும் தலைவரின் பதவியில் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்புதலும்
55. மாவட்ட ஊராட்சியின் தலைவர் துணைத் தலைவர்
56. மாவட்ட ஊராட்சியின் தலைவரின் மற்றும் துணைத்தலைவரின் தேர்தல்
57. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக்குழு மாவட்ட ஊராட்சி தலைவர், பதவிகளில் இட ஒதுக்கீடு

## அத்தியாயம் - 4

### தேர்தல் தொடர்பான குற்றச்செயல்கள்

58. தேர்தல் இரகசியத்தை மீறுதல்
59. தேர்தலொன்றில் ஆள் மாறாட்டம் செய்ததற்காகக் குறைந்த தண்டனை அளித்தல்
60. தேர்தல் தொடர்பாக வகுப்பினர்களுக்கிடையே பகைமையை வளர்த்தல்
61. தேர்தல் நாளுக்கு முந்திய நாளும் தேர்தல் நாள் அன்றும் பொது கூட்டங்கள் நடத்துவதற்கு தடை
62. தேர்தல் கூட்டங்களில் கலவரங்கள்
63. துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் முதலானவற்றை அச்சிடுவதன் மீதான கட்டுப்பாடுகள்
64. தேர்தல்களில் அலுவலர்கள் முதலானோர் வேட்பாளர்களுக்காக செயல்படுவதோ அல்லது வாக்களிப்பதில் செல்வாக்கைப் பயன்படுத்துதலோ கூடாது
65. வாக்குச் சாவடிகளிலோ அதற்கு அருகாமையிலோ தமக்கு ஆதரவாக வாக்கு திரட்டுவதை தடைசெய்தல்
66. வாக்குச் சாவடிகளிலோ அதற்கு அருகாமையிலோ முறையற்று நடந்தமைக்கு தண்டனை
67. வாக்கு வாசடியில் தவறாக நடந்தமைக்கான தண்டனை
68. தேர்தல்களில் போக்குவரத்து சாதனங்களைச் சட்டத்திற்கு முரணாக வாடகைக்கு அமர்த்துவதற்கோ அல்லது முயன்று பெறுவதற்கான தண்டனை
69. தேர்தல் தொடர்பான அலுவல் கடமையை மீறுதல்
70. வாக்குச் சாவடியில் இருந்து வாக்குச் சீட்டுகளை அப்புறப்படுத்துவது ஒரு குற்றச்செயலாக இருத்தல்
71. பிற குற்றச் செயல்களும் அவற்றிற்கான தண்டனைகளும்
72. ஒரு சில தேர்தல் சார்ந்த குற்றச் செயல்களை செயலாட்சி வரம்பிற்கு எடுத்துக் கொள்ளுதல்

### தேர்தல் நோக்கங்களுக்காகச் சொத்தினைக் கோரி பெறுதல்

73. தேர்தல் நோக்கங்களுக்கான வளாகங்கள், ஊர்திகள் முதலானவற்றைக் கோரிப் பெறுதல்
74. தொகை, செலுத்துதல்
75. தகவல் பெறுவதற்கான அதிகாரம்
76. வளாகத்தினுள் நுழைதல் மற்றும் சோதனை இடுதல் பற்றிய அதிகாரம்
77. கோரிப் பெற்ற வளாகத்திலிருந்து வெளியேற்றல்
78. வளாகத்தை கோரிப் பெறுவதிலிருந்து விடுவித்தல்
79. கோரிப் பெறுவது தொடர்பாக அரசின் அலுவலை ஒப்படைத்தல்
80. கோரிப்பெற்ற ஆணையை மீறியதற்கான தண்டனை

### உறுப்பினர்கள்

81. உறுப்பினரின் உரிமைகள்
82. கிராம ஊராட்சி தலைவர், துணைத் தலைவர் ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சியின் தலைவர் துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் எவரும் ஊதியம் பெறுதல் கூடாது என்பது

82A. தலைவர் உறுப்பினர் (அலுவல் பணி/அயல்நாடு செல்ல அரசு அனுமதி தேவை)

## அத்தியாயம் - 5
## செயல் அலுவலரின் அதிகாரங்களும் கடமைகளும்

83. கிராம ஊராட்சியின் செயல் அலுவலா்
84. செயல் அலுவலரின் கடமைகள்

### ஆணையா்

85. ஆணையா்
86. செயல் அலுவலா் மற்றும் ஆணையரின் நெருக்கடிக்கால அதிகாரங்கள்

### செயலாளா்

87. செயலாளா்
88. செயலாளரின் கடமை அதிகாரம் மற்றும் அலுவல்கள்

## அத்தியாயம் - 6
## நடைமுறை

89. ஊராட்சிக் கூட்டங்களில் தலைமையேற்றல்
90. ஊராட்சிகளின் கூட்டங்கள்
91. உறுப்பினா்கள் எப்போது விவாதங்களில் பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பது என்பது
92. கூட்ட நடவடிக்கைகளின் நிகழ்ச்சிக் குறிப்புகள்
93. ஆவணங்களை தருவிப்பதற்கு, ஊராட்சிகளுக்கு உள்ள அதிகாரம்
94. கிராம ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றிய குழுக்கள் மாவட்ட ஊராட்சிகள் மற்றும் துணைக் குழுக்களின் நடவடிக்கைகள்
95. கூட்டுக் குழுக்களை நியமித்தல்
96. குழுக்கள்
97. நிலைக்குழுக்கள்

### நிா்வாக அறிக்கைகள்

98. கிராம ஊராட்சியின் நிா்வாக அறிவிக்கைகள்
99. வட்டார ஊராட்சி மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் நிா்வாக அறிக்கை

### நடவடிக்கைகளைச் செல்லத்தாக்குதல்

100. கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி ஒன்றியக்குழு மற்றும் மாவட்ட ஊராட்சி முதலியனவற்றின் செயல்கள், குறைபாடு, காலியிடம் முதலியவற்றின் காரணமாகச் செல்லாதவை ஆக்கப்படுதல் ஆகா என்பது

## அத்தியாயாம் - 6A

100A. சிறப்பு கிராம ஊடராட்சிகள் சிறப்பு அதிகாரம்

## அத்தியாயம் - 7
## ஊராட்சிகளின் பணியமைப்பு அவற்றின் அதிகாரங்களும் அலுவல்களும்

101. ஊராட்சிகளை நிறுவுதல் ஊராட்சி பணியிடங்கள்
102. ஊராட்சிகளின் அலுவலா்கள் மற்றும் பணியாளா்களின் பணி நிபந்தனைகள்
103. பொதுவிலுள்ள அலுவலா்களைப் பணியமா்த்தல் செய்தல்

104. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு அலுவலா்களையும் பணியாளா்களையும் இடமாற்றம் செய்தல்
105. மாவட்ட ஊராட்சியின் அலுவலா்களையும் பணியாளா்களையும் இடமாற்றம் செய்வதற்கு அரசிற்கு உள்ள அதிகாரம்
106. அலுவலா்களையும் பணியாளா்களையும் தண்டிப்பதற்கான அதிகாரம்
107. குறித்த சில பணிப்பாணைகள் மற்றும் மக்கள் நல்வாழ்வு பணியமைப்பிற்கு பொருந்துதல்
108. ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலுள்ள தலைமையாசிரியா்கள் உள்ளடங்கலான ஆசிரியா்களும் அடிப்படை பணியாளா்களும் அரசு பணியாளா்களாக இருப்பா் என்பது
109. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மக்கள் நல்வாழ்வு பணியமைப்பில் உள்ள நல்வாழ்வு உதவியாளா்கள், துணைச் செவிலியா், மருத்துவச்சிகள் மற்றும் பேறுகால உதவியாளா்கள் ஆகியோா் அரசுப் பணியாளா்களாக இருப்பா் என்பது

## அத்தியாயம் - 8
## கிராம ஊராட்சிகள் ஒன்றியக்குழுக்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் அலுவல்கள் அதிகாரங்கள் மற்றும் சொத்து

110. குறித்த சில பொறுப்புகளை ஆற்ற கிராம ஊராட்சிகளுக்குள்ள கட்டாய கடமை
111. பிற பொறுப்புகளை ஆற்றுவதற்கு கிராம ஊராட்சிக்குள்ள அதிகாரம்
112. குறித்த சில பொறுப்புகளை ஆற்றுவதற்கு ஊராட்சி ஒன்றிய குழுவிற்குள்ள கடமை
113. சமூக மேம்பாட்டிற்கான தேசிய விரிவாக்க பணித் திட்டத்தை நிறைவேற்றுவதை ஊராட்சி ஒன்றிய குழுவிடம் ஒப்படைத்தல்
114. சில திட்டங்களை ஊராட்சி ஒன்றிய குழுவிடம் ஒப்படைத்தல்
115. குறித்த சில பொறுப்புகளை ஆற்ற ஊராட்சி ஒன்றிய குழுவின் அதிகாரம்
116. பொதுவான இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள்
117. பொதுச் சாலைகளிலும் பொது இடங்களிலும் விளக்கு வசதி செய்தல்
118. பொதுவான மருந்தகங்கள், குழந்தை நல மையங்களை பராமரித்தல் பேணிவருதல்
119. அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்தல் நிறுவனங்களை மேலாண்மை செய்தல் நிறைவேற்றுதல் அல்லது பராமரித்தல் முதலியவற்றை கிராம ஊராட்சிக்கு மாற்றம் செய்தல்
120. ஒதுக்கீடு செய்யப்படாத காடுகளையும் பிற நிறுவனங்களை அல்லது பணிகளை கிராம ஊராட்சிக்கு மாற்றம் செய்தல்
121. கிராம ஊராட்சியிடம் உரிமை நிலை பெற்றுள்ள ஒதுக்கப்படாத காடுகளின் அனுபோக உரிமையை மீட்க அரசுக்குள்ள அதிகாரம் இழப்பீடு கொடுத்தல் முதலியன
122. நிலைக்கட்டளைகளின் அல்லது இனாம்களின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்வதற்கு அல்லது திரும்பக் கைக்கொள்வதற்கு நில நிா்வாக ஆணையருக்குள்ள அதிகாரம்
123. ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவல்களைக் கூடுதலாக்க அரசிற்குள்ள அதிகாரம்
124. நன்கொடைகளையும், அறப்பொறுப்புகளையும் ஏற்று கொள்வதற்குள்ள அதிகார வரம்பு
125. பொது சாலைகளை கிராம ஊராட்சியிடம் ஒப்படைத்தல்
126. ஊராட்சி ஒன்றியக்குழுவிடம் பொதுச் சாலைகளை ஒப்படைப்பது
127. இச்சட்டத்தின் செயற்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ள பொதுச் சாலைகள் குறித்து கிராம ஊராட்சிக்குள்ள கடமை
128. அபாயகரமான கட்டிட அமைப்புகளுக்கான முன்னெச்சரிக்கை எற்பாடுகள்
129. அபாயகரமான மரங்களை பற்றிய முன்னெச்சரிக்கைகள்
130. கட்டிடங்கள் அல்லது நிலத்திற்கு வேலியிடுதல் மற்றும் புதா் செடிகளையும் மரங்களையும் வெட்டி சரி செய்தல்
131. பொதுச் சாலைகளில் அல்லது அவற்றின் மீதான இடையூறுகளுக்குத் தடை விதித்தல்
131A. ஒரு சில விளம்பர பலகைகள் அமைப்பது தடுத்தல்
132. கிராமத்தின் பொது சொத்து அல்லது வருமானத்தை கிராம ஊராட்சிக்கு சோ்த்தல்
133. நீா்ப்பாசனப் பணிகளை பராமரித்தல் குடிமராமத்தை நிறைவேற்றுதல் முதலியன
134. இரத்துவாரி நிலப்பரப்புகளிலுள்ள குறித்த சில புறம்போக்குகளைப் பயன்படுத்துவதை கிராம ஊராட்சி முறைப்படுத்துதல்

135. 1908-ஆம் ஆண்டு தமிழ்நாடு எஸ்டேட்டுகள் நிலச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட பண்ணை தோட்டத்திலுள்ள சில பொது நிலங்களின் உபயோகத்தை கிராம ஊராட்சி முறைப்படுத்துதல்
136. சேகரிக்கப்பட்ட கழிவுகள் முதலியன கிராம ஊராட்சியை சேர்ந்தது
137. கிராம ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றிய குழுவிற்கும் தேவைப்படும் அசையாச் சொத்துக்களை 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்துதல்
138. வழிபாட்டு தலங்கள் நிர்வகிப்பவர்களிடமிருந்து பங்களிப்புகள் பெறுதல்
139. கேளிக்கைகளுக்கான இடங்களை மூட உத்தரவிட அதிகாரம்
140. அபாயகரமான நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பள்ளிக்கு செல்ல தடை விதித்தல்
141. கட்டாய அம்மை குத்துதல்
142. பெரியம்மை, காலரா நோய்களைப் பற்றி செய்திகளை அறிவிக்கும் கடமை
143. அபாயகரமான குளங்கள், கிணறுகள் குழிகள் முதலியவற்றை பொறுத்த அளவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்
144. நிலங்கள் மற்றும் கட்டிடங்களிலிருந்து குப்பை கூளங்கள், நச்சுச்செடிகளை அகற்றுதல்
145. அபாயகரமான கட்டுமானங்களை அகற்றியதில் கிடைத்த பொருள்களை உபயோகிக்க அல்லது விற்க அணையர் அல்லது செயலாளருக்கு உள்ள அதிகாரம்
146. ஈட்டுத் தொகைக்கான வரம்பு
147. பொதுச் சந்தைகள்
148. தனியார் சந்தைகளுக்கு உரிமம் அளித்தல்
149. சந்தைகள் குறித்த பூசல்களை முடிவு செய்தல்
150. உரிமம் பெறாத தனியார் சந்தைகளில் விற்பனையை தடை செய்தல்
151. பொதுச் சாலைகளில் விற்பனை செய்வதற்கு தடை செய்தல்
152. சந்தைகளை வகைப்படுத்துதல்
153. தனியார் சந்தைகளை வைத்திருப்பதற்கான நபர்களின் உரிமையினைக் கையகப்படுத்துதல்
154. பொது இறங்கும் இடங்கள் மற்றும் வண்டி நிறுத்தங்கள் முதலியன
155. தனியார் வண்டி நிறுத்தங்கள்
156. பொது இறைச்சிக் கொட்டில்கள்
157. கால்நடைகளை வெட்டுவதற்கான இடங்கள் பயன்படுத்தப்படுவதையும், இறைச்சிக் கொட்டில்களுக்கான உரிமத்தையும் தடை செய்தல் அல்லது ஒழுங்கு முறைப்படுத்துதல்
158. கட்டிடங்களுக்கு இலக்கமிடுதல் அல்லது பெயர் சூட்டுதல் முதலியன
159. எந்தெந்த நோக்கங்களுக்காக உரிமமின்றி இடங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்பது
160. தொழிற்சாலைகளை கட்டுவதற்கும் இயந்திரங்களை நிறுவுவதற்கும் அனுமதி அளித்தல்
161. உரிமங்களையும் அனுமதிகளையும் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் பொறுத்து விதிகளைச் செய்வதற்கு அரசிற்குள்ள அதிகாரம்
162. 1888-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுமக்கள் கூடுமிடங்கள் சட்டத்தைத் திருத்துதல்
163. மாவட்ட ஊராட்சியின் அலுவல்கள்
164. மாவட்ட ஊராட்சியன் பொதுவான அதிகாரங்கள்
165. மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை
166. மாவட்ட ஊராட்சியின் விவர உரைகளும் அறிக்கைகளும்

## அத்தியாயம் - 9
## வரிவிதிப்பு மற்றும் நிதி

167. உள்ளூர்த் தீர்வை
168. உள்ளூர்த் தீர்வை மேல்வரி
169. உள்ளூர்த் தீர்வை வசூலிப்பது தொடர்பான விதிகள்
170. நிலவரி ஒப்படைவு செய்தல்
171. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படக்கூடிய வரிகள்
172. வீட்டு வரி
172-A. விளம்பர வரியை நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல்
172-B விளம்பரங்களுக்கான தடை
173. நீக்கப்பட்டது
174. வரி விதிப்பிற்கு எதிரான மேல் முறையீடுகள்
175. சொத்துரிமை மாற்றத்தின் மீது தீர்வை
176. விலக்களிப்பு
177. கிராம ஊராட்சிக்குச் சேரவேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை வசூலிக்குமாறு நில வருவாய்ப் பணியாளர்களைக் கோருவதற்கான அதிகாரம்
178. வசூலிக்க இயலாத தொகைகளை தள்ளுபடி செய்தல்
179. உள்ளூர் கல்வி மானியம்
180. நீக்கப்பட்டது
181. ஊராட்சி வளர்ச்சி வட்டாரங்களின் வகைப்பாடு
181-A. ஊராட்சி நிதியை வைப்பீடு செய்தல்
181-B. செயல் திட்டத்திற்கு அல்லது ஏற்பாடு திட்டத்திற்கு மானியம் அல்லது கடன் வழங்குதல்
181-C. ஊராட்சி கடன் பெறுதல்
181-D. ஊ்ராட்சிகள் ஒன்றுக்கொன்று கடன் அளித்துக் கொள்வதற்கான நடைமுறை
182. நீக்கப்பட்டது (உள்ளூர் சாலைகள் மானியம்)
183. நீக்கப்பட்டது (கிராம வீட்டு வரிக்கீடான மானியம்)
184. நீக்கப்பட்டது (குறித்த சில நேர்வுகளில் மானியத்திலிருந்து கழிவு செய்தல்)
185. ஊராட்சி ஒன்றிய நிதி மற்றம் கிராம ஊராட்சி நிதியையும் அமைத்தல்
186. ஊராட்சி ஒன்றிய (பொது) நிதி
187. ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதி
188. கிராம ஊராட்சி நிதி
189. மாவட்ட ஊராட்சி (பொது) நிதி

### செலவுகள்

190. பெறப்பட்ட பணங்களைப் பயன்படுத்துதலும் நிதிகளிலிருந்து செலவு செய்தலும்
191. கிராம ஊராட்சி நிதி மற்றும் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு
192. வரவு செலவு திட்டங்கள் தயாரித்தலும் அதற்கு ஒப்பளிப்பு வழங்குதலும்
193. தணிக்கையாளர்களை அமர்த்துதல்
194. பிற உள்ளாட்சி அதிகார அமைப்புகளிலான செலவினங்களுக்குப் பங்களிப்பு
195. அரசால் அளிக்கப்பட்ட கடன்களையும் முன்பணங்களையும் வசூலித்தல்
196. மாவட்ட ஊராட்சிக்கு இந்த சட்டத்தின் குறித்த சில பிரிவுகளின் பொருந்துகை
197. அரசால் அறிவிக்கை செய்யப்பட வேண்டிய மாவட்ட ஊராட்சியின் குறித்த சில அதிகாரங்களும், பணிகளும்
198. நிதி ஆணையம்

## அத்தியாயம் - 9-ஏ
## தொழில் வரி

198-ஏ தொழில் வரி – பொருள் விளக்கம்
198-பி தொழில் வரி விதித்தல்
198-சி பணியாளர்களுக்குரிய தொழில் வரியை பிடித்தம் செய்து ஊதியம் வழங்குதல்
198-டி பணி தருநரால் தாக்கல் செய்தல்
198-இ பணி தருநரின் நிலையை கணக்கிடுதல்
198எ.ஃ.ப் பணத்தண்டணையும் வட்டியும்
198-ஜி மேல் முறையீடு
198-எச் விலக்கு
198-ஐ நீக்கல் மற்றும் காப்பும்

## அத்தியாயம் - 10
## கட்டுப்பாடு செய்யும் அதிகார அமைப்புகள்

**199** ஊராட்சிகளைக் கண்காணிப்பதற்காக அலுவலர்களை நியமித்தல்
200 ஆய்வு செய்யும் அலுவலர்களின் அதிகாரங்கள்
201. கட்டுப்பாடு செய்யும் நோக்கத்திற்காக அலுவலரின் அதிகாரங்கள்
202. இந்தச் சட்டத்தின் படியான தீர்மானம் முதலியவற்றை நிறுத்தி வைப்பதற்கு அல்லது நீக்கம் செய்வதற்கு அதிகாரம்
203. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஆய்வாளருக்கு அவசரகால அதிகாரங்கள்
204. கிராம ஊராட்சித் தலைவர் அல்லது செயல் அலுவலர் முதலியோர் கடமையை செய்ய தவறுகையில் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம்
205. கிராம ஊராட்சி தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்
206. கிராம ஊராட்சி துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குதல்
207. ஊராட்சி ஒன்றியக் குழு தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்
208. ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்
209. மாவட்ட ஊராட்சித் தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்
210. மாவட்ட ஊராட்சி துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்
210A. பிரிவு 82-ஏ யை மீறி வெளிநாடு சென்ற உறுப்பினர்கள் தண்டனை பெற்றால் பதவி நீக்கம்
211. கிராம ஊராட்சி துணைத் தலைவர் மற்றம் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்
213. மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மற்றம் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்
214. கிராம ஊராட்சியைக் கலைத்தல்
215. ஊராட்சி ஒன்றியக் குழுவை கலைத்தல்
216. மாவட்ட ஊராட்சியைக் கலைத்தல்
217. ஊராட்சியின் சார்பாகச் செயல்படுகின்ற அலுவலர்களின் அதிகாரங்களும் இழப்பீடு செலுத்துதற்கான கட்டுப்பாடும்
218. அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்
219. மேலாய்வுகள்

## அத்தியாயம் - 11

## பொது மற்றம் பல்வகை
## உரிமங்களும் அனுமதிகளும்

220. உரிமம் மற்றும் அனுமதிகள் தொடர்பான பொதுவான வரைமுறைகள்
221. அரசும், சந்தைக் குழுக்களும் உரிமம் பெற்று அனுமதிகளைப் பெற வேண்டியதில்லை என்பது அறிவிப்புகள், ஆணைகள் முதலானவற்றை வலியுறுத்தி நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரம்
222. அறிவிப்பு ஆணை முதலானவற்றிற்கு கட்டுப்பட்டு நடப்பதற்கான காலம் மற்றும் தவறுகையில் வலியுறுத்தி நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம்
223. நுழைவதற்கும் ஆய்வு செய்ததற்குமான அதிகாரம்
224. எடைகளையும் அளவைகளையும் சோதனையிடுதல்
225. கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து தகவலைக் கேட்டுப் பெறுவதற்கான அதிகாரம்
226. கொடுக்கப்பட வேண்டியவற்றை வசூலிப்பதற்கான கால வரம்பு

### குற்ற வழக்குகள், உரிமை வழக்குகள் முதலானவை

227. குற்றவழக்குகள் தொடுப்பதற்கு அதிகாரமளிக்கப் பெற்ற நபர்கள்
228. குற்றச் செயல்களை இணக்கமாக தீர்த்துக் கொள்ளுதல்
229. குற்ற வழக்குகள் மற்றம் இணக்கங்கள் ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை செய்தல்
230. குற்றவழக்குத் தொடர ஒப்புதல் அளித்தல்
231. கிராம ஊராட்சிக்கு எதிரான செயல் பற்றிய அறிவிப்பு
232. கிராம ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் அலுவலரின் நல்லெண்ணத்தின் பேரிலான செயல்களுக்கு பாதுகாப்பு
233. தேர்தல் நடவடிக்கைகளில் நிறுத்தக் கட்டளைகள் வழங்கப்படக்கூடாது என்பது
234. சொத்து இழப்பு, வீணடிப்பு தவறாகப் பயன்படுத்துதல் அகியவற்றில் தலைவருக்கும் செயல் அலுவலருக்கும் உறுப்பினர்களுக்குமான பொறுப்புகள்
235. வரிக்கணிப்பை குற்றஞ்சாட்டப்படக் கூடாது
236. பொதுச் சாலைகள், சந்தைகள், கிணறுகள் முதலானவை அனைவருக்கும் பொதுவாக இருத்தல் என்பது
237. கட்டணம் வசூலிக்கும் உரிமையைக் குத்தகைக்கு விடுவதற்கான அதிகாரம்
238. உள்ளூர் அதிகார அமைப்புகளுக்கு இடையேயான பூசல்களை நீதிமுறையில் தீர்த்தல்
239. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்
240. வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்
241. மாவட்ட திட்டக் குழு விதிகள்
242. விதிகளை இயற்றுவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்

## அத்தியாயம் - 12
## தண்டனைகள்

243. விதிகளை மீறியதற்கான தண்டனைகள்
244. துணை விதிகள் மற்றும் அவற்றை மீறியதற்கான தண்டணைகள்
245. இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டணைகள் தொடர்பான பொது வகைமுறைகள்
246. தகுதியின்மையாகும் போது கிராம ஊராட்சியில் உறுப்பினராக தலைவராக அல்லது துணைத் தலைவராக அல்லது ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராக தலைவராக அல்லது துணைத் தலைவராக செயல்படுவதற்கான தண்டணை

246A. பிரிவு 82-A-ல் குறிப்பிட்ட நிபந்தனை மீறி வெளிநாடு செல்லும் உறுப்பினர்க்கு தண்டனை
247. ஒப்பந்தப்பணியில் உரிமையை வைத்துக்கொள்ளும் அதிகாரி அல்லது பணியாளர் ஒருவருக்கு குற்றத் தண்டனை
248. செயல் அலுவலர் அல்லது ஆணையர் அல்லது செயலாளர் அல்லது அவரது சார்பாளரை சட்ட முறையற்ற வகையில் தடுத்து நிறுத்தல்
249. ஊராட்சிகளுக்கு எதிராகத் தடங்கல் செய்வது தடை செய்யப்படுகிறது
250. அறிவிப்பை அகற்றுதல், தெளிவில்லாமல் செய்தல் ஆகியவற்றைத் தடை செய்தல்
251. தகவல் அளிக்காமை அல்லது தவறான தகவல் அளித்தமைக்கான தண்டனை

**அத்தியாயம் - 13**
**பல்வகை**

**252.** ஊராட்சிகள் முதலானவற்றைச் சுட்டும் சுட்டுகைக்குப் பொருள் கொள்ளுதல்
253. புதிதாக அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சிகள் தொடப்பான தனி வகையங்கள்
254. 1920-ஆம் ஆண்டு சென்னை உள்ளாட்சி வாரியங்கள் சட்டம் முதலானவற்றைச் சுட்டுகைக்குப் பொருள் கொள்ளுதல்
255. நீக்கமும் காப்பும்
256. ஐயப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்
257. ஊராட்சிகளின் அதிகாரம், அதிகார அமைப்பு மற்றும் பொறுப்புகள்
257-A மழைநீர் சேகரிப்பு - தவறினால் குடிநீர் இணைப்பு துண்டிப்பு

**தேர்தல் குறித்த தகராறு**

258. தேர்தல் மனுக்கள்
259. தேர்தல்களை செல்லத்தக்கதல்ல என அறிவிப்பதற்கான ஆதாரங்கள்
260. ஊழல் நடவடிக்கைகள்
261. இடைப்பாடுகால வகை
262. சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட வேண்டிய விதிகள் அறிவிக்கைகள் மற்றும் ஆவணங்கள்

இணைப்பு பட்டியல் - I வீட்டு வரியை நிர்மாணிப்பதற்கான முறை
இணைப்பு பட்டியல் - II சாதாரண தண்டகட்டணங்கள்
இணைப்பு பட்டியல் - III தொடர்ந்து மீறுவதற்கான தண்டகட்டணங்கள்
இணைப்பு பட்டியல் - IV ஊராட்சிகளுக்கு பிரித்தளிக்க வேண்டிய பொருள்கள்

# அத்தியாயம் - 1
# முதனிலை ஏற்பாடு

**01. குறுந்தலைப்பு, எல்லையும் தொடக்கமும்**

(1) இந்தச் சட்டம், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் என அழைக்கப்படும்

**(2)** இச்சட்டம், கீழ்க்கண்ட பகுதிகள் தவிர, தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் பொருந்தும்.

(i) சென்னை மாநகர்
(ii) 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட மதுரை மாநகர் (தமிழ்நாடு சட்டம் 15/1971)
(iii) 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட கோயம்புத்தூர் மாநகர் (தமிழ்நாடு சட்டம் 25/1981)
(iv) 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் தொழில் நகரியங்கள் (தமிழ்நாடு சட்டம் V/1920)
(v) 1924-ஆம் ஆண்டு இராணுவ முகாமிடக்கூடிய பகுதிகள் (Cantonments) சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட இராணுவ ஆட்சிக்குரிய முகாம்கள் (மத்திய சட்டம் II/1924)

(3) அரசு, அறிவிக்கையின் மூலம் குறிக்கக்கூடிய தேதி முதல் இச்சட்டம் நடைமுறைக்கு வரும்.

**02. சொற்களின் பொருள் விளக்கங்கள்**

இந்தச் சட்டத்தில், சந்தர்ப்பத்திற்கேற்ப வேறுபொருள் கொள்ளப்பட வேண்டியிருந்தாலன்றி

(1) ‘கட்டடம்’ என்பது, இல்லம், புற – மனை, கூடாரம், தொழுவம், கழிப்பிடம், கொட்டில், குடிசை (2.5 மீட்டர் உயரத்திற்கு மேற்படாத எல்லைச்சுவர் அல்லாத பிற) சுவர் ஒன்றையும் மற்றும் கல்லாலோ, செங்கற்களாலோ, மண்ணாலோ, மரத்தாலோ, உலோகத்தாலோ கூடிய தச்சு வேலையினாலோ அல்லது பிற பொருளாலோ கட்டப்பட்ட கட்டிட அமைப்புகளும் அடங்கும்

(2) ‘தற்செயலாக ஏற்பட்ட காலியிடம்’ என்றால் காலம் முடிவதால் அன்றி மற்றப்படியாக எழுகின்ற ஒரு காலியிடம் என்று பொருள்படும். மற்றும் ‘தற்செயலாக நடத்தப்படும் தேர்தல்’ என்றால் தற்செயல் காலியிடம் ஒன்றை நிரப்புவதற்காக நடத்தப்படும் ஒரு தேர்தல் என்று பொருள்படும்.

(3) ‘தலைவர்’ (Chairman) என்றால், ஊராட்சி ஒன்றியமன்றத்தின் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சியின் தலைவர் என்று பொருள்படும்.

(4) [1] (* * * *) நீக்கப்பட்டது

(5) 'மாவட்ட ஆட்சித் தலைவர்' என்றால், ஒரு வருவாய் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் என்று பொருள்படும்.

(6) 'ஆணையர்' என்றால், ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணையர் என்று பொருள்படும்.

(7) 'நிறுமம்' என்றால், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒரு நிறுமம் என்று பொருள்படும். மற்றும், அச்சட்டத்தின் 591-ஆம் பிரிவின் வரையறுக்குட்பட்ட அன்னிய நிறுமம் ஒன்றையும் உள்ளடக்கும் (மத்திய சட்டம் 1/1956)

(8) 'மாவட்டம்' என்றால், ஒரு வருவாய் மாவட்டம் என்று பொருள்படும்.

(9) 'மாவட்ட ஊராட்சி' என்றால், 24ஆம் பிரிவின் உட்பிரிவு (1)ன்படி அமைக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி என்று பொருள்படும்.

(10) 'வடிகால்' என்றால் மழைநீர் அல்லது வெள்ளநீர் வடிகால் மற்றும் சுவர் கசிவுகள் நீரோடைகள் மற்றும் தெரு, பாலம், அல்லது கடப்புவழி எதனின் மீதும் விழுகின்ற மழைநீரை வடித்து வெளியேற்றுவதற்கென்றே தனியாக அமைந்துள்ள பக்க வடிகால் என்று பொருள்படும்:- ஆனால், அது, 1978-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுச் சட்டத்தின் படியான ஒரு வடிகாலையோ அல்லது கழிவுநீர் வடிகாலையோ (சாக்கடையையோ) உள்ளடக்காது:- (தமிழ்நாடு சட்டம் 28/1978)

(11) (செயல் அதிகாரி என்றால், பிரிவு 83ன்படி அரசினரால் அறிவிக்கை செய்யப்படும் நபர் என்று பொருள்படும்)

[செயல் அலுவலர் - ஊராட்சித் தலைவர்]
அரசு ஆணை எண்.225 ஊ.வ.து. நாள்.15.10.96

(12) 'அரசு' என்றால், மாநில அரசு என்று பொருள்படும்.

(13) 'கிராம சபை' என்றால் தொடப்புடைய கிராம ஊராட்சிப் பகுதிக்கான வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களைக் கொண்டிருக்கின்ற ஒரு அமைப்பு என்று பொருள்படும்.

---

[1] கூறு (4) [1] (* * * *) (முதன்மை செயல் அலுவலர் என்பது மாவட்ட ஊராட்சியின் முதன்மை செயல் அலுவலர்) என்றிருந்ததை 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சியின் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998)ன் படி நீக்கப்பட்டது.
இச்சட்டத்தில் எங்கெல்லாம் முதன்மை செயல் அலுவலர் என்ற சொற்றொடர் இருந்ததோ அங்கெல்லாம் செயலாளர் என்ற தொடராக, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1998)ன் மூலம் மாற்றப்பட்டது.

11. இக்கூறு (செயல் அலுவலர்) என்பது பிரிவு 83ன்படி அரசினால் நியமிக்கப்படும் கிராம ஊராட்சியின் செயலாளர் ஆவார்) என்பதை 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1996) மூலம் மாற்றப்பட்டது.

(14) 'இல்லம்' என்றால், ஒரு குடியிருப்பிடமாகவோ அல்லது மற்றப்படியாகவோ, பொதுப்பாதையை நோக்கி வாசலிலோ அல்லது முதன்மையானதொரு நுழைவாயிலைத் தனியாகக் கொண்டிருக்கின்ற, மனிதா் வசிப்பதற்குப் பொருத்தமானதொரு கட்டடம் என்ற பொருள்படும். மற்றும், அது கடை, தொழிற்கூடம் அல்லது சேமிப்பு கிடங்கு எதையும் அல்லது பேருந்துகளை நிறுத்திப் பழுது பார்ப்பதற்காகவோ நிறுத்தி வைப்பதற்காகவோ அல்லது பேருந்து நிலையமாகவோ பயன்படுத்தப்படும் கட்டடம் என்பதும் இதில் அடங்கும்

(15) 'குடிசை' என்றால், மரம், மண், இலைகள், வைக்கோல் அல்லது ஓலைகளை கொண்டு கட்டப்பட்டிருக்கின்ற கட்டடம் என்று பொருள்படும். மற்றும் அது. இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒரு குடிசை என்ற கிராம ஊராட்சியால் கருதக்கூடிய எந்த அளவினதாயினும் தற்காலிகக் கட்டுமானம் எதையும் அல்லது எந்தப் பொருட்களால் செய்யப்பட்டிருந்தாலும் சிறிய கட்டடம் எதையும் உள்ளடக்கும்.

(16) 'ஆய்வாளா் என்றால், இந்தச் சட்டத்தின்படி ஆய்வாளரின் அதிகாரங்களில் எதையும்' செலுத்தி வருவதற்கோ, அல்லது கடமைகளில் எதையும் புரிந்து வருவதற்கோ அரசால், மாவட்ட ஆட்சித் தலைவரின் நிலைக்குக் குறையாமல் நியமிக்கப்படும் அலுவலா் எவரையும் குறிக்கும்.

ஆய்வாளா் = மாவட்ட ஆட்சித் தலைவா்
[அரசு ஆணை எண்.149, ஊ.வ.து. நாள்.19.8.94]

(17) 'கழிப்பிடம்' என்பது மலசலக்கழிப்பிடம் தண்ணீா் வசதியுடன் கூடிய கழிப்பிடம் சிறுநீா் கழிப்பிடம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

(18) 'உறுப்பினா்' என்றால், கிராம ஊராட்சியின். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது சந்தா்ப்பத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சியின் உறுப்பினா் என்று பொருள்படும்

(19) 'சாதாரணமான காலியிடம்' என்றால், காலக் கெடுவினால் ஏற்படக்கூடிய ஒரு காலியிடம் என்று பொருள்படும். மற்றும் சாதாரணமான தோ்தல் என்றால், சாதாரணமாக ஏற்பட்ட ஒரு காலியிடத்தை நிரப்புவதற்காக நடத்தப்படும் ஒரு தோ்தல் என்று பொருள்படும்.

(20) 'சொந்தக்காரா்' என்றால்

(அ) ஒரு நபா், நம் பொருட்டோ அல்லது ஒரு முகவராக அல்லது பொறுப்பாளராக அல்லது பாதுகாப்பாளராக அல்லது மேலாளராக அல்லது சொத்துப் பேணுபவராக வேறொரு நபரின் சாா்பாகவோ

அல்லது சமய அல்லது அற நோக்கத்திற்காகவோ, எந்தச் சொத்தின் தொடா்பாக அந்தச் சொல் பயன்படுத்தப்படுகின்றதோ அந்தச் சொத்தின் வாடகை தொகைகளையோ அல்லது அதாயங்களையோ அப்போதைக்குப் பெற்றுவருகின்ற அல்லது பெறத் தகுதியுடைய நபரையும் மற்றும்

(ஆ) விலங்கு அல்லது ஊா்தியின் தொடா்பாக அந்தச் சொல் பயன்படுத்தப்படுகின்ற பொழுது அந்த விலங்கையோ அல்லது ஊா்தியையோ அப்போதைக்கு தன் பொறுப்பில் வைத்துள்ள நபரையும் உள்ளடக்கும்.

(21) 'ஊராட்சி' என்றால், இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஒரு கிராம ஊராட்சி, ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஒரு மாவட்ட ஊராட்சி என்று பொருள்படும்.

(22) ‘ஊராட்சி வளர்ச்சி வட்டாரம்’ என்றால், இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக, அரசால், அவ்வப்போது அறிவிக்கப்படும் பரப்பிடம் என்று பொருள்படும்.

(23) ‘ஊராட்சி ஒன்றியம்’ என்றால், இந்தச் சட்டத்தின்படி ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கென அறிவிக்கப்பட்ட உள்ளூர்ப் பரப்பிடம் என்று பொருள்படும்.

(24) ‘ஊராட்சி ஒன்றிய மன்றம்’ என்றால், இந்தச் சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றியத்தை நிறுவகிப்பதற்காக அமைத்துருவாக்கப்பட்ட அமைப்பு என்று பொருள்படும்

(25) ‘ஊராட்சி கிராமம்’ என்றால், எந்த ஒரு பரப்பிடத்தின் மீது ஒரு கிராம ஊராட்சியானது அதிகார வரம்பு பெற்றிருக்கின்றதோ, அந்த பரப்பிடம் என்று பொருள்படும்

(26) ‘தலைவர்’ (President) என்றால், கிராம ஊராட்சியின் தலைவர் என்று பொருள்படும்.

(27) ‘தனியார் சாலை’ என்றால், பொதுச் சாலை அல்லாத தெரு, சாலை. சதுக்கம், மற்றும் குறுந்தெரு, செல்லும் வழி, வண்டிப்பாதை, நடைபாதை, சவாரிப்பாதை என்று பொருள்படும். ஆனால் வளாகத்தின் சொந்தக்காரர் ஒருவரால், அந்த வளாகத்திற்குப் போய் வருவதற்காகவோ அல்லது அந்த வளாகத்தை வசதியாக பயன்படுத்துவதற்காகவோ அவரால் தன் சொந்த நிலத்தின் மீது அமைக்கப்பட்ட ஒரு நடைபாதை வழியை உள்ளடக்காது.

(28) ‘பொதுச்சாலை என்றால்’ ஒரு பொது வழியாக இருந்தாலும், இல்லையென்றாலும், பொது மக்கள் கடந்துச் செல்வதற்கான உரிமையை பெற்றிருக்கின்ற தெரு, சாலை, சதுக்கம், முற்றம், குறுந்தெரு, செல்வழி வண்டிப்பாதை, நடைபாதை அல்லது சவாரிப்பாதை என்ற பொருள்படும். மற்றும் அது பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்.

(அ) பொதுப் பாலம் எதினின் மேலேயும் உள்ள சாலை வழி அல்லது கடப்புவழி

(ஆ) அத்தகைய சாலை, பொதுப் பாலம் அல்லது கடப்பு வழி எதனுடனும் இணைக்கப்பட்டுள்ள நடைபாதை வழி, மற்றும்

(இ) பக்கத்திலுள்ள சொத்தானது தனியாருக்குச் சொந்தமான சொத்தாக இருந்தாலும் அல்லது மாநில அல்லது மத்திய அரசிற்குச் சொந்தமானதாக இருந்தாலும், அதன் எல்லை வரை உள்ள சாலை வழிகளில் எந்தப் பக்கத்தில் அமைந்துள்ளதுமான நடைபாதை, தாழ்வாரம் அல்லது பிற கட்டுமானம் எதனாலும் மூடப்பட்டதாயிருந்தாலும் இல்லையென்றாலும் அத்தகைய சாலை, பொதுப்பாலம் அல்லது கடப்பு வழியுடன் இணைக்கப்பட்ட வடிகால்கள்.

(29) நபரொருவர், இல்லம் எதிலும், அதன் பகுதி எதனையும் உறங்குவதற்கான இடமாக சில சமயங்களில் பயன்படுத்தி வருவாரேயாயின், அந்த இல்லத்தில் தம்முடைய குடியிருப்பிடத்தை கொண்டுள்ளதாகவோ அல்லது அதில் குடியிருப்பதாகவோ கருதப்படுவார். மற்றும் அவர் அத்தகைய இல்லத்திற்கு தனது விருப்பம்போல் எந்தச் சமயத்திலும் திரும்பி வருகின்ற உரிமையைப் பெற்றிருப்பவராகவும், திரும்ப வரக்கூடிய நோக்கத்தினை அவர் கைவிட்டு விடவில்லை என்றும் இருக்குமாயின், இந்த இல்லத்திற்கு அவர் வராமலிருக்கிறார். அல்லது வேறெங்கோ வேறொரு இடத்தில்

குடியிருக்கின்றார் என்கின்ற காரணத்தால் மட்டுமே, அந்த இல்லம் எதிலும் அவர் குடியிருப்பது முடிவுற்றுப் போனதாகக் கருதப்பட மாட்டார்.

(30) வருவாய் மாவட்டம் என்றால் பின் வருவனவற்றின் பரப்பிடங்களை நீக்கியதற்குப் பின்னர், வருவாய் நிர்வாக நோக்கங்களுக்காக ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழுள்ள உள்ளாட்சிப் பரப்பிடம் என்று பொருள்படும், அதாவது :-

(அ) சென்னை மாநகர்

(ஆ) 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட மதுரை மாநகர், (தமிழ்நாடு சட்டம் 15/1971)

(இ) 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட கோயம்புத்தூர் மாநகர் (தமிழ்நாடு சட்டம் 25/1981)

(ஈ) 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/1920) அமைத்துருவாக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் தொழிற் நகரியங்கள் மற்றும்

(உ) 1924-ஆம் ஆண்டு இராணுவ முகாமுக்குரிய பரப்பிடங்கள் (Contonment) சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட இராணுவ முகாம்கள் (மத்திய சட்டம் 11/1924)

(31) ‘ஆதிதிராவிட வகுப்பினர்’ என்பது, அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(32) ‘ஆதிதிராவிட பழங்குடியினர்’ என்பது, அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பொருளைக் கொண்டிருக்கும்.

1 (32ஏ) ‘செயலாளர்’ என்பது மாவட்ட ஊராட்சியின் செயலாளர் ஆவார்.

(32பி) சிறப்பு கிராம ஊராட்சி என்றால் பிரிவு 6(4)-ல் குறிப்பிட்ட சிறப்பு கிராம ஊராட்சி

(33) 2(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்) என்றால், 239 –ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்று பொருள்படும்.

(34) 3 தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் என்றால், 239ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலத் தேர்தல் ஆணையம் என்று பொருள்படும்.

---

| | |
|---|---|
| Amendment of Section 2 dt.14.7.2006 | 2. Insection 2 of the Tamil Nadu panchayat Act 1994<br>(1) Clause (32b) shall be omitted |

(35) ஒதுக்கப்படா காடுகள் என்றால், 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1882) 4ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கை செய்யப்படாத காடுகள் என்று பொருள்படும். மற்றும் அது அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட ஒதுக்கப்படாத நிலத்தையும் உள்ளடக்கும்.

(36) கிராமம் என்றால், 4ஆம் பிரிவின் உட்பிரிவு (1)ன்படி ஊராட்சி கிராமம் என அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஒரு பரப்பிடம் என்று பொருள்படும் மற்றும் வருவாய் கிராமம் என்றால் கீழ்க்கண்ட பகுதிகளை நீக்கிய பின்பு, அரசு வருவாய்க் கணக்குகளில் ஒரு கிராமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஓர் பரப்பிடம் என்று பொருள்படும்,அதாவது:-

(அ) சென்னை மாநகர்,

(ஆ) 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட மதுரை மாநகர், (தமிழ்நாடு சட்டம் 15/1971)

(இ) 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட கோயம்புத்தூர் மாநகர் (தமிழ்நாடு சட்டம் 25/1981)

(ஈ) 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட நகராட்சிகள்,பேரூராட்சிகள் மற்றும் தொழிற் நகரியங்கள் (தமிழ்நாடு சட்டம் V/1920) மற்றும்

(உ) 1924-ஆம் ஆண்டு இராணுவ முகாமுக்குரிய பரப்பிடங்கள் (Contonment) சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட இராணுவ முகாம்கள் (மத்திய சட்டம் ii/1924)

(37) கிராம ஊராட்சி என்றால், 6ஆம் பிரிவின் உட்பிரிவு (1)ன்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு கிராம ஊராட்சியாகும்.

(38) நீரோடை என்பது, இயற்கையானதாயினும் அல்லது செயற்கையானதாயினும், ஆறு, ஓடை அல்லது வாய்க்கால் எதையும் உள்ளடக்கும்.

(39) ஆண்டு என்றால் நிதியாண்டு என்று பொருள்படும்.

## அத்தியாயம் - 2
## கிராம சபை

**3. கிராம சபை**

(1) ஒவ்வொரு கிராம ஊராட்சியின் எல்லைக்குள் அடங்கியுள்ள, ஊராட்சி கிராமத்திற்கான வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களைக் கொண்டு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு கிராம சபை இருக்கும்.

(2) 1(அரசின் பொதுவான ஆணைகளுக்கு உட்பட்டு, கிராம சபை ஒரு ஆண்டில் குறைந்தது இரண்டு முறையாவது கூட்ட வேண்டும். ஆனால் இரண்டு கூட்டங்களுக்கு இடையே ஆறு மாத இடைவெளிக்கு மேல் இருக்கக்கூடாது)

2(அ) ஒவ்வொரு கிராம சபைக் கூட்டம், கிராம ஊராட்சியின் தலைவரால் கூட்டப்பட வேண்டும், கிராம ஊராட்சியின் தலைவர் கிராம சபைக்கூட்டத்தை கூட்டத் தவறினால் ஆய்வாளர் கூட்டுவார்.

**3.(அ) கிராம சபை**

(i) கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல் வேண்டும்

(ii) கிராம ஊராட்சியின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல் வேண்டும்

3(ii-அ) கிராம ஊராட்சியின் முந்தைய ஆண்டு கணக்கு தணிக்கை அறிக்கையை பரிசீலித்தல்)

(iii) கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தல் வேண்டும்.

(அ) அரசு, அறிவிக்கை வாயிலாக, பிற அலுவல்களையும் கிராம சபையிடம் ஒப்படைக்கலாம்

(4) கிராம சபையின் பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் கிராம ஊராட்சி உரியவாறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(5) கிராம சபையின் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு 4(**) மற்றும் கிராம சபையினைக் கூட்டுவதற்கும், நடத்தி வருவதற்குமான நடைமுறை விதிகளில், வரையறுக்கப்படும் வகையில் இருத்தல் வேண்டும்.

(6) கிராம சபையின் கூட்டத்திற்கு கிராம ஊராட்சியின் தலைவர் தலைமை வகிப்பார். அவர் வராதபோது துணைத் தலைவரும், தலைவர், துணைத் தலைவர் ஆகிய இருவருமே வராத நிலையில், அக்கூட்டத்திற்கு வந்துள்ள கிராம ஊராட்சி உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகின்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகித்தல் வேண்டும்.

---

(3) 1 2 3 இக்கூறுகள் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998) பிரிவு 4ன் மூலம் புதியதாக சேர்க்கப்பட்டது.

4இக்கூறில் (கிராம சபையின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகமாகும்) என்ற சொற்றொடர் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/2998) பிரிவு 4ன் மூலம் நீக்கப்பட்டது.

# அத்தியாயம் - 3

# கிராம ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களையும், மாவட்ட ஊராட்சிகளையும் அமைத்து நிறுவுதல்

## கிராம ஊராட்சிகள்

**4. ஊராட்சி கிராமங்களை அமைத்தல்**
**(1)ஆய்வாளர்**

(அ) அறிவிக்கையின் மூலம் ஐநூறுக்கும் குறையாத மக்கள் தொகையுடைய ஒரு வருவாய்க் கிராமத்தை அல்லது கிராமங்களை, அல்லது ஒரு வருவாய்க் கிராமத்தின் ஒரு பகுதியை அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய்க் கிராமங்களை ஒட்டியுள்ள பகுதிகளை ஒவ்வொன்றையும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஊராட்சி கிராமம் என்று வகைப்படுத்தி அறிவித்தல் வேண்டும்; மற்றும்

(ஆ) அறிவிக்கை வாயிலாக அந்த ஊராட்சி கிராமம் என்ன பெயருடன் விளங்குதல் வேண்டும் என்றும் குறிப்பிட வேண்டும்.

(2)(அ) ஆய்வாளர் அறிவிக்கையின் வாயிலாக, கிராம ஊராட்சியில் அடங்கியுள்ள பகுதி எதனையும் நீக்கிவிடலாம். ஆனால், அவ்வாறு நீக்கி வைக்கப்பட்ட பின்பு, அந்த கிராம ஊராட்சியின் மக்கள் தொகை ஐநூறுக்கும் குறைவாக இருத்தல் கூடாது.

(ஆ) (அ)கூறின்படி, நீக்கி வைக்கப்பட்ட பகுதி எதனையும் பொறுத்தவரை ஆய்வாளர் உட்பிரிவு (1)ன்படி வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி அந்தப் பகுதியானது ஐநூறுக்கும் குறையாத மக்கள் தொகையைக் கொண்டிருந்தால், அதனை ஒரு ஊராட்சி கிராமம் என்று குறிப்பிடுதல் வேண்டும் மற்றும் அதன் மக்கள் தொகையானது ஐநூறுக்கும் குறைவாக இருக்குமாயின், அதன் பக்கத்திலுள்ள ஊராட்சி கிராமம் ஏதொன்றினுடனும் கூறு (இ) (i)ன்படி அதை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

---

Amendment of 3. In section 4 of the principal Act –

section 4

(1) In sub-section (1) in clause (a) the expression "with a population estimated at not less than five hundred" shall be omitted;
(2) In sub section (2) –
(i) in clause (a) expression "provided that the population of the panchayat village after such exclusion, is not less than five hundred" shall be omitted.
(ii) for clause (b) the following clause shall be substituted, namely:-
"(b) In regard to any area excluded under clause (a), the Inspector may by notification under sub-section (1) declare it to be a panchayat village or include it in any contiguous panchayat village under clause (c)(i)".

(இ) ஆய்வாளர் அறிவிக்கையின் வாயிலாக:-

(i) ஊராட்சி கிராமம் ஒன்றுடன் அதனை ஒட்டியுள்ள உள்ளாட்சி பகுதி எதனையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம்:- அல்லது
(ii) உட்பிரிவு (1)ன்படி குறிப்பிட்ட அறிவிக்கையை நீக்கி வைக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம் அல்லது
(iii) உட்பிரிவு (1)ன்படி குறிப்பிட்ட ஊராட்சி கிராமத்தின் பெயர் எதையும் மாற்றியமைக்கலாம்.

(ஈ) மேலே குறிப்பிட்டுள்ள உட்பிரிவு (1)டன் சேர்த்து (அ) அல்லது (ஆ)வின் கீழ் அல்லது (இ) ஆகிய கூறுகளின் கீழ் அறிவிக்கை வெளியிடுவதற்கு முன் ஆய்வாளர் அப்படிப்பட்ட அறிவிக்கைக்கு மறுப்பு இருப்பின், அதை தெரிவிப்பதற்கு நியாயமான வாய்ப்பு அளிப்பதுடன் அத்தகைய கிராம ஊராட்சி அல்லது கிராம ஊராட்சிகளின் விளக்கங்களையும் மறுப்புகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

3) அப்படிப்பட்ட பகுதியில் வரி செலுத்துபவரோ, குடியிருப்பவரோ அல்லது சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையை மறுத்தால் உரிய காலகெடுவிற்குள் அரசிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

4) ஆய்வாளர்

(அ) செயலற்றுப்போன ஒரு கிராம ஊராட்சியின் பொறுப்பில் இருந்த உடைமையை பங்கீடு செய்வது பற்றியும், அதனுடைய கடன் பொறுப்பிலிருந்து அதை விடுவிப்பது பற்றியும்
(ஆ) ஒரு கிராம ஊராட்சியின் ஆளுகைப் பகுதியிலிருந்து ஒரு உள்ளூர் பகுதி நீக்கப்படும் போது அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள உடைமைகளின் ஒரு பகுதியைப் பங்கீடு செய்வது பற்றியும், அந்த உடைமைகள் அல்லது அப்படிப்பட்ட உள்ளூர் பகுதியிலிருந்து எழும் கடன் பொறுப்புகளிலிருந்து அதை விடுவிப்பது பற்றியும் தனக்கு சரி என்று கருதும் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(5)* உட்பிரிவு (4)ன் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணையானது அதற்குத் துணையாக சார்பாக, விளைவாக அவசியம் என்று கருதும் ஏற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கலாம்.

குறிப்பாக அது-

(i) குறிப்பிட்ட கிராம ஊராட்சிக்கு சேர வேண்டிய வரி, கட்டணம் அல்லது வேறு தொகையையும் அல்லது ஒரு கிராம ஊராட்சியின் ஆளுகைப் பகுதியிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வரவேண்டிய வரி, கட்டணம் அல்லது வேறு தொகையையும் அந்த ஆணையில் குறிப்பிடுகிற அலுவலரிடம் செலுத்த வேண்டும் என்றும்,

(ii) அந்த வரி, கட்டணம் அல்லது தொகை சம்பந்தமான மேல்முறையீடு மனுக்கள் அல்லது இதர விண்ணப்பங்கள் எவையும் ஒரு கிராம ஊராட்சி செயலற்றுப் போன தேதியில் அல்லது குறிப்பிட்ட பகுதி அதன் அதிகார வரம்பிலிருந்து நீங்கிய தேதி முடிவு பெறாதிருந்தாலும் அந்த ஆணையில் குறிப்பிடப்படும் அலுவலரால் விசாரித்து முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் ஆணையிடலாம்.

**1(4-அ)** பேரூராட்சிகளை கிராம ஊராட்சிகளாக மாற்றி அமைப்பதற்கு வழிமுறைகள் - சிறப்பு ஏற்பாடுகள்

(1) இச்சட்டத்தில் எந்த விதமாக கூறப்பட்டிருந்தபோதிலும்

---

1இப்பிரிவு 1999ஆம் ஆண்டு தமிழ்நாடுகள் ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

(அ) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 3 ஆ-ன்படி பேரூராட்சிகளாக அறிவிக்கை செய்யப்பட்டிருந்ததை ரத்து செய்து அப்பேரூராட்சிகளை இச்சட்டத்தின் கீழ் கிராம ஊராட்சிகளாக மாற்றம் செய்யப்படும் பொழுது, பேரூராட்சியில் பதிவ வகித்து வந்த தலைவரும் உறுப்பினர்களும் மாற்றம் செய்யப்பட்ட கிராம ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களாக கருதப்படுவார்கள். இவ்வாறு கருதப்படும் தலைவரும், உறுப்பினர்களும், இச்சட்டத்தின்படி இதன் பொருட்டு அரசினால் அறிவிக்கையின் மூலம் தெரிவிக்கப்படும் தேதி வரை மட்டுமே பதிவி வகிக்க முடியும். அரசினால் இதன் பொருட்டு தேதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லையெனில் , 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/1920) அவர்கள் எந்த கால அளவிற்கு தலைவராகவோ, உறுப்பினர்களாகவோ பதவி வகித்திருக்க முடியுமோ, அந்தக்கால அளவு வரை மட்டுமே கிராம ஊராட்சியின் தலைவராகவும், உறுப்பினர்களாகவும் பதவி வகித்து இச்சட்டத்தின்படி கிராம ஊராட்சியின் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் ஆற்றி அதிகாரங்களை செலுத்தி வருவர். ஆனால் இத்தகைய கிராம ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அவர்கள் பதவி வகித்து வரும் வரை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்திலோ அல்லது மாவட்ட ஊராட்சியிலோ அங்கம் வகிக்க முடியாது.

(ஆ) கிராம ஊராட்சியாக மாற்றப்படுவதற்கு முன், பேரூராட்சியில் பணியாற்றிய வரைமுறைபடுத்தப்பட்ட அரசு ஊழியர்கள் தவிர மற்ற அனைத்து ஊழியர்களும், கிராம ஊராட்சி பணியாளர்களாக இருப்பர். வரைமுறைப்படுத்தப்பட்ட அரசு ஊழியர்கள், கிராம ஊராட்சியாக மாற்றப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநரால் வேறு பேரூராட்சிக்கு மாற்றப்படும் வரை தொடர்ந்து கிராம ஊராட்சியில் பணியாற்றுவர்.

(2) உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு உட்பட்டு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளும் அதன்கீழ் இயற்றப்படும் விதிகளும் உட்பிரிவு (1)ன் படி மாற்றப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு பொருந்தும்)

5. 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவுகள் அல்லது அதன் கீழ் செய்த விதிகளை விரிவுபடுத்துவது.

(1) ஆய்வாளர் கிராம ஊராட்சியின் வேண்டுகோளின் பேரிலோ அல்லது அறிவிக்கையின் மூலமோ 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் (தமிழ்நாடு

சட்டம் V/1920) யாதொரு பிரிவையும் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட எந்த விதிமுறைகளையும் அந்த ஊராட்சி கிராமத்திற்கோ அல்லது குறிப்பிடும் பகுதிக்கோ விரிவாக்கம் செய்து, நடைமுறைக்கு வருமென்று அறிவிக்கை வெளியிடலாம்.

(2) அப்படி அறிவிக்கை செய்யப்படும் பிரிவுகள் அந்த ஊராட்சிக் கிராமத்திற்கோ அல்லது அதல் குறிப்பிடப்படும் பகுதிக்கு ஏற்றப்படியாக்குவதன் பொருட்டு அல்லது அந்தப் பகுதியில் செயலாற்றுவதற்குத் தேவைப்படும் மாறுதல்களுடன் பொருள் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அப்பிரிவுகளின் உட்கருத்திற்கு மாறுபாடாகப் பொருள் கொள்ளக் கூடாது.

**(3)** மேலேயுள்ள பிரிவின் பொதுத் தன்மைக்குப் பாதகமின்றி அறிவிக்கை செய்யப்பட்ட பிரிவுகளில் உள்ள ஒரு நகராட்சி மன்றம் அல்லது அதன் தலைவா் அல்லது நிா்வாக அலுவலரைப் பற்றி எல்லாக் குறிப்பீடுகளும், ஒரு கிராம ஊராட்சி, அதன் தலைவா், அல்லது நிா்வாக அலுவலரையும் நகராட்சி மன்றத்தின் யாதொரு அலுவலா் அல்லது பணியாளா்களை பற்றி எல்லாக் குறிப்பீடுகளும், அதற்கு இணையான கிராம ஊராட்சி அலுவலா் அல்லது பணியாளரையும், நகர எல்லைகளைப் பற்றிய எல்லாக் குறிப்பீடுகளும் அந்தக் கிராமம் அல்லது நகரம் அல்லது அதில் குறிப்பிடும் பகுதியையும் குறிக்கும் குறிப்பீடுகள் என்று சந்தா்ப்பத்திற்கேற்ப பொருள் கொள்ள வேண்டும்.

## 6, கிராம ஊராட்சிகளை ஏற்படுத்துதல்

**(1)** ஒவ்வொரு ஊராட்சி கிராமத்திற்கும் ஆய்வாளரால் வெளியிடப்படும் அறிவிக்கையில் குறிப்பிடும் தேதியிலிருந்து குறித்த எண்ணிக்கையிலான தோ்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினா்களைக் கொண்ட ஒரு கிராம ஊராட்சி அமைக்கப்படும்.

(2) இந்தச் சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு, ஊராட்சி கிராமத்தின் நிா்வாகம் கிராம ஊராட்சியிடம் இருக்கும். ஆனால் இக்கிராம ஊராட்சி இந்தச் சட்டம் அல்லது பிற சட்டத்தின் மூலம் அதன் தலைவருக்கோ, அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கோ அல்லது மாவட்ட ஊராட்சிக்கோ அல்லது பிற அதிகார அமைப்பு எதற்குமோ ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செய்ய இயலாது.

(3) ஒவ்வொரு கிராம ஊராட்சியும் பிரிவு 4ன்படி வெளியிடப்படும் அறிவிக்கையில் குறிப்பிடப்படும் கிராமத்தின் பெயரால் தொடா்ந்து விளங்கும், அதற்கென பொதுவான முத்திரை உடையதாகவும் இருக்கும். மேலும் இந்தச் சட்டத்தினால் அல்லது மற்ற எந்தச் சட்டதினால் அல்லது அவற்றின் கீழ் ஏற்படும் வரையறைக்கும் அல்லது கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு அதன் கூட்டாண்மை அமைப்பு பெயரில் நீதி மன்றங்களில் வழக்கு தொடரவும்; வழக்கு தொடரப்படவும் தகுதி பெற்றதாகும். அசையும் அல்லது அசையா உடைமைகளை உரிமை கொள்ளவும், உரிமை உடைத்தாய் இருக்கவும் உரிமை மாற்றவும், ஒப்பந்தங்கள் செய்யும், எந்த நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளதோ அதை அடைய தேவையான, தகுதியான எல்லாவற்றையும் செய்வதற்கு அதிகாரம் பெற்றதாகும்.

1(4) அரசு கிராம ஊராட்சிகளின் நிா்வாகத்தை மேம்படுத்தும் பொருட்டு நிா்ணயிக்கக் கூடிய நெறிமுறைகளின்படி கிராம ஊராட்சிகளை அறிவிக்கையின் மூலம் பல நிலைகளில் வகைப்படுத்தலாம்.

## 7. ஊராட்சி கிராமங்களின் வகைப்பாட்டினை மாற்றியமைத்தல்

**(1)** 4 ம் பிரிவின் உட்பிரிவு (1)-ல் குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஊராட்சி கிராமம் நிறைவு செய்து வருகின்றதாக அல்லது நிறைவு செய்யாமல் போய் விட்டதாக அரசு கருதுமாயின், அந்த உட்பிரிவின்படி செய்த அறிவிக்கை எதையும் மாற்றியமைக்கலாம்.

**(2)** இந்தச் சட்டத்தின்படி அரசினால் எடுக்கப்பட்ட முடிவு எதனையும் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்க முடியாது.

---

Amendment of section 6

4. In section 6 of the principal Act. –
(1) Sub-section (4) shall be omitted

(2) In sub-section (5) the expression "special village panchayats referred to in sub-section (4) and" shall be omitted

Amendment of section 7

5. In section 7 of the principal Act in sub-section (1), the expression "if in their opinion the, panchayat village satisfies or ceases to satisfy, the conditions referred to in that sub-section" shall be omitted.

**8. கிராம ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை**

(1) இந்தச் சட்டத்தின் பிரிவு 12 அல்லது இந்தச் சட்டத்தின் பிற ஏற்பாடுகள் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும் ஒரு கிராம ஊராட்சியின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை (அதன் தலைவர் நீங்கலாக) ஆய்வாளர் அறிவிக்கை மூலம் வெளியிடுவார், உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்க வேண்டுமென்பது கடைசியாக வெளியிட்டுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், விதிகளில் கண்டவாறு இருக்கும்.

(2) ஆய்வாளரால் உட்பிரிவு (1)ன்படி அறிவிக்கை செய்யப்பட்ட கிராம ஊராட்சி உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினை, அவ்வப்போது ஆய்வாளரே அறிவிக்கையின் மூலம் மாற்றியமைக்கலாம்.

(3) உட்பிரிவு (1)ன்படி அறிவிக்கை செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையோ, அல்லது உட்பிரிவு (2)ன்படி அறிவிக்கையின் மூலமாக மாற்றியமைக்கப்பட்ட எண்ணிக்கையோ, ஐந்திற்கு குறைவாகவோ அல்லது பதினைந்திற்கு மேற்பட்டோ இருக்கக் கூடாது.

**9. கிராம ஊராட்சிகளின் ஆட்சிக்காலம்**

(1) கிராம ஊராட்சி ஒவ்வொன்றும், குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி சாதாரண தேர்தலுக்கு பின்பு, அதன் முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு கால அளவு வரையில் பதவியில் தொடர்ந்திருக்கும், ஆனால் அதற்கு மேலாக இருக்க கூடாது.

(2) மேற்சொன்ன ஐந்தாண்டு காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒரு கிராம ஊராட்சி கலைக்கப்படுமாயின் அந்த கிராம ஊராட்சியை அமைப்பதற்கான தேர்தல் பிரிவு 214ல் கூறப்பட்டுள்ளவாறு விரைவிலும், ஆனால் எந்த சந்தாப்பத்திலும் அவ்வாறு கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாத கால அளவு முடிவடைவதற்கு முன்னர் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

ஆனால், மேற்சொன்ன ஐந்தாண்டு கால அளவு முடிவடைவதற்கு கடைசியாக உள்ள ஆறு மாத கால அளவிற்குள் ஒரு கிராம ஊராட்சி கலைக்கப்படுமாயின் அந்த கிராம ஊராட்சிக்குத் தேர்தல் எதையும் நடத்துவது அவசியமற்றது.

## 9.ஏ. சில சந்தா்ப்பங்களில் தனி அலுவலா் நியமனம் செய்தல்

**(1)** இச்சட்டத்திலோ அல்லது நடைமுறையிலுள்ள வேறு எந்தச் சட்டத்திலோ அட்டவணை VI ல் குறிப்பிட்டுள்ள கிராம ஊராட்சிகள் பற்றி என்ன கூறப்பட்டிருந்தாலும் அவற்றில் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதிக்கு முன் கிராம ஊராட்சிகள் தோ்தல் நடத்தப்பட்டும், கிராம ஊராட்சி அமைத்து நிறுவப்பட முடியாத நிலையில் அரசு அறிவிக்கையின் மூலம் தனி அலுவலா் ஒருவரை அத்தகைய கிராம ஊராட்சியின் கடமைகளை நிறைவேற்றி வருவதற்காக அத்தகைய கிராம ஊராட்சியின் தோ்தலுக்குப் பிறகு அமைத்து நிறுவப்பட்டு அதன் முதல் கூட்டம் நடைபெறும் நாள் வரை நியமிக்கலாம்.

---

Amendment of section 8 — 6. In section 8 of the principal Act, in sub-section (3), for the expression ‘twenty one” the expression ‘fifteen’ shall be substituted.

9 A. இக்கூறு 2002ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/2002 ன்படி சோ்க்கப்பட்டது.

**(2)** அவ்வாறு உட்பிரிவு (1)ன் கீழ் நியமிக்கப்படும் தனி அலுவலா் அவா் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து (24.4.05 வரை) அல்லது அரசு அறிவிக்கையின் மூலம் இதன் பொருட்டு குறிப்பிடும் குறைவானதொரு காலம் வரை பதவி வகிப்பாா்.

## 10. கிராம ஊராட்சி உறுப்பினா்கள் தோ்தல்

குறிப்பிடக்கூடிய முறைப்படி கிராம ஊராட்சி உறுப்பினா்கள் தோ்ந்தெடுக்கப்படுவாா்கள்.

கிராம ஊராட்சி உறுப்பினா் தோ்தலுக்கு போட்டியிடும் ஒரு நபரை (வேட்பாளா்) கிராம ஊராட்சித் தலைவா் பதவிக்கோ அல்லது ஊராட்சி ஒன்றிய உறுப்பினா் பதவிக்கோ அல்லது மாவட்ட ஊராட்சி உறுப்பினா் பதவிக்கோ தோ்ந்தெடுக்க முடியாது.

கிராம ஊராட்சி உறுப்பினா் ஒருவா் ஊராட்சி தலைவா் பதவிக்கோ ஊராட்சி ஒன்றிய உறுப்பினா் பதவிக்கோ அல்லது மாவட்ட ஊராட்சி உறுப்பினா் பதவிக்கோ நிற்க முடியாது.

1(ஆனால் ஒரு நபா் ஒரு கிராம ஊராட்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட வாா்டுகளிலிருந்து உறுப்பினராக தோ்ந்தெடுக்கப்படவோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சி உறுப்பினராக தோ்ந்தெடுக்கப்படவோ முடியாது)

## 11. இட ஒதுக்கீடு

(1) கிராம ஊராட்சி ஒவ்வொன்றிலும் ஆதிதிராவிட வகுப்பினா் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கு உறுப்பினா் இடங்கள் ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும் இட ஒதுக்கீடு கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் மேற்படி சாதியின் மக்கள் தொகை எந்த வீதத்தில் கிட்டத்தட்ட உள்ளதோ அதே வீதத்தில் கிராம ஊராட்சியின் தோ்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினா்கள் எண்ணிக்கையில் இடங்கள் நிா்ணயித்து நிரப்பப்பட வேண்டும்.

ஆனால் இந்த சட்டம் தொடங்கப்பட்டதற்கு பின்னா் கிராம ஊராட்சிக்கு நடத்தப்பட வேண்டிய முதல் தோ்தலுக்காக, 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் வெளியிடப்பட்ட தற்காலிக மக்கள் தொகை எண்ணிக்கையே அந்த கிராம ஊராட்சி மக்கள் தொகையாக கருத வேண்டும்.

(2) ஆதிதிராவிட வகுப்பினா் மற்றம் ஆதிதிராவிட பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் ஆதிதிராவிட வகுப்பினா் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினரைச் சாா்ந்த பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு செய்யப்படும் இட ஒதுக்கீடு

ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் இருக்கு வேண்டும்.

(3) கிராம ஊராட்சிகளில் பெண்களுக்கென்று இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அவ்வாறு பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய ஒதுக்கீடு எண்ணிக்கை கிட்டத்தட்ட கிராம ஊராட்சியில் உள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் இருக்க வேண்டும். (இந்த ஒதுக்கீட்டில் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியின பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களும் அடங்கும்)

ஆனால் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை சுழற்சி முறையில் வெவ்வேறு வார்டுகளுக்கும் ஆய்வாளர் ஒதுக்குவார்.

(4) உட்பிரிவுகள் (1) மற்றும் (2)ன்படி செய்யப்படும் இட ஒதுக்கீடு அரசமைப்புச் சட்டத்தின் 334-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு முடிவடையும் வரை நடைமுறையில் இருக்கும்.

---

10-1 இந்த வரம்புரை 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1996)ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது. (சட்டம் 30/95)

**12. ஊராட்சி கிராமத்தை வார்டுகளாக பிரித்தல்**

கிராம ஊராட்சிக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அந்த கிராம ஊராட்சியினை கலந்தாலோசித்த பின்பு ஊராட்சி கிராமத்தை வார்டுகளாக பிரித்து ஆய்வாளர் அறிவிக்கை வெளியிடுவார். ஒவ்வொரு வார்டிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கப்படும் அளவின்படி தீர்மானித்து அவ்வறிக்கையில் வெளியிடுவார்.

**13. உறுப்பினர்களின் பதவிக் காலம்**

(1) சட்டத்தில் வேறுவிதமாக சொல்லப்பட்டிருந்தாலன்றி சாதாரண தேர்தல்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் கிராம ஊராட்சியின் உறுப்பினர்களின் பதவிக்காலம் சாதாரண தேர்தலுக்குப் பின்பு அக்கிராம ஊராட்சியின் முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளாகும்.

(2) கிராம ஊராட்சி உறுப்பினர்களது சாதாரண முறையில் எழும் காலியிடங்கள் சாதாரண தேர்தல்களின் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்தல்கள், சாதாரண காலியிடங்கள் எழுவதற்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் தான் பொருத்தமென நினைக்கக்கூடிய நாளிலோ அல்லது நாட்களிலோ நடைபெறுமாறு நிர்ணயிப்பார்.

(3) கிராம ஊராட்சியின் தற்செயல் காலியிடத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர் உடனே பதவி ஏற்பார். ஆனால், எவருடைய இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்தக் காலியிடம் ஏற்படாமல் இருந்திருந்தால் அவர் எவ்வளவு காலம் பதவியிலிருந்திருக்க முடியுமோ அந்தக் காலம் வரையில் மட்டுமே அவர் பதவியிலிருப்பார்.

**14. கிராம ஊராட்சிகளுக்கான வாக்காளர் பட்டியல்**

(1) உட்பிரிவு (2)ன் வரைமுறைகளுக்கு உட்பட்டு, ஊராட்சி கிராமத்தில் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வாக்காளர் பட்டியலே அந்த கிராம ஊராட்சிக்கான வாக்காளர் பட்டியலாக கருதப்படும்

(2) ஒரு கிராம ஊராட்சி வார்டின் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி தேதிக்குப் பின்பும், அந்தத் தேர்தல் முடிவு அறிவிக்கும் முன்பும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வாக்காளர் பட்டியலில் திருத்தம், இடமாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்தத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலின் ஒரு பகுதியாக சேர்க்கக் கூடாது.

(3) கிராம ஊராட்சியின் செயல் அதிகாரி வகுத்துரைக்கப்பட்ட முறையில் ஊராட்சி கிராமத்தின் வார்டு ஒவ்வொன்றிற்குமான வாக்காளர் பட்டியலை பராமரித்து வருதல் வேண்டும்.

## ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்

### 15. ஊராட்சி ஒன்றியத்தை அமைத்தல்.

**(1) அரசு**

(அ) தேசிய விரிவாக்க சேவை திட்டம் மற்றும் சமுதாய வளர்ச்சி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரம் எதையும் ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் என்று அழைக்கலாம்.

(ஆ) ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிற்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்தை அமைப்பதற்கான தனது எண்ணத்தை அறிவிக்கை வாயிலாக அவ்வப்போது வெளியிடலாம்.

---

15(1) அரசாணை எண்.44 ஊ.வ.து, நாள்.29.3.95-ன்படி மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(2) ஒரு உள்ளாட்சி பகுதி சம்பந்தமான அத்தகைய அறிவிக்கை எதுவும் வெளியிடப்படும் போது அந்த பகுதியில் குடியிருந்து வருகின்ற எவரும் அந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள், அந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை எழுத்து மூலம் அரசிற்கு அனுப்பி வைக்கலாம். அரசு அத்தகைய மறுப்புகளனைத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(3) அந்த அறிவிக்கை வெளியிட்டதிலிருந்து ஆறு வாரங்கள் கழிந்த பின்பு பெறப்பட்ட மறுப்புகள் ஏதேனுமிருப்பின், அவற்றைப் பரிசீலித்த அரசு அறிவிக்கையின் வாயிலாக:

(அ) அந்த உள்ளாட்சிப் பகுதியை ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக அறிவிக்கலாம்.
(ஆ) மேற்சொன்ன ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை ஒரு ஊராட்சி ஒன்றியமாக அறிவிக்கலாம் மற்றும்
(இ) அந்த ஊராட்சி ஒன்றியத்தின் பெயரினைக் குறிப்பிடலாம்.

**(4) அரசு அறிவிக்கையின் மூலமாக**

(i) ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து அதில் அடங்கிய ஒரு பகுதியை அல்லது கிராமத்தை நீக்கலாம்; அல்லது

(ii) ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டார பகுதியில் அதை ஒட்டிய பகுதி எதையும் சேர்க்கலாம், அல்லது
(iii) உட்பிரிவு (3)ன்படி வெளியிடப்பட்ட அறிவிக்கையை நீக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம் அல்லது,
(iv) ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் பெயரை மாற்றியமைக்கலாம்

(5) உட்பிரிவு (4)ன்படி அறிவிக்கை வெளியிடுவதற்கு முன்பு தொடர்புடைய மாவட்ட ஊராட்சியைக் கலந்தாலோசிக்க வேண்டும், மேலும் அந்த அறிவிக்கை வெளியிடுவதானால் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் கிராம ஊராட்சி அல்லது கிராம ஊராட்சிகள், அந்த அறிவிக்கைக்கெதிராக காரணங்களை தெரிவிப்பதற்கு நியாயமானதொரு வாய்ப்பினைவழங்குதல் வேண்டும். மற்றும் அவ்வறிவிக்கைக்கெதிராக காரண விளக்கங்களும். மறுப்புகளும் எவையேனுமிருப்பின், அவற்றை பரிசீலிக்க வேண்டும்.

**(6) அரசு தான் பொருத்தமானதென நினைக்கக்கூடிய ஆணைகளை கீழக்கண்டவற்றிற்காக,**

(அ) ஊராட்சி ஒன்றிய மன்றம் செயலற்றுப்போனால், அதன் உடமை இருப்புகளையும் அல்லது அதற்கு சொந்தமான நிலையங்களையும் அல்லது அதன் தொடர்பாக, அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடன் பொறுப்புகள் எவையேனுமிருப்பின் அவற்றை தீர்த்து வைப்பதற்காகவும், அல்லது

(ஆ) ஊராட்சி வளர்ச்சி வட்டாரப் பகுதி எதனின் மீதும் தான் அதிகார வரம்பு செலுத்தி வருவதிலிருந்து முடிவுற்றுப்போன ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உடமை இருப்புகளின் பகுதி அல்லது அதற்குச் சொந்தமான நிலையங்கள் எதையும் குறித்து முடிவு எடுப்பதற்காகவும், அத்தகைய உடமைகள் அல்லது நிலையங்கள் தொடர்பாக அந்த ஊராட்சி ஒன்றியத்தின் கடன்பொறுப்புகள் எவையேனுமிருப்பின் அவற்றைத் தீர்த்து வைப்பதற்காகவும், ஆணைகளை பிறப்பிக்கலாம்.

(7) உட்பிரிவு (6)ன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையொன்றில் அரசு தேவையென கருதக்கூடிய துணையான இடைநிகழ்வான மற்றும் பின்விளைவான வழிவகைகள் அடங்கியிருக்கலாம் மற்றும் குறிப்பாக அது

(i) அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய வரி, கட்டணம் அல்லது பிற தொகை எதுவும், அல்லது ஒரு ஊராட்சி ஒன்றியமானது, எந்த ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரப் பகுதி மீதும் அதிகார வரம்பு செலுத்தி வருவது இல்லாமல் போகுமிடத்து அந்த பகுதிகள் தொடர்பாக, அவ்வூராட்சி ஒன்றிய மன்றத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய வரி, கட்டணம் அல்லது பிற தொகையானது, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய அதிகார அமைப்புகளிடம் செலுத்தப்பட வேண்டும் என்றும்,

(ii) எந்த தேதியில் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றம் செயலற்று போனதோ அந்தத் தேதியிலிருந்து அல்லது நேர்விற்கேற்ப, எந்தத் தேதியில் அவ்வூராட்சி ஒன்றியமானது அந்த ஊராட்சி ஒன்றிய பகுதியின் மீது அதிகார வரம்பு செலுத்தி வருவது இல்லாமற் போனதோ அந்தத் தேதியில் நிலுவையாக இருக்கின்ற வரி, கட்டணம், அல்லது தொகை எதையும் குறித்து மேல்முறையீடு மனுக்களையோ அல்லது பிற விண்ணப்பங்களையோ, பொறுத்த அளவில் அந்த ஆணையில் குறித்துரைக்கக்கூடிய அதிகார அமைப்புகளால் முடிவு எடுக்கப்படுதல் வேண்டும் என்றும் பணிக்கலாம்.

**16. ஊராட்சி ஒன்றிய மன்றங்களை ஏற்படுத்துதல்**

**(1)** ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் அரசால் அதன் பொருட்டு வெளியிடப்படும் அறிவிக்கையில் குறித்துள்ள தேதியிலிருந்து அமைக்கப்படும்.

(2) இந்தச் சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு ஊராட்சி ஒன்றிய நிர்வாகமானது ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் இருக்க வேண்டும். ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றமானது, இந்தச் சட்டம் அல்லது வேறு எந்த சட்டத்தின்படியோ அதன் தலைவருக்கோ அல்லது ஆணையருக்கோ அல்லது கிராம ஊராட்சிக்கோ அல்லது மாவட்ட ஊராட்சிக்கோ அல்லது பிற அதிகார அமைப்பு எதற்குமோ குறிப்பாக ஒதுக்கப்பட்ட செயல்களை செய்ய இயலாது.

ஆனாலும், ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் ஏதாவது ஒரு பகுதியில் கிராம ஊராட்சி இல்லையென்றால், அப்படிப்பட்ட பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய மன்றம் வரி விதித்தல் உட்பட எல்லா அதிகாரங்களையும் செயல்படுத்தும், எல்லா கடமைகளையும் செய்யும். கிராம ஊராட்சியின் பொறுப்புகளை செயல்படுத்தி அதற்கு வரவேண்டியதை பெறவும், செலுத்த வேண்டியதை செலுத்தவும், அதற்கு உரிமை உண்டு. மேலும் அப்பகுதியில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தலைவரும், ஆணையரும் முறையே கிராம ஊராட்சி தலைவர் மற்றும் செயல் அதிகாரியின் கடமைகளையும் பொறுப்புகளையும் ஆற்றிவருவர்.

(3) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றமும் பிரிவு 15ன்படி வெளியிட்ட அறிவிக்கையில் கூறப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியத்தின் பெயரால் உள்ள ஒரு நிறுவனம் ஆகும் தொடர்ந்து வழிவழியாக அதன் பெயராலும் ஒரு பொது முத்திரையோடும் இந்த சட்டத்தின் கீழோ

அல்லது வேறு எந்த சட்டத்தின் கீழோ வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கும் தகுதிகளுக்கும் உட்பட்ட கூட்டாண்மை அமைப்பு ஆகும். அதன் பெயரில் நீதி மன்றங்களில் வழக்கு தொடரவும், வழக்கு தொடரப்படவும், உரிமை உடைத்தாய் இருக்கவும் உரிமை மாற்றவும், ஒப்பந்தங்கள் செய்யவும், எந்த நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளதோ அதை அடைய தேவையான, தகுதியான எல்லாவற்றையும் செய்வதற்கு அதிகாரம் பெற்றதாகும்.

**17. ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை**

(1) பிரிவு 19ன்படி அறிவிக்கை செய்யப்பட்ட தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை கொண்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைக்கப்படும்.

**18. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆட்சிக் காலம்**

ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி சாதாரண தேர்தல் ஒவ்வொன்றிற்குப் பின்பு அதன் முதற்கூட்டத்திற்காக குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலம் தொடர்ந்திருக்கும். ஆனால் அதற்கும் மேல் இருக்க முடியாது.

(2) மேற்சொன்ன ஐந்தாண்டு கால அளவு முடிவடைவதற்கு முன்னர் ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் கலைக்கப்படுமாயின் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தை மறுபடியும் அமைப்பதற்கான தேர்தல் பிரிவு 215ல் கூறப்பட்டுள்ளவாறு விரைவிலும் ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் அவ்வாறு கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத கால அளவு முடிவடைவதற்கு முன்னரும் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

ஆனால் மேற்சொன்ன ஐந்தாண்டு கால அளவு முடிவடைவதற்கு கடைசியாக உள்ள ஆறுமாத கால அளவிற்குள்ளாக ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் கலைக்கப்படுமாயின் அவ்வூராட்சி ஒன்றிய மன்றத்திற்கு தேர்தல் எதையும் நடத்துவது அவசியமற்றது.

**19. ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்கள் தேர்தல்**

1(ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தேர்ந்ததெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, கடைசியாக வெளியிடப்பட்டுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள ஒவ்வொரு ஐந்தாயிரம் மக்கள் தொகைக்கும் கிட்டத்தட்ட இயலுமளவிற்கு ஒரு உறுப்பினர் என்ற வீதத்தில் அரசினால் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படகூடிய ஊராட்சி ஒன்றிய வார்டுகளிலிருந்து (Ward) தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்டதாகும். ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள அத்தகையதொரு வார்டானது கிராம ஊராட்சியின் ஒரு முழு வார்டையோ அல்லது கிராம ஊராட்சிகளின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வார்டுகளையோ கொண்டிருக்கலாம்.

ஆனால் ஒருவா் இந்தச் சட்டத்தின்படி, ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வாா்டுகளில் உறுப்பினராகவோ, அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் உறுப்பினராகவோ தோ்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவராகமாட்டாா்.

மேலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பனராகத் தோ்தலில் போட்டியிடும் நபரொருவா், ஒரு கிராம ஊராட்சியின் உறுப்பினராகவோ, கிராம ஊராட்சியின் தலைவராகவோ அல்லது மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராகவோ தோ்தலில் போட்டியிடும் தகுதியுடையவராகமாட்டாா்.

---

17(1) பிரிவு 19, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1996) பிரிவு 5ன்படி, புதியதாக சோ்க்கப்பட்டது. திருத்தப்படுவதற்கு முன்னா் பிரிவு 19 கீழ்கண்டவாறு இருந்தது (ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு தோ்ந்தெடுக்கப்படும் உறுப்பினா்கள் கடைசி மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊராட்சி ஒன்றிய பரப்பிடத்தின் ஒவ்வொரு ஐந்தாயிரம் மக்கள் தொகைக்கும் கிட்டத்தட்ட இயலும் அளவிற்கு ஒரு உறுப்பினா்கள் வீதம், அரசினால் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படக்கூடிய ஊராட்சி ஒன்றியம் வாா்டுகளிலிருந்து தோ்ந்தெடுக்கப்படும் உறுப்பினா்களை கொண்டிருக்கும்.

ஆனால் ஒரு நபா் இந்த சட்டத்தின்படி ஒன்றுக்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றிய உறுப்பினராக தோ்ந்தெடுக்கப்பட முடியாது.

அதோடுகூட ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினா் எவரும், கிராம ஊராட்சியின் உறுப்பினராகவோ கிராம ஊராட்சியின் தலைவராகவோ அல்லது மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராகவோ தோ்தலில் போட்டியிடும் தகுதியுடையவராக மாட்டாா்.

**20. இடஒதுக்கீடு** [G.O. No.142 RD dt.7.8.95]

(1) ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஆதிதிராவிட வகுப்பினா் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும் இட ஒதுக்கீடு அந்த ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகையில் மேற்படி சாதியின மக்கள் தொகை எந்த வீதத்தில் கிட்டத்தட்ட அமைந்திருக்கிறதோ அதே வீதத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் தோ்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினா்கள் எண்ணிக்கையில் இடங்கள் நிா்ணயித்து நிரப்பப்பட வேண்டும்.

ஆனால் இந்த சட்டம் தொடங்கப்பட்டதற்கு பின்னா் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு நடத்தப்பட வேண்டிய முதல் தோ்தலுக்காக, 1991ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் வெளியிடப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தற்காலிக மக்கள் தொகை எண்ணிக்கையே அந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகையாக கருத வேண்டும்.

(2) ஆதிதிராவிட வகுப்பினா் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் ஆதிதிராவிட வகுப்பினா் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினரைச் சாா்ந்த பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படும் இட ஒதுக்கீடு ஆதிதிராவிட வகுப்பினா் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

(3) ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் பெண்களுக்கென்று இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அவ்வாறு பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இட ஒதுக்கீடு எண்ணிக்கை கிட்டத்தட்ட ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொத்த உறுப்பினா்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் இருக்க வேண்டும். (இந்த ஒதுக்கீட்டில் ஆதிதிராவிட வகுப்பினா் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினரை பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களும் அடங்கும்).

ஆனால் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை சுழற்சி முறையில் வெவ்வேறு வாா்டுகளுக்கும் ஆய்வாளா் அறிவிக்கையின் வாயிலாக ஒதுக்குவாா்.

(4) உட்பிரிவுகள் (1) மற்றும் (2)ன்படி செய்யப்படும் இட ஒதுக்கீடு அரசமைப்புச் சட்டத்தின் 334ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு முடிவடையும் வரை நடைமுறையில் இருக்கும்.

**21. ஊராட்சி ஒன்றியத்தை வார்டுகளாக பிரித்தல்** (G.O.No.130 R.D dt.18.7.95)

(1) ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆய்வாளர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினை கலந்தாலோசித்த பின்பு அறிவிக்கையின் வாயிலாக ஊராட்சி ஒன்றியப் பகுதியை வார்டுகளாகப் பிரித்து வகுத்துரைக்கப்படக்கூடிய அளவுகளுக்கிணங்கிய வகையில், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய வார்டிலிருந்தும் ஒரு உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்.

**22. உறுப்பினர்களின் பதவி காலம்**

(1) இந்தச் சட்டத்தில் வேறு விதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி ஒரு சாதாரண தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலம் பதவி வகிப்பார்கள்.

(2) சாதாரண தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முதற் கூட்டத்திற்கெனக் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து தொடங்கும்.

(3) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தற்செயல் காலியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் உடனே பதவி ஏற்பார். ஆனால் எந்த உறுப்பினரின் காலி இடத்திற்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த உறுப்பினர் அந்த காலியிடம் ஏற்படாவிடில் எவ்வளவு காலம் பதவியில் இருந்திருக்க முடியுமோ அக்காலம் வரையில் இந்த உறுப்பினர் பதவியிலிருப்பார்.

**23. ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கான வாக்காளர் பட்டியல்**

(1) உட்பிரிவு 2ல் கூறப்பட்டுள்ள வரைமுறைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒன்றிய பகுதியில் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள மாவட்ட ஊராட்சி வாக்காளர் பட்டியலானது அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வாக்காளர் பட்டியலாகக் கருதப்படும்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்ற வார்டு தேர்தலுக்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான கடைசி தேதிக்குப் பின்பும் அத்தகைய தேர்தல் முடிவு அறிவிக்கப்படுவதற்கும முன்பும் மாவட்ட ஊராட்சிக்கான வாக்காளர் பட்டியலில் திருத்துவது, இடம் மாற்றியமைப்பது அல்லது நீக்குவது, அத்தகைய தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலின் பகுதியாக இருக்க முடியாது.

(3) ஊராட்சி ஒன்றிய மன்ற ஆணையர், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு வார்டிற்குமான வாக்காளர் பட்டியலை வரையறுக்கப்பட்ட முறையில் பேணி வருவார்.

**மாவட்ட ஊராட்சிகள்**

**24. மாவட்ட ஊராட்சியை அமைத்தல்**

(1) நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி மற்றம் இராணுவ முகாமிற்குரிய பகுதிகளை நீக்கி அறிவிக்கை வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மேற்படி அறிவிக்கையில் கூறப்பட்டுள்ள தேதி முதல், அம்மாவட்டம் முழுவதும் அதிகாரவரம்பு கொண்டிருக்கிற மாவட்ட ஊராட்சியை அரசு அமைக்கும்.

(2) ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் மாவட்டத்தின் பெயரால் அமைக்கப்பட்ட ஒரு கூட்டாண்மை அமைப்பாகும். தொடர்ந்து வழிவழியாக அதன் பெயராலும் ஒரு பொது முத்திரையோடும் இந்த சட்டத்தின் கீழோ அல்லது வேறு எந்த சட்டத்தின் கீழோ வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கும் தகுதிகளுக்கும் உட்பட்டு அதன் பெயரில் நீதி மன்றங்களில் வழக்கு தொடரவும், வழக்கு தொடரப்படவும் தகுதி பெற்றதாகும். அசையும் அல்லது அசையா உடைமைகளை உரிமை கொள்ளவும், உரிமை உடைத்தாய் இருக்கவும் உரிமை மாற்றவும், ஒப்பந்தங்கள் செய்யவும், எந்த நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளதோ அதை அடைய தேவையான, தகுதியான எல்லாவற்றையும் செய்வதற்கு அதிகாரம் பெற்றதாகும்.

## 25. மாவட்ட ஊராட்சியை ஏற்படுத்துதல்

(1) மாவட்ட ஊராட்சி

(அ) பிரிவு 27ன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்கள்

(ஆ) அம்மாவட்டத்திற்குள் ஒரு பகுதியையோ அல்லது முழுமையான பகுதியை தொகுதியாக கொண்டுள்ள மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள்.

(இ) அம்மாவட்டத்தில், வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலங்களவையின் உறுப்பினர்கள், ஆகியோர்களைக் கொண்டிருக்கும்.

(2) உட்பிரிவு (1) கூறுகள் (அ) மற்றும் (இ) யில் குறிப்பிடப்பட்ட மக்களவை, மாநிலச் சட்டப் பேரவை, மாநிலங்களவையின் உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சியின் கூட்ட நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வாக்களிக்க உரிமையுடையவர்கள் ஆவர்.

2(மற்றும் மாவட்ட கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை பெற்றிருப்பர்)

## 26. உறுப்பினர்களின் தேர்தல் ( G.O.Ms.No. 143 R.D dt.7.8.95)

ஒரு மாவட்ட ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, கடைசியாக எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மாநில அரசினால் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்பட்டவாறு மாவட்ட ஊராட்சி வார்டுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்டிருக்கும்.

(1) (ஆனால் அதே மாவட்ட ஊராட்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட வார்டுகளில் உறுப்பினராகவோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்ட ஊராட்சியில் உறுப்பினராகவோ தேர்ந்தெடுக்கப்பட முடியாது.)

திருத்தச் சட்டம் 30/1995

மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தேர்தலுக்கு போட்டியிடும் ஒரு நபரை (வேட்பாளர்) கிராம ஊராட்சி உறுப்பினர் பதவிக்கோ அல்லது கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கோ அல்லது ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவிக்கோ தேர்ந்தெடுக்க முடியாது.

மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஒருவர் கிராம ஊராட்சி உறுப்பினர் பதவிக்கோ அல்லது ஊராட்சித் தலைவர் பதவிக்கோ அல்லது ஊராட்சி ஒன்றிய பதவிக்கோ நிற்க முடியாது.

---

25 (1) அரசு ஆணை எண்.130 ஊ.வ.து. நாள்.18.7.95
சட்ட மன்ற, மக்களவை உறுப்பினர் பதவி பிரமாணம்
அரசு கடித எண்.2397/99/சி1, நாள்.27.6.2000

26-1 பிரிவு 26ல் கூறப்பட்டுள்ள வரம்புரை 1996ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1996) பிரிவு 6ன்படி திருத்தப்பட்டது. முதலில் இருந்த வரம்புரையானது (ஆனால் எவரும் அதே மாவட்ட ஊராட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் உறுப்பினராகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராகவோ தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் இல்லை) என்று இருந்தது.

**27. மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பின்பு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை தீர்மானித்தல்** ( G.O. 130, R.D. dt.18.7.95)

ஒரு மாவட்ட ஊராட்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கடைசியாக எடுக்கப்பட்ட அந்த மாவட்டத்தின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் குறிப்பிடும் அளவில் தீர்மானிக்கப்படும்.

ஆனால் மேற்சொன்னவாறு உறுப்பினர்களைத் தீர்மானிக்கும்பொழுது அப்போது பதவியில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையும் வரையிலும், அந்த மாவட்ட ஊராட்சியின் அமைப்பை எவ்விதத்திலும் பாதிக்ககூடாது.

ஆனால் இந்தச் சட்டம் தொடங்கியதற்கு பின்பு, உடனே நடைபெற வேண்டிய, மாவட்ட ஊராட்சிக்கான முதல் தேர்தலுக்காக, 1991ஆம் ஆண்டின் கணக்கெடுக்கப்பட்ட மக்கள் தொகையையே மாவட்ட ஊராட்சிக்கான தற்காலிகமான மக்கள் தொகையாக கருத வேண்டும்.

**28. மாவட்ட ஊராட்சி வார்டுகளின் எல்லையை வரையறுத்தல்**

அரசு அறிவிக்கையின் வாயிலாக,

(அ) பிரிவு 26ன்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிப் பகுதியும், ஒரு வார்டிலிருந்து ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் வார்டுகளாக பிரிக்க வேண்டும்.

(ஆ) ஊராட்சி கிராமமாக அல்லது ஊராட்சி ஒன்றியமாக அல்லது ஊராட்சி கிராமத்தின் அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் பகுதியாக இருக்க வேண்டிய ஒவ்வொரு வார்டின் பரப்பளவை தீர்மானித்தல் வேண்டும்.

(இ) ஆதிதிராவிடர் வகுப்பினர் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்படும் வார்டையோ அல்லது வார்டுகளையோ தீர்மானிக்க வேண்டும்.

Insertion of new section 28-A

After section 28 of the Principal Act, the following section shall be inserted namely;-

"28-A Special provision relating to election – Notwithstanding anything contained in this Act or the rules made

or orders issued under this Act, for the first election for the village panchayats, panchayat union councils and district panchayats to be held immediately after the 14th day of July 2006 the territorial area of wards, the number of wards in every village panchayat, panchayat union and district panchayat and the number of members to be returned by each such wards shall be the same as they exist on the 14th day of July 2006."

**29. உறுப்பினர்களின் பதவிக்காலம்**

(1) இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி சாதாரண தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஐந்தாண்டு காலம் பதவி வகிப்பர்.

(2) ஒரு சாதாரண தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம், மாவட்ட ஊராட்சியின் முதற்கூட்டத்திற்கெனக் குறிக்கப்பட்ட தேதியன்று தொடங்கும்.

(3) மாவட்ட ஊராட்சியின் தற்செயல் காலியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் உடனே பதவி ஏற்பார். ஆனால் எந்த உறுப்பினரின் காலி இடத்திற்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த உறுப்பினர் அந்த காலியிடம் ஏற்படாவிடில் எவ்வளவு காலம் பதவியில் இருந்திருக்க முடியுமோ அக்காலம் வரையில் இந்த உறுப்பினர் பதவியிலிருப்பார்.

**30. மாவட்ட ஊராட்சிக்கான வாக்காளர் பட்டியல்**

(1) ஒரு மாவட்ட ஊராட்சியின் வாக்காளர் பட்டியல் சட்டத்தை அனுசரித்து தயாரித்து திருத்தப்பட அம்மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை ஒத்திருக்கும் அத்தகைய பட்டியல் உட்பிரிவு (2)ன்படி திருத்தப்பட்டு மாற்றம் செய்யப்பட்டு நாளது வரையிலான விபரங்கள் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டதாக இருக்கும்.

(2) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்புக்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு, வாக்காளர் பட்டியல் வரையறுக்கப்பட்ட முறையில் இதன் பொருட்டு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் பதவிப் பெயரிட்டு நியமிக்கப்படும் அலுவலரால் திருத்தப்பட்டு மாற்றம் செய்யப்பட்டு நாளது வரையிலான விபரங்கள் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும்.

(3) மாவட்ட ஊராட்சி வார்டு தேர்தலுக்காக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி தேதிக்குப் பின்பு அத்தகைய தேர்தல் முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்பும் தமிழ்நாடு சட்டப் பேரவையின் வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவு எதனையும் திருத்துவது, இடம் மாற்றியமைப்பது அல்லது நீக்குவது அத்தகைய தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலின் பகுதியாக இருக்க முடியாது.

**31. மாவட்ட ஊராட்சியின் ஆட்சிக் காலம்**

(1) ஒரு மாவட்ட ஊராட்சி குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி சாதாரண தேர்தல் ஒவ்வொன்றிற்குப் பின்பு அதன் முதற்கூட்டத்திற்காக குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலம் தொடர்ந்திருக்கும். ஆனால் அதற்கும் மேல் இருக்க முடியாது.

(2) மேற்சொன்ன ஐந்தாண்டு கால அளவு முடிவடைவதற்கு முன்னர் ஒரு மாவட்ட ஊராட்சி கலைக்கப்படுமாயின் அந்த மாவட்ட ஊராட்சியை மறுபடியும் அமைப்பதற்கான தேர்தல் கூடிய விரைவில், ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் அவ்வாறு கலைக்கப்பட்ட

தேதியிலிருந்து ஆறுமாத கால அளவு முடிவடைவதற்கு முன்னரும் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

ஆனால் மேற்சொன்ன ஐந்தாண்டு காலஅளவு முடிவடைவதற்கு கடைசியாக உள்ள ஆறுமாத கால அளவிற்குள்ளாக ஒரு மாவட்ட ஊராட்சி கலைக்கப்படுமாயின் அந்த மாவட்ட ஊராட்சிக்கு தேர்தல் எதையும் நடத்துவது அவசியமற்றது.

**32. இட ஒதுக்கீடு**

(1) மாவட்ட ஊராட்சி ஒவ்வொன்றிலும் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கு உறுப்பினர் இடங்களில் இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும் இட ஒதுக்கீடு அந்த மாவட்ட ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் மேற்படி

---

30(2) வாக்காளர் பட்டியல் பதிவு அலுவலர் - ஆக ஊராட்சி ஒன்றிய ஆணையர் நியமனம்
Election Commissioner S.O.No.1/95 dt.31.8.95
Election Circular No.R6.3070/01, dt.19.6.2001.

சாதியின் மக்கள் தொகை எந்த வீதத்தில் கிட்டத்தட்ட அமைந்திருக்கிறதோ அதே வீதத்தில் மாவட்ட ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் இடங்கள் நிர்ணயித்து நிரப்பப்பட வேண்டும்.

ஆனால் இந்த சட்டம் தொடங்கப்பட்டதற்கு பின்னர் மாவட்ட ஊராட்சிக்கு நடத்தப்பட வேண்டிய முதல் தேர்தலுக்காக, 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிடல் வெளியிடப்பட்ட மாவட்ட ஊராட்சியின் தற்காலிக மக்கள் தொகை எண்ணிக்கையே அந்த மாவட்ட ஊராட்சியின் மக்கள் தொகையாக கருத வேண்டும்.

(2) ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினரைச் சார்ந்த பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும் இட ஒதுக்கீடு ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கென்ற ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

(3) மாவட்ட ஊராட்சியில் பெண்களுக்கென்று இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அவ்வாறு பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இட ஒதுக்கீடு எண்ணிக்கை கிட்டத்தட்ட மாவட்ட ஊராட்சியில் உள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் இருக்க வேண்டும். (இந்த ஒதுக்கீட்டில் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினர் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களும் அடங்கும்)

ஆனால் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் சுழற்சி முறையில் வெவ்வேறு வார்டுகளுக்கும் அரசு அறிவிக்கையிலாக ஒதுக்கப்படும்.

(4) உட்பிரிவுகள் (1) மற்றும் (2)ன்படி செய்யப்படும் இட ஒதுக்கீடு அரசமைப்புச் சட்டத்தின் 334ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு முடிவடையும் வரை நடைமுறையில் இருக்கும்.

(5) இந்தப் பிரிவின் கீழ் அல்லது பிரிவு 11 மற்றும் 20ன் கீழ் இட ஒதுக்கீடு செய்வது அரசினாலோ அல்லது அரசினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலராலோ செய்யப்படும்.

(6) இந்த பிரிவின் கீழ் அல்லது பிரிவு 11 மற்றும் 20ன் கீழ் கிராம ஊராட்சிகளில் அல்லது ஊராட்சி ஒன்றியங்களில் அல்லது மாவட்ட ஊராட்சிகளில் இட ஒதுக்கீடு தீர்மானிக்கும் பொழுது பினனங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**உறுப்பினர்களின் தகுதி, தகுதியின்மை முதலியன**

**33. வேட்பாளர்களின் தகுதி**

ஒருவர்

(அ) தொடர்புடைய ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் தன் பெயர் இருந்தாலன்றி, மற்றும்

(ஆ) அவர் இருபத்தோரு வயதை பூர்த்தி செய்திருந்தாலன்றி ஒரு ஊராட்சி அமைப்பின் உறுப்பினர் அல்லது கிராம ஊராட்சித் தலைவர் (1) தேர்தலுக்கு போட்டியிட தகுதி உடையவர் அல்லர்.

---

(1) பிரிவு 33ல் (அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி தலைவர்) என்ற சொல், 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1996) பிரிவு 8ன்படி நீக்கப்பட்டது.

**34. அரசு உள்ளாட்சி அமைப்புகள், முதலானவற்றில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் தகுதியின்மை**

(1) கிராம நிர்வாக அலுலர் அல்லது கிராமப் பணியாளர் எவரும் மற்றும் மாநில அரசு அல்லது மத்திய அரசின், ஒரு கிராம ஊராட்சியில் ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஊராட்சியில், நகராட்சி மன்றத்தில் அல்லது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதன்படியேனும் அமைக்கப்படக்கூடிய பிற மாநகராட்சி அல்லது தொழிற் நகரியம் அல்லது இராணுவ முகாமிற்குரிய பகுதி (Contonment) அல்லது மாநில மத்திய அரசிற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனத்தின் பிற அலுவலர் அல்லது பணியாளர் எவரும், உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது உறுப்பினராக பதவி வகிப்பதற்கோ தகுதியுடையவராகார்.

(2) ஒரு தேர்தலுக்கு முன்போ அல்லது பின்போ, ஒரு நபர் இப்பிரிவின்படி தகுதியுள்ளவரா, அல்லது தகுதியற்றவரா என்னும் பிரச்சனை எழுகிற போது, அப்பிரச்சினையை அரசுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இதில் அரசின் முடிவே இறுதியானதாகும்.

(3) அத்தகைய பிரச்சனை எழும்பொழுது முடிவு எடுப்பதற்கு முன்பாக, அரசு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்தினைப் பெற்று அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

**35. தேர்தல் குற்றங்களுக்காக குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டவர்களின் தகுதியின்மை**

இந்தச் சட்டத்தின் பிரிவுகள் 58 முதல் 71 வரை அல்லது 1860 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனை தொகுப்புச் சட்டத்தின் IX-A எனும் அத்தியாயத்தின்படியே தண்டிக்கப்படத்தக்க குற்றமொன்றிற்காகக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது மாநிலச் சட்டப் பேரவைக்கான தேர்தல் நோக்கங்களுக்காக அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதனாலும் அல்லது எதன்படியேனும் தகுதியிழந்திருக்கின்ற, அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியேனும் தகுதியிழந்திருக்கின்ற, நபர் ஒவ்வொருவரும், அவர் வாக்களிப்பதற்கு அல்லது இந்தச் சட்டம் பொருந்துகிற தேர்தல் எதிலும்

தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது ஒரு கிராம ஊராட்சியின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவியை அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவியை வகிப்பதற்கு குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு கால அளவிற்கு தகுதியிழந்தவராவார்.

**36. வாக்காளர்களின் தகுதியின்மை**

மனநிலை குன்றியவராயிருந்து அவ்வாறாகவே இருப்பதாக தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் சான்றுரைக்கப்பட்ட நபரொருவரும் மற்றும் பிரிவு 35ன்படி தகுதியிழந்தவராயிருக்கிற நபர் எவரும், அத்தகுதியின்மையானது எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து நீடிக்கின்றதோ அவ்வளவு காலத்திற்கு வாக்களிக்க தகுதியுடையவராக இருக்கமாட்டார்.

**37. வேட்பாளர்களின் தகுதியின்மை**

(1) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கிய குற்றம் எதற்காகவும் குற்ற வழக்கு நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்பட்ட நபரொருவர் (அத்தண்டனையானது எதிர்மாறாக்கப்படாத நிலையில்) 1(அத்தண்டனை நடைமுறையில் இருக்கும்பொழுது மற்றும் அது முடிவடைகிற நாளிலிருந்து 2( ஆறு ஆண்டு காலம் ) வரையிலும் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராவர்.

(2) 1995 ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி, தண்டிக்கப்படத்தக்க குற்றத்திற்காக தண்டனை பெற்ற ஒருவர், அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து 3( ஐந்தாண்டு காலம்) வரை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராவர் (மையச் சட்டம் 22/1995)

(3) ஒரு நபர், வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்கான கடைசி தேதியில் அல்லது தேர்தல் நடக்கும் தேதியில்

(அ) மனநிலை குன்றியவராயின் அல்லது செவிட்டு ஊமையாக இருப்பாராயின்

(ஆ) நொடிந்த நிலையரென (Insolvent) நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரராகவோ, அல்லது விடுவிக்கப்படாத நொடித்த நிலையராகவோ (Insolvent) இருப்பாராயின்;

(இ) நிறுவனமொன்றின் (இயக்குநர் அல்லதாத பிற) பங்குதாரர் நீங்கலாக எந்த ஒரு ஊராட்சி எதற்காகவும் அதனுடன் செய்யப்பட்டு வருகின்ற பணி எதிலும் உரிமை நலன் கொண்டவராக இருப்பாராயின்:

(ஈ) அந்த ஊராட்சியின் சார்பிலான ஊதியம் பெறும் வழக்கறிஞராகவோ அல்லது அந்த ஊராட்சிக்கு எதிரான வழக்கறிஞராகவோ இருப்பாராயின்;

4(ஈஈ) ஒரு ஊராட்சி அமைப்பில் ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது ஆதிதிராவிடப்பட்டியல் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட பதவியிடத்திற்கு போட்டியிடுபவர் ஆதிதிராவிடர் அல்லது ஆதிதிராவிட பழங்குடியினராக இல்லை என கண்டறியப்படுமாயின்)

(உ) ஏற்கனவே ஒரு ஊராட்சியின் உறுப்பினராக இருக்கும் ஒருவர், அவரது பதவிக்காலம் முடிவுறாத நிலையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆனால் பதவிக்காலம் தொடங்கப்பெற்றால் அல்லது ஏற்கனவே ஒரு ஊராட்சியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்து, அவரது பதவிக் காலம் தொடங்கப்படாமலிருந்தால்;

(ஊ) பொறுப்பாளர் என்ற தகுதியில் இல்லாமல், மற்றபடி முந்தைய ஆண்டு வரையிலும் (அவ்வாண்டு) உள்ளடங்கலாகவும், ஊராட்சிக்கு அவர் கொடுக்க வேண்டிய எந்த

வகையிலுமான நிலுவை வைத்திருப்பவராயின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராவர்.

--------------------------------------------------------------------------------

1 (துணை விதி (1)ல் அத்தண்டனையை அனுபவிக்கும்பொழுது என்பதற்கு பதிலாக ( ) ல் கூறப்பட்டுள்ளவாறு 2001 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2000) ன்படி திருத்தப்பட்டது.

2 (இத்துணை விதியில் ஐந்து ஆண்டுகள் என இருந்ததை ஆறு ஆண்டுகள் என 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சியின் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2000)ன்படி திருத்தப்பட்டது.

3 இத்துணை விதியில் ஐந்து ஆண்டுகள் என இருந்ததை ஆறு ஆண்டுகள் என 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சியின் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2000) ன்படி திருத்தப்பட்டது.

4 கூறு (ஈஈ) 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999) பிரிவு 2ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

1(4) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், தாம் திருப்தி அடைந்தால் ஒரு நபரை பின்வரும் அடிப்படையில்:

(அ) இச்சட்டத்தின் வரைமுறைகளுக்கிணங்க தேர்தலுக்கான செலவின கணக்கினை குறிப்பிட்ட காலவரைக்குள்ளும் மற்றும் குறிப்பிட்ட வழிவகைகளுக்கிணங்க தாக்கல் செய்யதவறுவாராயின்; மற்றும்

(ஆ) போதுமான, நியாயமான காரணங்கள் இன்றி கணக்கை தாக்கல் செய்யத் தவறும் பொழுது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தமிழ்நாடு அரசிதழில், ஊராட்சிகளின் உறுப்பினர் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிட மற்றும் அத்தகைய பதவி வகிக்க தகுதியற்றவர் என அறிவிக்கை வெளியிடும். மேலும் இவ்வாறு தகுதியற்றவராக கருடுதப்படும் நபர் அரசிதழில் வெளியான நாளிலிருந்து மூன்று வருடத்திற்கு தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராக கருதப்படுவார்.)

**38. உறுப்பினர்களின் தகுதியின்மை**

பிரிவு 41-ல் கூறப்பட்டுள்ள பிரிவின் வரைமுறைகளுக்கு உட்பட்டு, ஒரு உறுப்பினர்

(அ) பிரிவு 37 உட்பிரிவு (1)ல் விவரிக்கப்பட்டுள்ள குற்றத்திற்காக, மற்றும் குற்ற வாக்கு நீதி மன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டவராயிடருப்பின்;

(ஆ) 1955ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றம் செய்ததற்காக அவர் தண்டனை பெற்றவராயின்

(இ) மனநலம் குன்றியவராக அல்லது செவிட்டு ஊமையராக ஆகிவிட்டிருப்பின்'

(ஈ) நொடிந்து நிலையரெனத் (Insolvent) தீர்ப்பளிக்க வேண்டிய விண்ணப்பம் செய்துள்ளவராக இருப்பின் அல்லது நொடிந்த நிலையரென நீதி மன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராக இருப்பின்:

(உ) இந்த சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு அன்றி நிறுவனமொன்றின் (இயக்குநர் அல்லாத பிற) பங்குதாரர் நீங்கலாக ஊராட்சி அல்லது எந்த ஊராட்சிக்காக செய்யப்படும் பணி எதிலும் உரிமை நலன் எதனையும் கொண்டவராக இருப்பாராயின்:

(ஊ) ஊராட்சி எதனின் சார்பாகவும் வழக்குரைஞராக ஊதியத்திற்கு பணியிலிருப்பவராக அல்லது ஊராட்சி எதற்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்குரைஞராக பொறுப்பேற்றவராக இருப்பாராயின்

[2] (ஊஊ) ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பை சார்ந்தவராக இல்லாமல், ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட பதவி இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவராய் இருப்பின்)

(எ) இந்தச் சட்டத்தின்படி அலுவலராகவோ அல்லது பணியாளராகவோ இருப்பாராயின்

---

37 (4) [1] உட்பிரிவு (4) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 54/98) பிரிவு 2ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது

38 [2] உட்கூறு (ஊஊ) 1999 தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999 பிரிவு 3ன் படி புதியதாக சேர்க்கப்பட்டது.

(ஏ) சந்தர்பத்திற்கேற்ப கிராமத்திலோ ஊராட்சி ஒன்றியத்திலோ அல்லது மாவட்டத்திலோ குடியில்லாமலிருப்பாராயின்

(ஐ) பொறுப்பாளர் என்ற தகுதி இல்லாமல் பிறவாறாக) எந்த ஒரு ஊராட்சிக்கு அவர் கொடுக்க வேண்டிய எவ்விதமான நிலுவையை அத்தகைய நிலுவைகள் கொடுக்கப்பட வேண்டிய காலத்திற்கு பின்பு மூன்று மாதங்களுக்குள்ளாக கொடுக்கத் தவறியிருப்பாராயின்

(ஒ) அவரது பதவிக் காலம் தொடங்கிய தேதியிலிருந்து அல்லது அவர் கடையியாக வருகை புரிந்துள்ள கூட்டத் தேதியிலிருந்து அல்லது பிரிவு 39 உட்பிரிவு (1)ன்படி பதவியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று மாத காலம் ஊராட்சியின் கூட்டங்களுக்கு வராதிருப்பாராயினும் அல்லது அக்கால அளவிற்குள் மூன்றுக்கும் குறைவாக கூட்டங்கள் நடைபெற்றிருப்பது மேற்சொன்ன தேதிக்குப் பின்னர்,

தொடா்ந்து மூன்று கூட்டங்களுக்கும் அவா் வராதிருப்பாராயின், அவா் பதவி வகிப்பது அற்றுப்போகும்; ஆனால்

(i) அவருக்கு கூட்டத்தைப் பற்றிய உரிய அறிவிப்பு கொடுக்கப்படாதிருந்தாலோ அல்லது

(ii) ஒரு சாதாரண கூட்டத்திற்கு குறைவான கால அளவு அறிவிப்பில் அக்கூட்டமானது நடைபெற்றிருக்குமானாலோ; அல்லது;

(iii) கூட்டமானது உறுப்பினா்களின் வேண்டுகோளின்படி நடத்தப்பட்டிருந்தாலோ இந்தக் கூற்றின்படி, ஒரு உறுப்பினா் வராதிருந்த கூட்டம் எதனையும் அவருக்கு எதிராகக் கணக்கிட முடியாது.

**38-ஏ தலைவா், துணைத் தலைவா் உறுப்பினா்கள் ஆகியோரது தகுதியின்மை**

இச்சட்டத்தில் எந்தவிதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் சட்டமன்றத்திலோ அல்லது பராளுமன்றத்தின் இரு அவைகளில் ஏதொன்றின் உறுப்பினராக உள்ள ஒரு நபா் கிராம ஊராட்சித் தலைவா், துணைத் தலைவா் அல்லது உறுப்பினராகவோ ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவா், துணைத் தலைவா் அல்லது உறுப்பினராகவோ அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவா், துணைத் தலைவா் அல்லது உறுப்பினராகவோ தோ்ந்தெடுக்கப்படவோ அல்லது பதவியில் தொடா்ந்து இருக்கவோ தகுதியுடையவா் அல்லா்.

**39. உறுப்பினா்களை பதவியில் மீண்டும் சோ்த்தல்**

(1) பிரிவு 35 அல்லது பிரிவு 38 கூறு (அ) அல்லது (ஆ)ன்படி உறுப்பினராக இருப்பது முடிவுற்ற குற்றத் தீா்ப்பு அல்லது தண்டனையானது, மேல்முறையீட்டாலோ அல்லது மறு ஆய்வாலோ நீக்கம் செய்யப்படுமாயின் அத்தகைய நபரை அப்பதவியில் மீண்டும் சோ்த்துக்கொள்ளப்பட வேண்டும். அவா் முதலில் தோ்ந்தெடுக்கப்பட்ட கால அளவில் எவ்வளவு பகுதி, அவ்வாறு அவா் மீண்டும் சோ்க்கப்படும் தேதியன்று முடிவுறாமல் எஞ்சி நிற்கின்றதோ அந்த காலப்பகுதிவரை மட்டுமே அவரை மீண்டும் சோ்த்துக் கொள்ள முடியும். மற்றும் மேற்சொன்னவாறு அவா் மீண்டும் சோ்க்கப்படுவதின் பேரில் இடைக்காலத்தில் அக்காலியிடத்தை நிரப்புவதற்கு தோ்ந்தெடுக்கப்பட்ட நபரை அப்பதவியை விட்டு நீக்குதல் வேண்டும்.

(2) ஒருவா் பிரிவு 38(ஒ) எனும் கூற்றின்படி, உறுப்பினராக இருப்பது முடிவுற்ற நிலையில் செயல் அதிகாரி அல்லது ஆணையா் அல்லது செயலாளா் அச்செய்தியினை உடனே அத்தகைய நபருக்கு, எழுத்து மூலம் தெரிவித்து, அதனை ஊராட்சியின் அடுத்த கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும். அதன் அடுத்த கூட்டத் தேதியன்றோ அல்லது அத்தேதிக்கு முன்னரோ அல்லது அத்தகைய தகவலை அவா் பெற்றுக் கொண்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாகவோ, அத்தகைய நபா் தாமாகவே தன்னை மீண்டும் சோ்த்துக் கொள்வதற்கு விண்ணப்பித்தால், அந்த ஊராட்சியானது அவ்விண்ணப்பத்தினைப் பெற்ற பின்பு அடுத்து நடைபெறும் கூட்டத்தில் அவரை உறுப்பினா் பதவியில் மீண்டும் சோ்த்துக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு உறுப்பினரின் பதவிக்காலத்தில் இரண்டு முறைக்கு மேற்பட்டு மீண்டும் சோ்க்கப்பட கூடாது.

**40. உறுப்பினா்களால் செய்யப்பட வேண்டிய உறுதி ஏற்பு அல்லது உறுதியளிப்பு**

(1) 1969-ஆம் ஆண்டு உறுதியேற்புச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், உறுப்பினராக தோ்ந்தெடுக்கப்பட்டுள்ள, அல்லது உறுப்பினராக ஆகின்ற ஒவ்வொரு உறுப்பினரும், தம் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு ஊராட்சியின் கூட்டத்தில் பின்வரும் படிவத்தில் உள்ளவாறு உறுதியேற்பை அல்லது உறுதியளிப்பை செய்ய வேண்டும். அதாவது, இந்த கிராம ஊராட்சியின் /ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் /மாவட்ட ஊராட்சியின்

உறுப்பினராக தேர்ந்ததெடுக்கப்பட்டுள்ள/உறுப்பினரொருவராக ஆகியுள்ள அ, ஆ என்கிற நான், சட்டத்தின்படி அமைக்கப்பட்ட இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றாா்வமும் கொண்டு இயங்குவேன் என்றும், இந்தியாவின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவேன் என்றும், நான் ஏற்கவிருக்கும் கடமையினை உண்மையாக அற்றிவருவேன் என்றும் கடவுள் பெயரால் உறுதி கூறுகிறேன்/உளமாற உறுதியளிக்கிறேன்.

(2) உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள/ஆகியுள்ள ஒரு நபர், அவரது பதவிக் காலம் தொடங்குகின்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகவே அல்லது மேற்சொன்ன தேதிக்குப் பின்பு நடைபெற்ற முதல் மூன்று கூட்டங்களில் ஒன்றிலோ இவற்றில் எது பிந்தி வருகின்றதோ அதற்குள்ளாக உட்பிரிவு (1)ல் விதிக்கப்பட்டுள்ள உறுதியளிப்பைச் செய்யத் தவறினால் அவர் பதவி வகிப்பது அற்றுப்போகும் மற்றும் அவரது இடம் காலியாகி விட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(3) உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினராக ஆகியுள்ள நபர் உட்பிரிவு (1)ல் விதிக்கப்பட்டுள்ள உறுதி ஏற்பை அல்லது உறுதியளிப்பைச் செய்திருந்தாலன்றி ஊராட்சியின் கூட்டமொன்றில் தம் பதவியை ஏற்கவோ அல்லது அத்தகைய உறுப்பினர் என்ற முறையில் செயல்பட கூடாது.

(4) உட்பிரிவு (3)ல் என்ன அடங்கியிருந்த போதிலும், உறுப்பினராக உறுதியேற்காதுள்ள அல்லது உறுதியளிக்காதுள்ள கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவரோ இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட குழுவொன்றின் உறுப்பினரோ, அத்தகைய தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ செயற்படுவதற்கு உரிமை உடையவர் ஆவார். ஆனால், அவர் தலைவராகவோ அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப உறுப்பினராகவோ தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு அல்லது நியமிக்கப்பட்டதற்கு, அல்லது அவர்களின் அலுவல்களைப் புரிவதற்கு தகுதியுடையவரான பின்பு, இரண்டு மாதங்களுக்குள்ளாக அவர் கலந்து கொள்கிற ஊராட்சியின் முதல் கூட்டத்தில், அவர் பதவியை ஏற்றுக் கொண்டு உறுதியேற்பை அல்லது உறுதியளிப்பைச் செய்திருக்க வேண்டும்.

**விளக்கம் இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக**

(i) தலைவர் என்றால் பிரிவு 47 உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)படி தலைவருடைய அலுவல்களைப் புரிகின்ற துணைத் தலைவரையும் அதே பிரிவு (3)ல் நியமிக்கப்பட்ட தற்காலிகத் தலைவரையும் உள்ளடக்கும். மற்றும்

(ii) ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சியின் தலைவர் என்றால் பிரிவு 54 உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (5)படி, தலைவரின் அலுவல்களைப் புரிகின்ற துணைத் தலைவரோ அல்லது அதே பிரிவில் உட்பிரிவு (2)ன்படி, பதவி வழி தலைவராக உள்ள வருவாய்க் கோட்ட அலுவலரையோ உள்ளடக்கும்.

## 41. உறுப்பினர்களின் தகுதியின்மை தொடர்பான பிரச்சினையை முடிவு செய்யும் அதிகார அமைப்பு

(1) ஊராட்சியொன்றின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டள்ள அல்லது ஊராட்சியின் உறுப்பினராக ஆகியுள்ள ஒருநபர் தகுதியினைப் பெறாதவர் என்றோ, அல்லது பிரிவுகள் 33, 35, 37, 38, 40 ஆகிய பிரிவுகளின்படி தகுதி இழந்துவிட்டார் என்கின்ற சூழ்நிலைகளின் போதெல்லாம் செயல் அதிகாரியானவர் அல்லது ஆணையரானவர் அல்லது செயலாளரானவர் அவ்விபரத்தை எழுத்து மூலமான அறிவிப்பின் மூலம் அத்தகைய உறுப்பினருக்குத் தெரியப்படுத்த வேண்டும், மற்றும் தொடர்புள்ள ஊராட்சியின் அடுத்த கூட்டத்தில் இந்த விவரத்தை வைக்க வேண்டும். அந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதம் முடிவடைவதற்கு முன்பாக, அத்தகைய உறுப்பினர் உட்பிரிவு (2)ல்

கூறப்பட்டுள்ள நீதிமன்றத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவில்லையென்றால், மேற்சொன்ன இரண்டு மாதம் முடிவடைந்த தேதியிலிருந்து உறுப்பினர் தகுதியை இழந்தவர் அல்லது அற்றுப் போனவராவார்.

(2) ஊராட்சியால் அல்லது தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரால் பணிக்கப்பட்டால் செயல் அதிகாரி, அல்லது ஆணையர் அல்லது தேர்விற்கேற்ப செயலாளர் வகுத்துரைக்கப்பட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும் மற்றும் அத்தகைய உறுப்பினர் எவரும் அல்லது பிற உறுப்பினர் எவரும் விண்ணப்பம் செய்து கொள்ளலாம், அத்தகைய விண்ணப்பத்தின் மீது நீதிமன்றத்தின் முடிவே இறுதியானதாகும்.

(3) உட்பிரிவு (2)ன்படி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டிருக்குமாயின், அத்தகைய விண்ணப்பத்தின் மீது இறுதி முடிவு எடுக்கப்படும் வரை அவ்வுறுப்பினர் தகுதியுள்ளவராக அல்லது தகுதியிழந்தவர் அல்லாதவராக செயல்படுவதற்கு தகுதியுடையவராவார்.

(4) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பிரிவு 39ல் கூறப்பட்டுள்ள வரைமுறைகளை எவ்விதத்திலும் பாதிப்பதாக கொள்ள முடியாது.

**கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்**

**42. கிராம ஊராட்சியின் தலைவரும் துணைத் தலைவரும்**

ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஒரு தலைவரும் ஒரு துணைத் தலைவரும் இருப்பார்கள்.

**43. கிராம ஊராட்சி தலைவரை தேர்ந்தெடுத்தல்**

**(1) (அ)** கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களிடையேயிருந்து கிராம ஊராட்சித் தலைவர் வகுத்துரைக்கப்படக்கூடிய வகையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(ஆ) சாதாரண அல்லது தற்செயலான தேர்தலில், கிராம ஊராட்சிக்கு தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், புதிதாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஆனால் கிராம ஊராட்சி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு போட்டியிடுகின்ற நபர் கிராம ஊராட்சியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவராக மாட்டார். இவர் ஒன்றிய மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தேர்தலுக்கு தகுதியற்றவராவார் (சட்டம் 30/95). ஆனால்/மற்றும் உறுப்பினராக தேர்ந்ததெடுக்கப்படுவதற்கு போட்டியிடுகிற ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு போட்டியிட தகுதியற்றவர்.

மேலும் உறுப்பினராக இருப்பவர் எவரும் கிராம ஊராட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிட தகுதி உடையவர் இல்லை.

(2) கிராம ஊராட்சி உறுப்பினர்களின் சாதாரண தேர்தல்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அதே நேரத்திலும் மற்றும் அதே இடங்களிலும் கிராம ஊராட்சி தலைவர் சாதாரண தேர்தலும் நடத்தப்படலாம்.

(3) இச்சட்டத்தில் வேறுவிதமாக தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, சாதாரண தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சித் தலைவரின் பதவிக் காலம், சாதாரண காலியிடம் ஏற்பட்ட நாளின் நண்பகலில் தொடங்கி ஐந்தாண்டுகளாக இருக்கும்.

(4) கிராம ஊராட்சித் தலைவரின் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டும். அத்தகைய காலியிடம் எதிலும்

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருநபர் உடனடியாகப் பதவியை ஏற்க வேண்டும். ஆனால் எந்த நபரின் காலியிடத்தில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ, அக்காலியிடமானது ஏற்படாதிருந்தால் அந்த நபர் எவ்வளவு காலத்திற்குப் பதவி வகிக்க தகுதியுடையவராய் இருந்திருப்பாரோ அவ்வளவு காலத்திற்க மட்டுமே இவர் பதவி வகிக்க முடியும்.

(5) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் வேறு விதமாகப் பணித்தாலன்றி கிராம ஊராட்சித் தலைவர் பதவியில் உள்ள தற்செயல் காலியிடம் எதையும் உட்பிரிவு (1)எ ன்படி கிராம ஊராட்சித் தலைவரின் சாதாரண தேர்தல், நடைபெற வேண்டிய தேதிக்கு முற்பட்ட ஆறு மாதத்திற்குள்ளாக நிரப்புதல் கூடாது.

(6) பிரிவு 34 முதல் பிரிவு 41 வரையுள்ள/பிரிவுகளிலுள்ள (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்களாக) வழிமுறைகள் ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினருக்கு பொருந்துவது போன்றே இயலுமளவிற்கு கிராம ஊராட்சித் தலைவருக்கும் பொருந்தும்.

(7) கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சியின் பதவி வழி உறுப்பினர் ஆவார் மற்றும் அவர் கிராம ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவருக்குள்ள அனைத்து உரிமைகளையும் பெற்றிருப்பார்.

### 44. கிராம ஊராட்சியின் துணைத் தலைவர் தேர்தல்

(1) கிராம ஊராட்சியின் துணைத் தலைவர் கிராம ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கிடையேயிருந்து வகுத்துரைக்கப்படும் நடைமுறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

(2) உட்பிரிவு (1)ன்படி நடைபெற்ற தேர்தலில் கிராம ஊராட்சித் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையெனில் புதிய தேர்தல் நடத்த வேண்டும்.

### 45. கிராம ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் பதவி முடிவுற்று போதல்

(அ) கிராம ஊராட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் பதவி வகிப்பதற்கான தகுதி இழந்து விட்டிருந்தாலோ அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ, அல்லது அவரது பதவிக்காலம் முடிவுற்று போனதாலோ அல்லது மற்றபடி தலைவராக இருப்பது முடிந்து போனாலோ; அவர் பதவி முடிவுற்று போகும்.

(ஆ) கிராம ஊராட்சித் துணைத் தலைவரை பொறுத்த வரையில் 1 (அவர் பதவி வகிப்பதற்கான தகுதி இழந்து விட்டிருந்தாலோ அல்லது அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ அல்லது) உறுப்பினர் பதவிக்காலம் முடிவுற்று போனதாலோ அல்லது மற்றபடி உறுப்பினராக இருப்பது முடிந்து போனாலோ துணைத் தலைவர் பதவி முடிவுற்று போகும்.

---

45 (ஆ)(1) சொற்றொடர் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு2ன் மூலம் சேர்க்கப்பட்டது)

### 46. கிராம ஊராட்சித் தலைவரின் அலுவல்கள்

2(அ) கிராம ஊராட்சியின் கூட்டங்களையும் கிராம சபை கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும்.

(ஆ) கிராம ஊராட்சியின் அனைத்து பதிவேடுகளையும் காண முழுமை உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) இந்தச் சட்டத்தின்படி கிராம ஊராட்சித் தலைவர் என்ற முறையில் குறிப்பாக ஆற்ற வேண்டிய கடமைகள் ஆற்றுவதும் மற்றும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி வருதல் வேண்டும்.

(2) கிராம ஊராட்சிக்கும், அரசுக்குமிடையே நடைபெறும் அலுவலக தொடர்பானது, கிராம ஊராட்சித் தலைவரின் மூலமாக அன்றி மற்றபடி நடத்துதல் கூடாது. கிராம ஊராட்சித் தலைவர் மூலமாக செயல் அதிகாரி அனுப்புகிற தகவல் தொடர்புகளை அரசுக்கும், அரசு அனுப்புகிற தகவல் தொடர்புகளை செயல் அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும்.

**47. கிராம ஊராட்சித் தலைவரின் அலுவல்கள் வந்தடைதலும் (3) மற்றும் தலைவரின் பதவியில் ஏற்பட்ட காலி இடத்தை நிரப்புதலும்** (G.O Mo.178, R.D dt.30.8.99)

(1) கிராம ஊராட்சித் தலைவரின் பதவி காலியாகும் பொழுது, புதிய கிராம ஊராட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு பதவி ஏற்கும் வரையிலும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் கிராம ஊராட்சித் தலைவரின் அலுவல்களைப் புரிந்து வர வேண்டும்.

(2) கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சியின் எல்லைக்குள் தொடர்ந்து முப்பது நாட்களுக்கும் மேலாக இல்லாதிருப்பாரானால், அல்லது கிராம ஊராட்சி தலைவராக இருப்பதற்கு இயலாதவர் ஆகிவிட்டிருந்தால், கிராம ஊராட்சித் தலைவரின் அலுவல்கள், வகுத்துரைக்கப்படக்கூடிய சூழ்நிலைகள் தவிர, துணைத் தலைவரிடம் வந்தடையும்.

(3) கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகள் காலியாகிற பொழுது அல்லது கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் கிராம ஊராட்சி எல்லைக்குள் தொடர்ந்து முப்பது நாட்களுக்கு மேலாக இல்லாமலிருக்கும்போது அல்லது இருவரும் பதவி வகிக்க இயலாதவர் ஆகிவிட்டிருக்கும் போது கிராம ஊராட்சி தலைவரின் அலுவல்கள்.ஆய்வாளரால் நியமிக்கப்படும் கிராம ஊராட்சியின் உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படும், மற்றும் கிராம ஊராட்சியின் உறப்பினர் எவரும் இல்லையெனில் ஆய்வாளரால் இதற்கென நியமிக்கப்படும் ஒரு நபரிடம் ஒப்படைக்கப்படும்.

(தற்காலிக தலைவரென அழைக்கப்படும்) கிராம ஊராட்சியின் அந்த உறுப்பினர் அல்லது அவ்வாறு நியமிக்கப்பட்ட அந்த நபர், வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, புதிய கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு பதவி ஏற்கிற வரையிலும் அல்லது கிராம ஊராட்சியின் தலைவர் மற்றம் துணைத்தலைவர் கிராம ஊராட்சியின் எல்லைக்குள் திரும்பி வருகிற வரையிலும் அல்லது இயலாத நிலையிலிருந்து மீளுகிற வரையிலும் கிராம ஊராட்சித் தலைவரின் அலுவல்களைப் புரிந்து வருதல் வேண்டும்.

---

46 (அ) 2 கூறு (அ) முன்னர் கிராம ஊராட்சியின் கூட்டங்களை கூட்ட வேண்டும் என்பதை மாற்றி புதியதாக இக்கூறு, 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 3ன் மூலம் சேர்க்கப்பட்டது.

47 3 தலைப்பில் (மற்றும் ஒப்படைவு செய்தலும் என்ற சொற்றொடர் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம்' 29/1999) பிரிவு 4ன் மூலம் நீக்கம் செய்யப்பட்டது.

(4) கிராம ஊராட்சி தலைவர் பதவியில் எழும் காலியிடம் குறித்து தமிழ்நாடு மாநிலத் தேர்தல் அணையருக்கு வரையறுக்கப்படக்கூடிய நபராலும் குறித்த கால அளவிற்குள்ளாகவும், தெரிவிக்க வேண்டும்; மற்றும் தமிழ்நாடு மாநலத் தேர்தல் ஆணையரால், கிராம ஊராட்சித் தலைவர் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(5) உட்பிரிவு (2)ன்படி கிராம ஊராட்சித் துணைத் தலைவரிடம் வந்தடைந்த அலுவல்கள் எவற்றையும் அவர் செலுத்துவதை அல்லது ஆற்றுவதைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கு கிராம ஊராட்சித் தலைவர் அதிகாரம் பெற்றிருப்பார்.

**48. கிராம ஊராட்சி தலைவரின் அலுவல்களை ஒப்படைத்தல்**

வரையறுக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு எழுத்து மூலமான ஆணையின் மூலம் கிராம ஊராட்சித் தலைவர் தம் அலுவல்களில்

எதனையும் துணைத் தலைவரிடமோ துணைத் தலைவா் இல்லாத போது வேறு ஒரு உறுப்பினா் எவரிடமோ ஒப்படைக்கலாம். ஆனால் அவ்வாறு ஒப்படைக்கும் அலுவல்கள் எவற்றையும் புரிந்து வருவதானது அல்லது ஆற்றி வருவதானது, கிராம ஊராட்சித் தலைவரால் விதிக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மற்றும் மறு ஆய்விற்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

ஆனால் கிராம ஊராட்சியால் தடை செய்யப்பட்ட அலுவல்கள் எதனையும் கிராம ஊராட்சித் தலைவா் ஒப்படைக்க முடியாது.

**ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சியின் தலைவா்**
**மற்றும் துணைத் தலைவா்**

**49. ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் மற்றும் துணைத்தலைவா்**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் ஒரு தலைவா் மற்றும் துணைத் தலைவா் இருப்பா்.

**50. ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் தோ்தல்**

(1) ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா், ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு தோ்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினா்களுக்கிடையேயிருந்து வரையறுக்கப்பட்ட நடைமுறைகளுக் கிணங்க தோ்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(2) உட்பிரிவு (1)ன்படி நடத்தப்பட்ட தோ்தலில் ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா் தோ்ந்தெடுக்கப்படவில்லையெனில், புதிய தோ்தல் நடத்த வேண்டும்.

**51. ஊராட்சி ஒன்றிய மன்றத் துணைத் தலைவா் தோ்தல்**

(1) ஊராட்சி ஒன்றிய மன்ற துணைத் தலைவரை, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தோ்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினா்களுக்கிடையேயிருந்து வரையறுக்கப்பட்ட நடைமுறைகளுக்கிணங்க தோ்ந்தெடுக்க வேண்டும்.

(2) உட்பிரிவு (1)ன்படி நடத்தப்பட்ட தோ்தலில் ஊராட்சி ஒன்றிய மன்ற துணைத் தலைவா் தோ்ந்தெடுக்கப்படவில்லையெனில், புதிய தோ்தல் நடத்த வேண்டும்.

**52. ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரின் அலுவலா்கள்**

(1) ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா்

(அ) ஊராட்சி ஒன்றிய மன்ற கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும் மற்றும்

(ஆ) இந்த சட்டத்தின்படியும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் படியும் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவருக்கு குறிப்பாக ஆற்ற வேண்டிய கடமைகளையும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் செலுத்திவர வேண்டும்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா் ஊராட்சி ஒன்றியத்தின் அனைத்து ஆவணங்களையும் காண முழு அதிகாரம் பெற்றிருப்பாா். மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் அரசுக்குமிடையே நடைபெறும் கடித தொடா்பு ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் மூலமாகவே நடைபெற வேண்டும். ஊராட்சி ஒன்றியமன்ற தலைவா் ஆணையா் அரசுக்கு அனுப்புகிற தகவல்களை அரசிற்கும் அரசு ஆணையருக்கு அனுப்புகின்ற தகவல்களை ஆணையருக்கும் தெரிவிக்க வேண்டும்.

**53. ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் மற்றும் துணைத் தலைவரின் பதவி முடிவுற்று**

**போதல்**

(அ) ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா் பதவி வகிப்பதற்கு தகுதி இழந்துவிட்டிருந்தாலோ அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ அல்லது அவரது பதவிக் காலம் முடிவுற்றுப் போனாலோ அல்லது மற்றபடி தலைவராக அல்லது உறுப்பினராக இருப்பது முடிந்து போனாலோ அவா் பதவி முடிவுற்றுப்போகும்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய மன்ற துணைத் தலைவா் 1(பதவியை வகிப்பதற்கான தகுதி இழந்துவிட்டிருந்தாலோ/அல்லது மற்றபடி உறுப்பினராக இருப்பது முடிந்துபோனாலோ அல்லது அவா் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ) உறுப்பினா் பதவிக்காலம் முடிவுற்றுப் போனாலோ துணைத் தலைவரும் பதவி வகிப்பது முடிவுற்றுப் போகும்.

**54. ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவரின் அலுவல்கள் வந்தடைதலும் ஒப்படைப்பு செய்யப்படுதலும் மற்றும் தலைவரின் பதவியில் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்புதலும்**

(1) ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா் பதவி காலியாகும் போது புதிய ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் தோ்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்கும் வரை ஊராட்சி ஒன்றிய மன்ற துணைத் தலைவா் ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவரின் அலுவல்களைப் புரிந்து வருவாா்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா் பதவி காலியாக மற்றும் துணைத் தலைவா் பதவி காலியாக இருக்கும் போது அல்லது அவா் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் முப்பது நாட்களுக்கு மேல் இல்லாதிருக்கும் போது அல்லது பதவி வகிக்க இயலாதவா் ஆகிவிட்டிருக்கும் போதும், மற்றும் புதிய தலைவரோ துணைத் தலைவரோ தோந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்கும் வரையிலோ அல்லது துணைத் தலைவா் அதிகார வரம்பு எல்லைக்குத் திரும்பி வருகிற வரையிலோ அல்லது நோ்விற்கேற்ப இயலாத நிலையிலிருந்து மீளுகிற வரையிலும் இந்தச் சட்டத்திலோ அல்லது இதன்படி இயற்றப்பட்ட விதிகள் அல்லது அறிவிக்கைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும் வருவாய்க் கோட்ட அலுவலா் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பதவி வழி உறுப்பினராகவும் தலைவராகவும் இருப்பாா்.

(3) பதவியிலிருந்து நீங்குகின்ற ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவரோ அல்லது துணைத் தலைவரோ மறுமுறை தோ்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவா் ஆவாா்.

(4) ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் எழுத்துருவிலான ஆணையொன்றின் மூலம் தம் அலுவல்களில் எதனையும் ஊராட்சி ஒன்றிய மன்றத் துணைத் தலைவருக்கு ஒப்படைக்கலாம்.

ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் தடை செய்யப்பட்ட அலுவல்கள் எதனையும் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் ஒப்படைக்க முடியாது.

---

53(ஆ) 1 கூறு (ஆ) ( ) ல் கூறப்பட்டுள்ள சொற்றொடா் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999 பிரிவு 5ன் மூலம் புதியதாக சோ்க்கப்பட்டது.

(5) ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் தொடா்ந்து முப்பது நாட்களுக்கு மேல் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் இல்லாதிருப்பாரானால் அல்லது பதவி வகிப்பதற்கு இயலாதவராகி விட்டிருந்தால் அச்சமயங்களில் அவரது அலுவல்கள் வகுத்துரைக்கப்படக் கூடிய சூழ்நிலைகள் தவிர துணைத் தலைவரிடம் வந்தடையும்.

(6) ஊராட்சி ஒன்றிய மன்றத் துணைத் தலைவா் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் தொடா்ந்து முப்பது நாட்களுக்கு மேல் இல்லாதிருப்பாரானால் அல்லது பதவி காலியாக இருக்குமானால் தலைவா் ஆணையின் மூலமாக தம் அலுவல்கள் எவற்றையும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பிற உறுப்பினா் எவருக்கும் ஒப்படைக்கலாம். அத்தகைய ஒப்படைப்பு காலத்தில் அவா் ஒப்படைப்பு தலைவா் என்று அழைக்கப்படுவாா். ஆனால்

(i) இந்த உட்பிரிவின்படி ஒப்படைக்கும் ஆணையானது நடைமுறையில் இருக்கின்ற பொழுது அலுவல் எதனையும் ஒப்படைக்கிற ஆணை எந்த உறுப்பினரின் பெயரில் உள்ளதோ அவரைத் தவிர வேறு எந்த ஒரு நபர் பெயரிலும் பிறப்பிக்க முடியாது.

(ii) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் சிறப்பு ஒப்புதலின்றி ஒரு ஆண்டில் மொத்தம் தொண்ணூறு நாட்களுக்கு மேல் இந்த உட்பிரிவின்படி ஒப்படைக்க முடியாது.

(iii) இந்த உட்பிரிவின்படி வழங்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

(7) இந்தப்பிரிவின்படி ஒப்படைக்கப்பட்ட பணிகள் எல்லாவற்றையும் புரிந்து வருவது அல்லது ஆற்றிவருவது ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரால் விதிக்கப்படக்கூடிய வரன் முறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருக்கும்.

**55. மாவட்ட ஊராட்சி தலைவர் துணைத் தலைவர்**

ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ஒரு தலைவர் மற்றும் ஒரு துணைத் தலைவர் இருப்பர்.

**56. மாவட்ட ஊராட்சித் தலைவர் துணைத் தலைவர்**

(1) மாவட்ட ஊராட்சிக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து கூடிய விரைவில் இரண்டு உறுப்பினர்களை முறையே மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(2) [1] (பிரிவு 50, உட்பிரிவு (2), பிரிவு 51 உட்பிரிவு (2) மற்றும் 52, 53, 54 ஆகிய பிரிவுகளில்) கூறப்பட்டுள்ள வரைமுறைகள், ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் பொருந்துவன போன்றே, மாவட்ட ஊராட்சியின் தலைவர் மற்றும் துணைத் தலைவரின் பதவிகளுக்கும் பொருந்தும் மற்றும் மேற்சொன்ன பிரிவுகளில் ஊராட்சி ஒன்றிய மன்ற அல்லது ஆணையரைக் குறிக்கும் பார்வை குறிப்பு எதுவும் மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவரின் பதவிக்கும் எந்த அளவிற்கு பொருந்துகிறதோ அந்த அளவிற்கு மாவட்ட ஊராட்சி அல்லது செயலாளரை குறிக்கும் அறிவிப்பாக கொள்ளுதல் வேண்டும்.

---

56 (2) உட்பிரிவு(2)( )ல் கூறப்பட்டுள்ள சொற்றொடர் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்டம் தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 6ன் மூலம் புதியதாக சேர்க்கப்பட்டது.

**57. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும், மாவட்ட ஊராட்சியின் தலைவர் பதவிகளில் இட ஒதுக்கீடு**

(1) கிராம ஊராட்சி, ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர்களின் பதவிகளில் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினரைச் சார்ந்த நபர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மற்றும் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினரின் மக்கள் தொகை எந்த விகிதத்தில் அமைந்துள்ளதோ இயலுமளவிற்கு அதே விகிதத்தில் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கை மாநிலத்திலுள்ள மொத்த பதவியிடங்களுக்கு ஏறக்குறைய அமைந்திருத்தல் வேண்டும்.

ஆனால் மாநிலத்தில் உள்ள மொத்த கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் ஆகியோரின் ஒவ்வொரு பதவியின் மொத்த எண்ணிக்கையிலும் மூன்றில் ஒரு பங்கிற்குச் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

ஆனால் இந்தப் பிரிவின்படி ஒதுக்கப்படும் இட ஒதுக்கீடானது, வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் ஒவ்வொரு நிலையிலும் வெவ்வேறு ஊராட்சிகளுக்கு சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(1A) Offices of the presidents of Village Panchayats, chairman of Panchayat Union councils and chairman of district panchayats shall be reserved for women belonging to the schedule castes, the scheduled Tribes from among the offices reserved for the persons belonging in the scheduled castes and the scheduled Tribes which shall not be less than one third of the total number of offices reserved for the persons belonging to the scheduled castes and scheduled Tribes.

(1B), (1C) omitted

(1D) Offices of the presidents of villages panchayats, chairman of panchayat union councils and chairman of district panchayats in the state shall be reserved for women which shall not be less than one third (including the number of offices reserved for women belonging to the scheduled castes, the scheduled Tribes of the total number of such offices in the state. (Act No.15/1996)

(2) கிராம ஊராட்சித்தலைவர் ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவிகளில் இட ஒதுக்கீடு அரசினாலோ அல்லது அரசினால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலராலோ மேற்கொள்ளப்படும்.

(3) கிராம ஊராட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவர் மேலும் மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவிகளுக்கு உட்பிரிவு (1)ன்படி ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிடர் பழங்குடியினருக்குச் செய்யப்படும் இட ஒதுக்கீடு அரசமைப்பு சட்டம் 334வது பிரிவில் குறித்த காலம் வரை மட்டும் தான் இருக்கும்.

(4) உட்பிரிவு 1ன்படி கிராம ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர் பதவிகளுக்கான இடங்களை ஒதுக்கீடு செய்ய கணக்கிடும் போது 2 (பாதிக்கு குறைவாக உள்ள பின்னம் எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது மற்றும் பாதியும் பாதிக்கும் மேற்பட்டு உள்ள பின்னத்தை ஒன்று என கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்)

---

57 (4) 2 உட்பிரிவு (4) ( )ல் கூறப்பட்டுள்ள சொற்றொடர் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்தச் சட்டம 29/1999) பிரிவு 7ன் படி புதியதாக சேர்க்கப்பட்டது.

## அத்தியாயம்-4

## தேர்தல் தொடர்பான குற்றச் செயல்கள்

### 58. தேர்தல் இரகசியத்தை மீறுதல்

சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட ஒரு சில காரணங்களைத் தவிர, வாக்காளர் எவரும் எந்தவொரு வேட்பாளருக்கு வாக்களித்துள்ளார் என்பதை நேரடியாகவோ மறைமுகமாகவோ காட்டுகின்ற தகவல் எதனையும் மற்றவர் எவருக்கும் தெரிவிக்கின்ற அல்லது தேர்தலின் பொழுது வாக்குகள் பதிவு செய்வது அல்லது எண்ணுவது தொடர்பான கடமை எதையும் புரிந்து வருகின்ற அலுவலர், எழுத்தர், முகவர் அல்லது பிற நபர் ஒவ்வொருவரும் முறையற்ற

வழிகள் எவற்றின் மூலமாக தகவல் எதையும் முயன்று பெறுகிற எவா் மீதும் ஆறு மாதம் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையே அல்லது பணத் தண்டனையோ அல்லது இரண்டும் சோ்ந்தோ விதிக்கப்படும்

**59. தோ்தல் ஒன்றில் ஆள் மாறாட்டம் செய்தததற்காக அளிக்கப்படும் குறைந்த அளவு தண்டனை**

இந்தியச் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 171-F எனும் பிரிவில் என்ன அடங்கி இருந்த போதிலும் இந்த சட்டத்தின்படி தோ்தல் தொடா்பாக அந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க ஆள் மாறாட்டம் செய்கிற நபா் ஆறு மாதங்களுக்கு குறையாமலும் மற்றும் இரண்டாண்டுகளுக்கு மேற்பட்டாலும் சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதித்து தண்டிக்கப்பட வேண்டும்.

**60. தோ்தல் தொடா்பாக வகுப்பினா்களுக்கிடையே பகைமையை வளா்த்தல்**

இந்தச் சட்டத்தின்படி தோ்தலின்பொழுது சமயம், இனம், சாதி சமூகம் அல்லது மொழி அடிப்படையில் இந்தியக் குடிமக்களின் பல்வேறு வகுப்பினா்களுக்கிடையே பகைமை அல்லது வெறுப்பு உணா்வுகளை வளா்த்து வருகிற அல்லது வளா்க்க முயலுகிற நபருக்கு மூன்றாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சோ்த்தோ விதிக்கப்படும்.

**61. தோ்தல் நாளுக்கு முந்திய நாளும் தோ்தல் நாளன்றும் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்குத் தடை**

(1) ஊராட்சி பகுதியில் அடங்கியுள்ள எல்லைக்குள் வாக்கெடுப்பு முடிவடைகின்ற தேதிக்கு முன்னா் நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் அல்லது அந்த ஊராட்சியில் தோ்தல் ஒன்றுக்காக வாக்கெடுப்பு நடத்தப்படுகிற தேதி அல்லது தேதிகளில் எவரும் பொதுக்கூட்டம் எதனையும் கூட்டவோ, நடத்தவோ அல்லது அதில் கலந்து கொள்ளவோ கூடாது.'

(2) உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள வரைமுறைகளை மீறுகின்ற நபா் மீது இருநூற்று ஐம்பது ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

**62. தோ்தல் கூட்டங்களில் கலவரங்கள்**

(1) இந்தப் பிரிவு பொருந்துகின்ற பொதுக் கூட்டம் ஒன்றில் எந்த அலுவலுக்காக அந்தக் கூட்டம் கூட்டப்பட்டதோ அந்த அலுவல் நடத்துவதைத் தடுக்கின்ற காரணத்திற்காக முறையற்ற வகையில் செயல்படுகின்ற அல்லது மற்றவா்களை செயல்படுமாறு தூண்டுகிற நபருக்கு இருநூற்று ஐம்பது ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

**(2)** தோ்தல் ஒன்றுக்கான வேட்பாளா்களின் வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முந்திய தேதிக்கும் அத்தகைய தோ்தல் நடத்தப்படுகின்ற தேதிக்கும் இடையே ஊராட்சியில் அடங்கியுள்ள பகுதிகளில் எதிலும் நடத்தப்படும் அரசியல் தன்மையான பொதுக் கூட்டம் எதற்கும் இந்தப் பிரிவு பொருந்தும்.

(3) காவல்துறை அலுவலா், உட்பிரிவு (1)ன்படி குற்றத்தை ஒருவா் செய்திருப்பதாக நியாயமாக சந்தேகப்பட்டால் அவா் அக்கூட்டத்தின் தலைவரால் வேண்டிக் கொள்ளப்படுவாராயின் அந்த நபரின் பெயரையும் முகவரியையும் உடனடியாகத் தம்மிடம் கூறுமாறு கோரலாம். மேலும் அந்த நபா் அவ்வாறு தமது பெயரையும் முகவரியையும் கூற மறுத்தாலோ அல்லது தெரிவிக்கத் தவறினாலோ அல்லது அந்த காவல் துறை அலுவலா்க்கு பொய்யானதொரு பெயரையும் முகவரியையும் கொடுத்துள்ளதாக நியாயமாக சந்தேகப்படுவாரானால், காவல் துறை அலுவலா் அத்தகைய நபரை பிடி ஆணை இன்றிக் கைது செய்யலாம்.

## 63. துண்டுப் பிரசுரங்கள், சுவவொட்டிகள் முதலானவற்றை அச்சிடுவதன் மீதான கட்டுப்பாடுகள்

(1) எந்த ஒரு நபரும் தேர்தல் துண்டுப்பிரசுரம் அல்லது சுவரொட்டி எதனையும் அதை அச்சிடுபவர் வெளியிடுபவர் ஆகியோரது பெயர்களையும் முகவரிகளையும் அதன் மீது இல்லாமல் அச்சிடவோ வெளியிடவோ அல்லது அச்சிடுமாறு அல்லது வெளியிடுமாறு செய்யக் கூடாது.

(2) எந்த நபரும்

(அ) தேர்தல் துண்டுப் பிரசுரம் அல்லது சுவரொட்டியை வெளியிடுபவர் தாம் கையொப்பமிட்டு தம்மைத் தனிப்பட்ட நன்கு அறிந்துள்ள இரண்டு நபர்களால் மேலொப்பமிடப்பட்ட தம்மை அடையாளம் காட்டுகின்ற சாற்றுரை ஒன்றை இரட்டைப்படியில் அச்சிடுபவரிடம் கொடுத்திருந்தால் அன்றியும்,

(ஆ) அந்த ஆவணம் அச்சிடப்பட்டதற்கு பின்னர் நியாயமானதொரு காலத்திற்குள் அந்த ஆவணத்தின் ஒரு படியுடன் சேர்த்து செயல் அதிகாரியிடமோ அல்லது ஆணையரிடமோ அல்லது செயலாளரிடமோ ஒரு பிரதியை அச்சிடுபவர் அனுப்பியிருந்தாலன்றியும்,

தேர்தல் துண்டப்பிரசுரம் அல்லது சுவவொட்டி எதையும் அச்சிடுதலோ அல்லது அச்சிடுமாறு செய்யவோ கூடாது.

(3) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக

(அ) ஓர் ஆவணத்தைக் கையினால் படியெடுப்பது அல்லாத பிற முறைகளில் படிப்பெருக்கம் செய்யும் எந்த முறையையும் அச்சிடுவதாக கருதப்பட வேண்டும் என்பதோடு அச்சிடுபவர் எனும் சொல் அதன்படியே பொருள் கொள்ளப்படும், மற்றும்

(ஆ) தேர்தல் துண்டுப்பிரசுரம் அல்லது சுவவொட்டிகள் என்பது வேட்பாளர்களின் தொகுதியில் தேர்தலை ஊக்குவிக்கின்ற அல்லது பாதிக்கின்ற நோக்கத்திற்காக அச்சிட்ட துண்டுப்பிரசுரம் அல்லது பிற ஆவணம் எதுவும், தேர்தலில் பயன்படுத்தப்படும் விளம்பர அட்டை அல்லது சுவவொட்டி என்றே பொருள்படும். ஆனால் தேர்தல் கூட்டத்திற்கோ, கூட்டம் நடத்தப்படும் தேதி, நேரம், இடம் அல்லது பிற விவரங்களை அல்லது தேர்தல் முகவருக்கோ, பணியாளர்களுக்கோ கொடுக்கப்படும் விளம்பர அட்டை அல்லது சுவரொட்டி எதனையும் உள்ளடக்காது.

(4) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் எவற்றையும் மீறுகிற நபர் மீது ஆறு மாதம் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கு சிறைத் தண்டனையோ அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டனை வழங்கப்படும்.

## 64. தேர்தல்களில் அலுவலர் முதலானோர் வேட்பாளர்களுக்காக செயல்படுதோ அல்லது வாக்களிப்பதில் செல்வாக்கைப் பயன்படுத்துதலோ கூடாது.

(1) ஒரு தேர்தலில், தேர்தல் அலுவலராகவோ அல்லது உதவி தேர்தல் அலுவலராகவோ அல்லது வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அல்லது அலுவலராகவோ உள்ள நபர் எவரும், அல்லது தேர்தல் தொடர்பாக கடமை எதையும் புரிந்து வரும் பொருட்டு அத்தேர்தல் அலுவலராலோ அல்லது வாக்குச் சாவடி தலைமை அலுவலராலோ நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் அல்லது எழுத்தராக உள்ள நபர் எவரும் தேர்தல் நடத்தப்படும் பொழுது வேட்பாளர் ஒருவரின் தேர்தல் வாய்ப்பு நலனை மேம்படுத்துவதற்காக (வாக்களிப்பது அல்லாத பிற) எந்த செயலையும் செய்யக்கூடாது

(2) மேற்சொல்லப்பட்ட நபர் எவரும் அல்லது காவல் துறையைச் சேர்ந்த எவரும்

(அ) தேர்தலின் போது ஒருவரை அவரது வாக்கை அளிக்குமாறு தூண்டுவதோ அல்லது
(ஆ) தேர்தலின் போது ஒருவரது வாக்கினை அளிப்பதிலிருந்து தடுக்கவோ அல்லது
(இ) தேர்தலின்போது எவரும் வாக்களிப்பதிமல் செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடாது.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)ல் கூறப்பட்டுள்ள வரைமுறைகளை மீறுகின்ற எவர் மீதும் ஆறுமாதம் வரை நீடிக்கக் கூடிய அளவிற்குச் சிறை தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுவர்.

**65. வாக்குச் சாவடிகளிலோ அதற்கு அருகாமையிலோ தமக்கு ஆதரவாக வாக்கு திரட்டுவதை தடை செய்தல்**

(1) வாக்குச் சாவடி எதிலும் வாக்களிப்பு நடைபெறுகின்ற தேதி அல்லது தேதிகளிலோ அந்த வாக்குச்சாவடிக்கு உள்ளேயோ அல்லது வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள் உள்ள பொது இடத்திலோ பின்வரும் செயல்கள் எதையும் செய்யக்கூடாது.

(அ) தமக்கு ஆதரவாக வாக்கு திரட்டுவது;
அல்லது

(ஆ) வாக்காளர் எவரது வாக்கினையும் கேட்டுப் பெறுவது;
அல்லது

(இ) வாக்காளர் எவரையும் குறிப்பிட்ட வேட்பாளர் எவருக்காகவும் வாக்கு அளிக்காது இருக்குமாறு கேட்டுக் கொள்வது;
அல்லது

(ஈ) தேர்தலில் வாக்களிக்காது இருக்குமாறு வாக்காளரை கேட்டுக்கொள்வது அல்லது
(உ) தேர்தல் தொடர்பான (அதிகார பூர்வமான அறிவிப்பு அல்லாத பிற) அறிவிப்பு அல்லது அடையாளக் குறி எதையும் காட்சிக்கு வைக்கின்ற செயல்கள் எதையும் செய்யக்கூடாது.

(2) உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை மீறுகின்ற நபர் மீது இருநூற்று ஐம்பது ரூபாய் வரை அபராதம் விதித்து தண்டிக்கப்படுவார்.

(3) இந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல் பிடியாணையின்றி கைது செய்வதற்கு உரியதாகும்.

**66. வாக்குச் சாவடிகளிலோ அதற்கு அருகாமையிலோ முறையற்று நடந்து கொண்டால் தண்டனை**

(1) வாக்குச் சாவடி எதிலும் வாக்கு நடைபெறுகின்ற தேதி அல்லது தேதிகளில் எவரும்

(அ) வாக்குச் சாவடிக்கு உள்ளேயோ அல்லது நுழைவாயிலிலோ அல்லது அதன் அருகில் உள்ள பொது அல்லது தனியார் இடத்திலோ மனிதக் குரலை பெரிதாக்கி ஒலிக்கச்

செய்யும் சாதனம் அல்லது ஒலிபெருக்கி போன்ற சாதனம் எதனையும் பயன்படுத்தவோ அல்லது இயக்கவோ

அல்லது

(ஆ) வாக்குச் சாவடிக்கு உள்ளேயோ அல்லது நுழைவாயிலிலோ அல்லது அண்மையிலுள்ள பொது அல்லது தனியார் இடம் எதிலுமோ வாக்களிப்பதற்காக வாக்குச்சாவடிக்கு வருகின்ற நபர் எவருக்கும் தொல்லை தரும் வகையிலோ அல்லது வாக்குச் சாவடியில் கடமையை செய்து கொண்டுள்ள அலுவலர்கள் மற்றும் அல்லது பிற நபர்கள் பணியில் குறுக்கிடுகின்ற வகையிலோ முறையற்ற வழியில் கூச்சலிடக்கூடாது.

(2) உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை மீறுகின்ற அல்லது அவை மீறப்படுவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையாக இருக்கின்ற நபர் மீது மூன்று மாதம் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை விதிக்கப்படும்.

(3) வாக்குச் சாவடியில் வாக்குச் சாவடி அலுவலரானவர் எந்த ஒரு நபரும் இப்பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல் ஒன்றைப் புரிகின்றார் அல்லது புரிந்துள்ளார் என்ற நம்புவதற்கு தகுந்த காரணங்கள் இருக்குமேயானால் அத்தகைய நபரை கைது செய்யுமாறு காவல்துறை அலுவலர் எவரையும் பணிக்கலாம். மேலும் அதன் பேரில் அக்காவல் துறை அலுவலர் அவரைக் கைது செய்ய வேண்டும்.

(4) காவல் துறை அலுவலர் எவரும் உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள வரைமுறைகள் மீறப்படுவது எதையும் தடுக்கும் பொருட்டு நியாயமாக தேவையாக இருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கலாம் மற்றும் அதிகாரங்களை பயன்படுத்தலாம் என்பதோடு, அத்தகைய மீறுதலுக்காக பயன்படுத்தப்பட்ட சாதனம் எதையும் பறிமுதல் செய்யலாம்.

**<u>விளக்கம்</u>**: இந்தப் பிரிவில் வாக்குச் சாவடி அலுவலர் என்றால் ஒரு வாக்குச் சாவடியில் பணிபுரிகின்ற வாக்குச் சாவடி அலுவலர் என்றோ, அல்லது அந்த வாக்குச் சாவடியில் தலைமை அலுவலர் ஒருவர் இருப்பாரேயானால், அத்தகைய தலைமை வாக்குச்சாவடி அலுவலர் என்றோ பொருள் கொள்ளப்படும்.

**67. வாக்குச்சாவடியில் தவறாக நடந்தமைக்கான பணத் தண்டனை**

(1) வாக்குச் சாவடி எதிலும் வாக்களிக்க நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் போது தவறாக நடந்து கொள்கின்ற அல்லது வாக்குச் சாவடி அலுவலரின் சட்டப்படியான ஆணைகளுக்கு கீழ் படிந்து நடக்கத் தவறுகிற நபர் மீது வாக்குச் சாவடி அலுவலராலோ அல்லது கடமை புரிந்து வருகிற காவல் துறை அலுவலராலோ அல்லது அத்தகைய வாக்குச் சாவடி அலுவலரால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நபராலோ அவ்வாறு மீறி நடக்கின்ற நபர் வாக்குச்சாவடியில் இருந்து அகற்றப்படலாம்.

(2) உட்பிரிவு (1)ன்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வாக்குச் சாவடியில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்று இருக்கிற வாக்காளர் எவரையும் அந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்கின்ற வாய்ப்பினை பறிக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது.

(3) வாக்குச் சாவடியிலிருந்து அவ்வாறு அகற்றப்பட்டிருக்கின்ற நபர், வாக்குச்சாவடி அலுவலரின் அனுமதி இல்லாமல் வாக்குச்சாவடிக்குள் மீண்டும் நுழைவாரேயானால், அவருக்கு மூன்று மாதம் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை விதிக்கலாம்.

(4) உட்பிரிவு (3)ன்படி தண்டிக்கப்படத்தக்க குற்ற செயல் புரிகின்றவரை பிடியாணையின்றி கைது செய்யப்படலாம்.

**விளக்கம்** :

இந்தப் பிரிவில் வாக்குச்சாவடி அலுவலா் என்னும் சொற்றொடா் பிரிவு 66ல் கூறப்பட்ட பொருளையே பெற்றிரக்கும்.

**68. தோ்தல்களில் போக்குவரத்து சாதனங்களை சட்டத்திற்கு முரணாக வாடகைக்கு அமா்த்துவதற்கோ அல்லது முயன்று பெறுவதற்கான தண்டனை**

(1) வேட்பாளா் அல்லது அவரது முகவா் எவருமோ அல்லது வேட்பாளா் அல்லது அவரது முகவரின் இசைவுடன் பிற நபா் எவருமோ, பணத்திற்காகவோ, மற்ற பிற காரணங்களுக்காகவோ ஊா்தி அல்லது வண்டி எதனையும் வாக்குச் சாவடிக்கு அல்லது அதிலிருந்து (வேட்பாளரையோ, அல்லது அவரது குடும்ப உறுப்பினா்களையோ அல்லது அவா் முகவரையோ அல்லாத பிற) வாக்காளா் எவரையும் ஏற்றிச் செல்வதற்காக வாடகைக்கு அமா்த்தலோ அல்லது முயன்று பெறவோ கூடாது.

ஆனால் இந்த உட்பிரிவில் உள்ள எதுவும்

(அ) அவ்வாறு வாடகைக்கு அமா்த்தப்பட்ட ஊா்தி அல்லது வண்டி, இயந்திர விசையினால் இயக்கப்படாமல் உள்ள ஒரு ஊா்தியாகவோ அல்லது வண்டியாகவோ இருக்குமானால் வாக்காளரை அல்லது பல்வேறு வாக்காளா்களை வாக்குச் சாவடிக்கு அல்லது அங்கிருந்து திரும்ப செல்லுகின்ற நோக்கத்திற்காக அவரால் அல்லது அவா்களால் தங்களது கூட்டுச் செலவில் வாடகைக்கு அமா்த்துகின்ற ஒரு ஊா்திக்கோ, வண்டிக்கோ மற்றும்

(ஆ) வாக்குச் சாவடிக்கு செல்லுகின்ற அல்லது அங்கிருந்த திரும்பி வருகின்ற நோக்கத்திற்காக தம் சொந்தச் செலவில் வாக்காளரால் அரசு போக்குவரத்து ஊா்தி அல்லது வண்டியிலோ அல்லது புகை வண்டியிலோ செல்வதற்கு பொருந்தாது.

**விளக்கம்**

இந்த உட்பிரிவில் ஊா்தி எனும் சொல்லுக்கு இயந்திர விசையால் இயக்கப்பட்டோ அல்லது மற்றப்படியோ மற்றும் பிற ஊா்திகளை இழுத்துச் செல்வதற்காகப் பயன்படுத்தப்படுவதாவோ அல்லது மற்றபடியோ சாலைப் போக்குவரத்து நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படுவதற்குத் தகுதியுடையவைக்கு ஊா்தி என்று பொருள்படும்.

(2) தோ்தலில் அல்லது அதன் தொடா்பாக உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை மீறுகின்ற நபா் மீது இருநூற்று ஐம்பது ரூபாய் வரை அபராதம் விதித்துத் தண்டனை வழங்கப்படும்.

**69. தோ்தல் தொடா்பான அலுவல் கடமையை மீறுதல்**

(1) இந்தப் பிரிவு பொருந்துகின்ற நபா் நியாயமான காரணமின்றி தமது அலுவல் கடமையை மீறி செயல் எதனையும் செய்த அல்லது செய்யாமல் விட்டுவிட்ட குற்றத்திற்காக அவா் மீது ஐநூறு ரூபாய் வரை அபராதம் விதித்துத் தண்டனை வழங்கப்படலாம்.

(2) மேற்சொல்லப்பட்டவற்றை செய்தது அல்லது செய்யாமல் இருந்ததை பொறுத்தமட்டில் இழப்பீட்டிற்காக அத்தகைய நபருக்கு எதிராக உரிமை வழக்கு தொடுப்பதற்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எடுக்கவோ முடியாது.

(3) இந்தப் பிரிவு பொருந்துகின்ற நபா்கள் தோ்தல் அலுவலா்கள் உதவித் தோ்தல் அலுவலா்கள், வாக்குச்சாவடி தலைமை அலுவலா்கள், வாக்குசாவடி அலுவலா்கள் வேட்பு மனுக்களைப் பெறுவது அல்லது வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்வது அல்லது தோ்தலில் வாக்குகளை பதிவு செய்வது அல்லது வாக்குகளை எண்ணுவது தொடா்பான பணிகளை புரிவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலா்கள் அனைவரும் இந்தப் பிரிவு

பொருந்துகின்ற நபர்களாவர். மற்றும் அலுவலர் கடமை என்னும் சொல் இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக அலுவலர் கடமை என பொருள் கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தினாலோ அல்லது இதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லாமல் மற்றவைகளுக்கு பொருந்தாது.

**70. வாக்குச் சாவடியில் இருந்து வாக்குச் சீட்டுகளை அப்புறப்படுத்துவது ஒரு குற்றச் செயலாக இருத்தல்**

(1) தேர்தலின்போது வாக்குச் சாவடியில் இருந்து வாக்குச் சீட்டினை மோசடியாக எடுத்துச் செல்கின்ற அல்லது எடுத்துச் செல்ல முயல்கிற அல்லது வேண்டுமென்றே உதவுகிற அல்லது உடந்தையாக இருக்கிற நபர் மீது ஓராண்டு சிறைத் தண்டனையோ அல்லது ஐநூறு ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை வழங்கப்படும்.

(2) ஒரு வாக்குச் சாவடியின் தலைமை வாக்குச் சாவடி அலுவலரானவர் ஒரு நபர் உட்பிரிவு (1)ன்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச் செயலை செய்கிறார் அல்லது செய்துள்ளார் என்று நம்பினால் அந்த அலுவலர் அந்த நபரை வாக்குச் சாவடியை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் கைது செய்யலாம். அல்லது கைது செய்யுமாறு காவல் துறை அலுவலரைக் கேட்டுக் கொள்ளலாம் என்பதோடு அந்த நபரை சோதனையிடலாம். அல்லது காவல் துறை அலுவலரை சோதனையிடுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

ஆனால், மகளிர் ஒருவரைச் சோதனையிட நேரும்போது பண்பு நடத்தைக்கு சற்றும் குறையாமல் வேறொரு மகளிரால் அச்சோதனை செய்யப்பட வேண்டும்.

(3) சோதனையின் போது கைது செய்யப்பட்ட நபரிடம் காணப்பட்ட வாக்கு சீட்டை வாக்கு சாவடி தலைமை அலுவலர் காவல் துறை அலுவலரின் பாதுகாப்பில் வைக்குமாறு கொடுக்கப்பட வேண்டும். அல்லது காவல் துறை அலுவலரே அந்தச் சோதனையை செய்யும்போது அத்தகைய அலுவலர் தம் பாதுகாப்பிலேயே அதனை வைத்திருக்க வேண்டும்.

(4) உட்பிரிவு (1)ன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல்களுக்கு பிடியாணையின்றி கைது செய்யப்படலாம்.

**71. பிற குற்றச் செயல்களும் அவற்றிற்கான தண்டணைகளும்**

(1) தேர்தல் ஒன்றில் நபர் எவரும்

(அ) வேட்பு மனுவை மோசடியாக உருக்குலைக்கவோ அல்லது மோசடியாக அழித்துவிடவோ அல்லது

(ஆ) தேர்தல் அலுவலரால் அல்லது பிற ஆணையின்படி ஒட்டப்பட்டுள்ள பெயர் பட்டியல் அறிவிப்பு அல்லது பிற ஆவணம் எதனையும் மோசடியாக உருக்குலைக்கவோ, அழிக்கவோ. அகற்றவோ அல்லது

(இ) வாக்குச்சீட்டு எதனையும், அல்லது வாக்குச் சீட்டு மீதுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீடு எதனையும், மோசடியாக உருக்குலைக்கவோ அல்லது மோசடியாக அழிக்கவோ, அல்லது

(ஈ) உரிய அதிகாரமின்றி எந்த நபருக்கும் வாக்குச் சீட்டு எதனையும் வழங்கவோ, அல்லது நபர் எவரிடமிருந்தும் வாக்குச் சீட்டு எதனையும் பெறுவதோ அல்லது வாக்குச் சீட்டு எதனையும் கைவசம் வைத்திருப்பதோ: அல்லது

(உ) வாக்குப்பெட்டி எதற்குள்ளும் அவர் போடுவதற்கு சட்டத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டு அல்லாத பிற எதனையும் மோசடியாகப் போடுதலோ, அல்லது

(ஊ) உரிய அதிகாரமின்றி தேர்தல் நோக்கத்திற்காக அப்போது பயன்பாட்டிலுள்ள வாக்குப்பெட்டி அல்லது வாக்குச் சீட்டு எதனையும் அழித்தலோ,எடுத்துச் செல்லுதலோ

அல்லது பிரித்துப் பார்த்தலோ, அல்லது மற்றபடி அதற்கு இடையூறு விளைவிப்பதோ, அல்லது

(எ) மோசடியாகவோ அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப உரிய அதிகாரம் இன்றியோ மேற்சொன்ன செயல்களில் ஏதொன்றையும் செய்ய முயல்வதோ அல்லது அத்தகைய செயல்கள் எதையும் செய்யப்படுவதற்கு வேண்டுமென்றே உதவி செய்வதோ அல்லது உடந்தையாக இருக்கவோ கூடாது.

(2) உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை மீறுகிற நபரை

(அ) அவர் தேர்தல் அலுவலராகவோ அல்லது உதவித் தேர்தல் அலுவலராகவோ அல்லது ஒரு வாக்குச் சாவடியின் தலைமை அலுவலராகவோ அல்லது அந்தத் தேர்தல் தொடர்பாக அலுவல் பணியில் அமர்த்தப்பட்டுள்ள பிற அலுவலர் அல்லது எழுத்தர் எவரும் இருப்பாரானால் இரண்டாண்டுகள் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ இரண்டும் சேர்த்தோ தண்டனை வழங்கப்படும்.

(ஆ) அவர் வேறு நபராக இருப்பாரானால் ஆறு மாதம் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை வழங்கப்படும்.

(3) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக வாக்குகள் எண்ணுவது உள்ளடங்களாக தேர்தலையோ அல்லது தேர்தலின் பகுதியையோ நடத்துவதில் பங்கு கொள்வது அவர் கடமையாக இருக்குமானால், அவர் அலுவலர் கடமையில் இருப்பதாகவும் தேர்தலுக்கு பின்னர் தேர்தல் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்களுக்கும் பிற ஆவணங்களுக்கும் பொறுப்புடையவர் எனக் கருத வேண்டும். ஆனால் அலுவல் கடமை என்னும் சொற்றொடரானது, இந்தச் சட்டத்தினாலோ அல்லது இதன்படி ஆற்ற வேண்டிய கடமை எதனையும் உள்ளடக்காது.

(4) 2ஆம் உட்பிரிவின் (ஆ) கூறின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல், பிடியாணையின்றி கைது செய்வதற்கு உரியதாகும்.

**72. ஒரு சில தேர்தல் சார்ந்த குற்றச் செயல்களை செயலாட்சி வரம்பிற்கு எடுத்துக் கொள்ளுதல்**

பிரிவு 64ன் படியோ அல்லது பிரிவு 69ன் படியோ அல்லது பிரிவு 71 உட்பிரிவு (2) கூறு (அ)ன் படியோ தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல் எதனையும் அரசு ஆணையிலோ அதன் அதிகாரத்தின் கீழோ எழுத்து வடிவில் செய்து கொள்ளப்பட்ட முறையீட்டின் பேரில் தவிர, நீதி மன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளல் ஆகாது.

**தேர்தல் நோக்கங்களுக்காகச் சொத்தினைக் கோரிப் பெறுதல்**

**73. தேர்தல் நோக்கங்களுக்காக வளாகங்கள், ஊர்திகள் முதலானவற்றை கோரிப் பெறுதல் (1) இந்தச் சட்டத்தின்படி தேர்தல் தொடர்பாக**

(அ) வாக்குச் சாவடியாக பயன்படுத்தவோ அல்லது வாக்களிப்பு நடந்து முடிந்த பின்னர் வாக்குப் பெட்டிகளை சேமித்து வைப்பதற்காகவோ, உண்மையிலேயே குடியிருப்புக் கட்டிடங்கள் தவிர பிற வளாகங்கள் எவையும் தேவைப்படுகின்றன அல்லது தேவைப்படக்கூடும் என்றோ,

(ஆ) வாக்குச் சாவடி எதற்கும் அல்லது அதிலிருந்து வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்கின்ற நோக்கத்திற்காக அல்லது தேர்தலின் போது சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு காவல் துறை பிரிவைச் சேர்ந்தவர்களை ஏற்றிச் செல்வதற்காக அல்லது தேர்தல் தொடர்பாக பிற கடமைகள் எதையும் புரிவதற்காக அலுவலர் அல்லது பிற நபர் எவரையும் ஏற்றிச் செல்வதற்காக ஊர்தி அல்லது விலங்கு எதுவும் தேவைப்படுகிறது. அல்லது தேவைப்படக்கூடும் என அரசுக்குத் தோன்றுமானால் எழுத்து வடிவிலான ஆணையின் மூலம் அத்தகைய வளாகத்தையோ அல்லது சந்தர்பத்திற்கேற்ப ஊர்தி அல்லது

விலங்கினையோ அரசு கோரிப் பெறலாம். மேலும் அவ்வாறு கோரிப் பெறுதல் தொடர்பாக தேவையானது அல்லது உகந்தது என தனக்கு தோன்றக் கூடிய ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

ஆனால் வேட்பாளர் ஒருவரின் தேர்தலோடு தொடர்புடைய நோக்கத்திற்காக வேட்பாளராலோ அல்லது அவருடைய முகவராலோ சட்டப்படி பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஊர்தி அல்லது விலங்கு எதுவும் தேர்தலில் வாக்களிப்பு முடிவடையும் வரையில் கோரிப் பெறக் கூடாது.

(2) அவ்வாறு கோரிப் பெறுவது, அச்சொத்தின் சொந்தக்காரர் அல்லது அதனைத் தம்வசம் வைத்திருக்கும் நபர் என அரசினால் கருதப்படும் நபருக்கு எழுத்து வடிவிலான ஆணையை அவரின் முகவரிக்கு அனுப்ப வேண்டும். மற்றும் அத்தகைய ஆணை எவருக்கு முகவரியில் உள்ளதோ அவருக்குச் சார்பு செய்யப்பட வேண்டும்.

(3) உட்பிரிவு (1)ன்படி சொத்து எதுவும் கோரிப் பெறுகின்ற காலம், அந்த உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள நோக்கங்களில் எதற்காகவும் அத்தகைய சொத்து தேவைப்படுகின்ற கால அளவுக்கு மேற்பட்டு நீடிக்கக் கூடாது.

(4) இந்தப் பிரிவில்

(அ) வளாகம் என்றால், நிலம், கட்டிடம் அல்லது கட்டிடத்தின் ஒரு பகுதி என்று பொருள்படும், மேலும் குடிசை கூடாரம் அல்லது பிற கட்டுமானமொன்றையோ அல்லது அதன் பகுதியையோ உள்ளடக்கும்.

(ஆ) ஊர்தி என்றால் இயந்திர விசையினால் இயக்கப்படுவதாயினும் மற்றப்படியாயினும், சாலைப் போக்குவரத்து நோக்கத்திற்காகப் பயன்படுத்தத் தகுதியானவைகளை ஊர்தி என்று பொருள் கொள்ளப்படும்.

**74. தொகை செலுத்துதல்**

(1) பிரிவு 73ன்படி அரசு வளாகம் எதனையும் கோரிப் பெறுகின்ற போது உரிமை உடைய நபர்களுக்கு பின்வருவனவற்றைக் கவனத்தில் கொண்டு அரசினால் தீர்மானிக்கப்படும் தொகையை கொடுக்க வேண்டும். அதாவது

(i) அவ்வளாகத்தைப் பொறுத்தமட்டில் செலுத்த வேண்டிய வாடகை அல்லது வாடகை எதுவும் அவ்வாறு செலுத்த வேண்டியது இல்லையெனில் அவ்வட்டாரத்தில் அதே போன்று வளாகத்திற்காகச் செலுத்தத்தக்க வாடகை

ஆனால் 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18 /1960 ) வகைமுறைகள் பொருந்துகின்ற வளாகத்தைப் பொறுத்துச் செலுத்தத்தக்க வாடகையானது அந்தச் சட்டத்தின்படி அந்த வளாகத்திற்குச் செலுத்தத்தக்க நியாயமான வாடகையாக இருக்கும்.

(ii) அவ்வளாகத்தைக் கோரிப் பெற்றபின் சொத்தின் உரிமையாளரை தனது குடியிருப்பை அல்லது வணிக இடத்தை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தால் அத்தகைய மாற்றத்திற்கு அவர் செய்த நியாயமான செலவுகள் (எவையேனுமிருப்பின்)

ஆனால் உரிமையாளர் எவரும் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தொகை குறைவாக இருந்து அது குறித்து நடுவரிடம் விளக்கம் கேட்க அத்தொகை தீர்மானிக்கப்பட்ட ஆணை சார்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அரசிடம் விண்ணப்பம் செய்வாரேயானால் கொடுக்கப்பட வேண்டிய தொகையானது அரசினால் நியமிக்கப்படும் நடுவர் தீர்மானிக்கக் கூடிய தொகையாக இருக்கும்.

ஆனாலும் அத்தொகையைப் பெறுவதற்கான உரிமை குறித்து அல்லது அத்தொகையைப் பகிர்ந்து கொள்வது குறித்துப் பூசல் எதுவும் இருக்குமானால் அதனைத் தீர்மானிப்பதற்காக அரசினால் இதன் பொருட்டு நியமிக்கப்படும் நடுவரிடம் அரசு அதனை அனுப்பிட வேண்டும், மேலும் அத்தகைய நடுவரின் முடிவிற்கிணங்க தீர்மானிக்கப்பட வேண்டும்.

**விளக்கம்**

இந்த உட்பிரிவில் உரிமை கொண்டுள்ள நபர் என்றால் பிரிவு 75ன்படி கோரிப் பெறப்பட்ட வளாகத்தை கோரிப் பெற்றதற்கு அடுத்து முன்னர் தம் வசம் வைத்திருந்த நபர் அத்தகைய வளாகத்தின் சொந்தக்காரர் என்ற பொருள்படும்.

(2) பிரிவு 73ன்படி ஊர்தி அல்லது விலங்கு எதனையும் அரசு கோரிப் பெறும்போதெல்லாம் அதன் சொந்தக்காரருக்கு அரசினால் தொகை கொடுக்கப்பட வேண்டும். அத்தொகை அத்தகைய ஊர்தி அல்லது விலங்கிற்காக அப்பகுதியில் நிலவுகின்ற கட்டணங்கள் அல்லது வீதங்களின் அடிப்படையில் அரசினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஆனால் அத்தகைய ஊர்தி அல்லது விலங்கின் சொந்தக்காரர், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தொகை குறைவாக உள்ளது எனக் கருதுவாராயின் ஒரு பொது நபரிடம் அது குறித்து விளக்கம் கேட்க, அத்தொகை தீர்மானிக்கப்பட்ட ஆணை சார்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அரசிடம் விண்ணப்பம் செய்வாரேயானால், கொடுக்கப்பட வேண்டிய தொகையானது அரசினால் இதன் பொருட்டு நியமிக்கப்படும் நடுவர் தீர்மானிக்கப்படக் கூடிய தொகையாகும்.

ஆனாலும் அந்த ஊர்தியோ அல்லது விலங்கோ கோரிப் பெறப்பட்டதற்கு முன்னர் உடன்பாடொன்றின் காரணமாக சொந்தக்காரரல்லாத வேறு நபரொருவரின் வசத்தில் இருக்குமானால் இந்த உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்டதும் அவ்வாறு கோரிப் பெறுவதற்கு செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகையானது, அந்த நபருக்கும் அச்சொந்தக்காரருக்குமிடையே அவர்கள் உடன்படிக்கூடிய முறையிலும், உடன்பாடு செய்துகொள்ளத் தவறுகையில் இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்படும் நடுவரால் முடிவு செய்யப்படக் கூடிய முறையிலும் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

### 75. தகவல் பெறுவதற்காக அதிகாரம்

அரசு பிரிவு 73ன்படி சொத்து எதனையும் கோரிப்பெறும் பொருட்டோ, பிரிவு 74ன்படி செலுத்தத்தக்க தொகையைத் தீர்மானிக்கும் பொருட்டோ, அரசு ஆணையின் மூலமாக குறித்துரைக்கப்படக் கூடிய அதிகார அமைப்பிடம் அத்தகைய சொத்து தொடர்பாக தகவலை அளிக்குமாறு எவரையும் கோரலாம்.

### 76. வளாகத்தினுள் நுழைதல் மற்றும் சோதனை இடுதல் பற்றிய அதிகாரம்

(1) அரசினால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர் எவரும் வளாகம் ஊர்தி, அல்லது விலங்கு எதனின் தொடர்பாகவும் பிரிவு 73ன்படி ஆணை பிறப்பிக்கப்பட வேண்டுமென்பதற்காகவும் எந்த முறையில் என்பதைத் தீர்மானிக்கின்ற நோக்கத்திற்காகவும் அல்லது அந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை எதற்கும் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் அத்தகைய வளாகம் எதிலும் நுழைந்து வளாகத்தினையும், அதிலுள்ள ஊர்தி அல்லது விலங்கு எதனையும் சோதனையிடலாம்.

(2) இந்தப் பிரிவில், வளாகம் மற்றும் ஊர்தி என்னும் சொற்றொடர்கள், பிரிவு 73ல் உள்ளதைப் போன்றே பொருள் குறிக்கும்.

## 77. கோரிப் பெற்ற வளாகத்திலிருந்து வெளியேற்றுதல்

(1) கோரிப்பெற்ற வளாகம் எதனையும் பிரிவு 73ன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனையும் மீறித் தம் வசம் வைத்திருக்கின்ற நபா் எவரையும் இதன் பொருட்டு அரசினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலரால் அந்த வளாகத்திலிருந்து விசாரணை இல்லாமலேயே வெளியேற்றப்படலாம்.

(2) அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலா் எவரும், பொதுமக்கள் முன்பு வெளியில் வராத பெண்கள் விலகிக் கொள்வதற்கான நியாயமான எச்சரிக்கையும் வசதியும் கொடுத்த பின்னா், அவ்வாறு வெளியேற்றும்படி செய்வதற்காக கட்டிடம் எதனின் பூட்டு அல்லது தாழ்ப்பாள் எதனையும் அகற்றலாம், அல்லது திறக்கலாம் அல்லது கதவு எதனையும் உடைத்து திறக்கலாம் அல்லது தேவையான பிற செயல் எதனையும் செய்யலாம்.

## 78. வளாகத்தை கோரிப் பெறுவதிலிருந்து விடுவித்தல்

(1) பிரிவு 73ன்படி கோரிப் பெற்ற வளாகம் எதுவும், அவ்வாறு கோரிப் பெற்றதிலிருந்து விடுவிக்கப்படும் பொழுது அந்த வளாகத்தைக் கோரிப் பெற்ற நேரத்தில் எந்த நபரிடமிருந்து பெறப்பட்டததோ அந்த நபரிடமோ அல்லது அத்தகைய வளாகத்தின் சொந்தக்காரராக இருப்பதாக அரசு கருதுகின்ற நபரிடமோ அதனை ஒப்படைக்க வேண்டும். அத்தகைய ஒப்படைப்பை பொறுத்த அளவில் அந்த நபருக்கு எதிராக, சட்டத்தின்படி உரிமையை நிலைநிறுத்துவதற்கு பிற நபா் எவருக்குமுள்ள உரிமைகள் எவற்றையும் பாதிக்காது.

(2) பிரிவு 73ன்படி கோரிப் பெற்ற வளாகம் அதன் உடைமை எந்த நபரிடம் உட்பிரிவு (1)ன்படி கொடுக்கப்பட வேண்டுமோ அந்த நபா் காணப்படவில்லையானால் அல்லது அவருடைய சாா்பாக அந்த ஒப்படைப்பை ஏற்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட முகவா் அல்லது பிற நபா் எவரும் இல்லையானால் அரசு கோரிப் பெற்றதிலிருந்து அத்தகைய வளாகம் விடுவிக்கப்படுகின்றது என்ற அறிவிப்பை அத்தகைய வளாகத்தில் நன்கு தெரிகின்ற பகுதியில் ஒட்டப்பட வேண்டும், மேலும் அவ்வறிப்பை தொடா்புடைய மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும்.

(3) உட்பிரிவு (2)ல் கூறப்பட்டுள்ள அறிவிப்பு மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும்போது அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள வளாகம் கோரிப்பெற்றபொழுது இருந்த நிலையானது, அரசிதழில் வெளியான தேதியிலிருந்து முடிந்து போனதாகும் என்பதோடு அதனை திரும்ப பெறுவதற்கு உரிமையுடைய நபரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகவும் கருதப்பட வேண்டும். மேலும் மேற்சொன்ன தேதிக்குப் பின்னா், எந்தவொரு கால அளவிற்கும் அத்தகைய வளாகத்தைப் பொறுத்து உரிமைக் கோரிக்கை எதற்கும் அரசு கட்டுப்பாடுடையதாகாது.

## 79. கோரிப் பெறுவது தொடா்பாக அரசின் அலுவலை ஒப்படைத்தல்

அரசு அறிவிக்கையின் மூலமாக பிரிவுகள் 73 முதல் 78 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ள வகைமுறைகளின்படி அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் மற்றும் கடமை எதுவும் குறித்துரைக்கப்படக்கூடிய அலுவலா் ஆணையில் குறித்த நிபந்தனைகள் எவையேனுமிருப்பின், அவற்றின்படி செயல்பட வேண்டும் என்று பணிக்கலாம்.

## 80. கோரிப்பெற்ற ஆணை எதனின் மீறியதற்கான தண்டனை

நபர் எவரும் பிரிவு 73ன்படி அல்லது பிரிவு 75ன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனையும் மீறுவாரானால் அவர் மீது ஓராண்டு வரை சிறைத் தண்டனையோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை வழங்கப்படும்.

**உறுப்பினர்**

**81. உறுப்பினரது உரிமைகள்**

(1) உறுப்பினர் எவரும், ஊராட்சிப் பணிகளை நிறைவேற்றுவதிலும் அல்லது ஊராட்சி சொத்து வீணடிக்கப்படுவது எதையும் அல்லது உள்ளூர்ப் பகுதி தேவைகள் எவற்றையும் செயல் அதிகாரி அல்லது அணையர் அல்லது செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரலாம். மற்றும் விரும்பத்தக்கதெனத் தோன்றக்கூடிய மேம்பாடுகளை யோசனையாகத் தெரிவிக்கலாம்.

(2) ஒவ்வொரு உறுப்பினரும், வகுத்துரைக்கப்படக் கூடிய விதிகளுக்கு உட்பட்டு ஊராட்சி நிர்வாகம் தொடர்பாகத் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கும், சந்தர்ப்பத்திற்கேற்ப கிராம ஊராட்சித் தலைவர் அல்லது ஊராட்சி ஒன்றிய தலைவர் அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவரை இடைமறித்து வினா எழுப்புவதற்கும் உரிமை பெற்றவராவார்.

(3) ஒவ்வொரு உறுப்பினருக்கும், செயல் அதிகாரி அல்லது ஆணையர் அல்லது செயலாளருக்கு உரிய அறிவிப்பைக் கொடுத்து பின்னர் அலுவலக நேரத்தின் போது ஊராட்சியின் ஆவணங்களை பார்வையிடுவதற்கான உரிமை பெற்றவராவார். ஆனால் செயல் அதிகாரியோ அல்லது ஆணையரோ அல்லது செயலாளரோ எழுத்து வடிவில் உரிய முறையில் பதிவு செய்து அத்தகைய உரிமையை மறுக்கலாம்.

**82. கிராம ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியம் மன்ற மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் எவரும் ஊதியம் பெறக் கூடாது என்பது**

கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் அல்லது துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் எவரும் ஊடராட்சியின் செயல் முடிவுக்கு உட்பட்டு அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிதியங்களிலிருந்து அவர் புரிகின்ற பணிகளுக்காக 1(அவ்வப்போது அரசினால் நிர்ணயிக்கப்படக் கூடிய பயணப்படி, தினப்படி மாதாந்திர நிரந்தரப் பணயப்படி, நாட்படி அமர்வுக் கட்டணம் ஆகியவை நீங்கலான சம்பளம் அல்லது பிற ஊதியம் எதுவும்) பெறவோ அல்லது அவருக்கு வழங்கவோ கூடாது.

---

82 1 இப்பிரிவில் ( )ல் கூறப்பட்டுள்ள சொற்றொடர் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998) பிரிவு 5ன் மூலம் சேர்க்கப்பட்டது)

**82-ஏ – தலைவர், உறுப்பினர் அயல்நாடு செல்ல அரசு அனுமதி தேவை**

An Act further to amend the Tamil Nadu Panchayats Act, 1994
Be inenacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Fifty-third Year of the Republic of India as follows:-

1. (1) This Act may be called the Tamil Nadu Panchayats (Fifth Amendment) Act 2002

**(2)** It shall come into force on such date as the State Government may, by notification appoint

2. In the Tamilnadu Panchayats Act, 1994 (hereinafter referred to as the Principal Act) after section 82, the following section shall be inserted namely:-

"82-A, President, Vice-president, chairman, vice-chairman or member to obtain permission to undertake trip to foreign country:- (1) No person holding the office of president, vice-president or member of a village panchayat or chairman, vice-chairman or member of a panchayat union council or of a district panchayat shall undertake any trip to any foreign country in his official capacity as such, except with the permission in writing of the Government."

(with effect form 9.1.03 G.O.3/8.1.03) (Act No.52/2002)

**அதிகாரம் - 5**

**செயல் அதிகாரியின் அதிகாரங்களும் கடமைகளும்**

**83. கிராம ஊராட்சியின் செயல் அதிகாரி**
**2**

**84. செயல் அதிகாரியின் கடமைகள்**

**செயல் அதிகாரி**

(அ) கிராம ஊராட்சியின் தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டும் ஆனால் அத்தீர்மானம் சட்டப்படி நிறைவேற்றப்படவில்லை என்றோ அது இந்தச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறி இருக்கிறது என்றோ, அல்லது செயல்படுத்தப்படுமானால் மனித உயிருக்கோ, உடல் நலத்திற்கோ அல்லது பொதுமக்களின் பாதுகாப்பிற்றோ ஆபத்து விளைவிக்கக்கூடும் என்றோ 3(செயல் அதிகாரி) கருதினால் செயல் அதிகாரி அவ்விபரத்தை அரசுக்கு ஆணைகள் பெற வேண்டி அனுப்ப வேண்டும். அரசின் முடிவே இறுதியானதாகும்.

(ஆ) கிராம ஊராட்சியின் அனைத்து அலுவலா்களையும் பணியாளா்களையும் கட்டுப்பாடு செய்து வருதல் வேண்டும்.

(இ) செயல் அதிகாரி சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தியும் வருதல் வேண்டும். இந்தச் சட்டத்தினாலோ இதன்படி இயற்றப்பட்ட விதிமுறைகள் அவற்றில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்திற்கும் உட்பட்டு நிா்வாக அதிகாரத்தைச் செலுத்தி வருதல் வேண்டும். அந்த நோக்கங்களை உரிய முறையில் நிறைவு செய்வதற்கு நேரடியாக பொறுப்புடையவராவாா்.

---

83 2 இப்பிரிவில் முதலில் (வகுத்துரைக்கப்படக்கூடிய விதிகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சியின் செயல் அதிகாரி அதிகாரங்களை செலுத்தி அலுவல்களைப் புரிய வேண்டும் என்பதற்காக அரசானது, அறிவிக்கையின் வாயிலாக ஒரு கிராம ஊராட்சிக்குட நபா் எவரையும் நியமிக்கலாம்) என்று இருந்ததை, 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1996) பிரிவு 9ன்படி திருத்தப்பட்டது.

84 3 இப்பிரிவில் தலைவா் என்ற சொல் செயல் அதிகாரி என்று 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999)ன்படி மாற்றப்பட்டது.

## ஆணையர்

### 85. ஆணையர்

(1) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் ஒரு ஆணையர் அரசினால் நியமிக்கப்படுவார். அத்தகைய ஆணையர், ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தின் சமூக மேம்பாடு தேசிய விரிவாக்கப் பணித் திட்டத்தினையொட்டி நியமிக்கப்படும் மேம்பாட்டு அலுவலராகப் பொதுவாக இருந்து வருவார்.

(2) ஆணையருக்கென கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் மற்றும் படித்தொகைகள் என்ற வகையிலோ அவருடைய விடுப்பு ஊதியம் ஓய்வூதியம் வருங்கால வைப்பு நிதி வகையிலோ ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிடித்தம் எதுவும் செய்யக்கூடாது.

(3) அரசு உட்பிரிவு (1)ன்படி நியமிக்கப்படும் ஆணையர்களை நியமிக்கும் முறைகள், அவர்களின் பணி நிபந்தனைகள் அவர்களுடைய ஊதியம் மற்றும் படித்தொகைகள் அவர்களுடைய ஊதியம் மற்றும் படித்தொகைகள் அவர்களுடைய ஒழுங்கு மற்றும் நடத்தை ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

(4) ஆணையர்

(அ) தீர்மானம் எதனையும் கொண்டு வரவோ அல்லது வாக்களிப்பதற்கான உரிமையோ இல்லாமல் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் மற்றும் அதன் குழு கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், அதில் நடைபெறும் விவாதங்களில் பங்கேற்பதற்கும் உரிமையுடையவராவார்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவர் கோரினால் ஊராட்சி ஒன்றிய மன்ற அல்லது /குழு கூட்டம் எதிலும் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

(இ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டும்.

(ஈ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதிலும் வரிவசூலிப்பதிலும் உள்ள முன்னேற்றம் குறித்த கால அறிக்கைகளை ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அளித்தல் வேண்டும்.

(உ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை கட்டுப்படுத்த வேண்டும்.

(ஊ) இந்தச் சட்டத்தில் ஆணையர் புரிய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ள கடமைகள் அனைத்தையும் புரிந்து வருவார் மற்றும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி வருவார். மேலும், இந்தச் சட்டத்தில் இதன் பின்பு, எவ்வெப்போது வகை செய்யப்படும் போதெல்லாம் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டும் இச்சட்டத்தின்கீழ் இயற்றப்படும் விதி முறைகள், வகைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகிய அனைத்திற்கும் உட்பட்டும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துகின்ற நோக்கத்திற்கான நிர்வாக அதிகாரத்தைச் செலுத்தி வருவார். மேலும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களை உரிய முறையில் நிறைவேற்ற நேரடியாகப் பொறுப்புடையவராவார்.

(5) பிரிவு 16 உட்பிரிவு (2)ல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் மற்றும் பிற வகைமுறைகள் அனைத்திற்கும் உட்பட்டும், ஊராட்சி ஒன்றிய மன்றம் இந்தச் சட்டத்தின்படி ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ள அலுவல்களில் ஏதொன்றும் அவரால் புரிந்து வரப்படுவது சம்பந்தமான, தான் பொருத்தமென நினைக்கக் கூடிய திட்டவட்டமான ஆணைகளை பிறப்பிப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

ஆனால் அத்தகைய ஆணைகள் சமூக மேம்பாடு தேசிய விரிவாக்கப் பணித்திட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் அரசினால் குறிப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ள பிற திட்டம் எதற்கும் தொடர்புடையதாய் இருக்கிற இடத்து ஊராட்சிஒன்றிய மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், அத்தகைய ஒப்படைப்புக்கான வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

(6) அரசினாலோ ஊராட்சி ஒன்றிய மன்றத்தாலோ கொடுக்கப்பட்ட ஆணைகள் அல்லது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் எவற்றுக்கும் உட்பட்டு ஆணையர் எழுத்து மூலமான ஆணையின் மூலமாக தம்முடைய அலுவல்களில் எவற்றையும் ஊராட்சி ஒன்றியத்தின் எந்த பணியாளரிடமோ, அரசின் பணியாளரிடமோ ஒப்படைக்கலாம். அவ்வாறு பொறுப்பளிக்கப்பட்ட அலுவல்கள் அணையரால் விதிக்கப்படக்கூடிய கட்டுப்பாட்டுக்கும் மற்றும் மேலாய்வுக்கும் உட்பட்டு பணியாற்ற வேண்டும். (Section 199)

**86. செயல் அதிகாரி மற்றும் ஆணையரின் நெருக்கடி கால அதிகாரங்கள்**

செயல் அதிகாரியோ, ஆணையரோ, நெருக்கடியான காலங்களில் பொது மக்களின் உடல் நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் தேவையானதாயிருக்கின்றது என்று தாம் கருதுகின்ற பணி எதுவும் நிறைவேற்றப்படுமாறோ, செயல் எதுவும் செய்யப்படுமாறோ பணிக்கலாம். மேலும் அத்தகைய பணி நிறைவேற்றப்படுவதற்கான செலவுகள் கிராம ஊராட்சி நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தோ கொடுக்கப்பட வேண்டும் என்று பணிக்கலாம்.

ஆனால்

(அ) அவர், குறிப்பிட்ட பணி எதுவும் நிறைவேற்றப்படுவதற்கோ குறிப்பிட்ட செயல் எதுவும் செய்யப்படுவதற்கோ தடை செய்கின்ற கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணை ஏதொன்றையும் மீறி, இந்தப் பிரிவின்படி செயல்படக் கூடாது, மற்றும்

(ஆ) அவர் இந்தப் பிரிவின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும் அறிக்கையை கிராம ஊராட்சிக்கோ ஊராட்சி ஒன்றிய மன்றத்திலோ அதன் அடுத்த கூட்டத்தில் வைக்க வேண்டும்.

**செயலாளர்**

**87. செயலாளர்**

(1) 1 (தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சி பணியமைப்பில் உள்ள கோட்ட வளர்ச்சி அலுவலர் ) நிலைக்குக் குறையாமல் உள்ள ஒரு அலுவலரை, மாவட்ட ஊராட்சியின் 2 ( செயலாளராக) /அரசு நியமிக்கும்

(2) உட்பிரிவு (1)ன் நியமிக்கப்படும் செயலாளரை நியமிக்கும் முறைகள் அவருடைய பணி நிபந்தனைகள், அவருடைய ஊதியம் மற்றும் படித்தொகைகள், அவருடைய ஒழுங்கு மற்றும் நடத்தை ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கான அதிகாரத்தை அரசு பெற்றிருக்கும்.

---

87 1 இப்பிரிவில் (ஊரக வளர்ச்சித் துறை இணை இயக்குநர் ) என்ற சொற்றொடரை 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998) பிரிவு 6ன்படி திருத்தப்பட்டது.

87 2(முதன்மை செயல் அலுவலர்) என்ற சொல், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998) பிரிவு 3ன்படி மாற்றியமைக்கப்பட்டது.

**88. செயலாளரின் கடமை மற்றும் அலுவல்கள்**

(1) செயலாளர்

(அ) இந்த சட்டத்தினாலோ அல்லது அதன்படியோ அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதன்படியோ குறிப்பாகத் தமக்கு அளிக்கப்பட்டள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி வருவார்.

(ஆ) மாவட்ட ஊராட்சிப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதை கண்காணித்தும் மற்றும் கட்டுப்பாடு செய்தும் வருவதோ, தீர்மானம் எதனையும் கொண்டு வருவதற்கான அல்லது வாக்களிப்பதற்கான உரிமையில்லாமல், மாவட்ட ஊராட்சி அல்லது அதன் நிலைக் குழு கூட்டங்களில் கலந்து கொண்டு அதில் நடக்கின்ற விவாதங்களில் பங்கேற்பதற்கான உரிமையை பெற்றிருப்பார்

(இ) மாவட்ட ஊராட்சித் தலைவர் கோரினால் மாவட்ட ஊராட்சி அல்லது அதன் நிலைக்குழு கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ள வேண்டும்.

(ஈ) மாவட்ட ஊராட்சியின் தீர்மானங்களைச் செயல்படுத்தி வருதல் வேண்டும்.

(உ) மாவட்ட ஊராட்சி பணிக்கக் கூடிய விதத்தில் அந்த அமைப்பின் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும், வரி வசூலிப்பதிலும் உள்ள முன்னேற்றம் தொடர்பாக காலமுறை அறிக்கைகளை சமர்பிக்க வேண்டும்.

(ஊ) மாவட்ட ஊராட்சியின் அலுவலர்களையும் பணியாளர்களையும் கட்டுப்பாடு செய்து வர வேண்டும்

(எ) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவார் மற்றும் பிற அலுவல்களையும் நிறைவேற்றி வருவார்.

(2) உட்பிரிவு (1)ல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படி தமக்கு அளிக்கப்பட்டுள்ள அலுவல்களில் ஏதொன்றையும் செயலாளர் புரிந்து வருவது தொடர்பாக தான் பொருத்தமென நினைக்கக்கூடிய திட்டவட்டமான ஆணையைப் பிறப்பிப்பதற்கான அதிகாரத்தை மாவட்ட ஊராட்சி பெற்றிருக்கும்.

(3)அரசினாலோ மாவட்ட ஊராட்சியினாலோ வழங்கப்பட்ட ஆணைகள் அல்லது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் எவற்றுக்கும் உட்பட்டு செயலாளர் எழுத்து வடிவிலான ஆணையின் மூலமாக தம் அலுவல்களில் எவற்றையும் மாவட்ட ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளரிடமோ அரசின் பணியாளரிடமோ ஒப்படைக்கலாம், அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அலுவல்கள் செயலாளரால் விதிக்கப்படக்கூடிய கட்டுப்பாடுகள் வரையறைகள் நிபந்தனைகள் ஆகியவற்றிற்கும் கட்டுபாட்டிற்கும் மேலாய்விற்கும் உட்பட்டதாகும்.

(4) மாவட்ட ஊராட்சியின் அல்லது அதன் நிலைக் குழுக்களின் தீர்மானங்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கோ அல்லது பிற சட்டம் எதற்குமோ முரணாக இருக்கின்றது என்று செயலாளர் கருதினால் மாவட்ட ஊராட்சியின் அல்லது அதன் நிலைக் குழுக்களின் தீர்மானங்களை நிறைவேற்றிய தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் அரசினரால் தீர்மானிக்கப்பட்டவாறு இல்லாமல் மற்றப்படி அத்தகைய தீர்மானத்தை அவர் செயல்படுத்தக் கூடாது.

## அத்தியாயம் - 6
## நடைமுறை

**89. ஊராட்சிக் கூட்டங்களில் தலைமை ஏற்றல்**

(1) சந்தா்பத்திற்கேற்ப, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சியின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைவா் தலைமை வகிப்பாா். அவா் வராதபோது சம்பந்தப்பட்ட துணைத் தலைவா் தலைமை வகிப்பாா். அவரும் வராதபோது, அக்கூட்டத்திற்கு வந்திருக்கின்ற உறுப்பினா்களால் தோ்ந்தெடுக்கப்படும் உறுப்பினா் ஒருவா் தலைமை வகிப்பாா்.

(2) கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவா் கூட்டங்களில் ஒழுங்கைப் பேணி வருவதோடு, கூட்டங்களில் அல்லது அவற்றின் தொடா்பாக எழுகின்ற ஒழுங்குப் பிரச்சனைகள் அனைத்தையும் முடிவு செய்வாா். ஒழுங்குப் பிரச்சனை எதனின் மீதும் விவாதம் எதுவும் கூடாது என்பதுடன் அது தொடா்பான தலைவரின் முடிவே இறுதியானதாகும்.

(3) கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவா் அல்லது தலைமை வகிக்கின்ற உறுப்பினா் அந்தக் கூட்டத்தைப் பொறுத்தமட்டிலும் அவா் தலைமை வகிக்கின்ற கால அளவின்போதும் கிராம ஊராட்சி /ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவரின் அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருப்பாா்.

**90. ஊராட்சியின் கூட்டங்கள்**

ஊராட்சி ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படக்கூடிய நேரங்களிலும் இடங்களிலும் கூடுதல் வேண்டும்; மற்றும் பிரிவு 89ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, அதன் கூட்டங்களில் குறைவெண்வரம்பு உள்ளடங்கலான)அலுவலை நடத்துவது தொடா்பாக, வகுத்துரைக்கப்படக்கூடிய நடைமுறை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனால் ஊராட்சியின் எந்த இரு கூட்டங்களுக்கிடையே அறுபது நாட்களுக்கு மேல் கால இடைவெளி இருக்கக் கூடாது.

**91. உறுப்பினா்கள் எப்போது விவாதங்களில் பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பது என்பது**

(1) ஒரு பிரச்சினையானது பொது மக்களுக்கு பொதுவாகப் பொருந்துவதாக இருப்பதோடு தாமாகவோ அல்லது தமது கூட்டாளியின் மூலமாகவோ நேரடியான அல்லது மறைமுகமாக பணவகையிலான அக்கறை எதனையும் தான் பெற்றிருப்பாரானால், அத்தகைய உறுப்பினா் எவரும் ஊராட்சியின் அல்லது குழு எதனின் கூட்டமொன்றில் அப்பொருள் பரிசீலனைக்கு வருகின்ற பொழுது விவாதத்தில், கலந்து கொள்ளவோ வாக்களிக்கவோ முடியாது.

(2) கிராம ஊராட்சித் தலைவரோ அல்லது சந்தா்ப்பத்திற்கு எற்ப ஊராட்சி ஒன்றிய மன்ற அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவரோ எந்த பொருளில் ஒரு உறுப்பினா் எவரும் அக்கறையைக் கொண்டிருப்பதாக நம்புகிறாரோ அந்த பொருள் பற்றிய விவாதத்தில் வாக்களிக்காதவாறு அல்லது பங்கேற்காதவாறு உறுப்பினரைத் தடை செய்யலாம். அல்லது அவா் அத்தகைய உறுப்பினரை அவ்விவாதத்தின் போது விலகி இருக்குமாறும் கேட்டுக் கொள்ளலாம்.

(3) கிராம ஊராட்சித் தலைவரின் அல்லது சந்தா்ப்பத்திற்கேற்ப ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி தலைவரின் முடிவை, அத்தகைய உறுப்பினா் எதிா்கலாம் அதன் பேரில் அவா் அப்பிரச்சினையை கூட்டத்தில் கொண்டுவர வேண்டும். கூட்டத்தின் முடிவே இறுதியானதாகும்.

(4) கூட்டத்தில் வந்திருக்கின்ற உறுப்பினர் எவரும் கிராம ஊராட்சியின் தலைவரோ சந்தர்ப்பத்திற்கேற்ப ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர், அல்லது மாவட்ட ஊராட்சி தலைவரோ விவாதத்திலுள்ள பொருள் சம்பந்தமாக பணவகையிலான அக்கறை எதனையும் கொண்டிருப்பதாக நம்புவாரானால், அப்படிப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்படும் பொழுதும் விவாதத்தின் போதும் அக்கூட்டத்திலிருந்து சம்பந்தப்பட்டவரை விலகி இருக்குமாறு கோரலாம்.

(5) தொடர்புடைய உறுப்பினர் உட்பிரிவு (3) ல் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சனையின் மீது வாக்களிப்பதற்கு உரிமையுடையவராகமாட்டார். மற்றும் தொடர்புடைய கிராம ஊராட்சி தலைவரோ சந்தர்ப்பத்திற்கேற்ப ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரோ, மாவட்ட ஊராட்சி தலைவரோ உட்பிரிவு (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானித்தின் மீது வாக்களிப்பதற்கு உரிமையுடையவராக இருக்கமாட்டார்.

**விளக்கம்:** இந்தப் பிரிவில் வருகின்ற கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சியின் தலைவர் என்னும் சொல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சி துணைத்தலைவரையோ அல்லது அதுசமயம் தலைமை வகிக்கின்ற உறுப்பினரையோ உள்ளடக்கும்.

## 92. நடவடிக்கைகளின் நிகழ்ச்சி குறிப்புகள்

ஒவ்வொரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சியின் கூட்ட நடவடிக்கை குறிப்புகள், மற்றும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்ட உறுப்பினரிடமிருந்து கூட்டம் முடிந்த 48 மணி நேரத்திற்குள்ளாக பெறப்பட்ட மறுப்பு குறிப்பு ஆகியவற்றின் நகல் சம்பந்தப்பட்ட தலைவரால் கூட்டம் முடிந்து மூன்று நாட்களுக்குள்ளாக ஆய்வாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஆனால் ஆய்வாளர், அந்த நிகழ்ச்சிக் குறிப்புகளை பொதுவாகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட நேர்வுக்கேற்பவோ தன்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஆணையிடலாம்.

## 93. ஆவணங்களை தருவிப்பதற்கு ஊராட்சிகளுக்கு உள்ள அதிகாரம்

செயல் அதிகாரி அல்லது ஆணையர் அல்லது நேர்விற்கேற்ப செயலாளரை அவரது பாதுகாப்பிலுள்ள ஆவணம் எதையும் முன் வைக்குமாறு சம்பந்தப்பட்ட ஊராட்சி கோரலாம்; மற்றும் அவர் வகுத்துரைக்கப்பட கூடிய விதிகளுக்கு உட்பட்டு அத்தகைய கோரிக்கையை ஏற்று நடக்க வேண்டும்.

## 94. கிராம ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்ட ஊராட்சிகள் மற்றும் குழுக்களின் நடவடிக்கைகள்

(1) ஒவ்வொரு ஊராட்சியின் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் குழுக்களின் நடவடிக்கைகளும், ஆய்வாளரின் ஒப்புதலுடன் ஊராட்சியால் செய்யப்பட்ட இந்தச் சட்டத்தின் விதிகளும் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் வகுத்துரைக்கப்படக்கூடிய ஒழுங்கு முறை விதிமுறைகளாலும் மற்றம் அச்சட்டத்தினால் பிறப்பிக்கப்பட்ட முறைகளாலும் நெறிப்டுத்தப்படல் வேண்டும்.

(2) ஆய்வாளர், ஒழுங்கு முறை விதி அல்லது அதன் பகுதி எதனையும் மறு பரிசீலனை செய்து மீண்டும் பணிந்தனுப்புவதற்காக, ஊராட்சிக்கு திருப்பியனுப்பலாம்.

எனினும் இந்தச்சட்டத்தின் அல்லது இதன்படி இயற்றப்பட்ட விதிகளின் வகைமுறையை மீறுகின்ற ஒழுங்கு முறை விதி எதனையும் சேர்ப்பதற்கு அல்லது அதை விட்டு விடுவதற்கு அல்லது மாற்றுவதற்கு ஆய்வாளர் தகுதி வாய்ந்தவராவார்.

## 95. கூட்டுக் குழுக்களை நியமித்தல்

(1) ஒரு ஊராட்சியானது, எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டு பொறுப்பாக்கப்பட்டிருக்கின்றதோ அந்த நோக்கம் நிறைவேற்றுவதற்காக ஒரு கூட்டுக்குழுவை அமைப்பதில் பிற உள்ளாட்சி அமைப்பு ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் மற்றும் அவ்வாறு இணைந்து கூட்டுக் குழுக்களை உருவாக்க வேண்டும் என்று ஆய்வாளரால் கோரப்பட்டால் கூட்டுக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம்.

(2) ஒரு கூட்டுக் குழுவின் அமைப்பு அதிகாரங்கள் நடைமுறை மற்றும் குழுவிற்கும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்குமிடையேயும் எழும் கருத்துவேறுபாட்டினை நீக்கும் முறை அவ்வப்போது வகுத்துரைக்கப்படும் விதிகளுக்கு இணங்கியவாறு இருத்தல் வேண்டும்.

## 96. குழுக்கள்

(1) (அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவர் ஆணையர் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர், ஆகியோர் அடங்கிய நியமனக்குழு ஒன்று இருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவர் இக்குழுவின் தலைவராக இருப்பார். பிரிவு 102ல் கூறப்பட்ட வகை முறைகளுக்கு உட்பட்டும் இச்சட்டத்தின் கீழ் அரசினால் இயற்றப்படும் விதிகளுக்கு உட்பட்டும் ஊராட்சி ஒன்றிய மன்ற நிதியிலிருந்து ஊதியமாக வழங்கப்படுகின்ற ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழுள்ள அனைத்து பணியிடங்களுக்கும் நிரப்பப்படும் நியமனங்கள் இக்குழுவின் முன் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும்.

(ஆ) (1) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவர், ஆணையர் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட வேளாண் உற்பத்திக் குழு ஒன்று இருக்கும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர், அந்தக் குழுவின் தலைவராக இருப்பார்.

(ii) கூறு (i)ல் கூறப்பட்ட நபர் பின்வருவாராயிருப்பின் பெயர் குறித்து நியமிக்கப்பட முடியாது.

(அ) அவர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராக இல்லாதிருப்பின்
அல்லது

(ஆ) ஊராட்சி ஒன்றிய மன்ற கருத்தின்படி அவர் வேளாண் துறையில் போதிய அறிவும் பட்டறிவும் பெற்றிருக்கவில்லையெனில்

(இ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கல்விக் குழுவும் மற்றும் ஒரு பொது நோக்கங்கள் குழுவும் அமைக்கப்பட வேண்டும் இச்சட்டத்தின் கீழ தனக்குள்ள கடமைகளையும் அலுவல்களையும் திறமையுடன் புரிந்து வருவதற்காக தேவைப்படக்கூடிய பிற குழுக்களையும் ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைத்துக் கொள்ளலாம். அவ்வாறு அமைக்கப்பட வேண்டுமென்று அரசினால் கோரப்படுமாயின் அவ்வாறு அமைக்கப்பட வேண்டும், இக்கூற்றின்படி அமைக்கப்படும் ஒவ்வொரு குழுவிலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் குறித்துரைக்கப்படக் கூடிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் அடங்கியிருப்பார். ஒவ்வொரு குழுவிலும் தலைவர், பதவி வழித் தலைவர் ஆவார். ஒவ்வொரு குழுவிலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் குறித்துரைக்கப்படக் கூடிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் அடங்கியிருப்பார். ஒவ்வொரு குழுவிலும் தலைவர் பதவி வழித் தலைவர் ஆவார். ஒவ்வொரு குழுவிலும் உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து தோந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) இதன் பொருட்டு அரசால் இயற்றப்படும் விதிகளுக்கு உட்பட்டு உட்பிரிவு (1)ன்படி அமைக்கப்பட்ட ஒவ்வொரு குழுவின் அதிகாரங்களையும், கடமைகளையும் அவ்வப்பொழுது செய்யப்படும் ஒழுங்குமுறை விதிகள் வாயிலாக தீர்மானிப்பதற்கான அதிகாரம் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு உண்டு.

**97. நிலைக் குழுக்கள்**

**(1)**(அ) ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் இச்சட்டத்தின்படி அதிகாரங்களைச் செலுத்தி வருவதற்கும் கடமைகளை ஆற்றி வருவதற்கும் மற்றும் அதன் பணிகளை புரிந்து வருவதற்கும் மாவட்ட ஊராட்சிக்கு உதவி புரியும் நோக்கத்திற்காகவும் பின்வருவனவற்றை செயல்படுத்துவதற்காகவும் நிலைக் குழுக்களை அமைக்கலாம்; அவைகளாவன;

(i) உணவு மற்றும் வேளாண்மை
(ii) தொழில்கள் மற்றும் தொழிலாளர்
(iii) பொதுப் பணிகள்
(iv) கல்வி
(v) மதுவிலக்கு உள்ளடங்கலாக மக்கள் நல்வாழ்வு மற்றும் பொது நலம்

(ஆ) ஒரு மாவட்ட ஊராட்சி தான் பொருத்தமெனக் கருதும் நோக்கங்களுக்காக மேலும் கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம்.

(2) ஒவ்வொரு நிலைக்குழுவிலும் இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாவட்ட ஊராட்சி தீர்மானிக்கும். ஒவ்வொரு நிலைக்குழுவிலும் குழுவின் தலைவர் உட்பட அதன் எண்ணிக்கை ஐந்திற்கு மேற்படக் கூடாது. குழுவின் உறுப்பினர்கள் மாவட்ட ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து மாவட்ட ஊராட்சியால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(3) மாவட்ட ஊராட்சியில் அமைக்கப்பட்ட எல்லா நிலைக் குழுக்களிலும் மாவட்ட ஊராட்சியின் தலைவர் பதவி வழி உறுப்பினராக இருப்பார்.

(4) ஒவ்வொரு நிலைக் குழுவும் அதன் தலைவரை அதன் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும்.

(5) ஒரு மாவட்ட ஊராட்சி உறுப்பினர் இரண்டிற்கும் மேற்பட்ட நிலை குழுக்களில் உறுப்பினராக இருக்க முடியாது.

(6) ஒவ்வொரு நிலைக் குழுவிற்கும் செயலாளர் தன் கட்டுப்பாட்டில் உள்ள அலுவலர்களில் ஒருவரைப் பதவிவழிக்குழு செயலாளராக பெயர் குறித்து நியமிக்க வேண்டும். எல்லா நிலைக் குழுக்களின் கூட்டங்களிலும் செயலாளர் கலந்து கொள்வதற்கு உரிமை உண்டு.

**நிர்வாக அறிக்கைகள்**

**98. கிராம ஊராட்சியின் நிர்வாக அறிக்கைகள்**

(1) ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு ஆண்டிற்குமான கிராம ஊராட்சியின் நிர்வாகத்தைப் பற்றிய அறிக்கையை அந்த ஆண்டு முடிவுற்ற பின் கூடிய விரைவில் ஆனால் வகுத்துரைக்கப்பட்ட தேதிக்குப் பின் இல்லாமல் வகுத்துரைக்கப்படக்கூடிய படிவத்திலும் விவரங்களுடனும் வகுத்துரைக்கப்படக் கூடிய அலுவலர் மூலமாக ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

(2) அந்த அறிக்கை செயல் அதிகாரியால் தயாரிக்கப்பட வேண்டும். மற்றும் கிராம ஊராட்சி, அதனைப் பரிசீலித்து தீர்மானத்துடன் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**99. ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கை**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றம், ஒவ்வொரு ஆண்டிற்குமான ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்தினைப் பற்றியும் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எல்லா கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கைகளையும் தொகுத்து தொகுக்கப்பட்ட ஒரு அறிக்கையை அந்த ஆண்டு முடிவுற்ற பின் கூடிய விரைவில் ஆனால் வகுத்துரைக்கப்பட்ட தேதிக்குப்பின் இல்லாமல் வகுத்துரைக்கப்படக்கூடிய படிவத்திலும் விபரங்களுடனும் வகுத்துரைக்கப்படக்கூடிய அலுவலரின் மூலமாக மாவட்ட ஊராட்சிக்கு அனுப்ப வேண்டும்.

(2) அந்த அறிக்கை ஆணையரால் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வறிக்கையை ஊராட்சி ஒன்றிய மன்றம் அதனைப் பரிசீலனை செய்து தீர்மானத்துடன், மாவட்ட ஊராட்சிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(3) மாவட்ட ஊராட்சி அம்மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாகத்தைப் பற்றிய ஒரு பொது அறிக்கையைத் தயாரித்து வகுத்துரைக்கப்படக்கூடிய தேதிக்கு முன்பாக அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஊராட்சி அந்த அறிக்கையின் ஒரு நகலை ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்.

(4) அந்த அறிக்கை, மற்றும் அதன் மீதான தீர்மானத்துடன் அரசு பணிக்கக்கூடிய வகையில் வெளியிடப்பட வேண்டும்.

**100. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் செயல்பாடுகள், குறைபாடு, காலியிடம் ஆகியவற்றின் காரணமாக செல்லாதவை ஆக்கப்படுதல் ஆகாது என்பது**

கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி அல்லது அதன் குழு ஒன்றின் அல்லது அத்தகைய கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது மாவட்ட ஊராட்சியின் அல்லது குழுவின் தலைவராகவோ, துணைத் தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ செயல்படுகின்ற ஒருவரின் செயல் எதுவும் , அத்தகைய ஊராட்சியினை அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப குழுவினை நிறுவுவதில் குறைபாடு இருக்கிறது என்ற காரணத்திற்காக மட்டுமே அல்லது அத்தகைய கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவர், துணைத்தலைவர் அல்லது உறுப்பினர் அல்லது ஒரு குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் தகுதியின்மை காரணமாகவோ அல்லது அவருடைய தேர்தலில் ஒழுங்கீனம் அல்லது சட்ட விரோதத் தன்மையுள்ளது என்பதன் காரணமாகவோ அத்தகைய பதவியை வகிக்கவோ தொடரவோ தகுதியற்றவர் என்கிற ஆதாரத்தின் பேரிலோ கிராம ஊராட்சியின் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது மாவட்ட ஊராட்சியின் அல்லது குழுவின் தலைவர் துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி காலியாக இருந்தபோது அத்தகைய செயலானது செய்யப்பட்டுள்ளது என்கிற காரணத்திற்காக செல்லத்தகாது என்று கருதப்பட முடியாது.

## அத்தியாயம் 6 A

SPECIAL PROVISION RELATING TO SPECIAL VILLAGE PANCHAYATS

100A Certain modifications of provisions of this Act – Notwithstanding anything contained in this Act, in respect of special village panchayats, -

(a) the executive officer of the special village panchayat shall be the executive authority;

(b) the provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V /1920) and the rules made thereunder shall apply,-

(i) in respect of the regulation or restriction of building and the use of sites for building;

(ii) in respect of levy of property tax;

(c) all cheques for payment from panchayat fund or other funds shall be signed by the executive officer of the special "village panchayat".

## அத்தியாயம் - 7

## ஊராட்சிகளின் பணியமைப்பு அவற்றின் அதிகாரங்களும் அலுவல்களும்

### 101. ஊராட்சிகளை நிறுவுதல்

(1) ஊராட்சியின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையையும் பதவிப் பெயர்களையும் தரங்களையும் நிர்ணயிப்பதற்கான அல்லது மாற்றியமைப்பதற்கான மற்றும் அவர்களுக்கு வழங்கக் கூடிய சம்பளங்கள், கட்டணங்கள் மற்றும் படித் தொகைகளுக்கான அனைத்துக் கருத்துக்களுக்கும் சம்பந்தப்பட்ட ஊராட்சியின் ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும்.

(2) அத்தகைய கருத்துருக்கள், செயல் அதிகாரி, அல்லது ஆணையர் அல்லது செயலாளரின் கோரிக்கையின் பேரில் மட்டுமே ஊராட்சியால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மற்றும் ஊராட்சியானது அந்த கருத்துருக்களை ஏற்று மாற்றியமைக்கவோ அல்லது மாற்றமின்றியோ ஒப்புதல் வழங்கலாம். எனினும் அத்தகைய ஊராட்சியில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலையான பணியிலுள்ள, வரும் மாதமொன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கும் குறையாத சம்பளம் பெற்றுக் கொண்டுள்ள ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரையும் பாதிக்கிற கருத்துரு எதுவும் இந்த நோக்கத்திற்கென கூட்டப்படும் தனி கூட்டம் ஒன்றில் தவிர பரிசீலனை செய்யப்படக் கூடாது. மற்றும் அத்தகைய கருத்துரு எதுவும் அந்த ஊராட்சியில் அப்போதுள்ள உறுப்பினர்களில் குறைந்தது பாதிப்பேர்களாவது அதற்கு இசைவளித்திருந்தாலன்றி நடைமுறைப்படுத்தப்பட முடியாது.

(3) உட்பிரிவு (1)லும் உட்பிரிவு (2)லும் என்ன சொல்லியிருந்த போதிலும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களையும் மாவட்ட ஊராட்சிகளையும் பொறுத்தவரையில் அரசும், மற்றும் கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் ஆய்வாளரும் கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சியின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையையும் பதவியின் பெயர்களையும், படிநிலைகளையும், மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளங்களையும் கட்டணங்களையும் படித்தொகைகளையும் நிர்ணயிப்பதற்கு அல்லது மாற்றியமைப்பதற்கு அதிகாரம் உண்டு. ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளைப் பொறுத்த வரையில் அரசின் முன் ஒப்பளிப்பும் கிராம ஊராட்சிகளை பொறுத்தவரையில் ஆய்வாளரின் முன் ஒப்பளிப்பும் இன்றி நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையை, பதவிப் பெயர்களை படிநிலைகளை சம்பளங்களை கட்டணங்களை அல்லது படித்தொகைகளை மாற்றியமைப்பதற்கு அதிகாரம் கிடையாது.

1(ஆனால், ஆய்வாளரானவர், இது குறித்து அரசினால் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டு நெறிகள் எவற்றையும் கடைபிடித்தல் வேண்டும்.)

---

100 A Act 8 of 2006 dt.14.7.2006 omitted

101 1 இப்பிரிவு ( ) புதிய வரம்புரை, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998) பிரிவு 7ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

**102. ஊராட்சிகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணி நிபந்தனைகள்**

**(1)** ஆணையர்கள் மற்றும் செயலாளர் அல்லாத பிற ஊராட்சிகளின் பிற அலுவலர்களையும் பணியாளர்களையும் பணியமர்த்தக்கூடிய அதிகாரிகள் யாவர் என்பது குறித்தும் அத்தகைய அலுவலர்கள் பணியாளர்களின் வகைப்பாடு தேர்ந்தெடுக்கும் முறைகள், சம்பளம், படித்தொகைகள், ஒழுங்கு மற்றும் நடத்தை மற்றும் பணி நிபந்தனைகளைக் குறித்து விதிகளை இயற்றுவதற்கு அரசு அதிகாரம் கொண்டிருக்கும்.

ஆணையர்கள் மற்றும் [2] (செயலாளர்கள்) அல்லாத பிற, அலுவலர்கள், சந்தர்ப்பத்திற்கேற்ப கிராம ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் அலுவலர்கள் அல்லது பணியாளர்களின் வகை எதனையும் மாநிலம் முழுவதற்குமான அல்லது பகுதி எதற்குமான தனிப்பட்ட பணி ஒன்றாக அமைப்பதற்காக விதிகளில் வகை செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின் வரைமுறைகளுக்கும் இதன் பொருட்டு அரசு இயற்றக்கூடிய விதிகள் எவற்றிற்கும் உட்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றமானது அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சியானது அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது அந்த மாவட்ட ஊராட்சியின் அலுவலர்களையும் பணியாளர்களையும் பொறுத்தவரையில்,

(அ) அளிக்கப்படக்கூடிய பிணையத் தொகைகளையும் தன்மையையும் நிர்ணயிக்கின்ற

(ஆ) கல்வி மற்றும் பிற தகுதிகளை வகுத்தரைக்கிற

(இ) விடுப்பு, விடுப்புப் படிகள் பணிப் பொறுப்புப் படிகள் மற்றும் பயணப்படிகளை வழங்குவதை முறைப்படுத்துகின்ற

(ஈ) ஓய்வூதியங்களையும் பணிக்கொடைகளையும் வழங்குவதை முறைப்படுத்துகிற

(உ) வருங்கால வைப்பு நிதிகளை நிறுவிப், பேணி வருகிற மற்றும் அவற்றிற்கு கட்டாயமாக பங்குத் தொகைகளை அளிக்கின்ற

(ஊ) நடத்தையை முறைப்படுத்துகின்ற மற்றும்

(எ) பணி நிபந்தனைகளை பொதுவாக வகுத்துரைக்கின்ற ஒழுங்குமுறை விதிகளை உருவாக்கலாம்.

எனினும் அத்தகைய ஒழுங்குத் திட்டங்களில் ஏற்பாடு செய்யப்படும் எந்த விடுப்பும், விடுப்புப் படியும், பயணப்படியும் ஓய்வுச் சம்பளம் அல்லது பணிக்கொடையும், அரசின் தனி ஒப்பளிப்பு இல்லாமல் எந்தச் சந்தர்ப்பத்திலும் இதற்கு இணையான நிலையிலும் தகுதியிலும் உள்ள அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கத்தக்க தொகை மேற்படக் கூடாது.

(ii) எந்தக் கட்டுப்பாடுகளின் மேல் அத்தகைய படிகள் வழங்கப்படும் அல்லது எந்த விடுப்பு இயலாமை ஓய்வு அல்லது ஓய்வு அளிக்கப்படுவதும் அதே போன்றே ஒப்பளிப்பு இல்லாமல் அத்தகைய அரசு ஊழியர்களுக்கு அப்போதைக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதைவிடக் கூடுதலாக, சாதகமாக இருக்கக்கூடாது.

(3) உட்பிரிவு (1)ன்படி இயற்றப்பட்ட விதியானது, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியமன்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை பொறுத்த விதிகள் இந்தச் சட்டம் அமலுக்கு வந்த தேதிக்கு முந்தியது அல்லாத ஒரு தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என கூறலாம்.

---

102 [2] இப்பிரிவில் (தலைமை செயல் அலுவலர்) என்பதை செயலாளர் என 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் 28/1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட (தமிழ்நாடு சட்டம் 28/1998) பிரிவு 8ன்படி திருத்தப்பட்டது.

**103. பொதுவான அலுவலர்களைப் பணியமர்த்தல் செய்தல்**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் வகுத்துரைக்கப்படக் கூடிய விதிகளுக்கு உட்பட்டு, அவை இரண்டிற்குமோ அல்லது அனைத்திற்குமோ, அதேபோன்ற தன்மையுடைய அதிகாரங்கள் அல்லது கடமைகளை செலுத்தி வருவதற்கு அல்லது ஆற்றி வருவதற்கு ஒரு அலுவலரை அல்லது பணியாளரை அமர்த்தலாம் மற்றும் விதிகளால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் அவ்வாறு செய்யுமாறு கோரப்படும் பொழுது அவ்வாறு செய்தாக வேண்டும்.

**104. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியமன்ற அலுவலர்களையும், பணியாளர்களையும் இடமாற்றம் செய்தல்**

(1) ஒரு கிராம ஊராட்சி அலுவர் அல்லது பணியாளர் எவரையும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கோ அல்லது பிற கிராம ஊராட்சிக்கோ ஆய்வாளர் இடமாற்றம் செய்யலாம்.

ஆனால் தொடர்புடைய ஆணையரை அல்லது செயல் அதிகாரியை கலந்தாய்வு செய்த பின்புதான் அவ்வாறான இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

ஆனால் இந்த உட்பிரிவின்படி இடமாற்றம் செய்வதில் ஆய்வாளர் அத்தகைய இடமாற்றத்திற்கு தன் கருத்துப்படி தேவைப்படக் கூடிய பொதுவான அல்லது தனி உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

(2) இந்தச் சட்டத்திலோ அல்லது 1920 – ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலோ (தமிழ்நாடு சட்டம் v/1920) என்ன அடங்கியுள்ள போதிலும் ஊராட்சி ஒன்றியத்தின் (ஆணையர் உட்பட) அலுவலர் அல்லது பணியாளர் எவரும் பிற ஊராட்சி ஒன்றியத்தின் எதனின் பணிக்கும் அல்லது 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் v/1920) அமைக்கப்பட்டுள்ள நகராட்சி பணிக்கும் அரசால் இடமாற்றம் செய்யப்படாலாம்.

ஆனால் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அல்லது நகராட்சி மன்றங்களைக் கலந்தாய்வு செய்த பின்புதான் (ஆணையர் அல்லாத பிற) அலுவலர் அல்லது பணியாளர் எவரும் அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட முடியும்.

ஆனால் அரசு இந்த உட்பிரிவின்படி இடமாற்றம் செய்கையில், தன் கருத்துப்படி தேவைப்படக் கூடிய பொதுவான அல்லது தனி உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

**105. மாவட்ட ஊராட்சியின் அலுவலர்களையும் பணியாளர்களையும் இடமாற்றம் செய்வதற்கு அரசிற்கு உள்ள அதிகாரம்**

(1) இந்தச் சட்டத்திலோ அல்லது 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலோ (தமிழ்நாடு சட்டம் v/1920) என்ன அடங்கியுள்ள போதிலும் அரசானது.

(அ) பிற மாவட்ட ஊராட்சி எதனின் பணிக்கு அல்லது 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு தமிழ்நாடு சட்டம் v/1920) அமைக்கப்பட்டுள்ள நகராட்சி எதனின் பணிக்கும் (செயலாளர் உள்ளடங்கலாக) மாவட்ட ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரையும் இடமாற்றம் செய்வதற்கும்.

(ஆ) கூறு (அ)ன்படி செய்யப்படும் இடமாற்றம் எதற்கும் தேவையானதெனக் கருதக்கூடிய பொதுவான அல்லது தனியான உத்திரவுகளை பிறப்பிப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கும்.

**106. அலுவலர்களையும், பணியாளர்களையும் தண்டிப்பதற்கான அதிகாரம்**

வகுத்துரைக்கப்படக்கூடிய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு செயல் அதிகாரி ஆணையர் அல்லது செயலாளர் கிராம ஊராட்சியின் ஊராட்சி ஒன்றியத்தின் பணியிலுள்ள அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சியின் பணியிலுள்ள அலுவலர் அல்லது பணியாளர் எவரையும் துறையின் விதிகளையோ அல்லது கட்டுப்பாட்டினையோ மீறிய எதற்காகவும் அல்லது கடமையை செய்யும் பொழுது கவனக் குறைவு தகுதியின்மை கடமை புறக்கணிப்பு அல்லது பிற தவறான நடத்தைக்காக கண்டனக்குறிப்பு வழங்கலாம். அல்லது அபராதம் விதிக்கலாம் அல்லது ஆண்டு ஊதிய உயர்வுகளை அல்லது முதுநிலைப் பட்டியலில் தாழ்ந்த படிநிலை ஆக்குவதின் மூலம் பதவி உயர்வுகளை நிறுத்தி வைக்கலாம். அல்லது தாழ்ந்த பணியிடம் அல்லது தாழ்ந்த காலச்சம்பள ஏற்ற முறை ஒன்றிற்கு அல்லது தாழ்ந்த காலச்சம்பள ஏற்றமுறையில் தாழ்ந்த படிநிலை ஒன்றிற்குக் குறைக்கலாம். அல்லது தற்காலிகப் பணி நீக்கம் செய்யலாம் அல்லது பணி நீக்கம் செய்யலாம்.

**107. குறித்த சில கட்டளைகள் மக்கள் நல்வாழ்வு பணியமைப்புகளுக்கு பொருந்துதல்**

பிரிவு 109 ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு பிரிவுகள் 101 முதல் 106 வரையில் கூறப்பட்டுள்ளது வகைமுறைகள் 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் III/1939) என்ன அடங்கியுள்ள போதிலும், ஊராட்சிகளில் பணியாற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு பொருந்துவதாக இருக்க வேண்டும்.

**108. ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலுள்ள தலைமையாசிரியர்கள் உள்ளடங்கலான ஆசிரியர்களும் அடிப்படை பணியாளர்களும் அரசுப் பணியாளர்களாக இருப்பார் என்பது**

(1) இந்த சட்டத்திலோ, அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலுமோ என்ன அடங்கியுள்ள போதிலும் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலுள்ள (தலைமையாசிரியர் உள்ளடங்கலான) அனைத்து ஆசிரியர்களும் மற்றும் அடிப்படைப் பணியாளர்களும் 1981ஆம் ஆண்டு ஜீன் 1ஆம் தேதியிலிருந்து முழுநேர அரசு பணியாளர்களாக ஆவர்.

(2) பிரிவு 96 உட்பிரிவு (1)ல் அல்லது இந்த சட்டத்தின் பிற வகைமுறை எதிலும் என்ன அடங்கியுள்ள போதிலும் மற்றும் அரசமைப்பு சட்டம் 311ஆம் பிரிவு வரைமுறைகளுக்கு உட்பட்டும் அரசு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் உள்ள (தலைமையாசிரியர்கள் உள்ளடங்கலாக) ஆசிரியர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்களின் பணி நிபந்தனைகள் முறைப்படுத்துகின்ற விதிகளை இயற்றலாம்.

**109. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சுகாதாரத் துறை பணியமைப்பில் உள்ள நல்வாழ்வு உதவியாளர்கள், துணைச் செவிலியர், மருத்துவச்சிகள் மற்றும் பேறுகால உதவியாளர்கள் ஆகியோர் அரசுப் பணியாளர்களாக இருப்பர் என்பது**

(1) இந்த சட்டத்திலோ அல்லது அவ்வப்பொழுது நடைமுறையில் உள்ள பிறசட்டம் எதிலுமோ என்ன அடங்கியிருந்த போதிலும், இம்மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய சுகாதாரத் துறை அமைப்புகளில் உள்ள நல்வாழ்வு உதவியாளர்கள், துணை செவிலியர்கள், மருத்துவச்சிகள் மற்றும் பேறு கால உதவியாளர்கள் ஆகியோர் அனைவரும் 1982ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி முதல் முழுநேர அரசு பணியாளர்களாக ஆவர்.

(2) பிரிவு 96 உட்பிரிவு (1)ல் அல்லது இந்த சட்டத்தின் பிற வரைமுறைகளில் என்ன அடங்கியிருந்த போதிலும் மற்றும் இந்திய அரசமைப்புச் சட்டம் 311ன் பிரிவு கூறின் வரைமுறைகளுக்கு உட்பட்டு, அரசானது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பொது சுகாதாரத் துறை பணியமைப்பில் உள்ள மக்கள் நல்வாழ்வு உதவியாளர்கள், துணை செவிலியர்கள், மருத்துவச்சிகள் மற்றும் பேறுகால உதவியாளர்களின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துகிற விதிகளை இயற்றலாம்.

## அத்தியாயம் - 8

## கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் கடமைகள், அதிகாரங்கள் மற்றும் சொத்து

### 110. கிராம ஊராட்சிக்குள்ள கடமைகள்

இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கும் இதன்படி இயற்றப்பட்ட விதிகளுக்கும் நிதிவசதிக்குட்பட்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சி பகுதியில் அதன் தேவைகளை நிறைவேற்றுவதற்கென நியாயமான வகை முறையைச் செய்ய வேண்டியது கிராம ஊராட்சியின் கடமையாகும்.

(அ) எல்லாக் கிராமச் சாலைகளையும் அதாவது ஒரு கிராமத்திலுள்ள (தேசீய நெடுஞ்சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள் மாவட்ட பெருஞ்சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகள் தவிர்த்து) எல்லாச் சாலைகளையும் அத்தகைய சாலைகளில் உள்ள அனைத்துப் பாலங்கள், சிறு பாலங்கள், சாலை அணைகள், தரை பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதல். பழுது பார்த்தல் பராமரித்தல்

[1](அஅ) கிராம நத்தங்களை விரிவாக்கல் மற்றும் கட்டிடம் கட்டுதலை ஒழுங்குப்படுத்துதல்:

(ஆ) கட்டிடம் உள்ள பகுதியில் உள்ள பொது இடங்கள் மற்றும் பொதுச்சாலைகளில் விளக்குகள் அமைத்தல்:

(இ) வடிகால்களைக் கட்டுதல் மற்றும் (கழிவு நீர் அல்லாத) வடிகால் நீரையும் மாசுக்களையும் அகற்றுதல்,

(ஈ) தெருக்களை துப்புரவு செய்தல், குப்பை குவியல்களையும் புதர்ச் செடிகளையும் முற்செடிகளையும் அகற்றுதல், பாழுங்கிணறுகளையும் சுகாதாரக் கேடான குளங்களையும் குட்டைகளையும் பள்ளங்களையும் அல்லது பொந்துகளையும் மூடுதல் மேலும் அந்த கிராமத்தை சுகாதாரமான நிலைமைக்கு கொண்டுவர மற்றச் சீர்திருத்தங்கள் செய்தல்

(உ) பொதுக்கழிப்பிடம் ஏற்படுத்துவதும் மற்றும் பொது அல்லது தனியார் கழிப்பிடங்களைத் துப்புரவு செய்ய ஏற்பாடுகளை செய்தல்:

(ஊ) இடுகாடுகளையும் சுடுகாடுகளையும் ஏற்படுத்துதல் மற்றும் அவற்றை பேணுதல்

(எ) கிணறுகள் வெட்டுவதலும் பழுது பார்த்தலும், குட்டைகள் அல்லது குளங்கள் வெட்டுதலும் பழுது பார்த்தலும் அவற்றை பேணுதலும் [1] (குடிக்கும் மற்றும்) குளிக்கும் மற்றும் சலவை செய்தல் நோக்கங்களுக்கென நீரை வழங்குவதற்காக நீர் நிலையங்களை கட்டுதல் மற்றும் பேணுதல்

(ஏ) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாக பணிக்ககூடிய பிற கடமைகள்

---

110 (அ) 1 இக்கூறு ( ) 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1997) பிரிவு 3ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

110 (எ) 1 இக்கூறில் (குடிக்கும் மற்றும்) என்ற சொல் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1998) பிரிவு 9ன்படி சேர்க்கப்பட்டது.

**111. பிற பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு கிராம ஊராட்சிக்குள்ள அதிகாரம் இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கும் இதன் கீழ் இயற்றப்படும் விதிகளுக்கும் உட்பட்டு ஒரு கிராம ஊராட்சி பின்வரும் பொறுப்புகளை பொறுத்தவரையில் அந்த கிராமத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பொருத்தமானதென கருதுகின்ற வகை முறைகளையும் செய்யலாம் அவைகளாவன.**

(அ) அந்தக் கிராமத்தில் உள்ள எல்லா பொதுச் சாலைகளின் இரு பக்கங்களிலும் மரங்கள் நடுதலும், காப்பாற்றுதலும், அந்தச் சாலையானது கிராம ஊராட்சியால் பராமரிக்கப்படாமல் இருந்தால், அந்த சாலைகளைப் பராமரிக்கும் அதிகார அமைப்பும் கிராம ஊராட்சியும் இணைந்து ஒத்துக்கொள்ளும் வரைமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு மரங்கள் நட்டு பேணிவரலாம்.

(ஆ) பொதுச் சாலைகளுக்கும், கட்டடங்கள் இருக்கும் பகுதிகளுக்கு அப்பால் உள்ள பொது இடங்களில் விளக்கு அமைத்தல்

(இ) ஊராட்சி ஒன்றிய சந்தைகளென வகைப்படுத்தப்பட்டவை தவிர பிற பொதுச்சந்தைகள் ஏற்படுத்துதல் நடத்துதல்,

(ஈ) ஊராட்சி ஒன்றிய பொருட்காட்சிகள், விழாக்கள் என வகைப்படுத்தப்படுபவை தவிர பிற பொருட்காட்சிகளையும் விழாக்களையும் கட்டுப்படுத்துதல்

(உ) பொது மக்களுக்கான இறங்குமிடங்களையும் நிற்குமிடங்களையும், வண்டி பேட்டைகளையும் பொதுக் கால்நடைத் தொழுவங்களையும் ஏற்படுத்தல் நடத்துதல்

(ஊ) பொது இறைச்சிக் கொட்டகைகளை ஏற்படுத்தல் மற்றும் பேணுதல்

(எ) படிப்பகங்கள் ஏற்படுத்துதலும் நடத்துதலும்

(ஏ) வானொலிப் பெட்டிகள் 2 (தொலைக்காட்சி பெட்டிகள்) விளையாட்டு வெளிகள் பூங்காக்கள் விளையாட்டு மன்றங்கள் உடற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் நடத்துதல்

(ஐ) எழுத்தறிவிக்கும் நிலையங்களும் சமூகக் கல்வி புகட்டுவதற்கான நிலையங்கள் ஏற்படுத்தல் மற்றும் நடத்துதல், மேலும்

(ஒ) பொது வசதிக்கான கட்டிடங்களைக் கட்டுதலும் அந்தக் கிராமத்தில் வாழ்வோரின் பாதுகாப்பு, சுகாதாரம், சுகம். வசதி, பண்பாடு பொழுதுபோக்கு ஆகியவற்றிற்கான மற்ற வசதிகளை ஏற்படுத்துதல்

3 ( * * * ) நீக்கப்பட்டது

---

111 (ஏ) 2 (தொலைக்காட்சி பெட்டிகள்) எனும் சொல் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 8ன்படி சேர்க்கப்பட்டது.

3 கூறு(ஓ) உள்ள வரம்புரை (ஆனால் இந்தக் கூறில் உள்ள ஏதும் பாசனம் அல்லாத நோக்கங்களுக்கு நீர் வழங்குவதற்கும் கழிவு நீருக்கும் பொருந்தாது) 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 8ன்படி நீக்கப்பட்டது.

**112. ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குள்ள கடமைகள்**

இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் இதன் படி இயற்றப்பட்ட விதிகளுக்கும் நிதிவசதிகளுக்குட்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றம் பின்வரும் கடமைகளை ஊராட்சி ஒன்றிய பகுதியில் நிறைவேற்றும் பொருட்டு நியாயமான வகைமுறைகளை செய்ய வேண்டியது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடமையாகும். அவைகளாவன;

(எ) ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்று வகைப்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து பொதுச் சாலைகள், அச்சாலைகளில் உள்ள பாலங்கள், சிறுபாலங்கள், சாலைகள் அணைகள், தரை பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதலும் பழுது பார்த்தலும் பேணுதலும்

1(எஎ) குடிநீர், சலவை செய்தல் மற்றும் குளிப்பதற்கான நீர் ஆதாரங்களை அமைத்தல்)

2(எஎஎ) அரசினால் அறிவிக்கை செய்யப்படக்கூடிய ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்த விரிவான கூட்டு குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகளும் அவற்றை பேணி வருவதற்கான பணிகளும்)

(பி) மருந்தகங்கள் ஏற்படுத்தலும் பேணுதலுடன் கிராம மருத்தவர்களுக்கு உதவித் தொகை அளித்தலும்

(சி) தாய்சேய் நல விடுதிகள் ஏற்படுத்தி நடத்துதல் தாய் சேவைப்பணி நடத்துதல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் தாய்மார்களுக்கு அறிவுரையும், உதவியும் அளித்தல்

(டி) ஏழைகள் விடுதிகள், அனாதை இல்லங்கள், கடைகள், விற்பனை மையங்கள் தரை மேடைகள் கட்டுதலும் பேணுதலும், அம்மைக் குத்துபவர்களை பயிற்றுவிப்பதும் வேலைக்கு அமர்த்துவதும் மக்கள் நெருக்கத்தை அகற்றுதலும், வீட்டு மனைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தலும்

(இ) தொடக்கப்பள்ளிகள் ஏற்படுத்துதலும் பேணுதலும் விரிவாக்குதலும் தொடக்கப்பள்ளிக்காகத் தனியார் நிர்வாகத்திற்கு உதவித் தொகை வழங்குதல் உட்பட தொடக்க கல்வி முன்னேற்றத்திற்கு ஏற்பாடு செய்தலும்.

(எப்) தொற்று நோய் அல்லது மலேரியா சம்பந்தமான தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தலும்

(ஜி) ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமென ஒதுக்கப்பட்ட பொருட்காட்சிகளையும் விழாக்களையும் கட்டுப்படுத்தல்

(எச்) கால்நடை நோய் நிவாரணம்

(ஐ) 3 ( ** *** * *) நீக்கப்பட்டது

---

112 1(எஎ) எனும் கூறு, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1999) பிரிவு 10ன்படி சேர்க்கப்பட்டது.

2(எஎஎ) எனும் கூறு 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் 29/1999 பிரிவு 9ன் படி சேர்க்கப்பட்டது.

3(ஐ) எனும் கூறு (கிராம நத்தங்கள் விரிவாக்கலும் கட்டிட வரைப்படங்களுக்கு அனுமதி அளித்தலும்) 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிக்ள (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் பிரிவு 37/1997) பிரிவு 4ன் படி நீக்கப்பட்டது.

(ஜே) ஊராட்சி ஒன்றிய சந்தை என வகைப்படுத்தப்பட்ட பொதுச் சந்தைகளை ஏற்படுத்தலும் பேணுதலும்

(கே) பிறப்பு, இறப்புகள் சம்பந்தமான புள்ளி விவரங்களை வைத்திருத்தல்

(எல்) சத்திரங்கள் ஏற்படுத்தலும், நடத்துதலும்

(எம்) வேளாண்மை, வேளாண்மைசார் சரக்குகளையும் விவசாயக் கருவிகளையும் சீர்த்திருத்தலும் மேம்படுத்தலும் மற்றும் வேளாண்மை கண்காட்சிகள் நடத்துவதும்

(என்) குடிசை தொழில்களை முன்னேற்றுதலும் ஊக்குவித்தலும்

(ஒ) அவ்வப்போது அரசு அறிக்கை வாயிலாக விதிக்கக்கூடிய பிற கடமைகளை ஆற்றிவருதல்

**113. சமூக மேம்பாட்டிற்கான தேசிய விரிவாக்கப் பணித் திட்டத்தை நிறைவேற்றுவதை ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் ஒப்படைத்தல்**

அரசு இந்தச் சட்டத்தின்படி, ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கென ஊராட்சி ஒன்றியம் ஒன்றை அமைத்து பின்னர் கூடிய விரைவில் குறிப்பாக வேளாண்மை, கால் நடை வளர்ப்பு மற்றும் தனிநபரின் பெயரிலோ அல்லது கூட்டுறவு அடிப்படையிலோ அமைக்கப்படும் கிராமத் தொழில்களின் வளர்ச்சி தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் உள்ளடங்கலாக, சமூக மேம்பாட்டிற்கான தேசிய விரிவாக்கப் பணித் திட்டத்தை, ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் நிறைவேற்றுவதற்கு அரசால், குறித்துரைக்கப்படக் கூடிய வரைமுடைறகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கலாம்.

**114. குறித்த சில திட்டங்களை ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் ஒப்படைத்தல்**

(1) பிரிவு 113ல் வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, குறித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும், வரைமுறைகளுக்கும் உட்பட்டு, பொருளாதார மேம்பாட்டிற்கான செயல் திட்டங்கள், மற்றும் செயல்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் அத்தகைய செயல் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள், அரசால் அல்லது சட்டப்படியான அமைப்பு அல்லது பிற முகமை எதனாலும் செயல்படுத்தப்படுவதாகவோ அல்லது நிறைவேற்றப்படுவதாகவோ இருந்தாலும் அவற்றை செயற்படுத்துவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் ஒப்படைக்கலாம்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றம் அரசு அறிவிக்கை வெளியிட்டால், அரசு அல்லது சட்டப்படியான அமைப்பு அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் உள்ள பிற முகமை எதனாலோ செயல்படுத்தப்படும் திட்டங்களையும் மற்றும் பிற செயல்பாடுகளையும் ஆய்வு செய்யலாம்.

**115. குறித்த சில பொறுப்புகள் ஆற்ற ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அதிகாரம்**

இந்தச் சட்டத்தின் பிரிவுகளுக்கும் அதன் கீழ் இயற்றப்படும் விதிகளுக்கும், நிதி வசதிக்கும் உட்பட்டு பிரிவு 112ல் குறிப்பிட்டுள்ளதை தவிர்த்து பொது உபயோகமுள்ள ஊராட்சி ஒன்றியத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வாழ்வோரின் பாதுகாப்பு சுகாதாரம், சுகம் அல்லது வசதியையும் முன்னேற்றம் கருதி ஊராட்சி ஒன்றிய மன்றம் தான் தகுதியெனக் கருதும் நிதி ஒதுக்கீடு செய்யலாம்.

1 ( * * * * ) நீக்கப்பட்டது

**116. பொதுவான இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் முதலியன**

இந்தச் சட்டத்தின் வரைமுறைகளுக்கும் அதன்படி இயற்றப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு இரண்டு இல்லது அதற்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள்

(i) 2(குடிக்க) சலவை, மற்றும் குளிக்கும் காரியங்களுக்கு பொதுவான நீ்த துறையிலிருந்து நீராதாரம் கட்டவும், பேணவும் மேலும் பொதுவான இடுகாடும் சுடுகாடும் ஏற்படுத்தலாம். மேலும்

(ii) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் சம்மதத்துடன் ஒத்துக் கொள்ளும் வரையறைகளுக்கு உட்பட்டு எந்த நிலையத்தின் நி்வாகத்தையும் அல்லது எந்த வேலையையும் நிறைவேற்றுதல் அல்லது பராமரிப்பதற்கான பொறுப்பை ஒப்படைக்கலாம்.

**117. பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் விளக்கு வசதி செய்தல்**

பிரிவு 111 கூறு (ஆ)ல் எப்படி கூறியிருந்த போதும் ஒரு பொது அல்லது தனி ஆணையின் மூலம் எந்த கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் 1( அல்லது மாவட்ட ஊராட்சியின்) அதிகார எல்லைக்குள் உள்ள பொதுச் சாலைகளிலும் பொது இடங்களிலும் விளக்கு வசதி அமைக்குமாறு அரசு கட்டளையிடலாம் . அப்படி விளக்கு வசதி அமைப்பது கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் 2(அல்லது மாவட்ட ஊராட்சியின்) கடமையாகும்.

எனினும், அவ்வாறு கட்டளையிடும் பொழுது அரசு விளக்கு அமைப்பதற்கான செலவுகளுக்க, தான் நியாயமானதென்று கருதும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இதில் அரசின் தீ்ப்பே முடிவானதாகும்.

**118. பொதுவான மருந்தகங்கள் மற்றும் குழந்தை நல மையங்களை பராமரித்து வருதல்**

இந்தச் சட்டத்தின் வரைமுறைகளுக்கும், அதன்படி இயற்றப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சே்ந்து பொது மருந்தகங்களையும் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற வகையான நிறுவனங்களையும் நிறுவலாம் மற்றும் பராமரித்து வரலாம்.

---

115 1 இப்பிரிவில் இருந்த வரம்புரை (ஆனால் இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பாசனம் அல்லாத நோக்கங்களுக்கு நீ் வழங்குவதற்கும் கழிவு நீரகற்றுவதற்கும் பொருந்தாது) 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 10ன்படி நீக்கப்பட்டது.

116 2 இக்கூறில் (குடிக்க) எனும் சொல், 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் பிரிவு 11ன்படி சே்க்கப்பட்டது.

117 1, 2 இப்பிரிவில் (அல்லது மாவட்ட ஊராட்சியின்) என்று இரண்டு இடங்களில் வரும் சொல், 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 12ன்படி சே்க்கப்பட்டது.

**119. அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்தல் நிறுவனங்களை மேலாண்மை செய்தல் பணிகளை நிறைவேற்றுதல், அல்லது பராமரித்தல் முதலியவற்றை கிராம ஊராட்சிக்கு ஒப்.படைத்தல்**

(1) அறிவிக்கை மூலம் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எந்த அசையா சொத்தையும் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எந்த ஒரு கிராம ஊராட்சியிடமும் ஒப்படைக்கப்படுகிறது என்று ஊராட்சி ஒன்றிய மன்றம் அறிவிப்பு செய்யலாம் அந்த அறிவிப்பில் குறிக்கப்படும் தேதியிலிருந்து அந்த சொத்து ஒப்படைக்கப்பட்டதாகும்.

(2) இயற்றப்படும் விதிகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சிக்கு அதன் சம்மதத்துடன் மற்றும் இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு எந்த நிலையத்தின் நிர்வாகத்தையும் அல்லது எந்த ஒரு பணியையும் செய்து முடிப்பதையும் அல்லது பராமரிப்பதையும் அல்லது எந்த அதிகாரத்தைச் செலுத்துவதையும் அல்லது கடமையை நிறைவேற்றுவதையும் அந்தக் கிராமத்தின் உள்ளே அல்லது வெளியே, இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது வகைசெய்யப்படாவிட்டாலும் 3(அரசு, ஊரக வளர்ச்சி இயக்குநர் அல்லது பிற துறைத் தலைவர் எவரும் அல்லது மாவட்ட ஆட்சியர்) மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்ற ஆணையர் அல்லது செயலாளர் அல்லது எவரும் அல்லது எந்த குழுவும் மாறுதல் செய்யலாம்.

**120. ஒதுக்கப்படாத காடுகளை கிராம ஊராட்சிக்கு மாற்றம் செய்தல்**

(1)(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தின் போது அந்தக் கிராமத்திலுள்ள ஒதுக்கப்படாத எல்லா காடுகளும் கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டதாகும். அத்தகைய கிராமத்தின் நன்மைக்காக அதனால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

(ஆ) அவ்வாறு கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்படும் பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் கிராம ஊராட்.சியை கோரினால், நில நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அவர் இதற்காக அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையை அரசுக்கு செலுத்த வேண்டும்.

(2)(அ) ஒரு கிராம ஊராட்சி அதனிடம் உட்பிரிவு (1)ன் கீழ் ஒப்படைக்கப்பட்ட ஒரு காட்டை ஒழுங்காக நிர்வகிக்கவில்லை என்று, வருவாய் கோட்ட அலுவலர் கருதினால் அவர் ஒரு ஆணையின் மூலம் அத்தகைய காட்டை கிராம ஊராட்சியின் நிர்வாகத்திலிருந்து, இதன் பொருட்டு தமது ஆணையில் குறிப்பிடக் கூடிய காலத்திற்கு மேற்படாமல் எடுத்துக் கொள்ளலாம். அந்தக் காட்டைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்து அதனால் நிர்வகிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடலாம்.

(ஆ) வருவாய் கோட்ட அலுவலர் ஆணை மூலம், கூறு (அ)ன் கீழ் பிறப்பித்த எந்த ஆணையிலும் குறிப்பிட்டுள்ள காலத்தை அப்போதைக்கப்போது நீட்டிக்கலாம்.

(இ) கூறு (அ) அல்லது (ஆ)ன் கீழ் ஒரு ஆணை பிறப்பிப்பதற்கு முன்பு அவ்வாறு ஏன் பிறப்பிக்கக் கூடாது என்பதற்கு காரணங்கள் கேட்டு சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கு ஒரு நியாயமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) கூறு (அ) அல்லது (ஆ)ன் கீழ் ஒரு ஆணை பிறப்பிக்கப்படும் போது சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி அந்த ஆணை கிடைக்கப் பெற்ற மூன்று மாதத்திற்குள் மாவட்ட ஆட்சியருக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். மாவட்ட ஆட்சியர் அந்த ஆணையை உறுதியாக்கவோ, திருத்தவோ அல்லது தள்ளுபடியோ செய்யலாம்.

---

119 3 இந்த உட்பிரிவில் (அரசு நில நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சியர் அல்லது வருவாய் கோட்ட அலுவலர்) என்ற சொற்றொடரானது ( )ல் கூறப்பட்டவாறு 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 13ன்படி திருத்தப்பட்டது.

(3) நில நிர்வாக ஆணையர் தன் விருப்பப்படி எந்த நேரத்திலும் தன்னியல்பாகவோ அல்லது விண்ணப்பத்தின் மேலோ உட்பிரிவு (2)ன் கீழ் வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியரின் ஆணை சம்பந்தமான ஆவணங்களையும் அத்தகைய ஆணையின் சட்ட முறைமையையும், நேர்மையை பற்றியும் தனது திருப்திக்காக வரவழைக்கவும் ஆராயவும் செய்வதுடன் தான் தகுதியென்று கருதும் ஆணையையும் பிறப்பிக்கலாம்.

**121. கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒதுக்கப்படாத காடுகளின் அனுபோக உரிமையை மீட்க அரசுக்குள்ள அதிகாரம் இழப்பீடு கொடுத்தல் முதலியன**

**(1)** அரசின் கருத்துப்படி பிரிவு 120, உட்பிரிவு (1)ன்படி ஒரு கிராம ஊராட்சியிடம் (ஒப்படைக்கப்பட்டுள்ள) ஒதுக்கப்படாத காடு எதுவும் பொதுக் காரியத்துக்குத் தேவைப்படுமாயின், ஒதுக்கப்படாத அந்தக் காட்டின் அனுபோகத்தையும், ஆட்சியையும் அரசு அறிவிக்கையின் மூலம் மீட்கலாம். அவ்வாறு அரசு மீட்பதற்கு முன் அந்த ஒதுக்கப்படாத காடுகளின் மீது ஏற்படுத்தியிருந்த உரிமைகள், பற்றுகள் யாவும் அரசை பொறுத்த வரையில் முடிவடைந்து போகும்.

(2) அந்த ஒதுக்கப்படாத காட்டின் அனுபோகமும், ஆட்சியும் உட்பிரிவு (1)ன்படி அரசால் மீட்கப்படும் போது இந்த ஒதுக்கப்படாத காடு எந்த மாவட்ட ஆட்சியரின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட ஆட்சியர் இதன் பின்னர் வகை செய்துள்ள முறைகளின்படி அந்த ஒதுக்கப்படாத காட்டில் கிராம ஊராட்சி செய்துள்ள மேம்பாட்டுக்காக, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும்.

**விளக்கம்**

இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக மேம்பாடு என்பது அந்த ஒப்படைக்கப்படாத காட்டின் மதிப்பைக் கூட்டுகிறதும் அல்லது அதற்குப் பொருத்தமானதும், எந்த நோக்கத்திற்காக கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்ததோ அந்த நோக்கத்திற்கு இணங்கியதாகவுமுள்ள ஒரு வேலை அல்லது வேலையின் விளைவு என்று பொருள்படும். மேலும் அதில் கீழகாணும் வேலைகளும் அந்த வேலைகளின் விளைவுகளும் அடங்கும்.

(அ்) கட்டிடங்கள் அல்லது ஏதேனும் கட்டுமானம் ஒன்றை எழுப்புதல், வேளாண்மை அல்லது வீட்டு உபயோகத்திற்காக நீரைத் தேக்கி வைப்பதற்காக அல்லது வழங்குவதற்காக ஏரிகள், கிணறுகள், கால்வாய்கள், அணைகள் ஏனைய பணிகள் செய்தல்.

(ஆ) பாசனத்திற்காக நிலத்தை தயார்படுத்துதல்

(இ) வேளாண்மைக் காரியங்களுக்காக நிலத்தை பயன்படுத்துதல், நிலத்தை துப்புரவு செய்தல் , வேலி அடைப்பு அல்லது நிலையான மேம்பாடு செய்தல்

(ஈ) மேற்சொன்ன வேலைகளில் எதையாவது புதுப்பித்தல் அல்லது மீண்டும் கட்டுதல் அல்லது அதில் மாற்றம் செய்தல் அல்லது புதிதாக எதையாவது அதனுடன் சேர்த்தல்

(உ) பலன் தரும் மரங்கள், கட்டிட உபயோக மரங்கள், பிற பயனுள்ள மரங்கள், செடிகள் நடுதல் அல்லது பாதுகாத்தல் பேணி வருதல்.

(3) உட்பிரிவு (2)ல் கூறப்பட்டுள்ள கூறுகள் (அ) முதல் (ஈ) வரையில் குறிப்பிட்டுள்ள மேம்பாடுகளுக்காக கொடுக்கப்படத்தக்க இழப்பீடு ஒதுக்கப்படாத காடுகள் அரசு மீட்கும் நாளன்றுள்ள நிலவரப்படி செய்யப்பட்டுள்ள உண்மையான மேம்பாடுகளின் மதிப்பாக இருக்க வேண்டும். இந்த மதிப்புத் தொகையில் அந்த மேம்பாடுகளைச் செய்வதற்குத் தேவைப்படுகிற தொழிலாளர்கள் செலவு, அவர்களை மேற்பார்வையிடுவதற்கு ஆன செலவு ஏனைய செலவுகளுடன் பொருள்களின் செலவுகள் அடங்கும். ஆனால் காலத்தினால் அல்லது வேறு காரணத்தினால் ஏற்படும் தேய்மானத்திற்கு நியாயமான தொகை அதிலிருந்து கழித்துக் கொள்ளப்பட வேண்டும். உட்பிரிவு (2)ற்கான விளக்கத்தைச் சேர்ந்த (உ) எனும் கூறில் குறித்துள்ள மேம்பாடு குறித்துக் கொடுக்கப்படத் தக்க இழப்பீடு ஒதுக்கப்படாத காடுகளை

அரசு மீட்கும் சமயத்தில் மரங்கள் அல்லது செடிகளை வெட்டி எடுத்துச் செல்லும் உரிமை பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தால் அந்த மரங்கள் அல்லது செடிகள் நியாயமாக ஈட்டித் தந்திருக்குமென எதிர்பார்க்கக் கூடிய தொகையாக இருக்க வேண்டும்.

ஆனால் அந்த மேம்பாடுகளின் உண்மையான மதிப்பைக் கணக்கிடுகையில் அந்த மேம்பாடுகள் செய்யப்பட்ட ஒதுக்கப்படாத காடுகளின் மதிப்பை கருத்தில் கொள்ளக் கூடாது.

மற்றும் அந்த மேம்பாடுகளை செய்வதற்காக சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கு அரசு ஏதேனும் மானியம் கொடுத்திருந்தால், அவ்வாறு கொடுக்கப்பட்ட மானியத் தொகை அந்த மேம்பாடுகளுக்கு கொடுக்கத்தக்க இழப்பீட்டுத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்பட வேண்டும்.

மேலும், அந்த ஒதுக்கப்படாத காடுகளில் உள்ள பேணாது வளர்ந்திருக்கும் மரங்கள், செடிகள் இவற்றை பொறுத்த மட்டில் அத்தகைய மரங்கள் செடிகளுக்குக் கொடுக்கத்தக்க இழப்பீடு, அந்த மரங்கள், செடிகளின் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் உரிய செலவாகக் கொள்ளப்பட வேண்டும்.

(4) உட்பிரிவு (2) கூறப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை, ஒவ்வொரு கிராம ஊராட்சியின் விருப்பப்படி

(அ) ஆண்டுத் தவணைகளில் குறிப்பிடக் கூடிய வட்டித் தொகையுடன் ரொக்கமாக அல்லது.

(ஆ) விற்பனை செய்யத்தக்க அல்லது வேறு வகையில் மாற்றத் தக்க கடனுறுதிச் சீட்டுகளாகவோ அல்லது அரசின் ஈட்டுப் பத்திரங்களாக அல்லது பங்குப் பத்திரங்களாக அல்லது

(இ) அந்த கிராம ஊராட்சி கோருகின்றவாறு ஒரு பகுதி பணமாகவோ அல்லது அரசின் பிற கடனீட்டும் பத்திரங்களாகவோ அல்லது பங்குச் சான்றிதழ்களாகவோ அல்லது

(5) உட்பிரிவு (4)ல் கூறப்பட்டுள்ள கிராம ஊராட்சியின் விருப்பம், ஒதுக்கீடு செய்யப்படாத காடுகளின் உடமையையும் நிர்வாகமும் அரசால் திரும்பக் கைக்கொள்ளப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அத்தகைய கிராம ஊராட்சியால் கூறப்பட வேண்டும். மற்றும் அவ்வாறு கூறப்படும் விருப்ப உரிமையானது இறுதியானதாக இருக்க வேண்டும். மேலும், அதனைச் செலுத்திய பின்வு மாறுதல் செய்யப்படுவதோ நீக்கம் செய்யப்படுவதோ கூடாது. உட்பிரிவு (4)ல் கூறப்பட்டுள்ள விருப்ப உரிமையினை மேலே குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்திற்கு செலுத்தாமல் விட்டு விடுகின்ற அல்லது செலுத்தத்தவறுகிற கிராம ஊராட்சி எதுவும் உட்பிரிவு (4) கூறு (ஆ)ல் கூறப்பட்டுள்ள கடனீட்டுப் பத்திரங்களாகவும், பங்குச் சான்றிதழ்களாகவும் செலுத்தப்படுவதற்கு விருப்ப உரிமையினை கூறியுள்ளதாக கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் 4ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் கூறில் தெரிவிக்கப்பட்டுள்ள கடனீட்டு பத்திரங்களும், பங்கு சான்றிதழ்களும், மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விருப்ப உரிமையினை அரசு பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து அல்லது அத்தகைய விருப்ப உரிமை செலுத்தப்பட்டிருக்க வேண்டிய தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் தவணைகளில் வழங்கத் தக்க இழப்பீட்டுத் தொகையானது வழங்கப்பட வேண்டும்.

(6) இழப்பீடு குறித்து இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு ஆணையினால் பாதிக்கப்பட்ட ஒரு கிராம ஊராட்சி, வரையறுக்கப்படக் கூடிய காலத்திற்குள்ளும், முறைப்படியும் நில நிர்வாக ஆணையருக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அந்த மேல்முறையீட்டின் பேரில் நில நிர்வாக ஆணையரின் ஆணையும் மேல்முறையீடு செய்யப்படவில்லையென்றால் அந்த ஆணையும் இறுதியானதாகும். அது எந்த ஒரு நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கப்படலாகாது.

**122. நிலைக் கட்டளைகளின் அல்லது இனாம்களின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்வதற்கு அல்லது திரும்பக் கைக்கொள்வதற்கு நில நிர்வாக ஆணையருக்குள்ள அதிகாரம்**

(1) (அ) அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு நில நிர்வாக ஆணையர், அறிவிக்கை வாயிலாக, 1817ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலைக் கட்டளைகள் மற்றும் அரசு உறுபொறுள்கள் ஒழுங்கு முறை விதிகளின் (தமிழ்நாடு ஒழுங்குமுறை சட்டம் vii/1817) வகை முறைகளின் படி, நில நிர்வாக, ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளைப் பொறுத்த வரையில், அறிநிலைக் கட்டளை எதனின் நிர்வாகத்தையும் கண்காணிப்பையும் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதன் இசைவுடன் வழங்கலாம். மற்றும் அதன் பேரில் நில நிர்வாக ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களுகம் கடமைகளும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் வழங்கப்பட்டதாக கருதப்படும் மற்றும் அத்தகைய அறநிலைக் கட்டளையை ஊராட்சி ஒன்றிய மன்றம் நிர்வகித்துக் கண்காணித்து வருதல் வேண்டும்.

(ஆ) நில நிர்வாக ஆணையர் கூறு (அ) ல் கூறப்பட்டபடி ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் மாற்றியளிக்கப்பட்டுள்ள அறநிலைக் கட்டளை எதனின் நிர்வாகத்தையும் கண்காணிப்பையும் அறிவிக்கை ஒன்றின் மூலமாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்யப்பட வேண்டுமென்று அரசிடமிருந்து ஆணை வந்திருப்பின் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் அவ்வாறு திரும்ப பெற்றுக் கொள்ளும் பொழுது அந்த அறநிலைக்கட்டளை சம்பந்தமான ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் முடிவுற்று போய்விடும்.

(2) அரசு தன்னால் அல்லது பிற அதிகார அமைப்பு எதனாலேனும் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்ட அறக்கட்டளை இனாம் ஒன்றை ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் அதன் இசைவுடன் வழங்கலாம். ஆனால் அத்தகைய இனாமிலிருந்து பெறுகிற நிகர வருமானமானது அத்தகைய ஊராட்சி ஒன்றியத்தின் நிதியை முற்றிலும் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தக் கூடுமோ அந்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படலாம். மற்றும் அவ்வாறு வழங்கியதை அரசு நீக்கிவிடவும் செய்யலாம்.

(3) ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் எதற்காகவும் கடைசியாக ஊராட்சி ஒன்றியம் அமைத்துருவாக்கப்படுவதற்கு முன்பு 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் கழகம் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் xiv/1920) மாவட்டக் கழகம் ஒன்றிடம் உரிமையிலிருந்து நிலைக் கட்டளை எதனின் நிர்வாகமும் கண்காணிப்பும், நிலை கட்டளை அமைத்திருக்கின்ற இடத்தின் மீது அதிகார வரம்பு செலுத்துகின்ற ஊராட்சி ஒன்றியத்திடம் வழங்கப்பட வேண்டும்.

**123. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவல்களைக் கூடுதலாக்க அரசிற்குள்ள அதிகாரம்**

இச்சட்டத்தின் கீழ் இயற்றப்படும் விதிகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதன் சம்மதத்துடன் எந்த நிலையத்தின் நிர்வாகத்தையும் அல்லது எந்த வேலையை நிறைவேற்றுவதற்காகவும் அல்லது பராமரிப்பதற்காகவும் ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைக்குள்ளோ அல்லது வெளியேயோ இந்தச் சட்டத்தில் வகை செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும் [1](அரசு, ஊரக வளர்ச்சி இயக்குநர், அல்லது பிற துறை தலைவர் எவரும் அல்லது மாவட்ட ஆட்சியர்) அல்லது எந்த ஒரு நபரும் அல்லது எந்தக் குழுவினரும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு மாற்றுதல் செய்யலாம்.

---

123 [1] இப்பிரிவில் (அரசு நில நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது வருவாய்க் கோட்ட அலுவலர்) எனும் சொற்றொடருக்கு பதிலாக ( )ல் கூறப்பட்டவாறு 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 14ன்படி சேர்க்கப்பட்டது.

## 124. நன்கொடைகளையும் அறப்பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்வதற்குள்ள அதிகார வரம்பு

ஒரு கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி தன் நிதியை செலவிடும் எந்த ஒரு காரியத்தின் முன்னேற்றத்திற்காகவும் அல்லது அறக்கட்டளையின் குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மட்டுமே நன்கொடை ஏற்றுக் கொள்ளலாம்.

## 125. பொது சாலைகளை கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைத்தல்

(G.O.Ms.No.108, R.D. dt.28.3.01)

(1) ஒரு கிராமத்திலுள்ள எல்லாப் பொது சாலைகளும் (அரசால் தேசீய நெடுஞ்சாலைகள் அல்லது மாநில நெடுஞ்சாலைகள் அல்லது மாவட்ட பெருஞ்சாலைகள் அல்லது ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்டவை தவிர்த்து) அவற்றில் உள்ள நடைமேடைகள், கற்கள் மற்றும் இதர தளவாடங்கள் அதன் பொருட்டு ஏற்படுத்தியுள்ள எல்லாக் கட்டுமானங்கள் தளவாடங்கள் மற்றும் இதர சாமான்களுடன் அந்த சாலைகளிலும் அவற்றின் பக்கத்திலும் அல்லது அடியில் உள்ள எல்லாப் புதை சாக்கடைகள், சாக்கடைகள், சாக்கடைக் கட்டுமானங்கள், குடைவுகள், மதகுகள் அவற்றைச் சார்ந்த எல்லாக் கட்டுமானங்கள் தளவாடங்கள் பொருள்களுடன் அவை கிராம ஊராட்சி செலவிலோ அல்லது வேறு வகையிலோ கட்டப்பட்டிருந்தாலும் கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டவையாகும்.

(2) அரசு அறிவிக்கை மூலம் அப்படிப்பட்ட பொதுச்சாலை புதை சாக்கடை, சாக்கடை கட்டுமானம், குடைவுகள் அல்லது மதகுகள் ஆகியவற்றை இந்தச் சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து விலக்கலாம், அல்லது அத்தகைய அறிவிக்கையை திருத்தலாம், அல்லது ரத்து செய்யலாம்.

## 126. ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் பொதுச் சாலைகளை ஒப்படைப்பது

(1) ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்று வகைப்படும் எல்லாப் பொதுச் சாலைகளும் அவற்றை சேர்ந்த எல்லா நடை மேடைகள், கற்கள் மற்றும் இதர தளவாடங்களின் பொருட்டு ஏற்படுத்தியுள்ள எல்லா கட்டுமானங்கள் தளவாடங்கள் மற்றும் இதர சாமான்களுடனும் அவைகள் ஊராட்சி ஒன்றியத்தின் செலவிலோ அல்லது வேறு வகையாகவோ செய்யப்பட்டிருந்தாலும் அத்தகைய சாலைகளிலும் அவற்றின் பக்கவாட்டிலோ அல்லது அடியிலுள்ள எல்லா புதை சாக்கடைக் கட்டுமானங்கள், குடைவுகள், மதகுகளுடன் அவற்றிற்குரிய எல்லா கட்டுமானங்கள், தளவாடங்கள் சாமான்களுடன் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டவையாகும்.

(2) அரசு அறிவிக்கையின் மூலம் எந்தப் பொதுச்சாலை புதை சாக்கடை, சாக்கடைக் கட்டுமானங்கள் குடைவுகள் அல்லது சிறு பாலங்களையும் இந்தச் சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து விலக்கலாம். அத்தகைய அறிவிக்கையை மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

## 127. இச்சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ள பொது சாலைகள் குறித்து கிராம ஊராட்சிக்குள்ள கடமை

பிரிவு 125 உட்பிரிவு (2)ன்படி அல்லது பிரிவு 126 உட்பிரிவு (2) படி பொது சாலை எதுவும் இந்தச் சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு அதன் பின்னர் நெடுஞ்சாலைகள் துறை என்று குறிப்பிடப்படுவதான நெடுஞ்சாலைகள் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பொழுது, கிராம ஊராட்சியானது

(அ) அத்தகைய சாலையின் வடிகால் அமைப்பின் நீர் வடிமானத்திற்கும் அதனைப் பேணுவதற்கும்

(ஆ) அத்தகைய சாலையின் ஓரத்தில் அல்லது அவற்றின் அடியில் உள்ள வடிகால்களுக்கு வழிவகை செய்வதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் மற்றும் பழுது பார்ப்பதற்கும்,

(இ) அத்தகைய சாலையுடன் அமைந்துள்ள நடைபாதைகளுக்கு வழிவகை செய்வதற்றும் அவற்றைப் பேணுவதற்கும் மற்றும் பழுது பார்ப்பதற்கும் வகை செய்யலாம். மற்றும் அவ்வாறு வகை செய்யப்பட வேண்டுமென்று அரசினால் கோரப்பட்டால் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

ஆனால், மேற்காணும் வகைமுறைகளை நிறைவேற்றும் பொழுது அத்தகைய சாலை எதிலும் நிலத்தை அல்லது பாதையினைத் தோண்டுவது அல்லது உடைப்பது கிராம ஊராட்சிக்குத் தேவையானதாக இருக்கிற பொழுது அக்கிராம ஊராட்சியானது, பொது அல்லது தனியான ஆசையின் வாயிலாக அரசு குறித்துரைக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறை அலுவலரின் முன் இசைவினைப் பெறுதல் வேண்டும்.

மற்றும் அவசரமான நேரங்களில் கிராம ஊராட்சி, அத்தகைய இசைவு இல்லாமல் அத்தகைய தெரு எதிலும் நிலத்தை அல்லது பாதையைத் தோண்டலாம். மற்றும் உடைக்கலாம். ஆனால் நடைமுறைக்குக் கூடிய அளவில் அத்தகைய நிலத்தை அல்லது பாதையை தோண்டப்படுவதற்கு அல்லது உடைக்கப்படுவதற்கு முன்பு எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலைக்கு திரும்ப அமைத்தல் வேண்டும். மற்றும் அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் அதற்கான காரணங்களையும் சேர்த்து, மேலே கண்ட வகைமுறைகளின்படி குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்தல் வேண்டும்.

எனினும் கட்டுமானப் பணி எதனையேனும் நிறைவேற்றுமாறு அரசால் கோரப்படுகிற பொழுது அரசு அதன் செலவுத் தொகைக்கு வழிவகை செய்தல் வேண்டும்.

**128. அபாயகரமான கட்டிட அமைப்புகள் குறித்த முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள்**

1. ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு பொதுச் சாலையை ஒட்டியிருக்கும் எந்தக் கட்டுக்கோப்பும் கேடான நிலைமையிலும் பக்கத்தில் நடப்பவர்களுக்கு அபாயம் விளைவிக்கக் கூடியதாகவும் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட ஆணையருக்கு அல்லது செயல் அதிகாரிக்கு தோன்றுமானால் அந்த ஆணையர் அல்லது செயல் அதிகார அறிவிப்பு மூலம் அதிலிருந்து ஏற்படும் அபாயத்தை தடுப்பதன் பொருட்டு அதன் உரிமையாளர் அல்லது அனுபோகதாரரை அந்தக் கட்டுக்கோப்புக்கு வேலி அமைக்க அதை அகற்ற, பாதுகாப்புச் செய்ய அல்லது பழுது பார்க்க வேண்டுமென்று கட்டளையிடலாம்.

(2) உடனடியாக நடவடிக்கை தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட ஆணையர் அல்லது செயல் அதிகாரி தாமே, அத்தகைய அறிவிப்பு கொடுப்பதற்கு முன்பாக அல்லது அத்தகைய அறிவிப்புக் காலம் முடிவடைவதற்கு முன்பாக அந்தக் கட்டுக்கோப்பை வேலியிட்டும், அகற்றியும், பாதுகாப்புச் செய்தும், பழுது பார்த்தும் அல்லது எந்தச் சாலையின் ஒரு பகுதிக்கும் வேலியிடவும் அல்லது அபாயத்தைத் தடுப்பதற்குத் தகுதியானதென்று தாம் கருதும் தற்காலிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்காகும் செலவுகளை இதன் பின் கூறப்படும் உரிமையாளர் அல்லது அனுபோகதாரரிடமிருந்து வசூலிக்கப்படலாம்.

**129. அபாயகரமான மரங்களைப் பற்றிய முன்னெச்சரிக்கைகள்**

1. ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொதுச் சாலையை ஒட்டியுள்ள நிலத்தின் மேல் நிற்கும் மரம் அல்லது மரக்கிளைகள் விழக்கூடியதாகவும் அதனால் அச்சாலையைப் பயன்படுத்தும் அபாயம் விளைவிக்கக் கூடும் என்று சம்பந்தப்பட்ட ஆணையர் அல்லது செயல் அதிகாரிக்குத் தோனறினால் அதன் மூலம் அவ்வித அபாயம் எதுவும் ஏற்படாமல் தடுப்பதன் பொருட்டு அந்த மரத்தின் சொந்தக்காரரை

அந்த மரத்தைப் பாதுகாப்புச் செய்யவும் கிளைகளை உடனடியாக நீக்கம் அல்லது வெட்டித் தள்ளவும் வேண்டுமென்ற அறிவிப்பு மூலம் கட்டளையிடலாம்.

(2) உடனடியாக நடவடிக்கை தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட ஆணையர் அல்லது செயல் அதிகாரி தாமே, அறிவிப்பு கொடுப்பதற்கு முன்பாக, குறிப்பிட்ட மரத்தைப் பாதுகாப்புச் செய்யவும் கிளைகளை நீக்கவும் வெட்டித் தள்ளவும் அல்லது பொதுச்சாலையின் ஒரு பகுதிக்கு வேலியிடவும் அல்லது அல்லது அபாயத்தைத் தடுக்க தமக்கு சரியென்று கருதும் நடவடிக்கைகளைத் தாமே எடுக்கலாம். அவ்வாறு செய்வதற்காகும் செலவு இதன்பின் கூறப்படும் முறையில் மரத்தின் சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படலாம்.

**130. கட்டிடங்கள் அல்லது நிலத்திற்கு வேலியிடுதல் மற்றும் புதர்ச்செடிகளையும் மரங்களையும் வெட்டி சரிசெய்தல்**

கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் ஒரு பொது சாலை ஒப்படைக்கப்பட்டிருக்கிற பொழுது ஆணையர் அல்லது செயல் அதிகாரி பொது அறிவிப்பு வாயிலாக அத்தகைய சாலையின் அருகிலுள்ள நிலம் அல்லது கட்டிடம் எதனின் சொந்தக்காரரையும் அல்லது வைத்திருப்பவரையும்.

(அ) ஆணையர் அல்லது செயல் அதிகாரி திருப்திக்கேற்ற வகையில் அதற்கு வேலியிடுமாறு; அல்லது

(ஆ) அத்தகைய சாலையின் ஓரத்தில் இருக்கும் புதர்ச் செடிகள் எவையும் ஆணையர் அல்லது செயல் அதிகாரி தீர்மானிக்கின்றவாறு அவற்றை அடுத்திருக்கும் வழிப்பாதைகளின் மட்டத்தின் உயரத்திற்கு மிகாமல் இருக்குமாறு அவற்றை ஒழுங்குபடுத்துமாறு அல்லது வெட்டுமாறு அல்லது

(இ) அத்தகைய சாலையின் மீது தொங்கிக் கொண்டிருக்கும் மற்றும் அதற்குச் தடங்கலாக இருக்கும் அல்லது போக்குவரத்துப் பார்வைக்குத் தடங்கலாக இருக்கும் அல்லது அதற்கு ஆபத்தினை விளைவிக்கும் புதர்செடிகள் அல்லது மரங்கள் எவற்றையும் வெட்டுமாறு மற்றும் ஒழுங்குபடுத்துமாறு அல்லது

(ஈ) சுற்றுச் சுவர் ஒன்றின் உயரம் மற்றும் அது அமைந்துள்ள நிலை ஆகியவற்றின் காரணமாக ஆபத்தினை விளைவிக்கும் வகையில் போக்குவரத்துப் பார்வைக்குத் தடங்கலாக இருக்கின்ற அதனின் உயரத்தைக் குறைக்குமாறு அல்லது அதற்கு வேலியிடுமாறு கோரலாம்.

**131. பொதுச் சாலைகளில் அல்லது அவற்றின் மீதான இடையூறுகளுக்குத் தடை விதித்தல்**

(1) இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளால் அனுமதிக்கப்பட்ட படியும் விதிகளின் மூலம் கொடுக்கப்பட்ட உரிமத்தில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறி எந்த நபரும்

(அ) [1](ஒரு கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அல்லது அதனை சார்ந்துள்ள அல்லது அதனால் முறைப்படுத்தப்படுகின்ற அல்லது அதனால் சொந்தமாக பராமரிக்கப்படுகின்ற பொது சாலை எதிலும் அல்லது சொத்து எதிலும் அல்லது அதன் மேலாக) சுவர் கட்டவும் அல்லது வேலி அல்லது வேறு இடைஞ்சல் அல்லது முள் தட்டிக்கட்டுதல் அல்லது அக்கிரமிப்பு ஆகியவைகளை தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ செய்யக் கூடாது. (ரூ. 50 to 1000/-)

---

131 (அ) 1 இந்த உட்பிரிவில் ஏதேனும் பொதுச் சாலையில் அல்லது அதன் மேலாக என்ற சொற்றொடருக்கு பதிலாக ( ) உள் சொற்றொடர் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 15ன்படி சேர்க்கப்பட்டது.

(ஆ) 2(ஒரு கிராம ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதனை சார்ந்துள்ள அல்லது அதனால் முறைப்படுத்தப்படுகின்ற அல்லது அதனால் சொந்தமாக பராமரிக்கப்படுகின்ற பொது சாலை எதிலும் அல்லது அதன் மேல்) துளையைச் செய்யவும் எந்தப் பொருளையும் விட்டு வைக்கவும் கூடாது. (ரூ.50to 500/-)

(இ) பொதுச் சாலையிலிருந்து இருபது மீட்டருக்குள் உள்ள எந்த இடத்திலிருந்தும் அல்லது கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான அல்லது ஒப்படைக்கப்பட்டுள்ள அந்த அசையா சொத்துக்களில் கல் சுரங்கம் அமைப்பதும் கற்கள், மண் அல்லது வேறு பொருள்களை அகற்றுவதும் கூடாது. எனினும், எந்த உபயோகமாவது நியாயமாக வேளாண்மை நடவடிக்கை சம்பந்தமாக செய்யப்படுவதாக ஆய்வாளர் கருதினால் அந்தப் பணிக்கு இக்கூற்றின் படி பாதிப்பு எதுவும் ஏற்படாது. (ரூ.50 to 500/-)

(ஈ) சாக்கடை அல்லது அதன் எந்த பகுதியின் மேல் கட்டுமானம் எதுவும் எழுப்பக் கூடடாது. (ரூ. 200 to 2000/-)

(உ) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு உரிமையான அல்லது ஒப்படைக்கப்பட்டிருக்கும் எந்தச் சாலை அல்லது நிலங்களில் மரங்கள் எதையும் நடக்கூடாது. (ரூ. 200 to 2000/-)

(ஊ) பிரிவு 134 அல்லது பிரிவு 135 கீழ் கிராம ஊராட்சியால் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளதும், ஒருவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாக அல்லது உரிமையுள்ளதாக கூறுவதை நிரூபிக்காமல் இருக்கிற போது எந்தப் புறம்போக்கு அல்லது நிலத்தின் மேல் அல்லது எந்த மரத்தையும் வீழ்த்தவோ அகற்றவோ, அழிக்கவோ அதிலிருந்து கிளைகள் அகற்றவோ பட்டைகளை உரிக்கவோ, இலைகள் அல்லது பழங்களை எடுக்கவோ கூடாது. (ரூ. 200 to 2000/-)

(2) கிராம ஊராட்சி அல்லது ஊராட்.சி ஒன்றிய மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களின் மேல் உள்ள ஆக்கிரமிப்புகளைக் குறித்து தொடர்புடைய செயல் அதிகாரி அல்லது ஆணையருக்கும் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் அறிக்கை செய்வது கிராம நிர்வாக அலுவலரின் கடமையாகும். அரசு பொது அல்லது தனி ஆணையின் மூலம் தெரிவிக்கும் காலவரையறைக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை 1(இச்சட்டத்தின்படி தாமாகவோ அல்லது இது குறித்து கிராம நிர்வாக

அலுவலரிடமிருந்து (Village Administrative Officer) அறிக்கையை பெற்றோ, நடவடிக்கை தொடர்வது சம்பந்தப்பட்ட செயல் அதிகாரி அல்லது ஆணையரின் கடமையாகும்) அத்தகைய ஆணையில் குறிப்பிடும் காலத்திற்குள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாவிடில், வருவாய்த் துறை அலுவலர்கள் 1905 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் III/1905) நடவடிக்கைகள் எடுத்து அவற்றை அகற்றியாக வேண்டும்.

---

131 (ஆ)2 (இக்கூறில் முதலில் எந்த பொது சாலையிலிருந்து அல்லது அதன் மேல் என்ற சொற்றொடர் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999) பிரிவு 15ன்படி ( ) ல் கூறப்பட்டுள்ளவாறு சேர்க்கப்பட்டது.

**131A –சில விளம்பர பலகைகள் நிறுவுவதற்கு தடை**

இந்தச் சட்த்திலோ அல்லது அமுலில் இருக்கும் பிற சட்டத்திலோ என்ன குறிப்பிட்டிருந்தாலும்

a(i) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம்) சட்டம் 2000 (இதன் பின்னா் இந்தப் பிரிவில் திருத்தச் சட்டம் என்று குறிப்பிடப்படுவது) அமுலுக்கு வந்த பின் யாதொரு நபரும் விளம்பரப் பலகையை (போக்குவரத்துக் குறியீடு அல்லது சாலைக் குறியீடு தவிர) சாலையில் தெரியும்படியாகவும் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும் ஊறு விளைவிப்பதாகவும் அல்லது பாதுகாப்பான பயணத்திற்கு இடைஞ்சலாக இருக்குமாறு நிறுவுதல் கூடாது. உட்கூறு (1)ல் கூறியதற்கு மாறாக நிறுவப்பட்ட விளம்பரப்பலகை எதனையும் செயல் அதிகாரி முன்னறிவிப்பின்றி பறிமுதல் செய்து அகற்றலாம்.

b(i) எந்த ஒரு விளம்பரப் பலகையும் (போக்குவரத்துக் குறியீடு அல்லது சாலைக் குறியீடு தவிர) போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பதாகவும், இடைஞ்சலாகவும் அல்லது சீரான போக்குவரத்திற்கு இடையூறாகவும் இந்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு இருந்தால் செயல் அதிகாரி அதனை எழுத்து மூலமான அறிவிப்பு ஒன்றைக் கொடுத்து அதன் சொந்தக்காரரை அல்லது யாருடைய பொறுப்பில் அது இருக்கிறதோ அவரை அந்த விளம்பரப் பலகையை அறிவிப்பில் கொடுத்திருக்கும் காலத்திற்குள் அகற்றுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

ஆனால் இதற்காக கொடுக்கும் கால அவகாசம் அறிவிப்பு கொடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 15 நாட்களுக்கு மேற்படக் கூடாது.

(ii) உட்கூறு (i) ல் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரப் பலகை குறிப்பிட்ட காலத்திற்குள் அடகற்றப்படாவிட்டால், செயல் அதிகாரி மேலும் எந்த அறிவிப்பும் இல்லாமல் அந்த விளம்பரப் பலகையை அகற்றுவதுடன் அதற்கான செலவினத்தையும் நிலவரி நிலுவை போல் வசூல் செய்யலாம்.

**விளக்கம்** இந்த சட்டபிரிவில் விளம்பரப் பலகை என்பது எந்தவொரு இடத்திலும் பொது மக்கள் அல்லது தனிநபா் பாா்ப்பதற்காக வைக்கப்படும் தட்டி, சட்டம் அல்லது கட்டிடத்திலோ நிலத்திலோ சுவரிலோ பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வெளியில் தெரியும்படி நிறுவப்படும் எந்த ஒரு கட்டமைப்பையும் குறிக்கும்.
(திருத்தச் சட்டம் 27/2000).

**132. கிராமத்தின் பொதுச் சொத்து அல்லது வருமானத்தை கிராம ஊராட்சிக்குச் சேர்த்தல்**

கிராம குடிமக்களின் பொது நன்மைக்காக நிா்வகிக்கப்படும் அல்லது பழக்க வழக்கப்படி அவா்கள் உடமையாக கருதப்படும் மீன் பிடிக்கும் உரிமை உள்பட, சொத்து அல்லது வருமானம் அல்லது நிலத்தைப் பொதுவாக அனுபவிப்பருடைய உரிமை வருமானம் அல்லது குறிப்பிட்ட நிலத்தை அனுபவிப்பவருடைய உரிமை வருமானம் அல்லது ஒரு குறிப்பிட்ட நீா்பாசன ஆதாரத்தில் உள்ள நிலத்தை அனுபவிப்பவா்களுடைய உரிமை வருமானம் ஆகியவைகள் கிராம ஊராட்சிக்கு சேர வேண்டும் என அரசு அறிவிக்கை வெளியிட்டால் இவற்றை கிராம ஊராட்சி அதன் மக்களுக்கு அல்லது சொந்தக்காரா்களுக்கு நன்மை பயக்கும்படி நிா்வகித்து வர வேண்டும்.

**133. நீா் பாசனப் பணிகளை பராமரித்தல் குடிமராமத்தை நிறைவேற்றுதல் முதலியன**

**(1)** அரசு நிா்ணயிக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு கிராம ஊராட்சிக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கோ நீா்ப் பாசன அமைப்பைப் பாதுகாத்தல், நீா்பாசன முறைகளை மேலாண்மை செய்தல் அல்லது ஒரு நீா்ப்பாசன அமைப்பைச் சோ்ந்த நிலங்களுக்கு நீா் பகிா்ந்தளிப்பு செய்தலை ஒழுங்குப்படுத்துதல் முதலிய அலுவல்களை மாற்றலாம்.

(2) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் நிர்ணயிக்கப்படக்கூடிய கட்டுபாடுகளுக்கு உட்பட்டு, கிராமத்திலுள்ள ஒரு நீர்பாசன ஆதாரத்தை குடிமராமத்துச் செய்யவும் அல்லது அதற்காக குடிமராமத்து வரி விதிக்கவும் அதிகாரம் பெற்றது.

ஆனால் இந்த உட்பிரிவிலுள்ள எதுவும் நீர்ப் பாசன ஆதாரத்திற்கு கிராம ஊராட்சி குடிமராமத்து செய்யத் தவறிய காலத்தில் 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய உழைப்புச் சட்டம் (மத்திய சட்டம் 1/1858) கிராம சமுதாயத்தையும் அதன் எந்த உறுப்பினரையும் அதன் பொறுப்பிலிருந்தோ அவரது பொறுப்பிலிருந்தோ விடுவிக்காது.

(3) இந்தப் பிரிவின்படி நீர்ப்பாசன அமைப்பின் பராமரிப்பு மாற்றப்படும் போது அவ்வமைப்பிலுள்ள அரசின் மீன் பிடிக்கும் உரிமையும் மாற்றப்பட்டு நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் கட்டுப்பாடுகளுக்கு (இந்த வருமானத்தை உபயோகிக்க உண்டான நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் உட்பட) உட்பட்டு கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தை சேரும்.

**134. இரயத்துவாரி நிலப் பரப்புகளிலுள்ள குறித்த சில புறம்போக்குகளைப் பயன்படுத்துவதை கிராம ஊராட்சி ஒழுங்குப்படுத்துதல்**

(1) இப்பிரிவின் விதிகள் இரயத்துவாரி நிலப் பரப்புகளுக்கு மட்டுமே பொருந்தும்.

(2) பின்வரும் புறம்போக்குகள் முறையே மேய்ச்சல் நிலங்கள், கதிரடிக்கும் களங்கள், சுடுகாடுகள் அல்லது இடுகாடுகள், கால்நடைத் தொழுவங்கள் வண்டி பேட்டைகள், தோப்புகள் கிராம ஊராட்.சியை சேரும். நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும், உட்பட்டு மேற்சொன்ன புறம்போக்குகளின் உபயோகம் அரசிற்கு உட்பட்டவையென்றால் அதனை ஒழுங்கு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிக்கு உண்டு.

(3) மாவட்ட ஆட்சியர் கிராம ஊராட்சியுடன் கலந்து அறிவிக்கை மூலமாக உட்பிரிவு (2)ல் கூறப்பட்டிருக்கும் ஒரு புறம்போக்கை, இந்தச் சட்டத்தின் அமலிலிருந்து நீக்கி வைக்கலாம். மாவட்ட ஆட்சியர் இந்த அறிவிக்கையை மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(4) நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அரசின் பொறுப்பில் உள்ள வேறு எந்த ஒரு புறம்போக்கின் உபயோகத்தையும் ஒழுங்கு செய்ய அரசு ஆணையின் மூலம் கிராம ஊராட்சிக்கு அனுமதி அளித்திருந்தால் கிராம ஊராட்சிக்கு அந்த அதிகாரம் வந்து சேரும்.

(5) நிர்ணயிக்கப்படக்கூடிய கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு கிராம ஊராட்சி உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (4)ன் கீழ் உபயோகத்தை ஒழுங்குப்படுத்தும் உரிமையுள்ள புறம்போக்கில் மரங்கள் நடலாம்.

**135. 1908ஆம் ஆண்டு தமிழ்நாடு எஸ்டேட்டுகள் நிலச் சட்டத்தின் அளுகைக்குட்பட்ட பண்ணை தோட்டத்திலுள்ள சில பொது நிலங்களின் உபயோகத்தை கிராம ஊராட்சி ஒழுங்குப்படுத்துதல்**

(1) 1908 ஆம் ஆண்டு தமிழ்நாடு எஸ்டேட்டுகள் நிலச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 1/1908) உட்பட்ட எஸ்டேட் நிலையங்களில் அச்சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் குறிப்பிடப்படும், கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு கிராம ஊராட்சி பின்வரும் அதிகாரங்களை செலுத்தலாம்.

(அ) அந்த சட்டத்தின் பிரிவு 3 உட்பிரிவு (16) கூறு (பி)ல் சொல்லப்பட்டிருக்கும் நோக்கங்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களின் உபயோகத்தை முறைப்படுத்துதல் அந்நிலங்களாவன கதிரடிக்கும் களம், கால்நடைத் தொழுவம் ஊர் நத்தம் மற்றும் கிராம மக்களின் பொது உபயோகத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கும் அந்த கிராமத்திற்குள் இருக்கும் நிலங்கள்

(ஆ) அச்சட்டத்தின் உட்பிரிவு (20ஏ)ல் சொல்லப்பட்டிருக்கும் மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்களை பயன்படுத்துதல் அதாவது கூறு (அ)ல் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலம் முதலில் எதற்காக வழங்கப்பட்டதோ அதற்குத் தேவைப்படாமல் இருக்கும் சமயத்தில் வேறு வகையில் உபயோகம் செய்ய மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்றிருந்தால் கிராம ஊராட்சி உபயோகித்து கொள்ளலாம்; மற்றும்

(இ) கூறு (அ)ல் கூறப்பட்டுள்ளபடி நிலங்களின் உபயோகத்தை ஒழுங்குசெய்ய உரிமை பெறும் கிராம ஊராட்சிகள் அந்நிலங்களில் மரம் நடலாம்.

ஆனால் கூறு (ஆ)ல் சொல்லப்பட்டிருப்பதை எவையும், மேலே கூறப்பட்டுள்ள பிரிவு 20ஏ உட்பிரிவு (1)ல் உள்ள விதிகளைப் பாதிப்பதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

(2) ஒரு எஸ்டேட்டை நிலம் 1908ஆம் ஆண்டு தமிழ்நாடு எஸ்டேட் நிலச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1908) ஆளுகையில் இருந்து விடுபடும் போது, விதிகளால் நிர்ணயிக்கப்படக்கூடிய அளவுக்கும் மாற்றங்களுக்கும் உட்பட்ட அந்த உட்பிரிவில் சொல்லப்பட்ட நிலங்களுக்கும் பொருந்தும்.

**136. சேகரிக்கப்பட்ட கழிவு முதலியன கிராம ஊராட்சியைச் சேர்ந்தது**

கிராம ஊராட்சியால் திரட்டப்பட்ட அனைத்து குப்பை, கூளம் கழிவுகள் மற்றும் வேறு பொருள்களும் இச்சட்டத்தின்படி கிராம ஊராட்சியையே சேரும்.

**137. கிராம ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றயங்களுக்கும் தேவைப்படும் அசையாச் சொத்துக்களை 1894ஆம் ஆண்டு நிலம்கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்துதல்**

இச்சட்டத்தினால் அல்லது இதன் படி இயற்றப்படும விதிகளினால், நிலத்தை கையகப்படுத்த கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அதை 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டம் (மத்தியச் சட்டம் 1/1894) விதிகளின்படி கையகப்படுத்தலாம். அச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஈட்டுத் தொகையும். கையகப்படுத்தியதற்கான செலவுகளும் கொடுத்த பிறகு அந்தச் சொத்து கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி மன்றத்திற்கு சொந்தமாகும்.

**138. ழிபாட்டு தலங்களை நிர்வகிப்பவர்களிடமிருந்து பங்களிப்புகள் பெறுதல்**

ஆண்டு முழுவதும் அல்லது குறிப்பிட்ட காலங்களில் அதிகமான மக்கள் கூடும் மசூதி, கோவில், மடம் அல்லது சமய வழிபாட்டு இடம் அல்லது சொற்பொழிவு விழா அல்லது கண்காட்சி அல்லது பிற வேறு காரியங்களுக்கு உடயோகப்படும் இடங்கள் கிராம ஊராட்சியின் எல்லைக்குள் இருந்தால் கிராம ஊராட்சி, பொது மக்கள் உடல் நலம் பாதுகாப்பு அல்லது வசதிக்கு நிரந்தரமான அல்லது தற்காலிகமான கட்டமைப்பு வசதிகள் தேவைப்பட்டால், அதற்கு ஆவண செய்ய வேண்டும். அரசு மேற்சொன்ன இடங்களை பராமரிப்பவர் அல்லது பொறுப்பாளருடன் கலந்தாலோசித்து கிராம ஊராட்சி நிதிக்கு அரசு நிர்ணயிக்கும் ஒரு தொகையை தொடரும் உதவித் தொகையை (recurring) அல்லது அவ்வப்போதோ செலுத்தும் உதவித் தொகையாகவோ (non-recurring) செலுத்துமாறு கேட்டுக் கொள்ளலாம்.

**139. கேளிக்கைகளுக்கான இடங்களை மூட உத்தரவிடும் அதிகாரம்**

ஒரு கிராமத்தில் அல்லது ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் அபாயகரமான நோய் பரவியிருக்கும் காலத்தில் ஆணையர் அறிவிப்பு மூலமாக கேளிக்கை நோக்கத்திற்காக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும் கட்டிடம் கொட்டகை, கூடாரம் ஆகியவற்றை குறிப்பிடும்

கால அளவிற்கு மூடிவிடும்படி அவற்றின் சொந்தக்காரா் அல்லது உபயோகப்படுத்திக் கொண்டிருப்பவருக்கு உத்தரவிடலாம்.

### 140. அபாயகரமான நோயால் பாதிக்கப்பட்ட சிறுவா்களை பள்ளிக்குச் செல்ல தடைவிதித்தல்

அபாயகரமான நோயால் பாதிக்கப்பட்ட அல்லது பாதித்து கொண்டிருக்கும் அல்லது அப்படிப்பட்ட நோயை பரப்பக்கூடிய முதிராவயதினரது (18 வயதுக்கு கீழ உள்ளவா்) அல்லது பொறுப்பாளரை ஆணையா் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலா் அத்தகைய முதிரா வயதினா் பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ அனுப்பக் கூடாது என்று தடை விதிக்கலாம். அவ்வாறு அறிவிப்பு பெற்ற பிறகு ஆணையா் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலா் அல்லது பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழில் புரிவோரிடமிருந்து அந்த முதிரா வயதினா் அவ்வியாதி மற்றவருக்குப் பரவக்கூடிய ஆபத்தில்லை என்று சான்று பெற்றாலொழிய அத்தகைய முதிராவயதினரை பள்ளிக்கு அல்லது கல்லூரிக்கு அனுப்பக் கூடாது.

**<u>விளக்கம்</u>** இந்த பிரிவிலும், பிரிவு 139லும் அபாகரமான நோய் என்பது அரசினால் அபாயகரடமான நோய் என்று அறிவிப்புச் செய்யப்பட்டிருப்பவையும் 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுமக்கள் நல்வாழ்வுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 111/1939) பிரிவு 52ல் கூறப்பட்டிருக்கும் தொற்றிக் கொள்ளும் நோய் என்று பொருள்படும்.

### 141. கட்டாய அம்மை குத்துதல்

ஊராட்சி ஒன்றியப்பகுதி முழுவதிலும் அம்மை ஊசி போடுவதை ஊராட்சி ஒன்றிய மன்றம் அமுல் படுத்த வேண்டும். ஊராட்சி ஒன்றியப்பகுதி முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியில் நிா்ணயிக்கப்படும் முறையிலும் அளவுக்கும் மக்களுக்கு மறு அம்மை ஊசி போடுவதை ஊராட்சி ஒன்றிய மன்றம் அமுல் படுத்தலாம்.

### 142. பெரியம்மை, காலரா நோய்களைப் பற்றி செய்திகளை தெரிவிக்கும் கடமை

ஒரு குடியிருப்பு இடத்தில் இருக்கும் ஒருவா் பெரியம்மை அல்லது காலரா நோயால் அவதிப்படும் போது அந்தக் குடும்பத்தின் தலைவா் அல்லது அவா் இல்லையெனில் அனுபோகத்திருப்போா் அல்லது அந்த இடத்தின் பொறுப்பாளா் ஆணையா் அல்லது கிராம நிா்வாக அலுவலருக்கு வெகுவிரைவில் அச்செய்தியை தெரிவிக்க வேண்டும். (தண்டனை தொகை ரூ.50-)

### 143. அபாயகரமான குளங்கள் கிணறுகள், குழிகள் முதலியவற்றை பொறுத்த அளவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

**(1)** ஆணையா் அல்லது செயல் அதிகாரி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சியின் அனுமதியுடன் சரியாகப் பழுது பாா்க்காமல் அல்லது பராமரிக்கப்படாததால் அல்லது பாதுகாப்பில்லாமல் அல்லது சுற்றுச்சுவா் இல்லாமல் ஒரு குளம், குட்டை, கிணறு, சந்து பொந்து ஓடை, அணைகரை, மற்றும் வேறு இடங்கள் பொது மக்களின் உடல்நலம் அல்லது பாதுகாப்பிற்கு அபாயகரமாக இருக்கிறதென்று தெரிந்தால், அறிவிப்பின் மூலமாக அவற்றால் ஆபத்து எதுவும் ஏற்படாதபடி அதன் சொந்தக்காரரை அவைகளை மூடவோ அல்லது அகற்றவோ அல்லது பழுது பாா்க்கவோ, காப்பாற்றவோ அல்லது வேலியிடவோ செய்யுமாறு ஆணையிடலாம். (தண்டனை தொகை ரூ.50-)

(2) உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று தெரிந்தால் அவா் அறிவிப்புக் கொடுப்பதற்கு முன்னா் அல்லது கொடுத்த அறிவிப்பு காலாவதியாவதற்கு முன்னா் அந்த அபாயத்தைத் தவிா்க்க அவருக்குச் சரியெனப்படுகிற அளவுக்குத் தற்காலிக நடவடிக்கை எடுக்கலாம். அப்படி செய்வதற்கான செலவைச் சொந்தக்காரா்களிடமிருந்து இதன்பின் கூறப்படும் முறையில் வசூல் செய்யலாம்.

### 144. நிலங்கள் மற்றும் கட்டிடங்களிலிருந்து குப்பை கூளங்கள், நச்சுச் செடிகளை அகற்றுதல்

(1) ஆணையா் அல்லது செயல் அதிகாரி குப்பை கூளம் படிந்த அல்லது அருவருக்கத்தக்க நிலையிலுள்ள அல்லது அடா்ந்த நச்சுச் செடிகள் அல்லது மரங்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய அல்லது பொது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்க கூடிய அல்லது அருகில் உள்ளவா்களுக்கு கேடுவிளைவிக்கத்தக்க அல்லது வேறு தொல்லை தரக் கூடிய நிலையில் உள்ள ஒரு கட்டிடம் அல்லது நிலம் உள்ளது என்று, தமக்குத் தோன்றினால், அறிவிப்பின் மூலமாக, கட்டிடங்களின் அல்லது நிலங்களின் சொந்தக்காரா் அல்லது அனுபோகத்திலிருப்போரை அவற்றை அப்புறப்படுத்தும்படி அல்லது சுத்தப்படுத்தும்படி அல்லது வேறு விதத்தில் அந்தக் கட்டிடத்தை அல்லது நிலத்தை சரியாக வைத்துக் கொள்ளும்படி அல்லது அப்படிப்பட்ட செடி, புதா்கள், மரங்கள் முதலியவற்றை அகற்றவோ அல்லது நீக்கவோ எத்தகைய நடவடிக்கை தேவையென்று ஆணையா் அல்லது செயல் அதிகாரி கருதுகின்றாரோ, அதை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முறைப்படியும் கால அளவுக்குள்ளும் செய்து முடிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

(2) அப்படிச் செய்வது சுகாதாரத்திற்கு அவசியம் என்று ஆணையா் அல்லது செயல் அதிகாரிக்குத் தோன்றினால், அறிவிப்பின் மூலமாக ஒரு நிலத்தின் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரா் அல்லது அனுபோகத்திலிருப்பவரை அறிவிப்பிலுள்ள முறைப்படியும் கால அளவுக்குள்ளும் சுத்தம் செய்யும்படி அல்லது வெள்ளை அடிக்கும்படி கேட்டுக்கொள்ளலாம்.

### 145. அபாயகரமான கட்டுமானங்கள் அகற்றியதில் கிடைத்த பொருள்களை உபயோகிக்க அல்லது விற்க ஆணையா் அல்லது செயல் அதிகாரிக்கு உள்ள அதிகாரம்

(1) இந்த அத்தியாயத்தில் தமக்குள்ள அதிகாரத்தினால் ஆணையா் அல்லது செல் அதிகாரி ஒரு அமைப்பை அல்லது அதன் ஒரு பகுதியை எடுக்கும் போது அல்லது மரம் வேலி அல்லது புதா் அல்லது அதன் ஒரு பகுதியை வெட்டியெறியும் போது, ஆணையா் அல்லது செயல் அதிகாரி, அப்படி எடுக்கப்பட்ட பொருள்கள் அல்லது சாமான்கள் அல்லது அப்படி வெட்டப்பட்டவைகளை அல்லது அகற்றப்பட்டவைகளை விற்றுவிடலாம். அப்படி விற்கப்பட்டதின் மூலம் கிடைத்த தொகையை அதற்கான செலவுகளுக்காக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

(2) நியாயமான விசாரணைக்குப் பிறகு ஆணையா் அல்லது செயல் அதிகாரி இந்த அத்தியாயத்தின் கீழ் அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டிய சொந்தக்காரரோ அனுபோகத்தாரோ இல்லையென்று தோன்றினால் அவா் தமக்கு சரியென்று தோன்றுகின்ற ஆணையைப் பிறப்பித்து நடவடிக்கை எடுக்கலாம். மேலும் அது போன்ற அந்நடவடிக்கைக்காகும் செலவை அந்தச் சொத்தை (அசையாச் சொத்தாக இல்லாமலிருந்தால்) அல்லது அதன் ஒரு பகுதியை விற்று வசூல் செய்யலாம்.

### 146. ஈட்டு தொகைக்கான வறையரை

ஒரு கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அதிகாரிகள் இந்த அத்தியாயத்தில் தங்களுக்குள்ள அதிகாரத்தின்படி எடுக்கும் நடவடிக்கையால் ஏற்படும் இழப்புகளுக்கு ஈட்டுத் தொகை பெறத் தெளிவாக வேறு விதமாக கொடுக்கப்பட்டிருந்தாலொழிய யாரும் இவ்வகையில் உரிமையுடையவரல்லா்.

### 147. பொதுச் சந்தைகள்

(G.O.Ms.No.3, RD dt.4.1.2001)

(1) ஊராட்சி ஒன்றிய மன்ற ஆய்வாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியைப் பெற்றதன் பின்னா் பொதுச் சந்தைகளாகப் பயன்படுத்திக் கொள்வதற்கென இடங்களை ஏற்பாடு செய்யலாம். மற்றும் ஆய்வாளரின் ஒப்புதலுடன் அத்தகைய சந்தை அல்லது அதன் பகுதி எதனையும் மூடிவிடலாம்.

(2) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் ஆய்வாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியைப் பெற்ற பின்னர், நிர்ணயிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டு பொதுச் சந்தை எதிலிருந்தும் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்டணங்களை ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சி விதிக்கு அனுமதிக்கப்பட்ட உயர்ந்த அளவு கட்டணம் ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அதற்கு மிகாமல் பொருத்தமென கருதுகிற அளவு விதித்து வசூலிக்கலாம்.

(அ) அத்தகைய சந்தையைப் பயன்படுத்துவதற்கான அல்லது அதில் விற்பனைக்காகச் சரக்குகளை வைத்திருக்கும் உரிமைக்கான கட்டணம்,

(ஆ) அத்தகைய சந்தையை, கடைகளை, அங்காடிகளை, பட்டிகளை அல்லது நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள்

(இ) 1988ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டத்தில் (மத்திய சட்டம் 59/1988) வரையறுக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கலாக ஊர்திகளுக்கான அல்லது கால் நடை மூலம் கொண்டு வருவதற்கான அல்லது அத்தகைய சந்தைக்கு விற்பனைக்காக சரக்குகள் எவற்றையும் எடுத்து வருகின்ற நபர்கள் மீதான கட்டணங்கள்,

(ஈ) அத்தகைய சந்தைக்குள் விற்கப்படுவதற்காக கொண்டு வரப்படும் அல்லது அதில் விற்பனை செய்யப்படும் கால்நடைகளின் மீதான கட்டணங்கள்

(உ) அத்தகைய சந்தையில் தொழில் நடத்துகின்ற தரகர்கள், தரகு முகவர்கள் எடை போடுபவர்கள் மற்றும் பண்டம் அளப்பவர்கள் மீதான உரிமக் கட்டணங்கள்

**148. தனியார் சந்தைகளுக்கு உரிமம் அளித்தல்**
(G.O.Ms.No.3, RD dt.4.1.2001)

(1) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திலிருந்து புதிய தனியார் சந்தையை புதியதாக நடத்துவதற்கான அல்லது தனியார் சந்தையை தொடர்ந்து நடத்தி வருவதற்கான உரிமத்தைப் பெறாமல் யாரும் நடத்தக் கூடாது அத்தகைய உரிமம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(2) (அ) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் வரையறுக்கப்படும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு உரிமம் கோரப்படும் சந்தையின் மேற்பார்வை மற்றும் ஆய்வு, துப்புரவு பயன்படுத்தப்பட வேண்டிய எடையும் அளவும் மற்றும் விதிக்கப்பட வேண்டிய வாடகைகளும், கட்டணங்களும் மற்றும் நிர்ணயிக்கப்படும் பிற கட்டுபாடுகளை கடைபிடிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்து உரிமம் வழங்கும்.

(ஆ) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் குறிப்பிட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருமென மாற்றி அமைக்கலாம்.

(இ) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் கூறு (அ)படி வழங்கப்பட்ட உரிமம் எதனையும் அதன் நிபந்தனைகளை மீறியதற்காக எந்த நேரத்திலும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம், அல்லது நீக்கம் செய்யலாம்.

(ஈ) கூறு (அ) அல்லது (ஆ) அல்லது (இ) எனும் கூறுகளின்படி கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணையினால் பாதிக்கப்பட்ட எவரும் அத்தகைய ஆணைக்கு எதிராக ஆய்வாளரிடம் மேல்முறையீடு செய்யலாம் அவர் பொருத்தமெனக் கருதினால் மேல்முறையீட்டின் மீது முடிவு சொல்லப்படுகின்ற வரையிலும் மேற்படி ஆணையின் நிறைவேற்றத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

(3) (அ) 1884ஆம் ஆண்டு சென்னை உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் v/1884) நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நிறுவப்பட்ட ஒரு தனியார் சந்தையில் பிரிவு 147, உட்பிரிவு 2ன்படி கட்டணங்கள் விதிப்பதற்கு உரிமைகோருபவர் அதற்கென சான்றிதழைப் பெறுவதற்காக ஆய்வாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும். மற்றும் ஆய்வாளர் கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு உரிய அறிவிப்பு கொடுத்து அவர்களால் செய்யப்படும் முறையீடுகளை பரிசீலனை செய்த பின்னர் விண்ணப்பத்தின் மீது ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

(ஆ) கூறு (அ)ன்படி ஆய்வாளரால் சான்றிதழ் வழங்குவதற்கு மறுக்கப்படுமாயின் பாதிக்கப்பட்ட நபர் அத்தகைய தகவலை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியில் இருந்து ஆறு மாதத்திற்குள் உரிமை கோரப்படும் உரிமை வழக்கினைத் தொடுக்கலாம். அவ்வழக்கின் முடிவு வேறு விதமாக இருந்தாலொழிய ஆய்வாளரின் ஆணையே இறுதியானதாகும்.

(4) பிரிவு (2)ல் வழங்கப்பட்ட உரிமத்தில் கட்டணம் விதிப்பதற்கு அனுமதிக்காத போது கட்டணத் தொகைகள் இல்லாமல் வழங்கப்பட வேண்டும். ஆனால் அத்தகைய அனுமதி கொடுக்கப்படுகிற போது அத்தகைய உரிமத்திற்காக கிராம ஊராட்சியால் ஒன்றிய மன்றத்தால் அந்தச் சந்தையிலிருந்து முந்தைய ஆண்டில் அதன் சொந்தக்காரர் பெற்றுள்ள மொத்த வருமானத்தில் பதினைந்து சதவிகிதத்திற்கு மேற்படாத ஒரு கட்டணத் தொகையை நிர்ணயித்து வசூலிக்க வேண்டும்.

(5) உரிமம் பெறப்படாமலோ அல்லது உரிமம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டாலோ அல்லது நீக்கம் செய்யப்பட்டாலோ அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக நடத்தப்படுகிற அல்லது திறந்து வைக்கப்டுகின்ற தனியார் சந்தையை கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது அதனால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி எவரும் மூடி விடலாம்.

**149. சந்தைகள் குறித்த பூசல்களை முடிவு செய்தல்**

ஒரு இடம் சந்தை இடமாக இருக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து வினா எழுமாயின் கிராம ஊராட்சி அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப ஊராட்சி ஒன்றிய மன்றம் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அரசின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

**150. உரிமம் பெறாத தனியார் சந்தைகளில் விற்பனையைத் தடை செய்தல்**
(தண்டனை தொகை ரூ.20-, சமரசம் ரூ.200-)

நபர் எவரும் விலங்கு அல்லது பொருள் எதனையும்

(அ) செயல்அதிகாரியின் அல்லது ஆணையரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரின் அனுமதி இன்றி பொது இடம் அல்லது உரிமம் பெற்ற சந்தை எதிலும் அல்லது,

(ஆ) உரிமம் பெறாத தனியார் சந்தை எதிலும், விற்பதோ விற்பதற்கு வைத்திருப்பதோ கூடாது.

**151. பொதுச் சாலைகளில் விற்பனை செய்வதற்கு தடை**

கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுடன் செயல் அதிகாரி அல்லது ஆணையர் பொதுச்சாலை அல்லது பொது இடம் அல்லது அதன் பகுதி எதிலும் அல்லது அதன் மீது விலங்கு அல்லது பொருள் எதனையும் விற்பனை அல்லது விற்பதற்காக வைத்திருப்பதைப் பொது அறிவிப்பு அல்லது உரிமத்தின் வாயிலாக தடை செய்யலாம் அல்லது ஒழுங்கு முறைப்படுத்தலாம்.

**152. சந்தைகளை வகைப்படுத்துதல்**

ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒன்றில் அமைந்துள்ள பொது மற்றும் தனியார் சந்தைகளை ஊராட்சி ஒன்றிய சந்தைகள் என்றும் கிராம ஊராட்சி சந்தைகள் என்றும் வகைப்படுத்தவதற்கு அரசிற்கு அதிகாரம் உண்டு. மற்றும் அவற்றிலிருந்து பெறும் வருமானத்தை ஊராட்சி ஒன்றியத்திற்கும் கிராம ஊராட்சிக்கும் இடையே பகிர்ந்தளிப்பதற்கும் அல்லது கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்க வேண்டி பங்களிப்பை நிர்ணயம் செய்வதற்கும் அதிகாரம் பெற்றிருக்கும்.

இந்த பிரிவின்படி வழங்கப்பட்ட ஆணையின்படி பெறப்படும் வருமானத்தின் பகிர்ந்தளிப்பை அல்லது வழங்க வேண்டிய பங்களிப்பைத் திருத்துவதற்கு மாவட்ட ஊராட்சியினால் திருத்தம் செய்வதற்கு பரிந்துரை செய்யப்படுமாயின் அரசு அதனை பரிசீலனை செய்ய வேண்டும்.

**153. தனியார் சந்தைகளை வைத்திருப்பவர்களின் உரிமையினைக் கையகப்படுத்துதல்**

ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரப் பகுதி எதிலும் தனியார் சந்தை வைத்திருப்பவர்களின் உரிமைகளை கையகப்படுத்தலாம் மற்றும் அதில் கட்டணம் விதிக்கலாம். அப்படி கையகப்படுத்துவது 1894ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின்படி (மத்திய சட்டம் 1/1894) செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய உரிமைகள் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நிலமாகக் கருதப்பட வேண்டும்.

(2) அத்தகைய சொத்து மற்றும் கையகப்படுத்துகையில் ஏற்பட்ட பிற செலவினங்கள் குறித்து இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட இழப்பீடு ஊராட்சி ஒன்றிய மன்றத்தினால் வழங்கப்படுவதினால் ஒரு தனியார் சந்தையை நடத்துவதற்கும் அதில் கட்டணங்கள் வசூலிப்பதற்கும் முன் அத்தகைய நபருக்கிருந்த அனைத்து உரிமைகளும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் இருத்தல் வேண்டும்.

**154. பொது இறங்கும் இடங்கள் மற்றும் வண்டிப் பேட்டைகள் முதலியன**

வகுத்துரைக்கப்படக்கூடிய விதிமுறைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சி

(அ) பொது இறங்கும் இடங்கள், நிறுத்தும் இடங்கள் மற்றும் வண்டிப்பேட்டைகள் (கடைசிச் சொற்றொடர் கால்நடை மற்றும் மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கலான ஊர்திகளை உள்ளடக்கும்) மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களை விதிக்கலாம். மற்றும்

(ஆ) அத்தகைய இடம் அல்லது பேட்டை எதுவும் ஒதுக்கப்பட்டிருக்கும் பொழுது ஆய்வாளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு கிராம ஊராட்சி குறித்துரைக்க கூடிய பரப்பிற்குள் இருக்கும் பொது இடம் அல்லது பொதுச்சாலை எதனின் ஓரங்களை நபர் எவராலும் அதே நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடை செய்யலாம்.

**155. தனியார் வண்டிப் பேட்டைகள்**

(1) ஒரு நபர் தனியார் வண்டிப் பேட்டைகளை புதிதாகத் திறக்கவும், தனியார் வண்டி பேட்டைகளை தொடர்ந்து வைத்திருக்கவும் அதற்கென கிராம ஊராட்சியிடம் உரிமம் பெறாமல் அவ்வாறு நடத்த முடியாது. மேலும் வாங்கப்படும் உரிமத்தை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும்.

(2) சட்ட விதிமுறைகளின்படி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள தனியார் வண்டி பேட்டைகளை பொறுத்தமட்டில் கிராம ஊராட்சிக்கு விண்ணப்பம் செய்யப்படுமாயின் கிராம ஊராட்சி உரிமம் வழங்க வேண்டும். புதிய தனியார் வண்டி பேட்டைகளை பொறுத்தமட்டில் கிராம ஊராட்சியானது அதன் விருப்பம் போல் உரிமம் வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படும் உரிமங்களை கண்காணிப்பதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் சுகாதாரப் பாதுகாப்பு போன்ற

பிற காரியங்களுக்கும் கிராம ஊராட்சி நிர்ணயிக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வழங்கப்பட வேண்டும். புது வண்டி பேட்டைகளுக்கு அப்படிப்பட்ட உரிமம் வழங்க மறுக்கவும் செய்யலாம்.

(3) கிராம ஊராட்சி குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைகளுக்கு வருமாறு உரிமத்திற்கான நிபந்தனைகளை மாற்றி அமைக்கலாம்.

(4) கிராம ஊராட்சியானது உட்பிரிவு (2)ன்படி வழங்கப்பட்ட உரிமம் எதனையும் அதன் நிபந்தனைகளை மீறியதற்காக எந்த நேரத்திலும் நிறுத்தி வைக்கலாம். அல்லது நீக்கம் செய்யலாம்.

(5) இந்தப் பிரிவின் படியான உரிமம் ஒவ்வொரு முறையும் வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் பொழுது இருநூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு கட்டணத்தை கிராம ஊராட்சி வசூலிக்கலாம்.

**156. பொது இறைச்சிக் கொட்டில்கள்**

கிராம ஊராட்சி பொது இறைச்சிக் கொட்டில்களாக பயன்படுத்தபடுவதற்காக இடங்களை ஏற்பாடு செய்யலாம் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான வாடகையோ, கட்டணமோ விதிக்கலாம்.

**157. கால்நடைகளை வெட்டுவதற்கான இடங்கள் பயன்படுத்தப்படுவதையும் இறைச்சிக் கொட்டில்களுக்கான உரிமத்தையும் தடை செய்தல் அல்லது ஒழுங்குமுறைப்படுத்துதல்**

அரசு பின்வருபவைகளுக்காக வேண்டிய விதிமுறைகளை இயற்றலாம்.

(அ) பொது இறைச்சிக் கொட்டில்கள் நடத்தப்படும் இடங்களை தவிர பிற இடங்களில் விதிகளில் விலக்களிக்கப்படாத செயல்களான கால்நடைகளை வெட்டுதல் அவற்றை அறுத்தல் மற்றும் தோலுரித்தலை தடை செய்வதற்கான அல்லது ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும்

(ஆ) பொது மக்களுக்கு விற்பனை செய்கின்ற நோக்கங்களுக்காக விதிகளில் குறித்துரைக்கப்பட்ட கால்நடைகளை வெட்டுவதற்கு உரிமம் வழங்குவதற்காகவும், மற்றும்

(இ) இறைச்சிக் கொட்டில்களையும் அவற்றிலுள்ள இறைச்சியினையும் ஆய்வு செய்தல் மற்றம் அத்தகைய ஆய்விற்காக அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களின் உழைப்பூதியம் வழங்குவதற்கான விதிகளை இயற்றுவதற்கு அதிகாரம் உண்டு.

**158. கட்டிடங்களுக்கு இலக்கமிடுதல் அல்லது பெயர்சூட்டுதல் முதலியன**

(1) இந்தச் சட்டம் பொருந்துகிற பகுதியில் இதன் பொருட்டு கட்டிடங்களுக்கு இலக்கமிடுதல் அல்லது பெயர் சூட்டுதல் முதலியவற்றிற்காக விதிகளின்படி கூடிய அதிகாரம் அளிக்கப்பட்ட அமைப்பு, ஒரு கட்டிடத்தின் வெளிப் புறத்தில் உள்ள கதவில் அல்லது அந்த மனையிடத்தின் நுழைவாயிலின் ஒரு பகுதியில் இலக்கமிடுமாறு செய்தல் வேண்டும்.

(2) அரசின் ஒப்புதலுடன் கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் புதிய கிராமச் சாலை அல்லது ஊராட்சி ஒன்றிய சாலைக்குப் பெயர் சூட்ட வேண்டும் மற்றும் கிராம ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு சொந்தமான பூங்கா, விளையாட்டுத்திடல் பேருந்து நிலையம், வளைவு அல்லது புதிய சொத்துகளுக்கு பெயர் சூட்டுதல் வேண்டும், மற்றும் அரசின் ஒப்புதலுக்கு உட்பட்டு, அத்தகைய சொத்து எதனின் பெயரையும் மாற்றலாம்.

(3) எந்த நபரும் சட்டப்படியான அதிகாரமின்றி அத்தகைய இலக்கம் எதனையும் அழிக்கவோ, எடுத்துவிடவோ அல்லது உருக்குலைக்கவோ கூடாது.

(4) உட்பிரிவு (1)ன் படி இலக்கம் பொருத்தப்பட்டிருக்கும் போது அந்த கட்டிடத்தின் உரிமையாளர் அத்தகைய இலக்கத்தைப் பேணிவரவும், மற்றும் அது அகற்றப்பட்டாலோ அல்லது உருக்குலைக்கப்பட்டாலோ அதற்குப் பதிலாக மீண்டும் அமைத்து தர கட்டுப்பட்டவர். அவர் அவ்வாறு அமைக்க தவறினால் உட்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் மேற்படி நபருக்கு அறிவிப்பு கொடுத்து, முன்னர் இருந்தது போல் மீண்டும் அமைக்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.

**159. எந்தெந்த நோக்கங்களுக்காக உரிமமின்றி இடங்கள் பயன்படுத்தக் கூடாது என்பது**

(1) அரசு எந்த இடங்கள், மனித உயிருக்கு அல்லது உடல் நலத்துக்கு அல்லது சொத்திற்கு கேடுவிளைவிக்க கூடியதாகவோ ஆபத்தானதாகவோ உள்ளன என்று கருதுகின்றதோ அத்தகைய நோக்கங்களை அறிவிக்கை மூலமாக குறிப்பிடலாம்.

(2) 1(உரிமம் ஒன்று இல்லாமலும் அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கிய வகையில் இல்லாமலும், உட்பிரிவு (1)ன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களில் ஏதொன்றுக்காகவும் கிராம ஊராட்சியின் எல்லைக்குள் அமைந்துள்ள எந்த ஒரு இடத்தையும் பயன்படுத்தக் கூடாது என அரசினால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்படும் அலுவலரின் முன் ஒப்புதலுடன் அறிவிக்கையாக வெளியிடலாம்.)

(3) உட்பிரிவு (1)ன் படி அல்லது உட்பிரிவு (2)ன்படி வெளியிடப்பட்ட அறிவிக்கை எதுவும் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் வரையிலும் செயல்திறன் பெறாது.

(4) 1 (உரிமம் வழங்குவதற்கோ அல்லது அதனை வழங்க மறுப்பதற்கோ கிராம ஊராட்சியே அதிகாரம் பெற்ற அமைப்பாகும்.)

---

159 -1 உட்பிரிவு (2) திருத்தியமைக்கப்படுவதற்கு முன்னர் (ஊராட்சி கிராமங்களைப் பொறுத்த அளவில் ஊராட்சி ஒன்றிய மன்றமானது அதன் எல்லைக்குட்பட்ட ஊராட்சி கிராமம் அல்லது கிராமங்களின் எல்லைகளுக்குள் உள்ள இடம் எதனையும் உட்பிரிவு (1)ன்படி வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களில் எதற்காகவும் உரிமமின்றி மற்றும் அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இல்லாமலும் பயன்படுத்தக் கூடாது என்று வரையறுக்கப்பட்ட அதிகார அமைப்பின் முன் ஒப்புதலுடன் அறிவிக்கலாம்.) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1999) பிரிவு 2ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

159 (4) 1 உட்பிரிவு (4) திருத்தப்படுவதற்கு முன்னர் (ஊராட்சி கிராமங்களைப் பொறுத்தவரை உரிமத்தை வழங்குவதற்கோ அல்லது அதனை வழங்க மறுப்பதற்கோ ஆணையரே தகுதி பெற்ற அலுவலராவார்) என்றிருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1999) பிரிவு 2ன்படி திருத்தப்பட்டது.

## 160. தொழிற் சாலைகள் கட்டுவதற்கும், இயந்திரங்கள் நிறுவுவதற்கும் அனுமதி அளித்தல்

ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனுமதியின்றியும் மற்றும் அத்தகைய அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இல்லாமலும் ஊராட்சி கிராமங்களில் எவரும்;

(அ) நீராவி சக்தி, நீர் சக்தி, அல்லது பிற இயந்திர சக்தி அல்லது மின் சக்தியைப் பயன்படுத்தி தொழிற்சாலை பணிக்கூடம் அல்லது பணியிடம் எதனையும் கட்டவோ நிறுவவோ கூடாது. அல்லது இந்த சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளின்படி விலக்களிக்கப்படாத இயந்திரம் அல்லது உற்பத்தி தளவாடம், மற்றும்

(ஆ) மேற்சொன்ன ஏதேனும் சக்தியின் மூலம் இயக்கக்கூடிய இயந்திரம் அல்லது உற்பத்தித் தளவாடம் எதனையும் எந்த மனையிடத்திலும் நிறுவக் கூடாது.

## 161. உரிமங்களையும் அனுமதிகளையும் வழங்குதல் மற்றும் புதுப்பித்தலை பொறுத்து விதிகளை இயற்றுவதற்கு அரசிற்குள்ள அதிகாரம்

(1) (அ) பிரிவு 159ன் படி உரிமங்கள் வழங்குவதை அல்லது புதுப்பிப்பதை தடை செய்வதற்கான அல்லது முறைப்படுத்துவதற்கான மற்றும் எந்தக் கால அளவிற்கு அத்தகைய உரிமங்கள் செல்லத்தக்கதாக இருக்கும் என்பதற்கான விதிகளையும்,

(ஆ) அத்தகைய உரிமங்களைப் பெறுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு விண்ணப்பங்களை எந்தக் கால அளவிற்குள் சமர்பிக்க வேண்டும் என்பதற்கான விதிகளையும், மற்றும்

(இ) பிரிவு 160ன் படி அனுமதிகள் வழங்குவதைத் தடை செய்வதற்கான அல்லது முறைப்படுத்துவதற்கான விதிகளையும் அரசு இயற்றலாம்.

(2) தொழில் நோக்கங்களுக்காக குறித்துரைக்கப்பட்ட பகுதிகளைத் தனியாக ஒதுக்குவதற்கும் அத்தகைய பகுதிகளுக்கு வெளியே உள்ள தொழிற்சாலை, பணிக்கூடம், பணியிடம் அல்லது பணிமனைகளைப் பொறுத்த அளவில் பிரிவு 160ன் படி அனுமதி மறுக்கப்படுவதற்கும் மற்றும் எந்த இடத்திலேனும் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலை, பணிக்கூடம் அல்லது பணியிடம் எதனையும் அல்லது அத்தகைய பகுதிகளுக்கு வெளியே அமைந்துள்ள மனையிடத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இயந்திரம் எதனையும் விதிகளின்படி அதிகாரம் அளிக்கப்பட்ட அமைப்பின் ஒப்புதலுடன் அத்தகைய பகுதிகளுக்கு அப்புறப்படுத்துவதற்கும் உட்பட்டு வகை செய்வதற்கு உட்பிரிவு (1) கூறு (இன் படி இயற்றப்படும் விதிகளின்படி ஊராட்சி கிராமங்கள் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதிகாரமளிக்கலாம்.

ஆனால் மத்திய அல்லது மாநில அரசின் அல்லது 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைப்பொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 27/1989) நிறுவப்பட்டபடி சந்தைக் குழு ஒன்றின் உடமையில் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மனையிடம் எதிலேனும் நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலை, பணிக்கூடம் அல்லது பணியிடம் எதனையும் அகற்றுவதற்கு அத்தகைய விதி எதுவும் அதிகாரம் அளிக்க கூடாது.

(3) பொதுவாகவோ அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலோ பிரிவு 159 அல்லது பிரிவு 160ன்படி எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படாமல் விட்டுவிடப்பட்ட நடவடிக்கை எதனின் தொடர்பாகவும் அரசு தான் உரியதெனக் கருதும் ஆணை மற்றும் செயல் முறையை பிறப்பிக்கலாம்.

(4) பிரிவு 159 மற்றும் பிரிவு 160ன் படியான அனுமதியின்படி உரிமங்கள் மீதான கட்டணங்களின் வகையில், ஊராட்சி ஒன்றிய மன்றம் பெறுமானால், அத்தொகையை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி கணக்கில் வரவு வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**162. 1888ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது மக்கள் கூடுமிடங்கள் சட்டத்தில் மாற்றங்கள்**

1888 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது மக்கள் கூடும் இடங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 11/1888) என்ன அடங்கியிருந்த போதிலும், அரசு, அச்சட்டத்தை கிராமம் மற்றும் அதன் பகுதி எதனிலும் நீட்டிக்கும் பொழுது

(அ) திரைப் படங்களைத் திரையிடும் நோக்கத்திற்கென்று மட்டுமே பயன்படுத்தப்படவுள்ள இடம் அல்லது கட்டிடத்திற்கான உரிமம் தவிர ஏனைய எதற்கும் இந்தச் சட்டத்தின்படி விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டி வரும் மற்றும் அத்தகைய உரிமத்தை வழங்கும் அல்லது மறுக்க கூடிய அலுவலர், ஊராட்சி கிராமங்களை பொறுத்த அளவில், ஆணையராக இருப்பார்.

(ஆ) உரிமம் ஒன்றை வழங்கியோ, மறுத்தோ, ரத்து செய்தோ அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தோ பிறப்பிக்கப்பட்ட ஆணையரின் ஆணையின் மீது ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் மேல் முறையீடு செய்யலாம்.

(இ) ஊராட்சி ஒன்றிய மன்றம் இந்தப் பிரிவின்படி உரிமங்கள் மீதான கட்டண வகையில் வருமானம் ஏதேனும் பெறப்பட்டிருக்குமாயின் அதனை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் கணக்குகளில் வரவு வைக்க வேண்டும்.

**163. மாவட்ட ஊராட்சியின் அலுவல்கள்**

(1) கிராம ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்துப் பொருட்கள் குறித்தும், அம்மாவட்டத்தின் பொருளாதார வள ஆதாரங்களின் வளர்ச்சி அம்மாவட்டத்தில் குடியிருப்போரின் பண்பாடு, கலாச்சாரம் நலம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பான பொருட்கள் குறித்து மாவட்ட ஊராட்சி அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

(2) குறிப்பாக, பின்வரும் அலுவல்களை ஆற்ற வேண்டியது மாவட்ட ஊராட்சியின் கடமையாகும்.

(அ) மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் செயல்படுத்தும் அனைத்து வளர்ச்சி திட்டங்கள், அவைகள் செய்து வரும் இதர சேவைப் பணிகள் அனைத்து பற்றியும் மற்றும் மாவட்டத்தில் உள்ள அரசின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள இதர நிறுவனங்கள் செயலாக்கும் வளர்ச்சிப் பணிகள் பற்றியும் அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

(ஆ) மேற்சொன்ன பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பாக அரசு, கிராம ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் துறை முகவரமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

(இ) அரசால் மாவட்ட ஊராட்சியை குறிப்பாக கேட்டுக்கொள்ளப்படும் சட்டத்தின் வகைமுறை அல்லது ஆணை எதையும் செயல்படுத்துவது தொடர்பான கீழ்காணும் பொருட்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்

(i) சந்தைகளை கிராம ஊராட்சி சந்தைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சந்தைகள் என்ற வகைப்படுத்துதல் மற்றும் ஒரு அதிகார அமைப்பு மற்றொன்றிற்குச் செலுத்த வேண்டிய பங்குத் தொகை விகிதங்களை நிர்ணயித்தல்

(ii) பொருட்காட்சிகளையும் விழாக்களையும் கிராம ஊராட்சி பொருட்காட்சிகள் மற்றும் கிராம ஊராட்சி விழாக்கள் என்றும் ஊராட்சி ஒன்றிய பொருட்காட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய விழாக்களென்றும் வகைப்படுத்துதல்

(iii) அரசால் தேசிய நெடுஞ்சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்ட சாலைகள் நீங்கலாக பொதுச் சாலைகளை ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்றும், கிராம ஊராட்சி சாலைகள் என்றும் வகைப்படுத்துதல்.

(ஈ) சாலைப் போக்குவரத்து மேம்பாடு தொடர்பான அனைத்து பொருட்கள் குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்

**164. மாவட்ட ஊராட்சியின் பொதுவான அதிகாரங்கள்**

இச்சட்டத்தின்படி தன் அலுவல்களைத் திறம்பட ஆற்றுவதற்காக, மாவட்ட ஊராட்சி ஒவ்வொன்றும், அதன் அதிகார எல்லைக்குட்பட்டு

(அ) அது தேவையென்று கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்

(ஆ) அது தேவையென்று கருதும் தகவல் விபரங்களைச் சேகரிக்கலாம்.

(இ) அம்மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் அல்லது முன்னேற்றத்தின் பல்வேறு கூறுகள் குறித்த புள்ளி விவரம் அல்லது ஏனைய தகவல்களை வெளியிடலாம்.

(ஈ) ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சியானது அதன் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக அல்லது மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்கள் குறித்தும் தான் கேட்கக்கூடிய தகவலை அளிக்குமாறு ஊராட்சி ஒன்றியம் எதனையும் அல்லது கிராம ஊராட்சி எதனையும் கேட்டுக் கொள்ளலாம்.

**165. மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை**

(1) மாவட்ட ஊராட்சி ஒவ்வொரு ஆண்டும், வரையறுக்கப்பட்ட படிவத்திலும் நேரத்திலும் முந்தைய ஆண்டில் அதன் நடவடிக்கைகளைப் பற்றிய உண்மையான மற்றும் முழுமையான விபரங்கள் அடங்கிய ஆண்டறிக்கை ஒன்றைத் தயாரிக்க வேண்டும் மற்றும் அதன் நகல்களை அரசிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(2) அரசு, அத்தகைய அனைத்து அறிக்கைகளையும், அதன் மீதான தன் கருத்துக்களுடன் சேர்த்து சட்டமன்றப் பேரவையின் முன் வைக்க வேண்டும்.

**166. மாவட்ட ஊராட்சியின் விபர உரைகளும், அறிக்கைகளும்**

மாவட்ட ஊராட்சி ஒவ்வொன்றும் அதன் நடவடிக்கைகள் தொடர்பாக அரசு அவ்வப்போது கேட்கக்கூடிய விபர உரைகள், அறிக்கைகள், புள்ளி விபரங்கள் மற்றும் பிற தகவல்களை அரசிற்கு அளிக்க வேண்டும்.

## அத்தியாயம் - 9
## வரிவிதிப்பு மற்றும் நிதி

**167. தல வரி**

(1) ஒவ்வொரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலும் அரசிற்கு நிலத் தீர்வையாக ஒவ்வொரு பசலிக்கும் செலுத்தப்படத்தக்க ஒவ்வொரு ரூபாயின் மீதும் ஒரு ரூபாய் என்ற வீதத்தில் தலவரி விதிக்கப்படும்.

**விளக்கம்:-** இப்பிரிவு மற்றும் பிரிவு 168ன்படி நிலத் தீர்வை என்பது நிலத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய பொது வரி எனப் பொருள்படும். மற்றும் நிலத்தின் பாசனத்திற்காக வழங்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட தண்ணீருக்காக அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட தண்ணீருக்காக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய தண்ணீர்த் தீர்வை உரிமை ஊதியம், குத்தகைத் தொகை அல்லது உரிமம் பெற்றோ அரசிடமிருந்து நேரடியாக உடைமையாக்கிக் கொண்ட நிலத்திற்குச் செலுத்த வேண்டி வேறொரு தீர்வையோ வருமான மேல் வரியோ இதில் அடங்காது. ஆனால் தள்ளிக் கொடுக்கப்பட்ட நிலவரி இப்பிரிவிற்காகச் செலுத்தப்படத்தக்க நிலவரியாகக் கருதப்பட மாட்டாது.

(2) உட்பிரிவு(1)ன் படி செலுத்த வேண்டிய தலவரியானது தீர்வை வரவேண்டிய ஒவ்வொரு நிலத்தின் மேலும் அரசிற்கு வரவேண்டிய நிலவரியாக கருத வேண்டும். மேற்சொன்ன நிலங்களும், அவற்றிலுள்ள கட்டிடங்களும் அவற்றின் விளைச்சல்களும் இந்த தலவரிக்கு ஈடாகக் கருதப்படும்.

(3) இச்சட்டத்தின் கீழ் தலவரியாக வரவேண்டிய நிலங்களின் நிலத்தீர்வை வசூலுக்கு 1864ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிலவருவாய் வசூல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1864) விதிகள் எப்படிப் பயன்படுமோ அதன்படியே இச்சட்டத்தின் கீழ் வசூலாக வேண்டிய வரி தலவரி வசூலுக்கும் பயன்படும்.

(4) [1](ஒவ்வொரு ஊராட்சி வளர்ச்சி வட்டத்திலும் அவ்வாறு வசூலிக்கப்பட்ட தலவரியானது தொடர்புள்ள கிராம ஊராட்சியின் நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.)

(5) [2] ( * * * )

---

167 (4) [1] இந்த உட்பிரிவில் (ஒவ்வொரு ஊராட்சி வளர்ச்சி வட்டார வளர்ச்சி வட்டாரத்திலிருந்தும் அவ்வாறு உள்ளூர்த் தீர்வையாக வசூலிக்கப்பட்ட தொகையில் நூற்றுக்கு இருபது விழுக்காட்டுத் தொகையானது அந்த ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதி கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்) என்றிருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் பிரிவு 2ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

167 (5) [2] இந்த உட்பிரிவில் (அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து வசூலிக்கப்பட்ட உள்ளூர்த் தீர்வைத் தொகையில் எஞ்சியுள்ள தொகையானது அந்த ஊராட்சி ஒன்றிய பொது கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்) என்றிருந்ததை 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் பிரிவு 2ன்படி நீக்கப்பட்டது.

[3] இப்பிரிவில் (ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள்) என்ற சொற்றொடர் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 3ன்படி நீக்கப்பட்டது.

## 168. தலவரி மேல்வரி

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றமும் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நிலத்திற்காக நிலத் தீர்வையாக செலுத்தக் கடமைப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் மேலும் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் பிரிவு 167ன்படி விதிக்கப்படும் தல வரிக்கு கூடுதலாகவும் பொருத்தமானதெனவும் கருதப்படும் ஒரு தொகையை தல வரி மேல் வரியாக விதிக்கலாம். இந்தத் தலவரி மேல்வரி அந்த நிலம் குறித்துச் செலுத்தத்தக்க நிலவரியில் ஒவ்வொரு ரூபாய் மீதும் 5 ரூபாய்க்கு குறையாமலும் ஆனால் 10 ரூபாய்க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

## 169. தலவரி வசூலிப்பது தொடர்பான விதிகள்

தலவரி வசூல் செய்வதை முறைப்படுத்துதல், கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல் மற்றும் அரசு வசூலிப்பதற்கு தொகை எதேனும் செலவிட்டிருந்தால் அதனை கழித்துக் கொண்டு வழங்குதல் அகியவை குறித்து இச்சட்டத்திற்கு முரணாக இல்லாதவாறு அரசு விதிகளை இயற்றலாம்.

## 170. நிலவரி ஒப்படைவு செய்தல்

ஒவ்வொரு ஆண்டிலும் அந்த மாநிலத்தில் வசூலாகும் நிலவரி (நீர் வரி உட்பட) தொகையிலிருந்து அரசு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள மக்கள் தொகை கணக்கின்படி ஒரு நபருக்கு ஒரு ரூபாய் வீதம் கணக்கிட்டால் வரும் தொகைக்குச் சமமான ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும். இப்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு வரவு வைக்கப்படும் தொகை அந்த ஒன்றியத்தின் நிலவரி ஒப்படைப்புத் தொகையாக குறிக்கப்படும்.

## 171. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படத்தக்க வரிகள்

(1) கிராம ஊராட்சி ஒவ்வொன்றும், ஊராட்சி கிராமத்தில் வீட்டுவரி

1( ) விதிக்க வேண்டும் (வாகன வரி)

(2) பிரிவு 175ன் வகைமுறைகளுக்கு இணங்க குறித்த சில சொத்துரிமை மாற்றங்கள் மீது ஒவ்வொரு ஊராட்சி கிராமத்திலும் தீர்வை ஒன்று விதிக்கப்பட வேண்டும்.

(3) வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டும் மற்றும் ஆய்வாளரின் அனுமதியுடனும் அவரால் விதிக்கப்படும் கட்டுப்பாடு மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் கிராம ஊராட்சி குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக அந்த கிராமத்திலுள்ள விவசாய நிலத்தின் மீது வரி விதிக்கலாம்.

## 172. வீட்டு வரி

(1) இந்த சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு தொடர்புடைய உள்ளூர்ப் பகுதிகளில் எந்த அடிப்படையில் வீட்டு வரி விதிக்கப்பட்டதோ அதே அடிப்படையிலோ அல்லது உட்பிரிவு (3)ன் வகைமுறைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சி ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இணைப்புப் பட்டியல் 1ல் கூறப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள அனைத்து வீடுகளின் மீதும் வீட்டு வரி விதிக்கப்பட வேண்டும்.

---

171 1 (உட்பிரிவு (1)ல் (வாகன வரி) என்ற சொல், 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1999)ன் படி நீக்கப்பட்டது.

(2) வீட்டு வரி அந்த வீட்டின் பேரிலும் அதற்குள் அல்லது அதன் மேல் காணப்படுகிற, மேற்படி வரியைச் செலுத்த வேண்டிய நபருக்குச் சொந்தமாக வேறு அசையும் சொத்து ஏதாவது இருந்தால் அதன் பேரிலும் முதல் பொறுப்பு ஆகும். ஆனால் அந்த வீட்டு மனை சம்பந்தமாக அரசிற்கு நிலத் தீர்வை ஏதாவது சேர வேண்டியிருந்தால் அதை முதலில் செலுத்துவதற்கு இது உட்பட்டதாகும்.

(3) அரசு, ஊராட்சி கிராமம் எதனின் தொடர்பாகவும் அல்லது எந்த வகுப்பைச் சேர்ந்த ஊராட்சி கிராமங்களைப் பொருத்தும் வீட்டுவரி விதிப்பை அரை ஆண்டிற்கு ஒரு முறையோ அல்லது ஆண்டிற்கு ஒரு முறையோ என்பதை அறிவிக்கையின் மூலம் நிர்ணயிக்க வேண்டும் மற்றும் அவ்வாறு செய்யும் போது பின்வரும் பொருள்களை கருத்தில் கொள்ள வேண்டும் அவைகளாவன

(அ) பிரிவு (4)ன் படி உள்ளூர் பகுதியின் வகைப்பாடு

(ஆ) கிராம ஊராட்சியின் ஆண்டு வருவாய்கள்

(இ) ஊராட்சி கிராமத்தில் மக்கள் தொகை மற்றும் அத்தகைய மற்றும் அத்தகைய மக்களின் முக்கிய தொழில் மற்றும்

(ஈ) வரையறுக்கப்பட்ட பிற பொருட்கள்

(4) பின்வருவனவற்றை வகை செய்யும் பொருட்டு அரசு விதிகளை இயற்றலாம்

(அ) வரியை எந்த நபர்கள் செலுத்தக் கூடியவர் மற்றும் வீடுகளின் சொத்துரிமை மாற்றங்கள் பற்றிய அறிவிப்புகள் கொடுத்தல்

(ஆ) வரி விதிப்பு மற்றும் ஏனைய குறைப்புகள்

(இ) ஒரு அரை ஆண்டில் அல்லது அண்டில் மேற்படி கிராமத்தில் கட்டப்பட்ட புதுப்பிக்கப்பட்ட அல்லது இடித்துத் தள்ளப்பட்ட வீடுகளுக்கு அல்லது அந்த கிராமத்தில் சேர்க்கப்பட்ட அல்லது அதிலிருந்து விலக்கப்பட்ட பகுதிகளில் இருக்கிற வீடுகள், மேற்படி வரி முழுவதும் அல்லது அதில் ஒரு பகுதி செலுத்தப்பட வேண்டியது அல்லது செலுத்த வேண்டிய அவசியம் இல்லை எனும் சந்தர்ப்பங்கள் மற்றும் நிபந்தனைகள் குறித்தும்.

(5) வீட்டில் குடியிருப்பவர் வீட்டின் சொந்தக்காரரின் சார்பில் வீட்டு வரியை செலுத்துவராயின் அவ்வாறு குடியிருப்பவர், அதனை வீட்டின் சொந்தக்காரரிடமிருந்து திரும்பப் பெறுவதற்கு உரிமையும் தகுதியும் உடையவர் ஆவார். மற்றும் அதனை வாடகையிலிருந்தோ அப்போதோ அல்லது பின்னரோ பிடித்தம் செய்து கொள்ளலாம்.

**[1] 172 –அ விளம்பர வரியை விதித்தலும் வசூலித்தலும்**

நிலம், கட்டடம், சுவர் விளம்பரப் பலகைகள் அல்லது கட்டுமானம் எதனின் மேலோ அல்லது அதன் மீதோ விளம்பரம் எதனையும், நிறுவுகிற, காட்சியாக வைக்கிற, பொருத்துகிற அல்லது அப்படியே வைத்திருக்கிற, அல்லது கிராம ஊராட்சி எதிலும் உள்ள பொது அல்லது தனியார் இடம் எதிலும் எம் முறையிலாயினும் பொது மக்களின் பார்வைக்காக விளம்பரம் எதனையும் காட்சிக்கு வைக்கிற நபர் ஒவ்வொருவரும் அவ்வாறு நிறுவப்பட்டுள்ள, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள, பொருத்தி வைக்கப்பட்டுள்ள, அப்படியே வைக்கப்பட்டுள்ள அல்லது பொது மக்களின் பார்வைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விளம்பரம் ஒவ்வொன்றின் மீதும் வகுத்துரைக்கப்படக்கூடிய விதிகளுக்கு இணங்கிய வகையில், கிராம ஊராட்சியானது தீர்மானிக்ககூடிய அத்தகைய வீதத்திலும் மற்றும் அத்தகைய முறையிலும், கணக்கிடப்பட்வாறான வரியை செலுத்த வேண்டும்.

---

1 பிரிவுகள் 172 அ 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1999) பிரிவு 3ன் படி புதியதாக சேர்க்கப்பட்டது.

ஆனால் அவ்வீதங்களானவை அரசினால் வகுத்துரைக்கப்படக்கூடிய வீதங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். மற்றும் விளம்பரப் பலகையின் அமைவிடம், அளவு, கால அளவு விளம்பரங்களின் வகைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு வெவ்வேறு கிராம ஊராட்சிகளுக்கு வெவ்வேறு வீதங்கள் வகுத்துரைக்கப்படலாம். மேலும்

(அ) ஒரு பொதுக் கூட்டத்திற்கான அல்லது

(ஆ)2 நாடாளுமன்றத்திற்கான சட்டமன்ற பேரவைக்கான அல்லது ஒரு ஊராட்சிக்கான தேர்தலொன்றின் அல்லது

(இ) அத்தகைய தேர்தலைப் பொறுத்தவரையில் வேட்பாளர் ஒருவரின் விளம்பரம் அல்லது அறிவிப்பு எதனின் மீதும், இந்தப் பிரிவின்படி வரி எதுவும் விதிக்கப்படுதல் கூடாது.

(ஈ) விண்வெளியிடை விளம்பரங்கள் அல்லாதது மற்றும்

(1) கட்டடம் எதனின் சன்னலுக்குள்ளாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது

(2) அத்தகைய விளம்பரமானது எந்த நிலம் அல்லது எந்த கட்டடத்தின் மேல் அல்லது அதன் மீது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதோ அந்த நிலத்திற்குள் அல்லது கட்டடத்திற்குள் நடத்தப்பட்டு வருகிற வணிகம் அல்லது வியாபாரம் தொடர்பானதாகவோ அல்லது, அந்த நிலத்தை அல்லது கட்டடத்தை அல்லது அதிலுள்ள உடைமைகளை விற்பது அல்லது வாடகைக்கு விடுவது தொடர்பானதாகவோ அல்லது அதன் மீது அல்லது அதில் நடத்தப்படவிருக்கிற விற்பனை, கேளிக்கை அல்லது கூட்டம் எதனின் தொடர்பானதாகவோ அல்லது

(3) அவ்விளம்பரமானது எந்த நிலத்தின் அல்லது கட்டடத்தின் மேல் அல்லது அதன் மீது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதோ அந்த நிலத்தின் அல்லது கட்டடத்தின் பெயர் அல்லது அத்தகைய நிலத்தின் அல்லது கட்டடத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளரின் பெயர் தொடர்பானதாகவோ அல்லது

(4) இரயில்வே நிர்வாகம் ( ) எதனின் வணிகம் தொடர்பானதாகவோ அல்லது

(5) ரயில் நிலையம் எதற்குள்ளாகவும் அல்லது இரயில்வே நிலையத்தின் சுவர் அல்லது பிற சொத்து எதனின் மேல் பரப்பின் பகுதி எதுவும் தெரு எதனின் பார்வையிலும் இருக்கிற நிலையில் தவிர, அத்தகைய சுவர் அல்லது சொத்து எதன் மேலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தின் மீது வரி எதுவும் விதிக்கப்படக் கூடாது.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக

(i) கட்டமைப்பு என்னும் சொற்றொடரானது விளம்பரமொன்றாகவோ அல்லது விளம்பர ஊடகமொன்றாகவோ பயன்படுத்தப்படும், சக்கரங்களின் மீது அசைகின்ற பலகைகளையும் உள்ளடக்கும்.

(ii) விண்வெளியிடை விளம்பரம் என்னும் சொற்றொடரானது, கம்பம், கழி, நிலைப்பான் அல்லது சுற்றுச் சட்ட அமைப்பின் மீது தாங்கி பொருளாக வைக்கப்பட்ட அல்லது இணைத்து வைக்கப்பட்ட விளம்பரம் எதுவுமோ, அல்லது நிலம், கட்டடம், சுவர் அல்லது கட்டுமானத்தின் மேல் அல்லது அதன் மீது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ உள்ள பிற தாங்கிப் பொருளின் மீது அமைக்கப்பட்ட விளம்பரம் விளம்பரம் எதுவுமோ, அதாவது அது அல்லது

விண்வெளியிடை விளம்பரத்தின் பகுதி எதுவும் பொது இடம் எதிலும் உள்ள ஒரு முனையிலிருந்து பார்த்தால் ஆகாயத்திலிருந்து காணத்தக்கதாக பிற தாங்கிப் பொருளின் மீது அமைக்கப்பட்ட விளம்பரம் எதுவுமோ என்று பொருள்படும். மற்றும் அத்தகைய கம்பம், கழி, நிலைப்பான் சுற்றுச் சட்ட அமைப்பு அல்லது பிற தாங்கிப் பொருள் அனைத்தையும், அதனின் ஒவ்வொரு பகுதியையும் உள்ளடக்கும், மற்றும் விண்வெளியிடை விளம்பரம் என்னும் சொற்றொடரானது நிலத்தின் அல்லது கட்டடத்தின் அல்லது கட்டுமானத்தின் மேல் அல்லது அதன் மீது அல்லது பொது இடம் எதனின் மேலும் அல்லது எதனின் மீது விளம்பர நோக்கங்களுக்காக வைக்கப்படும் பலூன், பாரச்சூட் அல்லது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ பயன்படுத்தப்படும் அது போன்ற கருவியை உள்ளடக்கும்: ஆனால் அது

(அ) விளம்பர நோக்கத்திற்காக, முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக, பயன்படுத்தப்பட்டதாக இருந்தாலன்றி, கொடிக் கம்பத்தை கழியை, காற்றாடியை அல்லது காற்று திரைகாட்டி எதனையும் உள்ளடக்காது.

(ஆ) சுவருடன் அல்லது சுவரின் மேற்புறத்தின் மீது அல்லது கட்டடம் எதனின் கைப்பிடி சுவருடன் அல்லது அதன் மேற்புறத்தின் மீது அல்லது சுவா் எதனின் உச்சியில் உள்ள இடா்வேலைப்பாடுடன் கூடிய அமைப்புடன் அல்லது அதன் மேற்புறத்தின் அல்லது பாளத்துடன் அல்லது அதன் மேற்பரப்பின் மீது உள்ளடக்காது, உறுதியாக, பொருத்தியமைக்கப்பட்ட விளம்பர அடையாளம் எதனையுமோ பலகை அல்லது சுற்றுச் சட்ட அமைப்பையுமோ கருவியமைப்பையுமோ உள்ளடக்காது.

ஆனால் அத்தகைய பலகையானது சுற்றுச் சட்ட அமைப்பானது அல்லது பிற கருவியமைப்பானது, ஒரு தொடா்முகமாக இருக்க வேண்டுமேயன்றி வெளிப்புறப் பணியமைப்பாக இருக்க கூடாது, மற்றும் அது எந்தச் சுவருக்கு அல்லது கைப்பிடிச் சுவருக்கு அல்லது மேல் சரிவு அமைப்பிற்கு பொருத்தப்பட்டுள்ளதோ அல்லது ஆதரவாக அமைக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சுவருக்கு அல்லது கைப்பிடிச் சுவருக்கு அல்லது மேல் சரிவு அமைப்பின் ஒரு மீட்டருக்கு மேற்பட்டு உயரம் இருக்க கூடாது அல்லது

(இ) எந்த நிலத்தின் அல்லது கட்டடத்தின் மேல் விளம்பரமானது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதோ, அந்த நிலத்தின் அல்லது கட்டடத்தின் பெயா் அல்லது அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் உரிமையாளா் அல்லது உடைமையாளரின் பெயா் தொடா்பான விளம்பரம் எதனையும் உள்ளடக்காது அல்லது

(ஈ) ரயில்வே நிா்வாகம் ஒன்றின் அலுவல் மட்டுமே தொடா்பான விளம்பரம் மற்றும் அது ரயில் வண்டியில் அல்லது ரயில்வே நிலையத்தில் அல்லது ரயில் நிலைய நடைபாதையில் அல்லது இரயில்வே நிருவாகத்திற்குச் சொந்தமாக உள்ள நிலையத்தை அணுகும் பாதையில் வைக்கப்பட்டுள்ளதாக இருக்கிறது மற்றும் அது சாலை அல்லது பொது இடம் எதிலும் வராத அளவில் உள்ள விளம்பரம் எதனையும் உள்ளடக்காது அல்லது

(உ) விற்கப்பட வேண்டிய அல்லது வாடகைக்கு விடப்பட வேண்டிய, நிலம் அல்லது கட்டடம் இருக்கிற போது அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் மீது வைக்கப்பட்டிருக்கிற அறிவிப்பு எதனையும் உள்ளடக்காது.

(i) பொது இடம் என்னும் சொற்றொடரானது பொது மக்களால் உள்ளபடியே பயன்படுத்தப்பட்டாலும் சரி அல்லது நுகரப்பட்டாலும் அல்லது இல்லையென்றாலும் சரி பொது மக்களின் பயன்பாட்டிற்கும் நுகா்விற்கும் அனுமதிக்கப்பட்ட இடம் எதுவும் என்று பொருள்படும்.

(ii) விளம்பரம் என்னும் சொற்றொடரானது செய்தித்தாள் எதிலும் வெளியிடப்பட்ட விளம்பரம் எதனையும் உள்ளடக்காது.

**1 172-ஆ விளம்பரங்களை தடை செய்தல்**

கிராம ஊராட்சியினால் தீா்மானிக்கப்பட்டவாறு பிரிவு 172-அ எனும் பிரிவின்படி வரி விதிக்கப்பட்டதற்கு பின்னா், இந்தச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கு இணங்கியவாறு அல்லாமல், இடம் எதிலும் விளம்பரம் எதுவும் ஊராட்சி கிராமத்திற்குள் அமைந்த நிலம், கட்டடம் சுவா், பலகை அல்லது கட்டமைப்பு எதனின் மேலும் அல்லது சுவா் மீதும் நிலை நிறுத்தவோ காட்சிக்கு வைத்தலோ பொருத்தி வைத்தலோ அல்லது இருத்திவைக்கவோ எந்தவொரு முறையிலும் கண்காட்சிக்கு வைக்கவோ கூடாது.

ஆனால் கிராம ஊராட்சியானது, ஊராட்சி கிராமத்தில் உள்ள விளம்பரத்தின் உயரத்தை முறைப்படுத்த வேண்டும் மற்றும் அத்தகைய ஆட்சேபத்திற்குரிய விளம்பரத்தை வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் அகற்றுதல் வேண்டும். மேலும் அரசானது அறிவிக்கையின் வாயிலாக, கிராம ஊராட்சி எதற்குள்ளாகவும் உள்ள இடம் எதிலும் விளம்பரங்களைத் தடை செய்யலாம்.

**173. வாகனவரி**

2( * * * * * ) நீக்கப்பட்டது

**174. வரி விதிப்பிற்கு எதிரான மேல் முறையீடுகள்**

1(பிரிவுகள் 171, 172, மற்றும் 172-அ)ன்படி விதிக்கப்பட்ட வரி விதிப்பு எதனையும் எதிர்த்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நிர்ணயிக்கப்படக்கூடிய அலுவலரிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

**175. சொத்துரிமை மாற்றத்தின் மீது தீர்வை**

(1) சொத்துரிமை மாற்றத்தின் மீதான தீர்வையானது

(அ) கிராம ஊராட்சியின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியிலுள்ள அசையாச் சொத்து தொடர்பானதும் கீழே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு ஆவணத்தின் மீதும் தமிழ்நாட்டில் அப்போதைக்கு நடைமுறையில் உள்ளவாறு 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்படி விதிக்கப்படும் தீர்வையின் மீதான மேல்வரி என்கிற வகையிலும் மற்றும்

(ஆ) ஒவ்வொரு ஆவணத்திற்கும் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள தொகைக்கு நூற்றுக்கு ஐந்து விழுக்காட்டிற்கும் மிகாமல் அரசு நிர்ணயிக்கக் கூடிய வீதத்திலும் விதிக்கப்பட வேண்டும்.

(i) அசையாச் சொத்து விற்பனை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலவர விலை மதிப்பு மற்றும் 1899-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்திய சட்டம் 11/1899) பிரிவு 47-A ன்படி அலுவலரால் நிலவரவால் மதிப்பு இறுதியாக நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அத்தகைய நிலவரவிலை மதிப்பு

(ii) <u>அசையாச் சொத்துரிமை பரிமாற்றம்</u>

பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள உச்ச மதிப்பில் சொத்தின் நிலவரவிலை மதிப்பு மற்றும் அத்தகைய நிலவரவிலை மதிப்பு 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1899) பிரிவு 47-ஏன்படி அலுவலரால் நிலவரப்படி மதிப்பு இறுதியாக நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அத்தகைய நிர்ணயிக்கப்பட்ட நிலவரவிலை மதிப்பு

---

-172 (ஆ) 2 கூறு (ஆ). 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சியின் நான்காம் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2000)ன்படி திருத்தப்பட்டது.

1 இப்பிரிவில் (171 முதல் 173 வரை) என்றிருந்த சொற்றொடரை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1999) பிரிவு 3ன்படி (  ) ல் கூறப்பட்டுள்ளவாறு திருத்தப்பட்டது.

(iii) <u>அசையாச் சொத்துக்களின் கொடை</u>

பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் நிலவரவிலை மதிப்பு மற்றும் அத்தகைய நிலவரவிலை மதிப்பு 1899-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1899) பிரிவு 47 A ன்படி அலுவலரால் இறுதியாக நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அத்தகைய நிர்ணயிக்கப்பட்ட நிலவரவிலை மதிப்பு

(iv) <u>அசையாச் சொத்தின் கையுடைமை அடமானம் வைத்தல்</u>

பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அடமானத்தால் பெறப்பட்ட தொகை

(v) அசையாச் சொத்தின் குத்தகையின் நிலையான குத்தகை: பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி மொத்த தொகையில் அல்லது குத்தகையின் முதல் ஐம்பது ஆண்டுகளைப்

பொறுத்த அளவில் செலுத்தப்படும் அல்லது ஒப்படைக்கப்படும் வாடகைகளின் மதிப்பில் ஆறில் ஒரு பகுதிக்கு சமமான ஒரு தொகை

(1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் 175ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் கூறில்டே (v) ஆம் இனத்திற்கும் அது தொடர்பான பதிவுகளுக்கும் பின்பு, பின்வரும் இனங்களும் பதிவுகளும் சேர்க்கப்பட வேண்டும்.)

| | |
|---|---|
| (vi) 1988ம் ஆண்டு பெயரிரவல் (BENAMI) நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் 4ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்படி விலக்கப்பட்ட நபர்கள் சார்பாக அசையாச் சொத்துக்களை பொறுத்த அளவில் பெயரிரவல் உரிமையை விடுதலைச் செய்து கொடுத்தல் | முறையாவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடியான சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் 1899ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் 47 A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் சந்தை மதிப்பானது இறுதியாக தீர்மானிக்கப்படுகிற நேர்வில், அத்தகைய அதிகார அமைப்பினால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டபடியான சந்தை மதிப்பு |
| (vii) அசையாச் சொத்தினை ஒரு குடும்பத்தின் உறுப்பினர் ஒருவர் சார்பாகவோ அல்லது உறுப்பினர்கள் சார்பாகவோ அல்லாமல் மற்றபடி ஏற்பாடு செய்தல் (Settlement) | முறையாவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பு மற்றும் 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் 47 A எனும் பிரிவின்படி அதிகார அமைப்பு எதனாலும் சந்தை மதிப்பானது இறுதியாக தீர்மானிக்கப்படுகிற நேர்வில், அத்தகைய அதிகார அமைப்பினால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டபடியான சந்தை மதிப்பு |

**விளக்கம்** இந்த இனத்தின் நோக்கத்திற்காக, ‘குடும்பம் என்னும் சொல், 1981ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளபடியான, 1899ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் 1ஆம் இணைப்பு பட்டியலில் உள்ள 58ஆம் உறுப்பின் (a) எனும் கூறிலுள்ள (i) ஆம் இனத்திற்காக விளக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளையே கொண்டிருக்கும்.

(2) மேற்சொன்ன தீர்வானது அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர்

(அ) 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1899) பிரிவு 27ன் படி கிராம ஊராட்சியின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சொத்து பொறுத்தும் மற்றும் அத்தகைய பகுதிக்கு வெளியே அமைந்துள்ள சொத்து பொறுத்தும், விபரங்கள் தனித்தனியே குறிப்பிடப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கோரியது போன்றே பொருள் கொள்ள வேண்டும்.

(ஆ) மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 64ல் கிராம ஊராட்சிகளையும், அரசையும் சார்ந்தது போன்றே பொருள் கொள்ளுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வையின் மீதான மேல் வரியாக ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள ஊராட்சி கிராமத்தில் வசூலிக்கப்பட்ட தொகைகள் ஒவ்வொரு ஆண்டும் மொத்த வளர்ச்சி வட்டாரத்திற்கும் தொகுக்கப்பட்டு ஒவ்வொரு கிராம ஊராட்சியின் நிலவரி வருவாயின் விகிதத்திற்கேற்ப வளர்ச்சி வ ட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

(4) அரசு தீர்வையாக வசூலிப்பதையும் அதை கிராம ஊராட்சிக்குச் செலுத்துவதையும் அதை வசூலிப்பதில் அரசுக்கு ஏற்பட்ட செலவுகளைக் கழிப்பதையும் முறைப்படுத்துவதற்கென இச்சட்டத்திற்கு முரணாக இல்லாத வகையில் இயற்றலாம்.

**176. விலக்களிப்பு**

அரசு நிர்ணயிக்கப்படக் கூடிய விதிகளுக்கு முரண்பட்டு இல்லாமல் பிரிவுகள் 168 அல்லது 171ல் குறிப்பிடப்பட்டுள்ள மேல் வரி அல்லது வரி எதனையும் செலுத்தப்படுவதிலிருந்து கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் விலக்களிக்க கூடாது.

ஆனால் குறிப்பிட்ட ஒரு காரியத்தில் அத்தகைய விலக்களிப்பு அரசின் முன் ஒப்புதல் பெற்ற பின்னர் வழங்கப்படலாம்.

**177. கிராம ஊராட்சிக்குச் சேர வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை வசூலிக்குமாறு நில வருவாய் பணியாளர்களை கோருவதற்கான அதிகாரம்**

நிர்ணயிக்கப்படக் கூடிய விதிகளுக்குட்பட்டு செயல் அலுவலர் அல்லது ஆணையர் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வீட்டுவரி விதிப்புப் பதிவேடு ஒன்றைத் தயாரிக்குமாறும், மாவட்ட ஆட்சியர் பொதுவான அல்லது தனியான ஆணையின் வசூலிக்கப்பட்ட மொத்த தொகையில் நூற்றுக்கு 6.25 சதவிகிதத்திற்கு மேற்படாமல் ஊதியமாக நிர்ணயம் செய்து கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு வந்து சேர வேண்டிய வரி அல்லது கட்டணம் எதனையும் வசூலிக்குமாறும் நிலவருவாய்த்துறைப் பணியாளர்களைக் கேட்டுக் கொள்வதற்கும் அதிகாரம் பெற்றிருப்பார்.

**178. வசூலிக்க இயலாத தொகைகளை கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல்**

நிர்ணயிக்கப்படக்கூடிய கட்டுப்பாடுகளுக்கும் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய குழுவானது வரி, கட்டணம் அல்லது வேறு வகையில் அதற்குச் சேர வேண்டிய தொகை, அவை ஒப்பந்தத்தின்படி அல்லது வேறு எந்த வகையினாலும் அல்லது அது தொடர்பாக செலுத்தப்படத்தக்க தொகை எதனையும், அதன் கருத்தின்படி அத்தகைய வரி கட்டணம், பணம் அல்லது தொகையானது வசூலிக்க இயலாததாக இருக்குமாயின் அக்கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியக் குழு அதனைக் கணக்கிலிருந்து தள்ளுப்படி செய்துவிடலாம்.

ஆனால் கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு சேர வேண்டிய வரி, கட்டணம் அல்லது ஏனைய தொகை எதனையும் வசூலிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது அவரின் கீழ்நிலை அலுவலர்களை சார்ந்தது என்றால் அத்தகைய வரி கட்டணம் அல்லது பணம் அல்லது அது தொடர்பான தொகை எவையும் வசூலிக்க இயலாது என்ற காரணத்தினால் அவற்றைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான அதிகாரம் நில நிர்வாக ஆணையர் அல்லது அவருடைய கட்டுப்பாட்டிற்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் செலுத்தலாம்.

**179. உள்ளூர் கல்வி மான்யம்**

அரசு ஆண்டு தோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக்குழுவிற்கும் உள்ளூர்க் கல்வி மான்யம் வழங்க வேண்டும். அத்தொகை பின்வரும் வகையில் கணக்கிடப்பட வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதிக்குப் பற்று வைக்கப்படுவதற்காக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த செலவுத் தொகையானது, கீழே குறிக்கப்பட்ட முறையில் நிலை வாரியாக (Slabs) முறை வீதத்தின்படி பிரிக்கப்பட வேண்டும்.

பிரிவு 170ல் கூறப்பட்டுள்ளபடி, செலவுத் தொகையில், வளர்ச்சி வட்டாரத்தின் நிலவரிக்கு நிகரானதாக இருக்கக் கூடிய அளவு முதல் கட்டத் தொகையாக அமையும்.

அச்செலவுத் தொகையில் முதல் கட்டத் தொகையை விட கூடுதலாக இருக்கக்கூடிய அந்த அளவு தொடர்புடைய ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தின் மக்கள் தொகையில் ஒவ்வொரு தனிநபருக்கு 250 காசுகள் என்பதற்கு உட்பட்டு, இரண்டாம் கட்டத் தொகை அமையும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக்குழுவிற்கும் அரசு உள்ளூர் கல்வி மானியம் அளிக்க வேண்டும். ஐம்பது சதவிகிதத்திற்கு குறையாமலும் எண்பது சதவிகிதத்திற்கு மிகாமலும் அந்த வளர்ச்சி வட்டாரத்தைப் பொறுத்த அளவில், அரசு குறிப்பிடக் கூடிய இரண்டாம் கட்டத் தொகையின் விகிதாச்சாரப்படி இருக்க வேண்டும்.

**180. உள்ளூர் தீர்வை மேல் வரிக்கு, ஈடான மானியம்**

1 (* * * * ) நீக்கப்பட்டது

**181. ஊராட்சி வளர்ச்சி வட்டாரங்களின் வகைப்பாடு**

ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள் வழங்கும் நோக்கத்திற்காக, அரசு. பொருத்தமானதென்று கரும் முறையில் ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒரு முறையும், ஊராட்சி வளர்ச்சி வட்டாரங்களை வகைப்படுத்தலாம் மற்றும் வெவ்வேறு வகையான ஊராட்சி வளர்ச்சி வட்டாரங்களுக்கு வேறுபடும் வீதங்களில் ஒவ்வொரு ஐந்தாண்டிற்கும் மானியம் வழங்குவதற்கு அரசிற்கு உரிமையுண்டு.

**2 181-ஏ ஊராட்சி நிதியை வைப்பீடு செய்தல்**

உபரி நிதி உள்ள ஊராட்சி எதுவும், ஆய்வாளரின் முன் ஒப்புதல் பெற்று அத்தகைய உபரி நிதியை அரசு குறித்துரைக்கும் நிதி நிறுவனங்களில் ஏதொன்றிலும் வைப்பீடு செய்து கொள்ளலாம். ஆனால் அடுத்து வரும் பன்னிரெண்டு மாத காலத்திற்கு நிர்வாக அல்லது மேம்பாடு பணிகளுக்காக இந்த நிதியை பயன்படுத்தி கொள்கின்ற தேவை இருக்கிறபோது அத்தகைய வைப்பீடு எதுவும் செய்யப்படக் கூடாது.

---

180 1 இப்பிரிவு, நீக்கப்படுவதற்கு முன்னர் (அரசு ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் உள்ளூர் தீர்வை மேல்வரிக்கு ஈடாக மானியம் வழங்குதல் வேண்டும். அது அந்த ஊராட்சி ஒன்றயத்தில் விதிக்கப்படும் உள்ளூர் தீர்வை மேல்வரி வசூல் தொகையில் நிர்ணயிக்கப்படக்கூடிய விழுக்காட்டில் கணக்கிடப்பட்ட ஒரு தொகையாக இருத்தல் வேண்டும்) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 4ன் படி நீக்கப்பட்டது.

181 A 2 பிரிவுகள் 181எ, 181-பி, 181-சி மற்றும் 181-டி ஆகிய நான்கு பிரிவுகளும் 2000ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/2000)படி புதியதாக சேர்க்கப்பட்டது.

**181-பி செயல் திட்டத்திற்கு அல்லது ஏற்பாட்டுத் திட்டத்திற்கு மானியம் அல்லது கடன் வழங்குதல்**

**(1)** ஊராட்சியொன்றினால் நிர்வகித்து வரப்படும் பொருள் ஏதொன்றின் தொடர்பாக குறிப்பிட்ட செயல் திட்டத்தை அல்லது ஏற்பாட்டுத் திட்டத்தை, செயல்முறைத் திட்டத்தை, அல்லது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, குறித்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, அரசு அத்தகைய ஊராட்சிக்கு மானியம் அல்லது கடன் வழங்கலாம்.

**(2)** அத்தகைய ஊராட்சிக்கு எந்த நோக்கத்திற்காக அத்தகைய மானியம் அல்லது கடன் வழங்கப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கத்திற்காக

மட்டுமே அத்தகைய மானியத்தை அல்லது கடனைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**(3)** இந்தப் பிரிவின்படி அரசால் வழங்கப்பட்ட கடனைப் பொறுத்த அளவில் 1914-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் கடன் சட்டத்தின் (மத்திய சட்டம் IX/1914) வகை முறைகள் பொருந்துதல் வேண்டும்.

**181-சி ஊராட்சி கடன் பெறுதல்**

ஒவ்வொரு ஊராட்சியும், பின்வரும் நோக்கங்களில் ஏதொன்றுக்காகவும்:- அதாவது

(எ) ஊராட்சி பகுதியில் உள்ள உள்கட்டமைப்புகளின் மேம்பாடு மற்றும் வளர்ச்சி சம்பந்தப்பட்ட பணிகளில் எதையும் நிறைவேற்றும் பொருட்டு

(பி) இயற்கைப் பேரிடர்கள் நிகழ்கிற காலத்தில் நிவாரணப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு

(சி) மேற்காணும் நோக்கங்களுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றிற்குத் துணையான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளும் பொருட்டு, மற்றும்

(டி) சட்டப்படியான அதன் பிற அலுவலல்களில் நிறைவேற்றும் பொருட்டு நிதி நிறுவனம் நிதி முகவரமைப்பு அல்லது வங்கி எதனிடமிருந்தும் இதன் பொருட்டு அரசால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, முழுவதுமாகவோ பகுதியாகவோ கடன் பெறுவதற்குத் தகுதியுடையதாகும்.

**181-டி- ஊராட்சிகள் ஒன்றுக்கொன்று கடன் அளித்துக் கொள்வதற்கான நடைமுறை**

(1) தனது சட்டப்படியான அலுவல்களில் எதையும் நிறைவேற்றும் பொருட்டு அல்லது மூலதனச் சொத்துக்களையோ அல்லது வருமானம் உண்டாக்குகின்ற சொத்துக்களையோ உருவாக்குவதற்காக ஆய்வாளரின் முன் அனுமதியுடன் ஊராட்சி எதுவும் பிற ஊராட்சி எதனிடமிருந்தும் கடன் பெறலாம் மற்றும் ஊராட்சி எதுவும் மற்றொரு ஊராட்சிக்குக் கடன் வழங்கலாம்.

(2) இந்தப் பிரிவு மற்றும் 181-சி ன்படி கடன் பெறுவதற்கான கடனைப் பயன்படுத்திக் கொள்வதற்கான மற்றும் அதைத் திருப்பிச் செலுத்துவதற்கான நடைமுறையானது நேர்விற்கேற்ப நிதி நிறுவனமும் அல்லது நிதி முகவரமைப்பும் அல்லது வங்கியும் அல்லது கடன் கொடுக்கின்ற ஊராட்சியும் மற்றும் கடன் வாங்குகின்ற ஊராட்சியும் ஒன்றுக்கொன்று தமக்குள் உடன்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும். ஒவ்வொரு ஊராட்சியும் அந்தக் கடனைப் பொறுத்த அளவில் வகுத்துரைக்கப்படக்கூடிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வர வேண்டும்.

(3) ஒவ்வொரு ஊராட்சியும் எந்த நோக்கங்களுக்காக அத்தகைய கடன்கள் பெறப்படுகின்றனவோ அந்த நோக்கங்களுக்காக மட்டுமே கடன்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**182. உள்ளூர் சாலைகள் மானியம்**

[1] (* * * ) நீக்கப்பட்டது

**183. கிராம வீட்டு வரிக்கு ஈடான மானியம்**

[2] (* * *) நீக்கப்பட்டது

**184. குறித்த சில நேர்வுகளில் மானியத்தில் இருந்து கழிவு செய்தல்**

[3] (* * * ) நீக்கப்பட்டது

**185. ஊராட்சி ஒன்றிய நிதி மற்றும் கிராம ஊராட்சி நிதியையும் அமைத்தல்**

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஊராட்சி ஒன்றிய (பொது) நிதியம் ஒன்றும் ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதியம் ஒன்றும்

(ஆ) ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் கிராம ஊராட்சி நிதி ஒன்றும் அமைக்கப்படும்.

---

182 - 1 இப்பிரிவு முதலில் (அரசு, ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் உள்ளூர் சாலை மானியம் வழங்க வேண்டும். அத்தொகை அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள மதிப்பிடக்கூடிய மக்கள் தொகையில் ஒவ்வொரு தனிநபருக்காகவும், அரசால் நிர்ணயிக்கப்படக்கூடிய தொகையாக இருத்தல் வேண்டும். அத்தொகை அந்த பகுதியிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்காக செலவிடப்பட வேண்டும். மற்றும் அத்தொகை 1924ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தமிழ்நாடு சட்டம் 13/1974) வரி விதிப்புச் சட்டம் 10(1) (அ) எனும் பிரிவிற்கு இணங்க இந்தச் சட்டம் தொடக்கத்திற்கு வருவதற்கு முன்னர் செலுத்தத்தக்க தொகைகளுக்குப் பதிலாக தொகையாக இருக்க வேண்டும்.

ஆனால் இப்பிரிவின்படி உள்ளூர் சாலைகள் மானியம் என்கிற வகையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையைக் கணக்கிடும் போது, அந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலைகளின் நீளம் மற்றும் தன்மை ஆகியவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டும்) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 4ன்படி நீக்கப்பட்டது.

183 2 இப்பிரிவு முதலில் (கிராம ஊராட்சியில் வீட்டு வரியாக வசூலிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயின் மீது அதற்கு நிகரான ஒரு தொகையை அரசு மானியமாக வழங்க வேண்டும். அது கிராம ஊராட்சி வீட்டு வரிக்கீடான மானியம் என்று வழங்கப்படும்) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 4ன்படி நீக்கப்பட்டது.

184 3 இப்பிரிவு முதலில் (ஊராட்சி) ஒன்றியம் ஒன்றிற்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளின் நலனுக்காக பொதுவான வேலைகளை மேற்கொள்ளும் போது அத்தகைய வேலைகளுக்கான செலவுத் தொகையை அதன் மூலம் பயனடைந்த வெவ்வேறு கிராம ஊராட்சிகளிடையே பகிர்வு செய்து கொள்ளலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஊராட்சி ஒன்றியமானது 167 மற்றும் 175 ஆம் பிரிவுகளின்படி கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையிலிருந்து அத்தகைய செலவுத் தொகையின் பங்கை வசூலித்துக் கொள்ள தகுதியுடையதாகும்) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 4ன்படி நீக்கப்பட்டது.

**186. ஊராட்சி ஒன்றிய (பொது) நிதி**

ஊராட்சி ஒன்றிய (பொது) நிதியில் வைக்கப்பட வேண்டிய இனங்களில் வரவு பின்வருபவை அடங்கும்.

(எ) 1 (* * * * ) நீக்கப்பட்டது

(பி) பிரிவு 168ன்படி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் வசூலிக்கப்பட்ட தல மேல்வரி

(சி) 2 (* * * * ) நீக்கப்பட்டது

(டி) 3 (* * * * ) நீக்கப்பட்டது

(இ) ஊராட்சி ஒன்றிய மன்றம் வழங்கிய உரிமங்கள் மற்றும் அனுமதிகள் மீதான கட்டணங்கள்

(எ.ஃ.ப்) ஊராட்சி ஒன்றிய சந்தைகளென்று வகைப்பாடு செய்யப்பட்ட பொதுச் சந்தைகளில் விதிக்கப்பட்ட கட்டணங்களில் அரசு நிா்ணயித்த அளவுகோளின்படி ஊராட்சி ஒன்றியத்தால் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்ட பங்களிப்பை கழித்துக் கொண்டதற்கு பின்னா் உள்ள கட்டணத் தொகை ஏதேனுமிருப்பின் அத்தொகை

(ஜி) கிராம ஊராட்சி சந்தைகள் என்று வகைப்படுத்தப்பட்ட சந்தைகள் தொடா்பாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு கிராம ஊராட்சிகள் செலுத்திய பங்களிப்பு

(எச்) சாலைகள் அல்லது சாலை ஓரங்களை தற்காலிகமாகப் பயன்படுத்தியதற்கான கட்டணங்கள்

(ஐ) சத்திரங்களைப் பயன்படுத்தியதற்கான கட்டணங்கள்

(ஜே) ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் பராமரிக்கப்படும் மருந்தகங்களிலிருந்து கிடைக்கும் வரவினங்கள்

(கே) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிா்வாகத்திலுள்ள அறக் கட்டளைகள் மற்றும் பொறுப்புக் கட்டளைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்

(எல்) 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) பிரிவு 13ன் படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் பெறப்பட்ட கேளிக்கை வரித் தொகையின் விகிதாச்சார பங்குத் தொகை

(எம்) பராமரிக்கப்படும் அல்லது நிதியுதவி அளிக்கப்படும் ஊராட்சி ஒன்றிய நிதியகங்களிலிருந்து அல்லது ஊராட்சி ஒன்றியத்தால் நிா்வகிக்கப்படும் நிறுவனம் அல்லது பணி ஒவ்வொன்றுக்கும் உதவுகின்ற வகையில் அரசு பிற ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் நகராட்சிகள் பிற உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் நபா்களிடமிருந்து வரும் பங்களிப்புகள்

(என்) கருவிகள், தளவாடங்கள், பண்டங்கள் மற்றும் பொருள்களின் விற்று முதல் தொகை மற்றும் ஊராட்சி ஒன்றியச்சாலை ஓரங்களிலுள்ள மரங்கள் மற்றும் நிழல் தரும் மரங்கள் மூலம் கிடைக்கும் தொகை

(ஒ) ஊராட்சி ஒன்றிய படகுத்துறை மற்றும் மீன்வளத்தின் மூலம் கிடைக்கும் வருமானம்

(பி) கடன்கள் மற்றும் கடனீட்டு ஆவணங்கள் மீதான வட்டித்தொகை

---

186 (எ) 1 இக்கூறு முதலில் (பிரிவு 167ன் படி ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதியத்திலும் கிராம ஊராட்சி நிதியத்திலும் வரவு வைத்ததற்குப் பின் எஞ்சி நிற்கின்றதான. ஊராட்சி வளா்ச்சி வட்டாரத்தில் வசூலிக்கப்பட்ட உள்ளூா் தீா்வையின் அந்தப் பகுதிக் தொகை) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 5ன்படி நீக்கப்பட்டது.

186 (சி) 1 இக்கூறு முதலில் (பிரிவு 167ன் படி ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதியத்திலும் கிராம ஊராட்சி நிதியத்திலும் வரவு வைத்ததற்குப் பின் எஞ்சி நிற்கின்றதான. ஊராட்சி வளா்ச்சி வட்டாரத்தில் வசூலிக்கப்பட்ட உள்ளூா் தீா்வையின் அந்தப் பகுதிக் தொகை) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 5ன்படி நீக்கப்பட்டது.

186 (டி) 3 இக்கூறு முதலில் (பிரிவு 182 ன்படி வழங்கிய உள்ளூா்ச் சாலைகள் மானியம்) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 5ன்படி நீக்கப்பட்டது.

(க்யூ) வரி நிலுவை மீதான வட்டித் தொகை

(ஆா்) ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கட்டடங்கள் நிலங்கள் மற்றும் பிற சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானமும் அவற்றை விற்பனை செய்ததிலிருந்து பெறப்பட்ட தொகை

எஸ்) கோரிக்கை பெறப்படாத வைப்பீடுகள் மற்றும் ஏனைய தண்ட இழப்புத் தொகைகள்

(ட்டி) இச்சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் அதன் கோரிக்கையின் பேரில் அல்லது அதன் சார்பில் விதிக்கப்பட்ட அபராதங்களும் மற்றும் தண்டனைத் தொகைகளும்

(யூ) ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்து பராமரிக்கப்படும் அல்லது நிதியுதவி அளிக்கப்படும் அல்லது ஊராட்சி ஒன்றியத்தால் நிருவகிக்கப்படும் நிறுவனங்கள் அல்லது பணிகள் எவற்றிலிருந்தும் எழுகின்ற அல்லது அவற்றிற்கு உதவுவதற்காக அல்லது அவற்றிற்குச் செலவிடப்படுவதற்காகப் பெறப்படுகின்ற மேலே விவரிக்ககப்பட்டவை, அல்லது பிரிவு 187 ன் படியானவை இல்லாத பிற தொகைகள் அனைத்தும்.

(வீ) ஊராட்சி ஒன்றியத்தால் பெறப்பட்ட பிற தொகைகள் அனைத்தும்

**187. ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதி**

ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதியில் வரவு வைக்கப்பட வேண்டிய இனங்களில் பின்வருபவை அடங்கும்.

(ஆ) பிரிவு 170ன்படி அரசால் வழங்கப்பட்ட நில வருவாய் ஒதுக்கீடு

(இ) அரசால் வழங்கப்பட்ட உள்ளூர் கல்வி மானியம்

(ஈ) ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையினை சமநிலைப்படுத்துவதற்காகத் தேவைப்படுகிறது என அரசு தீர்மானிக்கக் கூடிய ஊராட்சி ஒன்றிய (பொது) நிதியிலிருந்து கொடுக்கப்படும் உதவித் தொகை.

(உ) 1920 ஆம் தமிழ்நாடு தொடக்கக் கல்வி சட்டத்தின் வகைமுறைகளின்படி ஊராட்சி ஒன்றியத்தின் அதிகார வரம்பிற்குள் விதிக்கப்பட்ட அபராதங்களும் தண்டனைத் தொகைகள் அனைத்தும்

(ஊ) தொடக்கக் கல்வி நலப் பயனுக்காக ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான அல்லது அதனால் நிர்வகிக்கப்படும் அறக் கட்டளைகள் அல்லது பிறச் சொத்துக்களில் இருந்தும் கிடைக்கப் பெற்ற வருமானம் அனைத்தும்

(எ) தொடக்கக் கல்வி நோக்கங்களுக்காக ஊராட்சி ஒன்றியத்தால் பெற்றுக் கொள்ளக்கூடிய அல்லது பெறப்படக் கூடிய பிற தொகைகள் அனைத்தும்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

187 (அ) 1 இக்கூறு முதலில் (பிரிவு 167ன்படி வசூலிக்கப்பட்ட உள்ளூர் தீர்வையில் நூற்றுக்கு இருபது சதவிகிதம்) என இருந்ததை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 6ன்படி நீக்கப்பட்டது.

**188. கிராம ஊராட்சி நிதி**

1(1) கிராம ஊராட்சி நிதியில் வரவு வைக்கப்பட வேண்டிய இனங்களில் பின்வருபவை அடங்கும்.

2(எ) இந்தச் சட்டத்தின் பிரிவுகள் 171 மற்றும் 172 வரை விதிக்கப்பட்ட வீட்டுவரி மற்றும் பிற வரி எதுவும் அல்லது தீர்வை அல்லது கட்டணம் எதுவும் )

3(பி) IX-A எனும் அத்தியாயத்தின்படி கிராம ஊராட்சியால் விதிக்கப்படும் தொழில்வரி)

(சி) இந்தச் சட்டத்தின் பிரிவு 175ன் படி விதிக்கப்பட்ட சொத்து மாற்றங்களின் மீதான தீர்வை

(டி) பிரிவு 167ன் படி வழங்கப்படும் உள்ளூர் தீர்வை (தல வரி) 4 (* * * )

(இ) 5 (* * * ) நீக்கப்பட்டது

(எ.்.ப்) 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுச் சட்டத்தின் பிரிவு 117 மற்றும் 118ன்படி கிராமத்தில் விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் சங்கக் கட்டணங்கள்

(ஜி) கிராம ஊராட்சிச் சந்தைகளாக வகை செய்யப்பட்ட பொது சந்தைகளிலிருந்து பெறப்பட்ட கட்டணங்களில் அரசால் நிா்ணயிக்கப்பட்ட அளவுப்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு கிராம ஊராட்சியினால் செலுத்தப்பட்ட பங்களிப்புகள் எவையேனுமிருப்பின் அவற்றைக் கழித்த பின்பு உள்ள கட்டணங்கள்

(எச்) ஊராட்சி ஒன்றிய சந்தைகளாக வகை செய்யப்பட்டுள்ள சந்தைகளைப் பொறுத்த அளவில் ஊராட்சி ஒன்றியத்தால் கிராம ஊராட்சிக்குச் செலுத்தப்பட்ட பங்களிப்பு

(ஐ) கிராம ஊராட்சியிலுள்ள கிராம மனைகள், சாலைகள் மற்றும் அதே போன்ற பிற பொது இடங்கள் அல்லது அவற்றின் பகுதிகளை தற்காலிகமாக அனுபவித்து வருவதற்கான கட்டணங்கள்

---

188 (1) 5 உட்பிரிவு (1) 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 54/1997) பிரிவு 1ன்படி புதியதாக எண்ணிடப்பட்டது.

188 (A) 2 இக்கூறு 1995ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1995 பிரிவு 2ன்படி திருத்தப்பட்டது.

188(B)3இக்கூறு முதலில் ( 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில்கள் வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள் மற்றும் பணித்தொழில்கள் மீதான வரிச் சட்டத்தின்படி கிராம ஊராட்சிகளால் விதிக்கப்பட்ட தொழில் வரி) என இருந்ததை 1999 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 7ன்படி ( ) திருத்தப்பட்டது

188 (D) 4இக்கூறின் (பங்கு என்ற சொல் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 7ன்படி நீக்கப்பட்டது.

188 (E) 5இக்கூறில் (கிராம ஊராட்சி நிதியை பொறுத்தவரையில் வீட்டுவரிக்கு ஈடான மான்யம்) என்ற சொற்றொடா் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடுகள் ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1999) பிரிவு 7ன்படி நீக்கப்பட்டது.

(ஜே) இந்தச் சட்டத்தின் வகைமுறை எதனையும் அல்லது அதன்படி இயற்றப்பட்ட விதி அல்லது ஆணை எதனையும் தொடா்ந்து கிராம ஊராட்சியால் விதிக்கப்பட்ட கட்டணங்கள்

கே) கிராம ஊராட்சியின் நிா்வாகத்தின் கீழுள்ள அறக் கட்டளைகள் மற்றும் பொறுப்பு கட்டளைகளிலிருந்து பெறும் வருமானம்

(எல்) அரசால் திரும்பவும் எடுத்துக் கொள்ளப்பட்ட இனாம்களின் மீது விதிக்கும் நிகர தீா்வை (வரி)

(எம்) 1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டம் பிரிவு 13ன்படி கிராம ஊராட்சியால் பெறப்பட்ட கேளிக்கை வரி வசூல் தொகையில் கிராம ஊராட்சிக்கு அளிக்கப்படும் விகிதாச்சாரத்திலான பங்கு

(என்) ஊராட்சி கிராமத்திலுள்ள மீன்வளங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்

(ஒ) கிராம ஊராட்சியின் நிா்வாகத்தின் கீழுள்ள படகுத்துறையிலிருந்து கிடைக்கும் வருவாய்

(பி) கோரிக்கை பெறப்படாத வைப்புத் தொகை, இதர பறிமுதல் செய்யப்பட்ட தொகைகள்

(க்யூ) ஊராட்சி கிராமத்தில் சாலைப் பொருட்களுக்காகக் கல் உடைத்தலுக்கு அனுமதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் அரசால் வசூலிக்கப்பட்ட சிறப்புரிமைக் கட்டணத்திற்கு இணையான ஒரு தொகை

(ஆர்) கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்குகளைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் வருமானம்

(எஸ்) ஊராட்சி கிராமத்தில் இரயத்துவாரி நிலம் இருக்குமானால் புறம்போக்குகளைப் பயன்படுத்தும் உரிமை கிராம ஊராட்சியிடம் இல்லாவிட்டாலும், அப்புறம்போக்கில் உள்ள மரங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் அனைத்தும்,

(ட்டி) கிராம ஊராட்சியால் பெறப்பட்ட அரசுச் சொத்தின் குத்தகைகளின் மூலமான வருவாய்

(யூ) கிராம ஊராட்சியால் அல்லது கிராம ஊராட்சியின் கோரிக்கையின் பேரில் அல்லது கிராம ஊராட்சி சார்பாக இந்தச் சட்டத்தின்படி விதிக்கப்பட்ட அபராதங்களும் மற்றும் தண்டனைத் தொகைகளும்,

(வி) மேலே விவரிக்கப்பட்டவை அல்லாத கிராம ஊராட்சி நிதியிலிருந்து பராமரிக்கப்படும் அல்லது நிதியளிப்பு செய்யப்படும் அல்லது கிராம ஊராட்சியால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் அல்லது பணிகள் எதனின் பேரிலும் எழுகின்ற அல்லது உதவியாகப் பெறப்பட்டிருக்கிற அல்லது அவற்றின் செலவுக்காக பெறப்படும் பிற தொகைகள் அனைத்தும்,

(டபில்யூ) கிராம ஊராட்சியால் பெறப்படும் இதர தொகைகள்

(2) உட்பிரிவு (1)ல் என்ன கூறப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு நிதிக்கும் தனித்தனியான கணக்கை பராமரிக்க வேண்டும் என அரசு கட்டளையிடலாம். இக்கணக்குகளில் எந்த வகையான நிதிகளை வரவு வைக்க வேண்டும் அதை எப்படி செலவு செய்ய வேண்டும் என்பதை அரசு இயற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

(3) பொதுவாக கிராம ஊராட்சி நிர்ணயிக்கும் கட்டுபாடுகளுக்கு உட்பட்டு, கிராம ஊராட்சி நிதியிலிருந்தோ அல்லது உட்பிரிவு (2)ன்படி அமைக்கப்படும் நிதியிலிருந்தோ, செலவுகளுக்காக வழங்கப்படும் காசோலைகளில் கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் துணைத்தலைவரும் இணைந்து கூட்டாக கையொப்பமிட வேண்டும். மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் இல்லாத போது துணைத் தலைவரும் மற்றும் கிராம ஊராட்சியால் இதற்கெனக் கூட்டப்பட்ட கூட்டத் தீர்மானம் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உறுப்பினரும் நிகழ்விற்கேற்ப கூட்டாகக் கையொப்பமிட வேண்டும்.

### 189. மாவட்ட ஊராட்சி (பொது) நிதி

(1) மாவட்ட ஊராட்சி ஒவ்வொன்றுக்கும் மாவட்ட ஊராட்சி (பொது) நிதி ஒன்று அமைக்கப்பட வேண்டும் மற்றும் பின்வருவனவற்றை மாவட்ட ஊராட்சி (பொது) நிதியின் பகுதியாக அமைத்தல் வேண்டும் அல்லது அதில் செலுத்தப்பட வேண்டும்.

(அ) மாநில தொகு நிதியிலிருந்து ஒதுக்கீடு மூலம் மாவட்ட ஊராட்சி (பொது) நிதிக்கு மாற்றப்பட்ட தொகை

(ஆ) அரசால் அளிக்கப்பட்ட மானியங்கள் குறித்தளிப்புத் தொகைகள் கடன்கள் மற்றும் பங்களிப்பு அனைத்தும்

(இ) மாவட்ட ஊராட்சியின் நிலங்கள் அல்லது பிற சொத்துக்களிலிருந்து வரும் வாடகைகள் அனைத்தும் இதற்கெனக் கூட்டப்பட்ட கூட்டத் தீர்மானம் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உறுப்பினரும் நிகழ்விற்கேற்ப கூட்டாகக் கையொப்பமிட வேண்டும்.

(ஈ) தனி நபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து கொடையினால், மானியங்களால் குறித்தளிப்புகளால் அல்லது சேர்ந்த வட்டிகள் லாபங்கள் மற்றும் பிற தொகைகள் மாற்றங்களால் அனைத்தும்

(உ) நிலம், காப்புறுதி ஆவணம் மற்றம் பிற சொத்துக்களை மாவட்ட ஊராட்சி விற்பதால் கிடைக்கும் வருமானங்கள் அனைத்தும்.

(ஊ) இந்தச் சட்டத்தின்படி மாவட்ட ஊராட்சிக்குச் செலுத்தப்பட்ட அல்லது மாவட்ட ஊராட்சிசார்பாக விதிக்கப்பட்ட அனைத்து கட்டணங்களும், அபராதங்களும்

(எ) இந்தச் சட்டத்தின்படி மாவட்ட ஊராட்சியால் அல்லது மாவட்ட ஊராட்சி சார்பாக பெறப்பட்ட தொகைகள் அனைத்தும்

(2) அரசு ஒவ்வொரு மாவட்ட ஊராட்சி (பொது) நிதிக்கும் அரசால் தீர்மானிக்கப்படக் கூடிய அளவில் பணியாளர் அமைப்பின் செலவுகளை உள்ளடக்குவதற்காக மானியம் ஒன்றை அரசு வழங்குதல் வேண்டும்.

---

188 1 உட்பிரிவு (2) மற்றும் (3) 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 54/1997) பிரிவு 2ன்படி சேர்க்கப்பட்டது.

## செலவினங்கள்

### 190. பெறப்பட்ட பணங்களை பயன்படுத்தலும் நிதிகளிலிருந்து செலவு செய்தலும்

ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் மற்றும் கிராம ஊராட்சியால் பெறப்பட்ட அனைத்து தொகைகளும் இந்தச் சட்டத்தின் மற்றும் பிற சட்டங்களின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் பயன்படுத்தப்படவும் மற்றும் செலவிடப்படவும் வேண்டும்.

ஆனால் நிர்ணயிக்கப்படக் கூடிய விதிகளுக்கு உட்பட்டு இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படுகிற எந்த ஒரு வரியிலிருந்தும் கிடைக்கும் தொகைகளைக் குறித்து பொது வளர்ச்சித் திட்டம் ஒன்றுக்குப் பண உதவி செய்வதற்கென தனியாக ஒதுக்கி வைப்பதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கோ, கிராம ஊராட்சிக்கோ அதிகாரம் உண்டு. அத்தகைய ஒவ்வொரு வரி அல்லது கூடுதல் வரியிலிருந்து கிடைக்கும் வரிகளையும் அதன் செலவையும் குறித்து, தனிக் கணக்கு ஒன்றை வைத்து வர வேண்டும்.

### 191. கிராம ஊராட்சி நிதி மற்றும் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு

(1) ஊராட்சி ஒன்றியத்தின் அல்லது கிராம ஊராட்சியின் நிதி எந்த காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்ளலாம் என்று இந்தச் சட்டத்தின்படியோ, இதன் விதிகளிலோ அல்லது வேறு எந்த சட்டங்களின் விதிகளின்படியோ, கட்டடாயமானவை அல்லது விருப்பம் போல் செய்யக்கூடியவை என வெளிப்படையாக அறிவிக்கக் கூடிய எல்லா காரியங்களும் அடங்கும். மேற்படி காரியங்களுக்காக அறிவிக்கக்கூடிய விதிகளுக்கும் சிறப்பு ஆணைகளுக்கும் உட்பட்டு மேற்படி நிதிகளை ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சியில் செலவு செய்ய வேண்டும். மேலும் கிராம ஊராட்.சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு வெளியே இன்ன காரியங்களுக்காக செலவு செய்ய வேண்டும் என்று இந்த சட்டத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அல்லது ஆய்வாளர் அனுமதி அளித்திருந்தாலும் மேற்சொன்ன வரைமுறைகளுக்கு உட்பட்டு செலவு செய்ய வேண்டும்.

(2) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றமும், கிராம ஊராட்சியும் பின்வருபவகைகளுக்காக தொகை செலுத்த வகை செய்வது அவைகளின் கடமையாகும்.

(அ) ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்கள் எதனின் பேரிலும் செலுத்த வேண்டிய தொகை

(ஆ) அலுவலர்களின் அல்லது பணியாளர்களின் சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஓய்வூதியம், ஓய்வூதியப் பங்களிப்புகள் மற்றும் வருங்கால வைப்புநிதி பங்களிப்பு

(இ) நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அல்லது ஆணையின்படி செலுத்த வேண்டிய தொகைகள்

(ஈ) இந்தச் சட்டத்தின்படியோ அல்லது பிற சட்டம் எவற்றின்படியோ கட்டாயமானவையாக ஆக்கப்பட்டுள்ள பிற செலவுகள்

(3) ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சிகள், ஆய்வாளரின் ஒப்பளிப்புடன் இந்திய பாதுகாப்பிற்கான நிதி எதற்கும் பங்களிக்கலாம்.

(4) ஒரு ஊராட்சி ஒன்றியம் அல்லது கிராம ஊராட்சிகள், ஆய்வாளரின் ஒப்பளிப்புடன்

(அ) ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் அல்லது ஊராட்சி கிராமத்திலுள்ள பொதுக் கண்காட்சி, விழா அல்லது கேளிக்கை எதனின் செலவுகளின் பொருட்டு உதவித் தொகை அளிக்கலாம்.

(ஆ) அறக்கட்டளை நிதி எதற்கும் அல்லது ஏழைகளின் நிவாரணம் அல்லது நோய்க்கு சிகிச்சை செய்தல், அல்லது நலிந்த திக்கற்ற நபர்களுக்கு ஆதரவு அளித்தல் அல்லது நோயின் காரணங்களை ஆய்வு செய்யும் நிறுவனங்கள் எதனின் நிதிகளுக்கும் பங்களிக்கலாம். மற்றும்

(உ) ஏதேனும் பிற அசாதாரண செவவுகளுக்கும் பணம் வழங்கலாம்.

**192. வரவு செலவு திட்டங்கள் தயாரித்தலும் அதற்கு ஒப்பளிப்பு வழங்குதலும்**

(1) ஊராட்சியின் செயல் அலுவலர் மற்றும் ஆணையர், ஒவ்வொரு ஆண்டிலும், பின்வரும் ஆண்டின் போது நிகழக் கூடிய வரவுகள் மற்றும் செலவுகளைக் காட்டும் வரவு செலவு திட்டம் ஒன்றை தயாரித்து கிராம ஊராட்சியின் முன்பு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முன்பு வைத்தல் வேண்டும்.

(2) செயல் அலுவலரால் அல்லது ஆணையரால் கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்ட பின்பு நிர்ணயிக்கப்படக்கூடிய தேதிக்குள் நிர்ணயிக்கபடக்கூடிய அலுவலருக்கு அனுப்ப வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட அலுவலர், அதில் தேவையான பணி அல்லது பணிகள் எதனையும் செய்வதற்கு, போதிய வழிவகை செய்யப்படவில்லை எனக் கருதுவாராயின், அவர் அத்தகைய பணிகளை செய்வதற்கு வரவு செலவு திட்டத்தினைத் தேவைப்படக்கூடிய முறையில் மாற்றியமைப்பதற்கு திருப்பியனுப்பும் அதிகாரம் கொண்டிருப்பார்.

(3) கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அது பொருத்தமெனக் கருதுகிற மாற்றங்களுடன் வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டும். உட்பிரிவு (2)ல்

குறிப்பிட்டுள்ள அலுவலருக்கு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்குமாயின், வரவு செலவுத் திட்டம் கிராம ஊராட்சியினைப் பொறுத்தவரை ஆய்வாளருக்கும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தை பொறுத்தவரை அரசிற்கும் அனுப்பப்பட வேண்டும். அல்லது அய்வாளா் அரசு தேவையெனக் கருதக் கூடிய முறையில் வரவு செலவுத் திட்டத்தினை மாற்றியமைக்க அதிகாரம் பெற்றிருக்கும்.

(4) ஒரு ஆண்டின் நடைமுறை காலத்தில் வரவு செலவு திட்டத்தில் உள்ள வரவினங்கள் சம்பந்தமாகவோ, அல்லது கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் மேற்கொண்டு இருக்கிற வெவ்வேறு சேவைகளின் பொருட்டு செலவு செய்ய வேண்டிய தொகைகளின் பங்கீடு சம்பந்தமாகவோ, வரவு செலவுத் திட்டத்தில் காட்டியுள்ள இலக்கங்களை மாற்றுவது அவசியம் எனக் கருதினால், உபரி அல்லது திருத்த வரவு செலவு திட்டம் ஒன்றை உட்பிரிவுகள் (1) மற்றும் (2)ல் வகை செய்துள்ளவாறு தயாரித்து அங்கீகரிக்கலாம். அல்லது சமா்பித்துத் திருத்தலாம். ஆனால் அந்த மாற்றம் எதையும் நிா்ணயிக்கப்பட்ட அலுவலரின் சம்மதமின்றி அமலுக்குக் கொண்டு வரக்கூடாது.

(5) ஒவ்வொரு ஆண்டிலும் நிா்ணயிக்கப்படக்கூடிய தேதியில் அல்லது அதற்கு முன்பு, ஆணையா் ஒவ்வொருவரும் நிா்ணயிக்கப்பட்ட அலுவலா் மூலமாகவும் படிவத்திலும் அரசிற்கு ஊராட்சி ஒன்றிய (கல்வி) வருங்கால நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டம் ஒன்றை பணிந்தனுப்புதல் வேண்டும்.

(6) அரசு உட்பிரிவு (5) ன்படி அனுப்பப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்து, தான் பொருத்தமெனக் கருதக்கூடிய ஆணைகளை வழங்கலாம் மற்றும் தொடா்புடைய ஊராட்சி ஒன்றிய மன்றம் அத்தகைய ஆணைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

(7) ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதியின் கணக்குகள் பிரிவு 192ன்படி அரசால் நியமனம் செய்யப்பட்ட தணிக்கையரால் ஆய்வு செய்யப்படுதலும், தணிக்கை செய்யப்படுதலும் வேண்டும். மற்றும் தொடா்புடைய ஊராட்சி ஒன்றிய மன்றம் அந்தத் தணிக்கை அறிக்கையின் மீது அரசு பிறப்பிக்கக்கூடிய ஆணைகள் எவற்றையேனும் நிறைவேற்ற வேண்டும்.

**193. தணிக்கையாளா்களை அமா்த்துதல்**

(1) அரசு ஊராட்சி நிதிகளின் வரவுகள் மற்றும் செலவு கணக்குகளை தணிக்கை செய்யும் பொருட்டு தணிக்கையாளா்களை அமா்த்துதல் வேண்டும். அத்தகைய தணிக்கையாளா்கள் இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் XLV/1860 பிரிவு 21ல் கூறப்பட்ட பொருளின்படி பொது பணியாளா்கள் என கருதப்படுவா்.

(2) அத்தகைய தணிக்கையாளா்களின் சம்பளம் மற்றும் படிகள் தொடா்பாக அல்லாத ஊராட்சியின் கணக்குகளின் தணிக்கைக்கு உள்ளான ஏதேனும் பிற செலவுகள் தொடா்பாக ஊராட்சியிடமிருந்து அரசால் பங்களிப்பு எதுவும் வசூலிக்கப்படக் கூடாது.

**194. பிற உள்ளாட்சி அமைப்புகளினாலான செலவினங்களுக்கு பங்களிப்பு**

இந்தச் சட்டத்தினாலோ இதன்படி அதிகாரமளிக்கப்பட்ட காரியம், எதற்காகவும், அரசால் அல்லது ஏதேனும் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சியால் அல்லது மாநிலத்திலுள்ள ஏதேனும் பிற உள்ளாட்சி அதிகார அமைப்பால், செலவு செய்யப்பட்ட செலவினம் ஊராட்சி ஒன்றியம் அல்லது கிராம ஊராட்சியால் குடியிருப்பவா்களின் நலனுக்கு பயனுள்ளதாக இருக்குமாயின் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சி ஆய்வாளரின் அனுமதியுடன் அத்தகைய செலவு தொடா்பாக உதவித் தொகை கொடுக்க வேண்டும். அவரால் அவ்வாறு பணிக்கப்படுமாயின் அத்தொகை செலுத்திட வேண்டும்.

**195. அரசால் அளிக்கப்பட்ட கடன்களையும் முன் பணங்களையும் வசூலித்தல்**

(1) 1914ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் கடன்கள் சட்டத்தில் (மத்திய சட்டம் IX/1914) என்ன சொல்லியிருந்த போதிலும், அரசானது

(அ) ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சியின் நிதிகளை பொறுப்பில் வைத்துள்ள நபர் எவரையும் இந்தச் சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சி நிறைவேற்ற வேண்டிய நோக்கங்களை அடைவதற்காக அதனால் அளிக்கப்பட்ட கடன் அல்லது முன்பணம் தவிர, அந்த நிதியிலிருந்து செய்யப்படும் பிற செலவுகள் எதற்கும் மேல் முன்னுரிமை கொடுத்து தனக்கு செலுத்துவதற்கு ஆணையின் வாயிலாக பணிக்கலாம்.

(ஆ) உரிமை வழக்கு வாயிலாக அத்தகைய கடன் அல்லது முன் பணம் எதனையும் வசூலிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) கூறு (அ)ல் குறிப்பிட்டுள்ள ஆணை எந்த நபருக்கு முகவரியிடப்பட்டுள்ளதோ அந்த நபர் அத்தகைய ஆணைக்கு இணங்கி நடப்பதற்குக் கட்டுப்பட்டவர் ஆவார்.

**196. மாவட்ட ஊராட்சிக்கு இந்தச் சட்டத்தின் குறித்த சில பிரிவுகளின் பொருத்துகை**

(1) பிரிவுகள் 190, 191, 192, 194 மற்றும் 195 (இரண்டும் உள்ளடங்கலாக) கூறப்பட்டுள்ள வகைமுறைகள் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் தொடர்பாக பொருத்துவதன் போன்றே கூடிய அளவிற்கு மாவட்ட ஊராட்சி தொடர்பாகவும் பொருந்தும்.

---

**193 (2)** The government may recover from the panchayats the expenditure incurred by the Government in meeting of the audit of the panchayat act such percentage of the expenditure as may be fixed by the Government. (Act 19/2001)

**197. அரசால் அறிவிக்கை செய்யப்பட வேண்டிய மாவட்ட ஊராட்சியின் குறித்த சில அதிகாரங்களும் பணிகளும்**

(1) அரசு அவ்வப்போது

(அ) கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது அரசு அதிகாரங்கள் மற்றும் பணிகளில் எதனையும் அல்லது

(ஆ) கிராம ஊராட்சியிடம் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் அல்லது அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாவட்டத்தில் அமைந்துள்ள சாலை. பாலம், கால்வாய், கட்டிடம் அல்லது பிற அசையும் அல்லது அசையாச் சொத்து எதனையும் மாவட்ட ஊராட்சியின் ஒப்புதலுடனும் மற்றும் அரசு இயற்றக்கூடிய விதிவிலக்குகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தின்படி செலுத்தப்படுதலோ வைக்கப்படுதலோ வேண்டுமென்று அறிவிக்கை மூலமாக கேட்டுக் கொள்வது சட்டப்படியானதாகும் மற்றும் அதன் பேரில் அத்தகைய அதிகாரங்களும், பணிகளும் மற்றும் அத்தகைய சாலை, பாலம் கால்வாய், கட்டிடம் அல்லது பிற சொத்தும் அனைத்தும் விதிவிலக்குகளுக்கும், அவற்றைப் பாதிக்கும் அனைத்து பொறுப்புகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும், உட்பட்டு, மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டின் கீழும் நிர்வாகத்தின் கீழும் இருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (2)ன்படி மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பணிகள் அல்லது சொத்து எதனையும் அரசு அறிவிக்கை வாயிலாக தீர்மானிக்கக் கூடிய வரையறைகளின் பேரில் மீண்டும் பெறுவதற்கு அரசு தகுதி வாய்ந்ததாகும்.

**198. நிதி ஆணையம்**

(1) ஊராட்சியின் நிதி நிலை குறித்து ஆய்வு செய்ய இந்தச் சட்டம் நடைமுறையில் செயல்படத் தொடங்கியதற்குப் பின்னர் கூடிய வரையில், ஆனால் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் நாளுக்கு மேற்படாமலும் மற்றும் அதன் பின்பு ஒவ்வொரு ஐந்தாண்டும் முடிவுற்ற பின்னரும் அரசியலமைப்புச் சட்டம் பிரிவுக்கூறு 243-1ன்படி நிதி ஆணையம் ஒன்றை ஆளுநர் அமைக்க வேண்டும்.

(அ) பின்வருவனவற்றை நிர்வகிக்க வேண்டிய கோட்பாடுகள்

(i) அரசுக்கும் ஊராட்சிக்கும் இடையே வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்களின் நிகர வருமானத்தை பங்கீடு செய்தல், அத்தகைய வருமானத்தில் மாவட்ட ஊராட்சிக் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கிடையே உரிய பங்கினை ஒதுக்கீடு செய்தல்

(ii) ஊராட்சிகளுக்கு குறித்தளிக்கப்படக்கூடிய அல்லது ஊராட்சியால் ஒதுக்கீடு செய்யப்படக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்களைத் தீர்மானித்தல்

(iii) மாநிலத்தில் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு அளிக்கப்படும் உதவி மான்யங்கள்

(ஆ) ஊராட்சிகளின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள்

(இ) ஊராட்சிகளின் நிறை நலமான நிதி நிலையினை முன்னிட்டு ஆளுநரால் நிதி ஆணையத்திற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பிற பொருட்கள்

(2) நிதி ஆணையம் தலைவர் ஒருவரையும் நான்கு இதர உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்

(3) நிதி ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் வரையறுக்கப்பட்டுள்ள முறையில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(4) நிதி ஆணையம் தனது நடைமுறையினை தானே தீர்மானிக்கும்

(5) நிதி ஆணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர் அரசின் நிதித்துறை செயலாளருக்கு தன்னுடைய கையால் எழுதி முகவரியிட்டு தன்னுடைய பதவியைவிட்டு விலகிக் கொள்ளலாம். ஆனால் அவருடைய பதவி விலகல், ஆளுநர் ஏற்றுக் கொள்ளும் வரையில் அவர் அப்பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டும்.

(6) உட்பிரிவு (5)ன்படி உறுப்பினர் அல்லது தலைவரின் பதவி விலகல் அல்லது பிற காரணங்கள் எதனாலேனும் தற்செயலாக ஏற்பட்டிருக்கிற காலியிடம் புது நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படலாம் மற்றும் அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது தலைவர் அவர் எந்த உறுப்பினர் அல்லது தலைவரின் இடத்தில் அவர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த உறுப்பினர் அல்லது தலைவர் எந்தக் கால அளவு வரையிலும் பதவி வகித்திருக்க முடியுமோ அந்த கால அளவு வரையிலும் பதவி வகிப்பார்.

(7) நிதி ஆணையம் தன்னுடைய பணிகளை ஆற்றும் பொழுது பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்

(அ) அலுவலர் அல்லது அதிகார அமைப்பு எதனிடமிருந்தும் பதிவேடுகள் எதனையும் கேட்டுப் பெறலாம்.

(ஆ) சான்று கொடுப்பதற்கு அல்லது பதிவேடுகள் தாக்கல் செய்வதற்கு நபர் எவருக்கும் அழைப்பாணை விடுக்கலாம்.

(இ) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்கள் மற்றும்

(8) நிதி ஆணையமானது ஆணையத்தின் செயல்பாடுகள் பற்றிய அறிக்கை ஒன்றினைத் தயாரித்து, அதை நிதியாண்டின் இறுதியில் அரசுக்கு பணிந்தனுப்புதல் வேண்டும்.

(9) ஆளுநர் இந்தப் பிரிவின்படி நிதி ஆணையத்தால் செய்யப்பட்ட பரிந்துரை ஒவ்வொன்றையும் அதன் பேரில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை பற்றிய விளக்கக் குறிப்பு ஒன்றும் சேர்த்து சட்டமன்ற பேரவையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

## அத்தியாயம் 9 – ஏ

## 1நுண்ணறிவுத் திறத்தொழில், வணிகத்தொழில், மரபுத் தொழில், பணித்தொழில் ஆகியவற்றின் மீதான வரி

**198-ஏ பொருள் விளக்கம்**

இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக

(ஏ) பணியாளர் என்றால் சம்பளத்திற்கு பணியில் அமர்த்தப்பட்டுள்ள ஒரு நபர் என்று பொருள்படுவதோடு, பின்வருபவர்களையும் உள்ளடக்கும் அதாவது

(i) மத்திய அரசு அல்லது மாநில அரசு ஏதொன்றின் வருவாய்களிலிருந்தும் சம்பளம் பெறுகின்ற அரசுப் பணியாளரை

---

1 அத்தியாயம் IX-A நுண்ணறிவுத் திறத்தொழில், வணிகத் தொழில், மரபுத் தொழில், பணித்தொழில் ஆகியவற்றின் மீதான வரி, என்ற தலைப்பில் 198-ஏ, 198-பி, 198-சி, 198-இ, 198-எப், 198-ஜி, 198-எச், 198-ஐ, ஆகிய பிரிவுகள் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 55/198) பிரிவு 2ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

(ii) கூட்டு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டதாய் இருப்பினும் அல்லது இல்லாவிடினும், மத்திய அரசுக்கு அல்லது ஏதேனுமொரு மாநில அரசுக்குச் சொந்தமானதாகவோ அதன் கட்டுப்பாட்டின் கீழோ உள்ள, ஒரு அமைப்பின் தலைமையிடமானது உள்ளூர் அதிகார அமைப்பிற்கு அப்பாற்பட்ட வெளியிடத்தில் இருந்த போதிலும் அந்த அமைப்பு அந்த உள்ளூர் அதிகார அமைப்பின் அதிகார எல்லைக்குள் செயல்படுமேயானால் அந்த அமைப்பின் பணியிலுள்ள ஒரு நபரை மற்றும்

(iii), (i), (ii) ஆகிய கூறுகளில் வராத பணித்தொழில் எதிலும் பணி தருநர் ஒருவரால் ஈடுபடுத்தப்படுகின்ற ஒரு நபரை உள்ளடக்கும்.

(பி) தம்மிடம் முறையாக ஒரு அடிப்படையின் பேரில் சம்பளம் எதனையும் பெறுகிற பணியாளர் ஒருவர் தொடர்பாக பணி தருநர் என்றால் அத்தகைய சம்பளத்தை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ள ஒரு நபர் அல்லது அலுவலர் என்று பொருள்படும் அச்சொல்லானது அலுவலகத்தின் தலைமையாளரை அல்லது அலுவலக அமைப்பு எதனையும் பிற பணிதருநரின் மேலாளரை அல்லது முகவரையும் உள்ளடக்கும்.

(சி) அரையாண்டு என்பது ஆண்டு ஒன்றில், ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் வரையிலும் மற்றும் அக்டோபர் திங்கள் 1ஆம் நாளிலிருந்து மார்ச்சு திங்கள் 31ஆம் நாள் வரையிலும் என்பதாகும்.

(i) திங்கள் என்றால் ஒரு ஆண்டு குறிப்பேட்டு முறை திங்களைக் குறிக்கும்.

(ii) நபர் என்றால் தமிழ்நாடு மாநிலத்தில் நுண்ணறிவுத் திறத்தொழில், வணிகத் தொழில், மரபுத் தொழில் அல்லது பணித்தொழில் எதிலும் செயலாற்றும் வகையிலோ மற்றபடியோ ஈடுபட்டிருக்கின்ற நபர் எவரும் என்று பொருள்படுவதோடு, அவ்வாறு ஈடுபட்டிருக்கின்ற பிரிவினையாகாத ஒரு இந்துக் குடும்பம், நிறுவகம், நிறுமம், கழகம் அல்லது பிற கூட்டமைப்பு, சங்கம் குழாம் நபர்களின் அமைப்பு அல்லது மன்றம் என்பதையும் உள்ளடக்கும் ஆனால் தற்செயல் பணி அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள நபரையும் உள்ளடக்காது.

(iii) வரி என்றால் நுண்ணறிவு திறத்தொழில், வணிகத் தொழில் மரபுத் தொழில், பணித்தொழில் ஆகியவற்றின் மீது இந்த அத்தியாயத்தின்படி விதிக்கப்படும் வரி என்று பொருள்படும்.

**198-பி தொழில் வரி விதித்தல்**

(1) கிராம ஊராட்சிகளினால் நுண்ணறிவு திறத்தொழில், வணிகத் தொழில் மரபுத் தொழில், பணித்தொழில் ஆகியவற்றின் மீது வரி விதிக்கப்பட வேண்டும்.

(2) கிராம ஊராட்சிகளில் வணிகத்தை நடத்தி வருகின்ற நிறுமம் ஒவ்வொன்றும் மற்றும் நுண்ணறிவுத் தொழில், வணிகத் தொழில், மரபுத் தொழில் அல்லது பணித் தொழில் எதிலும் செயலாற்றும் வகையிலோ மற்றப்படியோ ஈடுபட்டிருக்கின்ற நபர் ஒவ்வொருவரும், வரி விவர அறிக்கை எந்த அரையாண்டுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ அந்த அரையாண்டின் முதல் நாளன்று, வகுத்துரைக்கப்படக் கூடிய முறையில் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அரையாண்டு வரியைச் செலுத்துதல் வேண்டும்.

| வரிசை எண் (1) | சராசரி அரையாண்டு வருமானம் (2) | அரையாண்டு வரி (3) |
|---|---|---|
| 1. | ரூ.21,000 வரை | ஏதுமில்லை |
| 2. | ரூ.21,001 முதல் ரூ.30,000 வரை | ரூ.60 |
| 3. | ரூ.30,001 முதல் ரூ.45,000 வரை | ரூ.150 |
| 4. | ரூ.45,001 முதல் ரூ.60,000 வரை | ரூ.300 |
| 5. | ரூ.60,001 முதல் ரூ.75,000 வரை | ரூ.450 |
| 6. | ரூ.75,001க்கு மேல் | ரூ.600 |

(3) உட்பிரிவு (2) செலுத்தத்தக்க வரி வீதமானது, வகுத்துரைக்கப்படக் கூடிய முறையில் ஆய்வாளரால் வெளியிடப்பட வேண்டும்.

(4) ஒரு நிறுவனமோ அல்லது நபரோ, இந்த அத்தியாயத்தின்படி வரி விதிக்கப்பட்டதன் விளைவாக செலுத்த வேண்டிய தொகையை, அல்லது அதே அரையாண்டிற்கு 1924ஆம் ஆண்டு பாளையங்கள் சட்டத்தின்படி (மத்திய சட்டம் II/1924) விதிக்கப்பட்ட நுண்ணறிவுத் திறத்தொழில் வரியின் தன்மை உடைய வரி ஏதையேனும், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது பாளைய அதிகார அமைப்பு எதற்கேனும் செலுத்தியுள்ளதாக நிரூபிக்கப்பட்டால், அந்நிறுவனமோ அல்லது நபரோ, தொழில் நடத்தும் இடத்தினையோ அல்லது நுண்ணறிவுத் திறத்தொழில், வணிகத் தொழில், மரபுத் தொழில் அல்லது பணித்தொழிலைப் புரிந்து வருவதையோ அல்லது குடியிருப்பிடத்தையோ மாற்றியுள்ள காரணத்தினால் மட்டுமே, வேறு உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது பாளைய அதிகார அமைப்பு எதனிடமும் வரியைச் செலுத்துவதற்கான கட்டுப்பாட்டினைப் பெற்றிருக்க வேண்டியதில்லை.

(5) ஒரு நிறுவனம் மன்றம் அல்லது இந்துக் கூட்டுக் குடும்பத்திற்கு விதிக்கப்படத்தக்க வரியானது, அந்நிறுவனம், மன்றம் அல்லது குடும்பத்தின் வயது வந்த உறுப்பினர் எவரொருவர் மீதும் விதிக்கப்படலாம்.

(6) நபரொருவர், கிராம ஊராட்சிகளுக்காக ஒரு தொழிலை ஓரிடத்திற்கும் மேலாக அதே பெயரில் பல இடங்களில் செய்து வருவாரேயானால், அக்கிராம ஊராட்சிகளுக்குள்

அமைந்த இடங்களிலும் அத்தகைய தொழிலின் வருமானத்தை, வரி விதிக்கும் நோக்கத்திற்காக கணக்கிட வேண்டும், மற்றும் அத்தகைய நபர், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகளுக்கிணங்க வரியைச் செலுத்த வேண்டும்.

(7) நிறுமம், கூட்டமைப்பு, நிறுவனம், நபர்களின் அமைப்பு அல்லது மன்றமானது இந்த அத்தியாயத்தின் கீழ் வரி எதனையும் செலுத்துகின்றவிடத்து, அத்தகைய நிறுமத்தின் கூட்டமைப்பின், சங்கத்தின் இயக்குநரால் அல்லது கூட்டாளியால் அல்லது உறுப்பினரால் அத்தகைய நிறுவனத்திலிருந்து, கூட்டமைப்பிலிருந்து, சங்கத்திலிருந்து, நிறுவகத்திலிருந்து, நபர்களின் அமைப்பிலிருந்து அல்லது மன்றத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்திற்கு நேர்விற்கேற்ப அத்தகைய இயக்குநர், கூட்டாளி அல்லது உறுப்பினர் இந்த அத்தியாயத்தின்படி வரி செலுத்தக் கட்டுப்பாடு உடையவர்களாக மாட்டார்கள்.

ஆனால், அத்தகைய இயக்குநர், கூட்டாளியானவர் அல்லது உறுப்பினரானவர் பிற வருவாய் வழிவகைகளிலிருந்து பெறப்பட்ட வருமானத்திற்கு இந்த அத்தியாயத்தின்படி வரி செலுத்தக் கட்டுப்பாடுடையவராய் இருக்க வேண்டும்.

(8) சம்பளம் அல்லது ஊதியம் ஈட்டுகின்ற நபர் ஒருவர் அல்லாத வரி செலுத்துவதற்குக் கட்டுப்பாடுள்ள பிற நபர் ஒவ்வொருவரும், நிர்வாக அலுவலருக்கு, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்குள்ளாகவும் தேதிக்குள்ளாகவும் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் விபரவுரை ஒன்றினைக் கொடுக்க வேண்டும்.

ஆனால் உட்பிரிவு (10) மற்றும் (11)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்குட்பட்டு, அத்தகைய நபரானவர், முந்தைய நிதி ஆண்டிற்கான அரையாண்டு சராசரி வருமானத்தின் அடிப்படையில் சுய வரிக்கணிப்பு ஒன்றினைச் செய்ய வேண்டும். மற்றும் அவரால் தாக்கல் செய்யப்பட்ட விவர உரையானது, கணக்குகள் கேட்கப்படாமலும் ஆய்வு எதுவுமின்றியும் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(9) அத்தகைய விவரவுரை ஒவ்வொன்றும், அந்த விவர உரைக்கு இணங்கிய வகையில் நிலுவையில் உள்ள வரித் தொகை முழுவதையும் செலுத்தியதற்கான நிரூபண சான்றுகளோடு கூடியதாக இருக்க வேண்டும். மற்றும் அவ்வாறு செலுத்தியதற்கான நிரூபண சான்றுடன் இல்லாத விவர உரையானது உரியவாறு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளுதலாகாது.

(10) உட்பிரிவு (8) வரம்புரையில் என்ன அடங்கியிருந்த போதிலும், நிர்வாக அலுவலரானவர், இது தொடர்பாக நபரொருவரால் பணிந்தனுப்பப்பட்ட விவர அறிக்கையின் சீர்மை தொடர்பாக, விரிவாக கூர்ந்தாய்வு செய்யும் நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படக் கூடிய முறையில் வரிக்கணிப்புகளின் மொத்த எண்ணிக்கையில் நுற்றுக்குப் பத்து விழுக்காட்டினைத் தேர்ந்தெடுக்கலாம் மற்றும் இந்த அத்தியாயத்தில் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் கூர்ந்தாய்வு செய்து அத்தகைய நேர்வுகளில் இறுதி வரிக் கணிப்பு ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

(11) வகுத்துரைக்கப்பட்ட கால அளவிற்குள்ளாக, உட்பிரிவு (8)ன்படி நபரொருவராலும், விவர உரை எதுவும் பணிந்தனுப்பப்படவில்லையானால், அல்லது அவரால் பணிந்தனுப்பப்பட்ட விவர அறிக்கையானது, முழுமையற்றதாகவோ அல்லது சரியற்றதாகவோ இருப்பதாக நிர்வாக அலுவலருக்கு தோன்றுமாயின், நிர்வாக அலுவலரானவர், அவர் தேவையானதெனக் கருதும், விசாரணையைச் செய்த பின்னர் தமது சேர்ந்த முடிவின்படி அத்தகைய நபருக்கான நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால், இந்த உட்பிரிவின்படி நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக, அந்நபரால் பணிந்தனுப்பப்பட்ட விவர உரை எதனின் சீர்மை அல்லது முழுமை குறித்த நிரூபிப்பதற்காக நியாயமான வாய்ப்பானது அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(12) சம்பளம் அல்லது ஊதியம் ஈட்டுகின்ற நபரொருவர் அல்லாத இந்தப் பிரிவின்படி வரி செலுத்தக் கட்டுப்பாடுள்ள பிற நபர் ஒவ்வொருவருக்கும்.

(எ) இத்தகைய வரி செலுத்துவது தொடர்பாக வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய விவரங்கள் அடங்கிய பாஸ் புத்தகம் ஒன்று கொடுக்கப்பட வேண்டும் மற்றும் அந்த பாஸ் புத்தகமானது தொலைந்து போகிற போது அல்லது எதிர்பாராது அழிக்கப்பட்டுவிடுகிற போது, கிராம ஊராட்சி நிர்ணயிக்கும் செயல் அதிகாரி கட்டணத்துடன் அந்நபரால் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் ஒன்றின் பேரில் அத்தகைய நபருக்கு அக்கணக்குப் புத்தகத்தை போன்று மாற்று பாஸ் புத்தகத்தை செயல் அதிகாரி வழங்கலாம்.

(பி) அத்தகைய நபருக்கு நிலையான கணக்கு எண்ணானது ஒதுக்கப்பட வேண்டும். மற்றும் அத்தகைய அவர்.

(i) நிர்வாக அலுவலருக்கு அனுப்பப்படும் விவர உரைகளிலோ அல்லது அவருடன் கடிதத் தொடர்பு கொள்ளும்போதோ அத்தகைய எண்ணைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

(ii) இந்த அத்தியாயத்தின்படி செலுத்தப்பட வேண்டியுள்ள தொகை எதனையும் செலுத்துவதற்கான செலுத்துச் சீட்டுப் படிவங்கள் அனைத்திலும் அத்தகைய எண்ணைக் குறிப்பிட்டனுப்புதல் வேண்டும்.

(13) உட்பிரிவு (2)ன்படி குறித்துரைக்கப்பட்ட வரி வீதமானது கிராம ஊராட்சி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்பட வேண்டும். மற்றும் அவ்வாறு திருத்தியமைக்கின்ற தேதிக்கு அடுத்து முன்பு விதிக்கப்பட்டிருந்தவாறாக வரியில் இருபத்தைந்து முப்பத்தைந்து விழுக்காட்டிற்கு நூற்றுக்கு முப்பத்தைந்து விழுக்காட்டிற்கு அதிகமாகவோ இல்லாமல் வரி உயர்த்தப்பட வேண்டும்.

**198-சி பணியாளர்களின் சார்பாக வரியைப் பிடித்து செலுத்துவதற்கு பணிதருநர்களுக்குள்ள கட்டுப்பாடு**

சம்பளம் அல்லது ஊதியம் ஈட்டுகின்ற நபரொவராலும் செலுத்தப்பட வேண்டிய வரியானது அத்தகைய நபருக்கு வழங்கப்படத்தக்க சம்பளத்திலிருந்து அத்தகைய சம்பளம் அல்லது ஊதியம் அவருக்கு வழங்கப்படுவதற்கு முன்னரே, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில், அவரது பணிதருநரால் பிடித்தஞ் செய்யப்பட வேண்டும். அத்தகைய பணிதருநர் அத்தகைய நபருக்குச் சம்பளம் அல்லது ஊதியமானது வழங்கப்பட்ட போது பிடித்தம் செய்யப்பட்டிருந்தாலும், இல்லையென்றாலும், அத்தகைய நபரின் சார்பாக வரியைச் செலுத்துவதற்கு கட்டுப்பாடுடையவர் ஆவார்.

ஆனால், இந்த அத்தியாயத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும் பணிதருநர் மாநில அல்லது மத்திய அரசானது, அத்தகைய எந்த முறையில் மேற்சொன்ன கட்டுப்பாட்டினை நிறைவேற்ற வேண்டும் என்பதை வகுத்துரைக்கலாம்.

**198-டி பணி தருநரால் தாக்கல் செய்தல்**

(1) இந்த அத்தியாயத்தின்படி வரி செலுத்தக் கட்டுப்பாடுடைய பணிதருநர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படக்கூடிய படிவத்திலும் வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளும, வகுத்துரைக்கப்படக் கூடிய தேதிக்குள்ளாகவும், அவரால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்களையும் அத்தகைய பணியாளர்களைப் பொறுத்த அளவில், அவரால் பிடித்தம் செய்து வைக்கப்பட்ட வரித் தொகையையும் காட்டுகின்ற வரி விவர உரையொன்றை நிர்வாக அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

(2) அத்தகைய விவர உரை ஒவ்வொன்றும், அந்த விவர உரைக்கு இணங்க, செலுத்தப்பட வேண்டி நிலுவையில் உள்ள முழு வரித் தொகையையும், செலுத்தப்பட்டதற்கான நிரூபண சான்றுடன் கூடியதாய் இருத்தல் வேண்டும். மற்றும் அவ்வாறு

செலுத்தப்பட்டதற்கான மெய்பிப்புப் சான்று இல்லாமல் தாக்கல் செய்யப்படும் விவர அறிக்கையானது உரியவாறு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ள முடியாது.

**198-இ வேலை தருநரின் நிலையை மதிப்பிடுதல்**

(1) நிர்வாக அலுவலரானவர் பிரிவு 198-டி உட்பிரிவு (1)ன் படி, பணிதருநர் எவராலேனும் தாக்கல் செய்யப்பட்ட வரி விவர உரை ஏதொன்றும் சரியானதாகவும் முழுமையானதாகவும் இருக்கின்றதென்று தெளிவுறக் காண்பாராயின், அவ்வரி விவர உரையினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(2) பணி தருநரால், பிரிவு 198-டி உட்பிரிவின் படி வரி விவர உரை ஏதொன்றையும் குறித்த காலத்தில் தாக்கல் செய்யத் தவறினால் அல்லது அவரால் தாக்கல் செய்யப்பட்ட வரி விவர அறிக்கையானது சரியாக இல்லையென்றோ அல்லது முழுமையாக இல்லை என்றோ செயல் அதிகாரி கருதுவாராயின் தாம் தேவை எனக் கருதுகின்ற விசாரணையைச் செய்து முடித்த பின்னர், தமது தேர்ந்த முடிவின்படி, பணிதருநரிடமிருந்து வரவேண்டிய வரியினைத் தீர்மானித்து அது இவ்வளவு எனக் கணித்தல் வேண்டும் மேலம், அவ்வாறு கணிக்கப்பட்ட வரித்தொகைக்கான ஒரு கேட்பு அறிவிப்பினைச் சார்பு செய்ய வேண்டும்.

ஆனால் கொடுக்கப்பட வேண்டிய வரியைக் கணிப்பதற்கு முன்பு, பணிதருநரின் தரப்பைக் கேட்பதற்கு நியாயமான ஒரு வாய்ப்பினை செயல் அதிகாரி அவருக்கு வழங்க வேண்டும்.

**198 – எ.்.ப் - பணத்தண்டனையும் வட்டியும்**

(1) பிரிவு 198-பி உட்பிரிவு (ii) ன்படி அல்லது பிரிவு 198-இ உட்பிரிவு (2)ன்படி நிர்வாக அலுவலர், தனிநபர் அல்லது பணிதருநரை பணத்தண்டனைத் தொகை என்ற அளவில் சரியற்ற அல்லது முழுமையற்ற வரி விவரவுரை அனுப்புகிற சந்தர்ப்பத்தில் கணிக்கப்பட்ட வரிக்கும், வரி விபர உரையின்படி செலுத்தப்பட்ட வரிக்கும், உள்ள வேறுபாட்டுத் தொகையினை நூற்றுக்கு நூறு சதவிகிதம் செலுத்துமாறு செயல் அதிகாரி பணிக்க வேண்டும்.

(ஆ) நிர்வாக அலுவலரானவர், ஆனாலும் இந்த அத்தியாயத்தின்படி வரிக்கணிப்பு ஆணையின் தேதியிலிருந்து மூன்றாண்டு கால அளவிற்குப் பின்னரும், பாதிக்கப்பட்ட நபருக்கு அவ்வாறு விதிக்கப்பட்டதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றியும், இந்த உட்பிரிவின்படி தண்டனைத் தொகை எதுவும் விதிக்கப்படக் கூடாது.

(2) தொகை செலுத்துவதற்கென குறிக்கப்பட்ட தேதிகளுக்குப் பின்னரும் செலுத்தாமல் உள்ள தொகை எதனின் பேரிலும் அந்நபர் அல்லது பணிதருநர் செலுத்த வேண்டிய தொகைக்கும் கூடுதலாக, மாதம் ஒன்றிற்கும் செலுத்தத் தவறிய மொத்த கால அளவிற்கு அத்தகைய தொகையின் திங்களொன்றிற்கு ஒரு சதவிகிதம் என்ற அளவில் வட்டி செலுத்த வேண்டும்.

**198-ஜி மேல் முறையீடு**

(1) தண்டனைத் தொகை கட்டணம் அல்லது வட்டி உள்ளடங்கலாக வரி செலுத்துவது தொடர்பாக செயல் அலுவலரின் ஆணை அல்லது முடிவு எதனாலும் பாதிக்கப்பட்ட நபர் அல்லது பணிதருநர் எவரும், வகுத்துரைக்கப்படக் கூடிய கால அளவிற்குள்ளாக, பிரிவு 174ல் கூறப்பட்டுள்ள அலுவலரிடம் மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

(2) உட்பிரிவு (1)ல் வகுத்துரைக்கப்பட்டுள்ள அதிகாரியின் தீர்ப்பே முடிவானது. அதில் நீதிமன்றம் எதுவும் தலையிடக் கூடாது.

**வரம்புரை**

ஆனால், பாதிக்கப்பட்ட நபருக்கு அவர் தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான ஒரு வாய்ப்பினை கொடுக்காமல், அத்தகைய முடிவு எதுவும் எடுக்கக் கூடாது.

**198-எச் விலக்கு**

இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும்

(எ) 1950ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தின் (மத்திய சட்டம் XLVI/1950) 1950ஆம் ஆண்டு வான்படைச் சட்டத்தின்படி அல்லது 1957 ஆம் ஆண்டு கடற்படைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 62/1957) வகைமுறைகள் பொருந்துகின்ற இந்த மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் பணியாற்றி வருகின்ற ஆயுதப் படைகளை சேர்ந்தவர்களுக்கு

(பி) 1949ஆம் ஆண்டு மத்திய சேம காவற்படை சட்டமானது (மத்திய சட்டம் XLVI/1949) பொருந்துகிற மற்றும் மாநிலத்தின் பகுதி எதிலும் பணியாற்றுகிற மத்திய சேம காவற்படையைச் சேர்ந்தவர்களுக்கு

(சி) கை, கால்களில் ஏதேனுமொன்றோ அல்லது இரண்டுமோ முழுவதுமாக ஊனமுடைய உடல் ஊனமுற்றோருக்கு இசிப்பு நோயாளிகளுக்கு, முழு ஊமையாராகவோ செவிட.ர்களாகவோ உள்ள நபர்களுக்கு அல்லது அறவே பார்வைற்ற நபர்களுக்கு பொருந்தாது.

ஆனால், அத்தகைய உடல் ஊனம் பற்றி, ஒரு சிவில் மருத்துவரின் நிலைக்குக் குறையாத மாநில அரசுப் பணியில் உள்ள பதிவு பெற்ற மருத்துவ தொழில் புரியும் மருத்துவரால் உரியவாறு சான்றளிக்க வேண்டும்.

**198-ஐ நீக்கமும் காப்பும்**

(1) 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபு தொழில்களின் பணித்தொழில்கள் ஆகியவற்றின் (இதன் பின்பு இந்தப் பிரிவில் 1992 ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதுதான்) மீதான வரிச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) உட்பிரிவு (1)ன் படி 1992ஆம் ஆண்டு சட்டம் நீக்கம் செய்யப்பட்டதானது

(i) அச்சட்டத்தின் முந்தைய செயல்பாட்டினை அல்லது அதன்படிச் செய்யப்பட்ட அல்லது அதன் கீழ் உரிய முறையில் பாதிப்பிற்கு உள்ளான செயல் எதனையும், அல்லது

(ii) மேற்சொன்ன சட்டத்தின்படி ஈட்டப்பட்ட, வந்தடைந்த அல்லது ஏற்பட்ட உரிமை, சிறப்புரிமைகள், கடமைகள் பொறுப்புகள் அல்லது கட்டுப்பாடுகள் எவற்றையும் அல்லது

(iii) செய்யப்பட்ட குற்றச் செயல் எதனையும் பொருத்த அளவிலான தண்டனைத் தொகை விதிப்பு, உரிமைப் பறிப்பு அல்லது தண்டனை எதனையும், பாதிக்கக் கூடாது.

(3) 1992ஆம் ஆண்டுச் சட்டமானது நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் அச்சட்டத்தின்படி கொடுக்கப்பட வேண்டியதாக உள்ள உரிமையானது 1992ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளில் தொடங்கி 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாளில் முடிவடைகின்ற கால அளவிற்கு செலுத்தப்படாமல் இருக்குமானால், மேற்சொன்ன கால அளவிற்கான இத்தகைய வரியை விதிப்பதற்காகவும், வசூலிப்பதற்காகவும் மேற்சொன்ன சட்டத்தன் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள, நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரி வீதங்களானவை, மேற்சொன்ன கால அளவிற்குத் தொடர்ந்து பொருந்துதல் வேண்டும்.
G.O.No.162, R.D (E11) dt.6.9.94

(4) பிரிவு 169-பி உட்பிரிவு (2)ல் குறித்துரைக்கப்பட்ட வரி வீதங்கள் தொடர்பானவை அல்லாத இந்த அத்தியாயத்தின் பிற வகைமுறைக்கும் தண்டனைத் தொகை தொடர்பான வகைமுறைகளும் வட்டி தொடர்பான வகைமுறைகளும் (3)ஆம் உட்பிரிவு (3)ல் குறிப்பிடப்பட்ட கால அளவிற்கான வரியை விதிப்பதற்காகவும் வசூலிப்பதற்காகவும் எப்படி பொருந்துகின்றதோ (Mutatis Mutandis) அப்படியே பொருந்துதல் வேண்டும்.

(5) 1992 ஆம் ஆண்டு சட்டத்தின்படி வரிநிலுவைகள், சமமான ஆறு அரையாண்டுத் தவணைகளில் வகுத்துரைக்கப்பட கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய கால அளவிற்குள்ளாகவும் செலுத்தப்பட வேண்டும்.

## அத்தியாயம் - 10
## கட்டுப்பாடு செய்யும் அதிகார அமைப்புகள்

### 199. ஊராட்சிகளை கண்காணிப்பதற்காக அலுவலர்களை நியமித்தல்

(1) அரசு, இந்தச் சட்டத்தின் படி அமைக்கப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் ஒரு ஊராட்சியின் செயல்பாடுகளை ஆய்வு செய்கின்ற அல்லது கண்காணிக்கின்ற நோக்கத்திற்காக தேவைப்படக்கூடிய அலுவலர்களை நியமிக்கலாம்.

(2) அரசு உட்பிரிவு (1)ல் குறிக்கப்பட்டுள்ள அலுவலர்கள், பணியாளர்கள், தொகுதி உறுப்பினர்களின் பணி வகைப்பாடுகள், நியமன முறைகள், பணி நிபந்தனைகள், சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஒழுங்கு நடத்தை ஆகியவற்றை இந்தச் சட்டத்தின்படி இயற்றப்படும் விதிகள் வாயிலாக ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரம் கொண்டிருக்கும்.

### 200. ஆய்வு செய்யும் அலுவலர்களின் அதிகாரங்கள்

(1) ஆய்வாளர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது பிரிவு 199-ன்படி நியமிக்கப்பட்ட நபர் எவரும், அல்லது அரசு அல்லது ஆய்வாளர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கென அதிகாரமளிக்கக் கூடிய பிற அலுவலர் அல்லது நபர் எவரும்

(அ) ஊராட்சி எதனின் அல்லது செயல் அலுவலர் அல்லது ஆணையர் அல்லது செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அசையா சொத்து எதிலும் நுழைந்து அதை ஆய்வு செய்யலாம் மற்றும் நடைபெற்று வரும் வேலை எதையும் பார்வையிட்டு ஆய்வு செய்யலாம்.

(ஆ) ஊராட்சி எதனாலும் பராமரித்து வரப்படும் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிற நிறுவனம் ஊசி போடும் நிலையம் அல்லது சத்திரம் எதிலும் நுழையலாம். மற்றும் அத்தகைய நிறுவனம் எதிலும் வைக்கப்பட்டுள்ள பதிவுருக்கள், பதிவேடுகள் அல்லது பிற ஆவணங்கள் எதையும் ஆய்வு செய்யலாம்.

(இ) ஊராட்சி அலுவலகத்திற்குள் நுழையலாம், மற்றும் அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவுருக்கள் பதிவேடுகள் அல்லது பிற ஆவணங்கள் எதனையும் ஆய்வு செய்யலாம்.

(2) கிராம ஊராட்சி மற்றும் அவற்றின் தலைவர்கள், செயல் அதிகாரிகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் அவற்றின் தலைவர்கள் ஆணையர்கள் மாவட்ட ஊராட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மற்றும் செயலாளர் மற்றும் ஊராட்சிகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மேற்கூறப்பட்ட அலுவலர்கள் ஊராட்சி சொத்து அல்லது வளாகங்களுக்குள் நியாயமான அனைத்து நேரங்களிலும் தடையின்றி நுழைவதற்குத் தேவைப்படும் அணுகுரிமை அளிப்பதற்கும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி வரையறுக்கப்படக்கூடிய விதிகளுக்கு உட்பட்டு அத்தகைய அலுவலர்கள் அல்லது நபர்களின் கருத்துப்படி அவர்களுடைய கடமைகளைப் புரிவதற்கு வசதியாகத் தேவைப்படக் கூடிய அனைத்து ஆவணங்களையும் வழங்குவதற்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவார்.

### 201. கட்டுப்பாடு செய்யும் நோக்கத்திற்காக அலுவலரின் அதிகாரங்கள்

ஆய்வாளரோ அல்லது அரசு அல்லது இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட நபா் எவருமோ

(அ) பிரிவுகள் 110, 112 மற்றும் 163ல் குறிப்பிட்டுள்ள பொது வேலை அல்லது வசதி அல்லது பணி எதற்கும் வகை செய்யுமாறும் மற்றும் அவற்றை நிறைவேற்றுமாறும் அல்லது கிராம ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு அல்லது மாவட்ட ஊராட்சிக்கு கட்டளையிடலாம்.

(ஆ) கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது அவரது கட்டுப்பாட்டில் உள்ள யாதொரு பதிவுருக்கள் பதிவேடுகள் அல்லது பிற ஆவணங்கள் எதனையும் கேட்டுப் பெறலாம்.

(இ) விவர அறிக்கை திட்டம் மதிப்பீடு விபர உரை கணக்கு அல்லது புள்ளி விவரம் எதனையும் அளிக்குமாறு ஊராட்சி எதனையும் அல்லது செயல் அலுவலா் அல்லது ஆணையரை அல்லது செயலாளரை கேட்டுக்கொள்ளலாம்.

(ஈ) ஊராட்சி தொடா்பான பொருள் குறித்து தகவல் அல்லது எதனையும் அளிக்குமாறு ஊராட்சி எதனையும் அல்லது செயல் அலுவலரை அல்லது ஆணையரை அல்லது செயலாளரை கேட்டுக் கொள்ளலாம்.

(உ) உரிமை கொண்டாடுவதை விட்டுவிடுவதற்கு முன்பு அல்லது வருமானத்திற்கு ஆதாரமாக உள்ள நிறுவனம் எதனையும் விடுவதற்கு முன்பு தன்னுடைய முன் அனுமதி பெறுமாறு ஊராட்சி எதனையும் அல்லது செயல் அதிகாரி அல்லது ஆணையரை அல்லது செயலாளரை கோரலாம்.

(ஊ) ஊராட்சி அல்லது செயல் அதிகாரி அல்லது ஆணையரின் அல்லது செயலாளரின் நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் பொறுத்த கருத்துகள் எவற்றையும் அதன் அல்லது அவரின் பரிசீலனைக்காக எழுத்து வடிவில் பதிவு செய்யலாம்.

**202. இந்தச் சட்டத்தின்படியான தீா்மானம் எவற்றையும் நிறுத்தி வைப்பதற்கு அல்லது நீக்கம் செய்வதற்கு அதிகாரம்**

**(1)** ஆய்வாளா் எழுத்து மூலமான ஆணையின்படி

(i) இயற்றப்பட்ட தீா்மானத்தையோ அல்லது ஆணையையோ அல்லது வழங்கப்பட்ட உரிமம் அல்லது அனுமதியை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(ii) இந்த சட்டத்தின் போா்வையில் செய்யவிருக்கின்ற அல்லது செய்யப்படுகின்ற எச் செயலும் கீழ்கண்ட விதத்தில் இருப்பதாக அவா் கருதினால்

(அ) தீா்மானம், ஆணை, உரிமம், அனுமதி அல்லது செயல் சட்டப்படியாக இயற்றப்பட வில்லை, வெளியிடப்படவில்லை, வழங்கப்படவில்லை அல்லது அதிகாரமளிக்கப்படவில்லை என்று அல்லது

(ஆ) அந்த தீா்மானம், ஆணை, உரிமம், அனுமதி அல்லது செயல் இந்தச் சட்டத்தினால் அல்லது பிற சட்டம் எதனாலும் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு மிகையாக உள்ளது அல்லது அத்தகைய அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தும் வகையில் உள்ளது என்று அல்லது ஆய்வாளரால் பிறவாறாக விரும்பத்தகாததாக இருக்கிறது என்று அல்லது

(இ) தீா்மானத்தை அல்லது ஆணையை நிறைவேற்றுதல் அல்லது அத்தகைய உரிமம் அல்லது அனுமதியின் செயலை தொடா்ந்தால் அல்லது அத்தகைய செயலை செய்தால் மனித உயிருக்கு உடல் நலத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு பெரும் அபாயம்

விளைவிக்கும் என்றோ, அதனால் கலகமோ சச்சரவோ, நேரிடக் கூடுமென்று அவர் அத்தகைய செயலை எழுத்து வடிவிலான ஆணையின் வாயிலாகத் தடை செய்யலாம்.

ஆனால் இந்த உட்பிரிவிலுள்ள அதிகாரம் ஆய்வாளருக்கு நடந்து முடிந்த தேர்தல் எதனையும் ரத்து செய்வதற்கு அதிகாரம் இல்லை.

(2) உட்பிரிவு 1ல் கூறுகள் (அ) மற்றும் (ஆ)ன் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நபருக்கு விளக்கத்தை அளிப்பதற்கு போதிய சந்தர்ப்பங்களைக் கொடுக்க வேண்டும்.

(3) உட்பிரிவு (1) கூறு (இ)ன் அடிப்படையில் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாவட்ட ஆட்சியர் அந்த விதிகளின் அடிப்படையில் செயல்படுத்தலாம்.

**203. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஆய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அவசர கால அதிகாரங்கள் அரசாணை எண்.148 ஊ.வ.து. நாள்.31.5.2000**

வகுத்துரைக்கப்படக்கூடிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அவசரமான நிலைகளின் பொழுது ஆய்வாளரோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரோ ஒரு ஊராட்சி அமைப்பு அல்லது அதன் செயல் அதிகாரி அல்லது ஆணையர் அல்லது செயலாளருக்கு சட்டப்படி நிறைவேற்றுவதற்கு அல்லது செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்த பொழுதும் தம்முடைய கருத்துப்படி பொது மக்களின் பாதுகாப்பிற்கு சில பணிகளை உடனடியாக நிறைவேற்ற அல்லது செய்வது மிகவும் அவசியம் எனக் கருதினால், அதனை நிறைவேற்றுமாறு அல்லது செயல் எதனையும் செய்யுமாறு பணிக்கலாம். அல்லது அத்தகைய வேலையை நிறைவேற்றுவதற்கு அல்லது அத்தகைய செயலைச் செய்வதற்கு ஆகும் செலவுகள், கிராம ஊராட்சி நிதியை அல்லது ஊராட்சி ஒன்றிய (பொது) நிதியை அல்லது மாவட்ட ஊராட்சி (பொது) நிதியை பொறுப்பில் வைத்துள்ள நபர் அதிகாரமளிக்கப்பட்ட திருப்ப செலுத்த வேண்டிய கடன்கள் பணிக்கான மற்றும் கட்டணங்கள் தவிர, அத்தகைய நிதியை பயன்படுத்தப்பட வேண்டிய பிற பொறுப்புகள் எதனையும் விட இப்பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டும் என்று பணிக்கலாம்.

**204. கிராம ஊராட்சித் தலைவர் அல்லது செயல் அலுவலர் முதலியோர் கடமையை செய்யத் தவறுகையில் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம்**

(1) கிராம ஊராட்சி தலைவர் அல்லது செயல் அதிகாரி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது அதனுடைய தலைவர் அல்லது ஆணையர் அல்லது மாவட்ட ஊராட்சி அல்லது அதனுடைய தலைவர் அல்லது செயலாளர் இந்தச் சட்டத்தினால் அல்லது இதன்படி அல்லது ஏதேனும் பிற சட்டத்தினால் அல்லது அதன்படி விதிக்கப்பட்டுள்ள கடமை எதனையும் புரியத் தவறியுள்ளதாக எந்த நேரத்திலேனும் ஆய்வாளருக்குத் தோன்றுமாயின் அவர் எழுத்து வடிவிலான ஆணை வாயிலாக அத்தகைய கடமையைப் புரிவதற்காக கால அளவு ஒன்றை நிர்ணயிக்கலாம்.

(2) அத்தகைய கடமையை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்படாமல் இருக்குமாயின், ஆய்வாளர் அதை நிறைவேற்றுவதற்கு வேறு நபரை நியமிக்கலாம் மற்றும் அதற்காகும் செலவுகளை கிராம ஊராட்சி நிதியை ஊராட்சி ஒன்றிய பொது நிதியை அல்லது மாவட்ட ஊராட்சி (பொது) நிதியை பொறுப்பில் வைத்துள்ள நபரால் அதிகாரமளிக்கப்பட்ட திருப்ப செலுத்த வேண்டிய மற்றும் கடன்கள் பணிக்கான கட்டணங்களைத் தவிர அத்தகைய நிதியிலிருந்து செலவிடத்தகுதியான பிற செலவுகள் எதனையும் விட இப்பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, செயல்படுத்த வேண்டும் என்று பணிக்கலாம்.

(3) தலைவருடன் உறுப்பினர்கள் ஒத்துழைக்காத காரணத்தினால் கிராம ஊராட்சி செயல்பட இயலவில்லை என்ற தலைவரின் எழுத்து மூலமான முறையீட்டின் மேல் ஆய்வாளர் திருப்தி அடைந்தால் அவர் அறிவிக்கையின் வாயிலாக இச்சட்டத்தின் படி கிராம ஊராட்சிக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளை தனது கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு அந்த அறிவிக்கையில் கண்ட கால அளவிற்கு தலைவர் புரிந்து வருவதற்கு அதிகாரம் அளிக்கலாம். ஆனால் ஒரு

முறையில் ஆறு மாத கால அளவிற்கு மேல் இத்தகைய அதிகாரம் வழங்கப்படுதல் முடியாது. இக்கால கட்டத்தில் கிராம ஊராட்சி கூட்டம் எதுவும் நடத்த தேவையில்லை.

(1) அரசிற்கு தலைவரால் எழுத்து மூலம் செய்யப்படும் முறையீட்டின் பேரில் தலைவருடன் உறுப்பினா்கள் ஒத்துழைக்காத காரணத்தினால் ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றமோ அல்லது மாவட்ட ஊராட்சியோ செயல்பட இயலவில்லை என அரசு தெளிவுறக் கருதுமாயின், அரசு அறிவிக்கை வாயிலாக இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலா் எவரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அல்லது மாவட்ட ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை ஆறு மாதங்களுக்கு மிகாத அளவில் அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக் கூடிய கால அளவு வரை ஊராட்சி ஒன்றியத்தின் அல்லது ஊராட்சி மன்றத்தின் அல்லது மாவட்ட ஊராட்சியின் கடமைகளை, ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவா் அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவா் புரிந்து வருவாா் என அதிகாரம் அளிக்கலாம். எந்தக்கால அளவுக்குத் தலைவா் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறாரோ அந்தக் கால அளவின் போது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது சந்தா்ப்பத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டிய (2) அவசியம் இல்லை.

**205. கிராம ஊராட்சித் தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்**

ஆய்வாளா்

(அ) தாமாகவோ முறப்பட்டோ அல்லது

(ஆ) கிராம ஊராட்சியின் மொத்த உறுப்பினா்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத உறுப்பினா்களால் கையெழுத்து இடப்பட்டு கிராம ஊராட்சித் தலைவருக்கு எதிரான குற்றச்சாட்டு அடங்கிய அறிக்கையை எழுத்து மூலமாக, கிராம

ஊராட்சியின் ஏதாவது இரண்டு உறுப்பினர்களால் ஆய்வாளரிடம் நேரிடையாக அளிக்கப்பட்ட எழுத்துருவிலான முறையீட்டின் பேரில் கிராம ஊராட்சித் தலைவர் இச்சட்டத்தில் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகள், துணை விதிகள், ஒழுங்கு முறை விதிகள் அல்லது, சட்டபூர்வமான ஆணையில் கூறப்பட்டுள்ளவற்றை நிறைவேற்ற தவறிவிட்டடார் அல்லது மறுக்கிறார் என அல்லது அவைகளுக்கு கீழ்ப்படியத் தவறினார் என அல்லது தமக்கு கொடுத்துள்ள அதிகாரங்களைத் தவறாக பயன்படுத்துகிறார் என ஆய்வாளர் கருதினால், எழுத்து வடிவிலான அறிவிப்பின் மூலம் அவர் குறித்த ஒரு தேதிக்கு முன் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தவறுதல்கள் சம்பந்தமாக விளக்கத்தை தெரிவிக்கும்படி கிராம ஊராட்சித் தலைவரைக் கேட்கலாம்.

(2) மேற்படி விளக்கம் குறித்த தேதிக்கு முன் பெறப்பட்டிருந்து அந்த விளக்கம் திருப்திகரமானது என ஆய்வாளர் கருதினால், அந்த அறிவிப்பின் மேல் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடலாம். குறித்த தேதிக்கு முன் விளக்கம் கிடைக்கவில்லை என்றாலும் அல்லது கிடைத்த விளக்கம் திருப்திகரமாக இல்லை என்று கருதினாலும், உட்பிரிவு (1) ல் கூறப்பட்டுள்ளவாறு அறிவிப்பின் நகல் ஒன்றையும், குறித்த தேதிக்குள் தலைவரின் விளக்கம் கிடைத்திருந்தால், அதையும் கிராம ஊராட்சித் தலைவரைப் பதவியிலிருந்து விலக்குவதற்காக கிராம ஊராட்சியின் கருத்துருக்களை அறியும் பொருட்டு சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு ஆய்வாளர் அனுப்ப வேண்டும்.

(3) பின்னர் வட்டாட்சியர் அந்த அறிவிப்பையும் விளக்கத்தையும் கிராம ஊராட்சித் தலைவரைப் பதிவியிலிருந்து நீக்குவதற்கான கருத்துருவையும் கிராம ஊராட்சி அலுவலகத்தில் தாம் நிர்ணயித்த நேரத்தில் கிராம ஊராட்சியின் கூட்டத்தை கூட்ட வேண்டும்.

(4) இக்கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பின் நகலினை சம்பந்தப்பட்ட தலைவருக்கும், கிராம ஊராட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும், கூட்ட தேதிக்கு ஏழு முழு நாட்களுக்கு முன்பாக வட்டாட்சியர் சேர்க்க வேண்டும்.

(5) இப்பிரிவின்படி கூட்டப்பட்ட கூட்டத்திற்கு வட்டாட்சியர் தலைமை வகிக்க வேண்டும். அவரைத் தவிர வேறு யாரும் தலைமை வகிக்கக் கூடாது. கூட்டத்திற்கு குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரை மணி நேரத்திற்குள் வட்டாட்சியர் கூட்டத்திற்கு தலைமை வகிக்க வரவில்லை என்றால், உட்பிரிவு (6)ன் கீழ் வட்டாட்சியர் நியமிக்கிற பிறிதொரு காலத்திற்கு இக்கூட்டம் தள்ளி வைக்கப்படும். இக் காலத்தை குறித்து வட்டாட்சியர் உறுப்பினர்களுக்கும் கிராம ஊராட்சி தலைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.

(6) கூட்டத்தில் தலைமை வகிக்க வட்டாட்சியருக்கு முடியவில்லை என்றால் அவர் அதற்கான காரணங்களை எழுத்து மூலமாக பதிவு செய்து தாம் நிர்ணயிக்கும் இன்னொரு காலத்திற்கு கூட்டத்தை ஒத்தி வைக்கலாம். அவ்வாறு நிர்ணயிக்கும் காலம் உட்பிரிவு (3)ன் கீழ் கூட்டப்பட்ட கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். ஒத்தி வைக்கப்பட்ட கூட்டத்திற்கான காலத்தை பற்றிக் குறைந்தது ஏழு முழு நாட்களுக்கு முன்பு அனைத்து உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் அனுப்ப வேண்டும்.

(7) உட்பிரிவுகள் (5) மற்றும் (6)ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் அல்லாமல் மற்றப்படி, மேற்படி அறிவிப்பையும், விளக்கத்தையும் இப்பிரிவின் கீழ் கிராம தலைவரை நீக்குவதற்கான கருத்துரு ஆகியவற்றை பரிசீலிப்பதற்காக, கிராம ஊராட்சித் தலைவரை விலக்குவதற்கான யோசனைகளையும் ஆராய்வதற்கென்று கூட்டப்பட்ட ஊராட்சி கூட்டத்தை வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒத்தி வைக்கக் கூடாது.

(8) இப்பிரிவின் கீழ் கூட்டப்பட்ட கூட்டம் துவங்கியவுடன் வட்டாட்சியர் ஆய்வாளர் அனுப்பிய அறிவிப்பையும் [1](கிராம ஊராட்சித் தலைவரை நீக்குவதற்கான கருத்துருவையும்) கிராம ஊராட்சித் தலைவரின் விளக்கம் ஏதேனும் இருப்பின் அந்த விளக்கவுரை ஆகியவற்றை பரிசீலிப்பதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதோ, கிராம ஊராட்சியின் கூட்டத்தில் படித்து காட்ட வேண்டும்.

2(8-அ இப்பிரிவின்படி கூட்டப்படும் கிராம ஊராட்சியின் கூட்டத்தில் எவ்விதமான விவாதமும் கூடாது)

(9) வட்டாட்சியர் இந்த அறிவிப்பின் அல்லது விளக்கத்தின் தராதரங்களைப் பற்றி பேசக் கூடாது. கூட்டத்தில் அவருக்கு வாக்களிப்பதற்கான உரிமையும் இல்லை.

(10) ஆய்வாளர் அனுப்பிய யோசனையை ஏற்றுக் கொண்டோ நிராகரித்தோ கிராம ஊராட்சி செய்த முடிவை கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் முறையாக பதிவு செய்ய வேண்டும். வட்டாட்சியர் அந்த நடவடிக்கை குறிப்புகளின் நகல் ஒன்றை கூட்டம் முடிந்தவுடன் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(11) ஆய்வாளர் இது குறித்த கிராம ஊராட்சியின் கருத்தினை பரிசீலனை செய்த பின்பு அவருடைய உள்த்தேர்வின்படி அறிவிக்கை வாயிலாக அதில் குறித்துரைக்கப்படும் தேதி முதல் கிராம ஊராட்சி தலைவரை பதவியில் இருந்து நீக்கவோ அல்லது அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடவோ செய்யலாம்.

(12) அரசு (11) உட்பிரிவு (11)ன் கீழ் ஆய்வாளரால் வெளியிடப்பட்ட எந்த ஒரு அறிக்கையும் ரத்து செய்யும் அதிகாரமும் அல்லது ரத்து செய்வதை முடிவு எடுக்கும் வரை அவ் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தேதியைத் தள்ளி போடும் அதிகாரமும் பெற்றிருக்கும்.

(13) கிராம ஊராட்சி தலைவரை பதவியிலிருந்து நீக்கி உட்பிரிவு (11)ன் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பை உட்பிரிவு (12)ன் படி ரத்து செய்யபட்டாலன்றி மற்றபடியும் அடுத்த கிராம ஊராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பு பற்றிய நாள் குறிப்பிட்ட முறையில் வெளியிடப்பட்டாலன்றி அந்த அறிவிப்பில் உட்பிரிவு (12)ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றின் மூலம் ஒத்திப் போடப்பட்டதாகக் குறிப்பிட்ட நாளிலிருந்து ஓராண்டு முடிவடைவதற்குள் இவற்றில் எது முந்தியதோ அந்த நாளுக்குள் கிராம ஊராட்சி தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமை இல்லை.

**206. கிராம ஊராட்சியின் துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குதல்**

(1) துணைத் தலைவா் இச்சட்டத்தின் கீழ் உள்ள விதிகள் அல்லது இதன் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட அல்லது இயற்றப்பட்ட விதித் துணைச் சட்டம் ஒழுங்கு முறை விதி அல்லது சட்டப் பூா்வமான ஆணை இவற்றை நிறைவேற்ற, வேண்டுமென்றே தவறிவிட்டாா் அல்லது மறுக்கிறாா் என, அல்லது அவைகளுக்கு கீழ்ப்படியத் தவறினாா் என, அல்லது தமக்குக் கொடுத்துள்ள அதிகாரங்களைத் தவறாக பயன்படுத்தினாா் என ஆய்வாளா் கருதினால் எழுத்து வடிவிலான அறிவிப்பு கொடுப்பதன் மூலம் அவா்கள் துணைத் தலைவரை குறித்து ஒரு தேதிக்கு முன் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தவறுதல்கள் சம்பந்தமாக விளக்கம் தெரிவிக்கும்படி கேட்கலாம்.

---

205 (8) 1 இந்த உட்பிரிவில் ( ) ல் கூறப்பட்டுள்ள சொற்றொடா் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சியின் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999) பிரிவு 5ன் படி சோ்க்கப்பட்டது.

2 இந்த உட்பிரிவு 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999) பிரிவு 5ன்படி சோ்க்கப்பட்டது.

(2) பிரிவு 205 உட்பிரிவுகள் (2) முதல் (13) வரை (இரண்டும் உட்பட) கூறப்பட்டுள்ள விதிமுறைகளை, இயலும் வரையில் கிராம ஊராட்சித் தலைவா் ஒருவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு எவ்வாறு பொருந்துமோ, கூடிய மட்டில் அந்த அளவிற்கு கிராம ஊராட்சியின் துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கும் அவ்வாறு பொருந்தும்.

**207. ஊராட்சி ஒன்றிய குழு தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்**

(1) அரசு

(அ) தானே முற்பட்டோ அல்லது

(ஆ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் மொத்த உறுப்பினா்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத உறுப்பினா்களால் கையெழுத்து இடப்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஏதாவது இரண்டு உறுப்பினா்களால், இதன் பொருட்டு அரசால் நிா்ணயிக்கப்பட்ட அலுவலரிடம் நேரடியாக அளிக்கப்பட்ட எழுத்துருவிலான ஒரு முறையீட்டின் பேரில்,

ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்கு முறை விதி அல்லது சட்டப்படியான ஆணை எதையும் நிறைவேற்ற தவறுகின்றாா் என்றோ, அல்லது மறுக்கின்றாா் என்றோ, அல்லது பணியாமல் இருக்கின்றாா் என்றோ, அல்லது அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதையும் தவறாகப் பயன்படுத்துகின்றாா் என்றோ அரசு திருப்தியடைந்தால் எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக, அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரை அவ்வறிப்பில் சொல்லப்பட்ட அவரது தவறுகளை மற்றும் செய்கைகளை பொறுத்த அளவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்குள் அவரது விளக்கத்தை தெரிவிக்கும்படி கோரிப் பெறுதல் வேண்டும்.

(2) மேற்படி விளக்கம் குறிப்பிட்ட தேதிக்குள்ளாகப் பெறப்பட்டிருந்து, அந்த விளக்கம் திருப்திகரமாக இருப்பதாக அரசு கருதுமாயின், அந்த அறிவிப்பின் மீது, மேல் நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டுவிடலாம். குறிப்பிட்ட தேதிக்குள்ளாக ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரிடமிருந்து விளக்கம் பெறப்படவில்லை என்றாலும், அல்லது பெறப்பட்ட விளக்கம் தனது கருத்துப்படி திருப்திகரமாக இல்லையென்று கருதினாலும் அரசு உட்பிரிவு (1) குறிப்பிடப்பட்ட அந்த அறிவிப்பின் நகல் ஒன்றையும், ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரின் விளக்கத்தையும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கருத்துக்களை அறிவதற்காக ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான கருத்துருவுடன் சோ்த்து, தொடா்புடைய கோட்டத்தின், வருவாய்க் கோட்ட அலுவலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) வருவாய்க் கோட்ட அலுவலரானவா், அந்த அறிவிப்பையும், விளக்கத்தையும் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரை நீக்குவதற்கான கருத்துருவையும் பரிசீலிப்பதற்காக,

அவரால் குறிக்கப்பட்ட ஒரு காலத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தை கூட்டுதல் வேண்டும்.

(4) அந்தக் கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பின் நகலினை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் கூட்டத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்பாக வருவாய் கோட்ட அலுவலர் சேர்பிக்க வேண்டும்.

(5) இந்தப் பிரிவின்படி கூட்டப்பட்ட கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர் தலைமை வகிக்க வேண்டும். அவரைத் தவிர வேறு நபர் எவரும் தலைமை வகிக்க கூடாது. கூட்டத்திற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரை மணி நேரத்திற்குள் வருவாய் கோட்ட அலுவலர் கூட்டத்திற்கு தலைமை வகிக்க வரவில்லையெனில் (6) ன்படி உட்பிரிவு (6) வருவாய் கோட்ட அலுவலரால் குறிக்கப்படுகின்ற இன்னொரு காலத்திற்கு கூட்டம் ஒத்தி வைக்கப்படும் இந்த காலத்தை குறித்து வருவாய் கோட்ட அலுவலர் அனைத்து ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களுக்கும், தலைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.

(6) கூட்டத்தில் தலைமை வகிக்க வருவாய் கோட்ட அலுவலரால் இயலவில்லையெனில் அவர் அதற்கான காரணங்களைப் பதிவு செய்து அவரால் நிர்ணயிக்கும் இன்னொரு காலத்திற்கு கூட்டத்தினை ஒத்தி வைக்கலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்படும் காலமானது உட்பிரிவு (3)ன்படி கூட்டப்பட்ட கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். தள்ளி வைக்கப்பட்டகூட்டத்திற்கான காலத்தை பற்றி குறைந்தது ஏழு முழு நாட்களுக்கு முன்பு ஊராட்சி ஒன்றியக் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும், தலைவருக்கும் அனுப்ப வேண்டும்.

(7) உட்பிரிவுகள் (5) மற்றும் (6)ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் அல்லாமல் மற்றபடி மேற்படி அந்த அறிவிப்பையும், விளக்கத்தையும் இப்பிரிவின் கீழ் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவரை நீக்குவதற்கான கருத்துரு ஆகியவற்றைப் பரிசீலிப்பதற்காக கூட்டப்பட்ட கூட்டத்தை வேறு எந்த காரணத்தை முன்னிட்டும் ஒத்திவைக்க கூடாது.

(8) இந்தப் பிரிவின்படி கூட்டப்பட்ட கூட்டம் துவங்கியவுடன் வருவாய் கோட்ட அலுவலரானவர் அரசின் அறிவிப்பையும் 1(ஊராட்சி ஒன்றியக்குழு தலைவரை நீக்குவதற்கான கருத்துருவையும்) ஊராட்சி ஒன்றியக் குழு தலைவரின் விளக்கம் ஏதேனுமிருப்பின் அந்த விளக்கவுரையுடன் இவற்றைப் பரிசீலிப்பதற்காக இந்தக் கூட்டமானது கூட்டப்பட்டதோ, மேற்சொன்ன அவற்றை ஊராட்சி ஒன்றியக் குழுவின் கூட்டத்தின் பரிசீலனைக்காகப் படித்துக் காட்ட வேண்டும்.

(9) இந்தப் பிரிவின்படி கூட்டப்பட்ட கூட்டத்தில் விவாதம் எதுவும் செய்யப்பட கூடாது.

(10) வருவாய்க் கோட்ட அலுவலர், அறிவிப்பினைப்பற்றி அல்லது ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் அளித்த விளக்கத்தைப் பற்றிய தகுதிப்பாடுகள் குறித்து எதுவும் பேசக் கூடாது மற்றும் இக்கூட்டத்தில் அவருக்கு வாக்களிப்பதற்கு உரிமையும் இல்லை.

(11) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கருத்துக்கள், கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் உரியவாறு பதிவு செய்யப்பட வேண்டும், மற்றும் அந்தக் கூட்டம் முடிந்த பின்பு உடனடியாக கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பின் நகலினை அவ்வருவாய்க் கோட்ட அலுவலர் அரசிற்கு அனுப்ப வேண்டும்.

(12) அரசு, இதன் தொடர்பாக ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கருத்துக்களைப் பரிசீலித்த பின்னர் தான் கருதுகின்றபடி அறிவிக்கையின் வாயிலாக, அதில் குறித்துரைக்கப்படக்கூடிய தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கிவிடலாம் அல்லது மேல் நடவடிக்கையை கைவிடலாம்.

(13) எந்த நபரை பொறுத்து ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர் பதவியிலிருந்து நீக்கி உட்பிரிவு (12)ன்படி அறிவிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த நபரானவர் எந்த தேதியில் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கான அடுத்த வழக்கமான தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுகின்றதோ அந்தத் தேதி வரையில் அல்லது மேற்சொன்ன அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு முடிவடையும் வரையில் அதாவது இதில் எது முந்தி வருகின்றதோ அதுவரையில், அவர் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் அந்தப் பதவிகளை வகித்துவருவதற்கும் தகுதியுடையவராக இருக்க மாட்டார்.

---

207 (8) 1 இந்த உட்பிரிவில் ( )ல் கூறப்பட்டுள்ள சொற்றொடர் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999) பிரிவு 5ன்படி சேர்க்கப்பட்டது.

## 208. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்

(1) அரசின் கருத்துப்படி, ஊராட்சி ஒன்றிய மன்றத் துணைத் தலைவரானவர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்கு முறை விதி அல்லது சட்டப்படியான ஆணை எதையும் நிறைவேற்றுவதில் தவறுகின்றாரெனில் அல்லது மறுக்கின்றாரெனில் அல்லது பணியாற்றாமல் இருக்கின்றாரெனில் அல்லது அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதையும், தவறாகப் பயன்படுத்துகின்றாரெனில், அரசானது, எழுத்துருவிலான அறிவிப்பின் வாயிலாக, அத்துணைத் தலைவரை, அவ்வறிப்பில் சொல்லப்பட்ட அவரது தவறுகளை மற்றும் செய்கைகளை பொறுத்த அளவில், குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்குள் அவரது விளக்கம் அளிக்குமாறு கேட்டு பெறுதல் வேண்டும்.

(2) பிரிவு 207 உட்பிரிவுகள் (2) முதல் (13) (இரண்டு உள்ளடங்கலாக) வரையிலான உட்பிரிவுகளில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள், ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு எவ்வாறு பொருந்துமோ கூடியமட்டில் அதே அளவில் போல் ஊராட்சி ஒன்றியக் குழுவின் துணைத் தலைவரை பதவியில் இருந்து நீக்குவதற்கும் அவ்வாறே பொருந்தும்.

## 209. மாவட்ட ஊராட்சித் தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்

(1) அரசு

(அ) தானே முற்பட்டோ அல்லது

(ஆ) மாவட்ட ஊராட்சியின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத உறுப்பினர்களால் கையெழுத்திடபட்டு மாவட்ட ஊராட்சியின் ஏதேனும் இரண்டு உறுப்பினர்களால் இதன் பொருட்டு அரசால் நியமிக்கப்பட்ட அலுவலரிடம் நேரடியாக அளிக்கப்பட்ட எழுத்துருவிலான ஒரு முறையீட்டின் பேரிலும்

மாவட்ட ஊராட்சியின் தலைவர் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை அல்லது இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, அல்லது சட்டப்படியான ஆணை எதையும் நிறைவேற்றுவதில் தவறுகின்றாரென்றா அல்லது மறுக்கின்றாரென்றோ அல்லது பணியாற்றாமலிருக்கின்றாரென்றோ அல்லது அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதையும் தவறாகப் பயன்படுத்துகின்றாரென்றோ அரசு திருப்தி அடைந்தால் எழுத்துருவிலான அறிவிப்பின் வாயிலாக மாட்ட ஊராட்சித் தலைவரை அவ்வறிவிப்பில் சொல்லப்பட்ட அவரது தவறுகளை மற்றும் செய்கைகளை பொறுத்த அளவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்குள் அவரது விளக்கத்தை கோரிப் பெறுதல் வேண்டும்.

(2) பிரிவு 207 உட்பிரிவுகள் (2) முதல் (13) (இரண்டும் உள்ளடங்களாக) வரையிலான உட்பிரிவுகளில் கூறப்பட்டுள்ள வகை முறைகள், ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரை அரசு தாமே முற்பட்டு பதவியிலிருந்து நீக்குவதற்கு பொருந்துவது போன்றே இயலும் அளவிற்கு மாவட்ட ஊராட்சியின் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குதல் தொடர்பாக பொருந்துதல் வேண்டும்.

**210. மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்குதல்**

210 (1) அரசின் கருத்துப்படி, மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் படி பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்குமுறை விதி, அல்லது சட்டப்படியான ஆணை எதையும் நிறைவேற்றுவதில் தவறுகின்றாரெனில் அல்லது மறுக்கின்றாரெனில் அல்லது அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதையும் தவறாக பயன்படுத்துகின்றாரெனில் அரசானது எழுத்துருவிலான அறிவிப்பின் வாயிலாக அத்துணைத் தலைவரை, அவ்வறிப்பில் சொல்லப்பட்ட அவரது தவறுகளை மற்றும் செய்கைகளைப் பொறுத்த அளவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்குள் அவரது விளக்கத்தை கோரிப் பெறுதல் வேண்டும்.

(2) பிரிவு 207 உட்பிரிவுகள் (2) முதல் (13) (இரண்டும் உள்ளடங்களாக) வரையிலான உட்பிரிவுகளில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள், ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு பொருந்துவது போன்றே இயலக்கூடிய வரையில் மாவட்ட ஊராட்சியின் துணைத்தலைவரைப் பதவியிலிருந்து நீக்குதல் தொடர்பாகவும் பொருந்தும்.

## 210A Removal

"210-A Removal of president, vice president, chairman, vice-chairman or member convicted under section 246-A – (1) notwithstanding anything contained in this Act, the Government may, by motification remove any president, vice president, or member of a village panchayat or chairman, vice-chairman or member of a panchayat union council or of a district panchayat who is convicted twice of an offence punishable under section 246-A.

(2) The Government shall, when they propose to take action under sub-section (1) give the president, vice-president, chairman, vice-chairman or member concerned an opportunity to explain and the notification issued under the said sub-section shall contain a statement of the reasons of the Government for the action taken.

(3) Any person removed under sub-section (1) from the office of president, vice-president, chairman, vice-chairman or member, as the case may be, shall not be eligible for election to the said office until the date on which notice of the next ordinary election to the village panchayat, panchayat, union council or district panchayat, as the case may be, is published in the prescribed manner or the expiry of one year from the date specified in such notification, whichever is earlier".

**211. கிராம ஊராட்சி துணைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்**

(1) இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இதில் வகுத்துரைக்கப்பட்ட நடைமுறைகளின்படி கிராம ஊராட்சியின் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படலாம்.

(2) துணைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவிக்கும் தீர்மானத்தை கொண்டு வர விரும்பும் கிராம ஊராட்சியில் அனுமதிக்கப்பட்ட மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் சரி பாதி எண்ணிக்கைக்கும் குறையாத கிராம ஊராட்சி உறுப்பினர்களால்

எழுத்துருவிலான அறிவிப்புடன், கொண்டு வரப்படுகின்ற தீர்மானத்தின் நகலையும் சேர்த்து கிராம ஊராட்சித் துணைத் தலைவருக்கெதிரான குற்றச்சாட்டுகளடங்கிய பட்டியலுடன் இணைத்து கையெழுத்திட்டிருக்கின்ற கிராம ஊராட்சி உறுப்பினர்களில் ஏதேனும் இரண்டு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் நேரில் கொடுக்க வேண்டும்.

(3) குற்றச்சாட்டுகள் அடங்கிய பட்டியலின் நகலொன்று கூட்ட அறிவிப்புடன் சேர்த்து கிராம ஊராட்சியின் துணைத் தலைவரிடம் சேர்க்கப்படுமாறு சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் அத்துணைத் தலைவரால் அறிவிப்பு பெறப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளாக அவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கான விளக்கத்தை அவரிடமிருந்து கோரி பெறுதல் வேண்டும்.

(4) வட்டாட்சியரால் உட்பிரிவு (3)ன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பின் கால அளவானது முடிவடைந்த பின்னர், அத்தீர்மானத்தைப் பரிசீலிப்பதற்காக ஊராட்சி அலுவலகத்தில் அவரால் குறிக்கப்பட்ட காலத்தில் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

(5) வட்டாட்சியரானவர் அந்தக் கூட்டம் மற்றும் அதற்காகக் குறிப்பிட்ட கால அளவு பற்றிய அறிவிப்பினைப் பதினைந்து முழு தினங்களுக்கு குறையாத ஒரு கால அளவிற்கு முன் கூட்டி கொடுக்கப்பட வேண்டும்.

(6) இந்தப் பிரிவின்படி கூட்டப்பட்ட கூட்டத்திற்கு வட்டாட்சியர் தலைமை வகித்தல் வேண்டும். மற்றும் பிற நபர் எவரும் தலைமை வகிக்க முடியாது. கூட்டத்திற்குக் குறிக்கப்பட்ட அரை மணி நேரத்திற்குள் வட்டாட்சியர், கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வரவில்லை எனில் உட்பிரிவு (7)ன்படி வட்டாட்சியரால் குறிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு அறிவிக்கை செய்யப்படக்கூடிய ஒரு கால அளவிற்கு கூட்டம் தள்ளி வைக்க வேண்டும்.

(7) வட்டாட்சியரால் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இயலவில்லை எனில், அவர் அதற்கான தனது காரணங்களைப் பதிவு செய்த பின்பு, அவரால் குறிக்கக் கூடிய கால அளவிற்குக் கூட்டத்தினைத் தள்ளி வைக்கலாம். அவ்வாறு குறிக்கப்படும் தேதியானது, உட்பிரிவு (4)ன் படி கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு அப்பாற்பட்டு இருத்தல் ஆகாது. தள்ளி வைக்கப்பட்ட கூட்டத்திற்குக் குறிக்கப்பட்ட கால அளவினைப் பற்றி ஏழு முழு நாட்களுக்கு முன்னரே அறிவிப்பினை உறுப்பினர்களுக்கு அளித்தல் வேண்டும்.

(8) உட்பிரிவுகள் (6) மற்றும் (7)ல் வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர இந்தப் பிரிவின்படி தீர்மானத்தை பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காக கூட்டப்பட்டுள்ள கூட்டத்தை வேறு எந்தக் காரணத்திற்காகவும் ஒத்தி வைக்கக் கூடாது.

(9) இந்தப் பிரிவின்படி கூட்டப்பட்டுள்ள கூட்டமானது தொடங்கியவுடன் வட்டாட்சியர் எந்தத் தீர்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காக அக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளதோ அந்த தீர்மானத்தை பற்றிய குற்றச்சாட்டுக்களின் விபர அறிக்கையை மற்றும் அக்குற்றச்சாட்டுகளுக்கு எழுத்து வடிவிலான விளக்க அறிக்கை ஏதேனுமிருப்பின் அதனையும் கிராம ஊராட்சியின் கூட்டத்தில் படித்துக் காட்ட வேண்டும்.

(10) இந்தப் பிரிவின்படி தீர்மானம் எதன் மீதும் விவாதம் எதுவும் செய்யப்படக்கூடாது.

(11) வட்டாட்சியர் அந்த தீர்மானத்தின் தகுதிகளைப் பற்றி பேசக் கூடாது என்பதுடன் அதன் மீது வாக்களிப்பதற்கும் உரிமை இல்லை.

(12) அந்தத் தீர்மானத்தின் மற்றும் அதன் மீது நடந்த வாக்கெடுப்பு முடிவுகளின் படியும் அந்தக் கூட்டத்தின் கூட்ட நடிவடிக்கை குறிப்பின் நகல் ஒன்றை உடனடியாக அந்தக் கூட்டம் முடிவடைந்தவுடன் வட்டாட்சியர் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(13) அந்தத் தீர்மானமானது தொடர்புடைய கிராம ஊராட்சி அனுமதிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குகளுக்குக் குறையாத ஆதரவுடன்

நிறைவேற்றப்பட்டிருக்குமாயின், ஆய்வாளர், அறிவிக்கை வாயிலாக கிராம ஊராட்சியின் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

(14)தீர்மானமானது மேற்சொன்னவாறு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவில்லை எனில் அல்லது அந்தக் கூட்டமானது உட்பிரிவு (13)ல் குறிக்கப்பட்டுள்ள குறைவெண் வரம்பு இல்லாததால் நடத்த இயலாதிருக்குமாயின், அதே துணைத் தலைவரிடம் நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றிய அறிவிப்பு பிந்திய தீர்மானம் எதனையும் பற்றிய அறிவிப்பு எதுவும் அந்தக் கூட்டத் தேதியிலிருந்து ஆறு மாதம் முடிவடையும் வரையிலும் பெற்றுக் கொள்ளக் கூடாது.

(15) இந்தப் பிரிவின்படியான ஒரு தீர்மானம் பற்றிய அறிவிப்பு எதுவும் துணைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்ட முதல் ஆறு மாதங்களுக்குள் பெற்றுக் கொள்ள முடியாது.

**212. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் [1](தலைவர்) துணைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்**

(1) இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் 2(தலைவர் மற்றும் துணைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைக்கு இணங்க கொண்டுவரப்படலாம்)

(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையின் சரிபாதி எண்ணிக்கைக்கு குறையாமலுள்ள எண்ணிக்கையில் ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டதும், அந்தத் தீர்மானத்தைப் பற்றிய எழுத்து வடிவிலான அறிவிப்பையும் அத்தீர்மானத்தின் நகல் ஒன்றுடன் சேர்த்து ஊராட்சி ஒன்றிய மன்ற 3(தலைவர்) மற்றும் துணைத் தலைவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளைப் பற்றிய எழுத்து வடிவிலான விபர உரையுடன் அந்த அறிவிப்பில் கையொப்பமிட்ட ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்களில் எவரேனும் இரண்டு உறுப்பினர்களால் தொடர்புடைய கோட்டத்தின் வருவாய்க் கோட்ட அலுவலரிடம் நேரில் கொடுக்க வேண்டும்.

(3) குற்றச்சாட்டு பற்றிய விபர அறிக்கையின் நகலையும் கொண்டு வரப்படும் தீர்மானத்துடன் சேர்த்து, வருவாய்க் கோட்ட அலுவலரால் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய மன்றத் [4](தலைவர்) மற்றும் துணைத் தலைவரிடம் சேர்க்கப்படுமாறு நடவடிக்கை வேண்டும். மேலும் தொடர்புடைய தலைவர் மற்றும் துணைத் தலைவர் தீர்மானத்தைப் பெற்றுக் கொண்ட ஒரு வாரத்திற்குள் அக்குற்றச்சாட்டுகளுக்கான விளக்கத்தை அளிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

(4) வருவாய்க் கோட்ட அலுவலர் தாம் குறித்திடும் காலத்தில் ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தில் அத்தீர்மானத்தை பற்றி பரிசீலனை செய்வதற்காக ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

(5) வருவாய்க் கோட்ட அலுவலர் அந்தக் கூட்ட அறிவிப்பினை கூட்டத்திற்கான கால அளவிற்கு பதினைந்து முழு நாட்களுக்குக் குறையாத கால அவகாசம் அளித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(6) வருவாய்க் கோட்ட அலுவலர், இந்தப் பிரிவின்படி கூட்டப்படும் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார். மற்றும் அதில் பிற நபர் எவரும் தலைமைத் தாங்க கூடாது, அந்தக் கூட்டத்திற்கென குறித்துள்ள காலத்திற்குப் பின்னர் அரை மணி நேரத்திற்குள் அந்தக் கூட்டத்திற்குக் தலைமை தாங்குவதற்கு வருவாய் கோட்ட அலுவலர் வரவில்லையெனில் அந்தக் கூட்டமானது, அவரால் குறிப்பிடப்படும் பிறிதொரு காலத்திற்கு தள்ளிவைக்கப்பட்டு உட்பிரிவு (7)ன்படி வருவாய்க் கோட்ட அலுவலரால் குறிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு அறிவிக்கை செய்யப்படக் கூடிய ஒருகால அளவிற்கு தள்ளி வைக்கப்படும்.

(7) வருவாய் கோட்ட அலுவலர் கூட்டத்திற்கு தலைமை தாங்க இயலாதிருப்பாரானால் அவர், எழுத்து வடிவிலான காரணங்களைப் பதிவு செய்த பின்பு தாம் குறிப்பிடும் வேறொரு

காலத்திற்கு அந்தக் கூட்டத்தை தள்ளி வைக்கலாம். அவ்வாறு குறிப்பிடும் காலமானது உட்பிரிவு (4)ன்படி அந்தக் கூட்டத்தற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மேற்பட்டு இருக்க கூடாது. தள்ளி வைக்கப்பட்ட கூட்டத்தை கூட்டம் நடைபெறுவதற்கு முழு ஏழு நாட்களுக்கு முன்னா் கூட்ட அறிவிப்பை அனைத்து உறுப்பினா்களுக்கும் கொடுக்க வேண்டும்.

(8) உட்பிரிவுகள் (6) மற்றும் (7)ல் வகை செய்யப்பட்டுள்ளதை தவிர, இந்தப் பிரிவின்படியான தீா்மானம் ஒன்றை பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காக கூட்டப்படும் கூட்டத்தை, எந்தக் காரணத்திற்காகவும் தள்ளி வைக்கக் கூடாது.

---

212 (1,2,3,4) இப்பிரிவில் தலைப்பு உள்ளடங்கலாக ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவா் என்ற சொற்றொடா் எங்கெல்லாம் வந்ததோ அங்கெல்லாம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவா் அல்லது துணைத் தலைவா் என்ற சொற்றொடரானது 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1999) பிரிவு 2ன்படி சோ்க்கப்பட்டது. (அ.ஆ.எண்.133, நாள்.13.7.99).

(9) இந்தப் பிரிவின்படி கூட்டப்பட்டுள்ள கூட்டம் தொடங்கியவுடன் வருவாய் கோட்ட அலுவலா் எந்தத் தீா்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காக அக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளதோ அந்தத் தீா்மானத்தைப் பற்றிய குற்றச்சாட்டுக்கள் விபர அறிக்கை, மற்றும் மேற்சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் மற்றும் துணைத்தலைவா் அளித்த விளக்கம் ஏதேனுமிருப்பின் அதனையும் ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தில் படித்துக் காட்ட வேண்டும்.

(10) இந்தப் பிரிவின்படி தீா்மானம் எதன்மீதும் விவாதம் எதுவும் செய்யப்படக் கூடாது.

(11) வருவாய்க் கோட்ட அலுவலா், அந்தத் தீா்மானத்தின் தகுதிகளைப் பற்றிப் பேசுதல் ஆகாது என்பதுடன் அதன் மீது வாக்களிப்பதற்கும் உரிமையுடையவராகமாட்டாா்.

(12) அந்தத் தீா்மானத்தின் மற்றும் அதன் மீது நடந்த வாக்கெடுப்பு முடிவுகளின் நகலொன்றுடன் சோ்த்து அந்த கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை குறிப்புகளின் நகலொன்றை உடனடியாக அந்தக் கூட்டம் முடிந்தவுடன் வருவாய்க் கோட்ட அலுவலா் அரசுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(13) அந்தத் தீா்மானமானது, ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உறுப்பினா் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டிருக்குமாயின், அரசு அறிவிக்கை வாயிலாக ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு தலைவா் மற்றும் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

(14) தீா்மானமானது, மேற்சொன்னவாறான பெரும்பான்மை வாயிலாக நிறைவேற்றப்படவில்லையாயினும், அல்லது அக்கூட்டமானது உட்பிரிவு (13) கூறப்பட்டுள்ள குறைவெண் வரம்பு இல்லாததால் நடத்த இயலாதிருக்குமாயின், அதே ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவா் அல்லது துணைத் தலைவரிடம் நம்பிக்கை இல்லை என்பதை தெரிவிக்கின்ற தீா்மானம் எதனையும் பற்றிய அறிவிப்பு எதுவும் அந்தக் கூட்டத் தேதியிலிருந்து 1(ஒரு வருடம்) முடியும் வரை பெற்றுக் கொள்ள கூடாது.

(15) இந்தப் பிரிவின்படியான தீா்மானம் ஒன்றின் அறிவிப்பு எதுவும் தலைவா் துணைத் தலைவா் பதவி ஏற்ற 1(ஒரு வருடத்திற்குள்) பெறக்கூடாது.

**213. மாவட்ட ஊராட்சியின் 2(தலைவா் அல்லது) துணைத் தலைவா் மீதான நம்பிக்கை இல்லாத் தீா்மானம்**

மாவட்ட ஊராட்சியின் 3(தலைவா் அல்லது) துணைத் தலைவா் மீதான நம்பிக்கையில்லாத் தீா்மானம், பிரிவு 212ல் கூறப்பட்டுள்ள உட்பிரிவுகளில் கோட்ட வருவாய் அலுவலருக்கான குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கான குறிப்புகளாக பொருள் கொள்ளப்பட வேண்டும் என்ற மாற்ற அமைவுக்கு உட்பட்டு பிரிவு 212 உட்பிரிவு (2)லிருந்து

(15)ஆம் உட்பிரிவு வரையிலும் (இவை இரண்டும் உள்ளடங்களாக) குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைக்கு இணங்க கொண்டு வரப்படலாம்.

---

212 (14)1 உட்பிரிவு (14)ல் (ஆறுமாதங்கள்) என்றிருந்த சொல்லை 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1999) பிரிவு 2ன்படி (ஒருவருடம்) என திருத்தப்பட்டது.

212 (15) 1 உட்பிரிவு (15)ல் (ஆறு மாதங்கள்) என்றிருந்த சொல்லை 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1999) பிரிவு 2ன்படி (ஒருவருடம்) என திருத்தப்பட்டது. (அ.ஆ.எண்.133, நாள்.13.7.99)

213 2,3 இப்பிரிவில் மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவா் என்ற சொற்றொடருக்கு முன் தலைவா் அல்லது என்ற சொற்றொடா் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1999) பிரிவு 2ன் படி சோ்க்கப்பட்டது. (அ.ஆ.எண்.133, நாள். 13.7.99)

**214. கிராம ஊராட்சியைக் கலைத்தல்**

(1) கிராம ஊராட்சி ஒன்று செயல் புரிவதற்குத் திறன் அற்றதாக இருக்கிறது அல்லது சட்டத்தின் வாயிலாக கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் தவறுகளை செய்கிறது அல்லது தமது அதிகாரங்களை மீறுகிறது அல்லது தவறாகப் பயன்படுத்துகின்றது என்று கருதுமாயின், அரசு அறிவிக்கை வாயிலாக அந்த கிராம ஊராட்சியை குறித்துரைக்கப்படும் தேதி ஒன்றிலிருந்து கலைக்கலாம். அவ்வாறு கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் மீண்டும் செயல்படுமாறு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று பணிக்கலாம் அல்லது

(2) உட்பிரிவு (1)ன் படியான அறிவிக்கை வெளியிடப்படுவதற்கு முன்பு, அரசு அவ்வாறு செய்வதற்கு எந்த அடிப்படையோ அந்த அடிப்படைகள் குறித்து காரணம் காட்டுவதற்கும், அதன் விளக்கங்களையும், மறுப்புரைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை தெரிவிப்பதற்கு குறித்த கால அளவு ஒன்றை நிா்ணயித்து அந்த அளவுக்குள் தரப்பட்ட விளக்கங்கள், மறுப்புகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

(3) உட்பிரிவு (1)ன்படி கிராம ஊராட்சி ஒன்றைக் கலைப்பதற்கெனத் தேதி நிருணயிக்கப்பட்டவுடன் அதன் உறுப்பினா்களும், மற்றும் அதன் தலைவரும் துணைத் தலைவரும் அவா்களது பதவிகளிலிருந்து உடனடியாக விடுபட்டதாகக் கருத வேண்டும். மற்றும் அதன் பேரில், பிரிவு 16-உட்பிரிவு (2)ல் கூறப்பட்டுள்ள வரம்புரையில் அடங்கியுள்ள வகைமுறைகள் பொருந்தும்.

(4) இந்தப் பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராக உள்ள கலைக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சியின் தலைவரைப் பொறுத்த வரையில் பிரிவு 22ல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், கலைக்கப்ட்ட தேதியிலிருந்து அத்தகைய உறுப்பினராக பதவி வகிப்பது விடுபட்டதாக கொள்ளப்பட வேண்டும்.

(5) கலைத்து விட்ட பின்பு, கிராம ஊராட்சியை மறுபடியும் அமைப்பதற்காக அரசானது, கிராம ஊராட்சியின் சாா்பாக கலைக்கப்பட்ட காலத்தில் ஊராட்சி ஒன்றிய மன்ற வாயிலாக ஈட்டப்பட்டிருந்த சொத்திருப்புக்களை அல்லது நிறுவனங்களை மற்றும் அத்தகைய சொத்துருப்புகள் அல்லது நிறுவனங்கள் தொடா்பாக அத்தகைய கிராம ஊராட்சியின் கட்டுபாடுகள் ஏதேனுமிருப்பின் அதை விடுவித்தல் குறித்தும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடமிருந்து கிராம ஊராட்சிக்கு உரிமை மாற்றம் செய்வது குறித்தும் அரசு பொருத்தமான ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(6) கலைத்துவிட்ட பின்பு கிராம ஊராட்சியை மறுபடியும் அமைக்கப்படும் பொழுது கிராம ஊராட்சித் தலைவா் உள்ளடங்கலான தோ்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினா்கள் அதனை மறுபடியும் அமைப்பதற்கென நிா்ணயிக்கப்பட்டுள்ள தேதியன்று அவா்களது பதவியில் சேருவா். மற்றும் அது கலைக்கப்படாதிருந்தால் பிரிவு 9, உட்பிரிவு (1)ன்படி எந்த கால

அளவிற்கு அந்த கிராம ஊராட்சி தொடர்ந்து பதவியில் இருந்திருக்குமோ அந்த எஞ்சிய கால அளவிற்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவி வகிக்க முடியும்.

**215. ஊராட்சி ஒன்றிய மன்றத்தைக் கலைத்தல்**

(1) ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றமானது சட்டத்தின் வாயிலாக அதற்கு வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் திறனற்றதாக இருக்கிறது அல்லது தொடந்து தவறுகளை செய்கிறது அல்லது அதன் அதிகாரங்களை மீறுகிறது அல்லது தவறாகப் பயன்படுத்துகிறது என்று அரசு கருதுமாயின் அரசின் அறிவிக்கை வாயிலாக

(அ) குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய மன்றத்தைக் கலைக்கப்படலாம் மற்றும்

(ஆ) கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்குள், ஒரு தேதியிலிருந்து செயல்திறன் பெறுமாறு அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தை மறுபடியும் அமைக்க அறிவிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)ன் படியான ஒரு அறிவிக்கை வெளியிடுவதற்கு முன்பு, அரசு அவ்வாறு செய்வதற்கு எந்த அடிப்படையோ அந்த அடிப்படைகள் குறித்து காரணம் காட்டுவதற்கும் அதன் விளக்கங்களையும் மறுப்புகளையும் ஏதேனும் இருப்பின் அவற்றையும் தெரிவிப்பதற்கு கால அளவு ஒன்றை நிர்ணயித்து அந்த கால அளவிற்குள் தரப்பட்ட விளக்கங்களையும் மறுப்புகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

(3) உட்பிரிவு (1)ன்படி ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தை கலைப்பதற்கான தேதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர், அதன் அனைத்து உறுப்பினர்களும், தலைவரும், துணைத் தலைவரும் அவர்களது பதவியிலிருந்து விடுபட்டதாக கருதப்பட வேண்டும்.

(4) ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தை கலைத்து விடுவதற்கும் மறுபடியும் அமைப்பதற்கும் இடையிலான காலத்தின் போது அந்த ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்ற தலைவரின் அதிகாரங்களை செலுத்துவதற்கும் கடமைகளை ஆற்றுவதற்கும் ஆய்வாளர், ஒருவரை நியமிக்கலாம்.

ஆனால் இந்த உட்பிரிவின் வகைமுறைகளின்படி நியமிக்கப்படும் நபர் எவரும், வட்டாட்சியர் அல்லது ஆணையரின் நிலைக்கும் குறையாத அரசுப் பணியிலுள்ள அலுவலர் ஒருவராக இருக்க வேண்டும்.

(5) உட்பிரிவு (1) கூறு (ஆ)ன்படி அதனை மறுபடியும் அமைப்பதற்கென தீர்மானிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்பு அந்த ஊராட்சி ஒன்றிய மன்றம் மறுபடியும் அமைக்கப்படுத்தல் வேண்டும் என்று பணிக்கலாம்.

(6) மறுபடியும் அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களும், தலைவரும் துணைத் தலைவரும் அதனை மறுபடியும் அமைப்பதற்கென நிருணயிக்கப்பட்டுள்ள தேதியன்று அவர்களது பதவிகளில் சேருவர் மற்றும் அவர்கள் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றம் கலைக்கப்படாமல் பிரிவு 18 உட்பிரிவு (1)ன்படி அந்தக் கலைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் தொடர்ந்து எந்தக் கால அளவுக்கு பதவியில் இருந்திருக்க முடியுமோ அந்த எஞ்சிய கால அளவிற்கு மட்டுமே அவர்கள் பதவி வகிக்க முடியும்.

(7) இந்தப் பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றம், கலைக்கப்பட்டு அந்த ஊராட்சி ஒன்றியமன்றம் மறுபடியும் அமைக்கப்படும் தேதி வரையிலும் அவ்வாறு மறுபடியும் அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றமும் பின்னர் அனைத்து சொத்திருப்புகளும் உரிமை கொண்டதாக இருப்பதுடன், முறையே மறுபடியும் அமைக்கப்பட்ட தேதியன்று இருந்தவாறு அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனைத்து கட்டுப்பாடுகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

**216. மாவட்ட ஊராட்சியைக் கலைத்தல்**

(1) ஒரு மாவட்ட ஊராட்சியானது சட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியற்றதாக இருக்கிறது அல்லது நிறைவேற்றுவதில் தொடர்ந்து தவறுகள் செய்கிறது அல்லது அதன் அதிகாரங்களை மீறுகிறது அல்லது தவறாகப் பயன்படுத்துகிறது என்று அரசு கருதுமாயின் அறிவிக்கை வாயிலாக:

(அ) குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து மாவட்ட ஊராட்சியைக் கலைக்கலாம், மற்றும்

(ஆ) கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு தேதியிலிருந்து செயல்திறன் பெறுமாறு அந்த மாவட்ட ஊராட்சி மறுபடியும் அமைக்கப்பட வேண்டும் என்று பணிக்கலாம்.

(2) பிரிவு 215 உட்பிரிவுகள் (2) முதல் (7) வரையிலான (இரண்டு உள்ளடங்கலான) உட்பிரிவுகளின் வகைமுறைகள் ஊராட்சி ஒன்றிய மன்றம் கலைக்கப்படுவது தொடர்பாக பொருந்துவன போன்றே கூடிய மட்டில் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு மாவட்ட ஊராட்சி கலைக்கப்படுவது தொடர்பாகவும் பொருந்தும்.

### 217. ஊராட்சியின் சார்பாக செயல்படுகின்ற அலுவலர்களின் அதிகாரங்களும் இழப்பீடு செலுத்துவதற்கான கட்டுப்பாடும்

இந்தச் சட்டத்தின்படி ஊராட்சி யொன்றின் சார்பாகவோ அதன் தவறுகைக்காக சட்டப்படி நடவடிக்கை எடுக்கின்ற அரசு, ஆய்வாளர் அல்லது பிற நபர் எவரும் அந்த நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்ற அதிகாரங்களைப் பெற்றிருப்பார்கள். மேலும் எந்த ஊராட்சி அல்லது அதன் அலுவலர்கள் அல்லது பணியாளர்களின் அதிகாரங்கள் செலுத்தப்படுகின்றனவோ அந்த ஊராட்சி அல்லது அதன் அலுவலர்கள் அல்லது பணியாளர்களுக்கு உள்ளதைப் போன்று இந்தச் சட்டத்தின்படியான அதே பாதுகாப்பிற்கு உரிமையுடையவர்களாவார்கள். மற்றும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தியதன் விளைவாக ஏற்பட்டுள்ள இழப்பீட்டினால் பாதிக்கப்படுகின்ற நபர் எவராலும் கிராம ஊராட்சி நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தோ அல்லது மாவட்ட ஊராட்சி பொது நிதியிலிருந்தோ அந்த நடவடிக்கை ஊராட்சியாலோ அல்லது அதன் அலுவலர்கள் அல்லது பணியாளர்களாலோ எடுக்கப்பட்டிருந்தது போன்றே அதே அளவிற்கு இழப்பீடு வசூலிக்கப்பட வேண்டும்.

### 218. அதிகாரங்களை ஒப்படைத்தல்

(1) அரசானது அறிவிக்கையின் வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவரின் நிலைக்குக் குறையாத அதிகார அமைப்பு அல்லது அலுவலர் எவருக்கும் பகுதி எதிலும் உள்ள ஊராட்சிகள் அனைத்தின் அல்லது ஊராட்சிகள் வகை எதனின் தொடர்பாகவும் விதிகள் இயற்றுவதற்கான அதிகாரம் நீங்கலாக இந்தச் சட்டத்தின் மூலம் அரசிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் எதனையும் செலுத்தி வருவதற்கு அதிகாரமளிக்கலாம். மேலும் அவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரத்தைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஆய்வாளரோ மாவட்ட ஆட்சித் தலைவரோ அறிவிக்கையின் வாயிலாக வருவாய்க் கோட்ட அலுவலரின் நிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும் அத்தகைய அலுவலரின் அதிகார வரம்பின் கீழ் உள்ள பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய மன்றம் எதையும் பொறுத்து அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் வகை எதையும் பொறுத்து ஆய்வாளரிடமோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ இந்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களில் ஏதொன்றையும் செலுத்தி வருவதற்கு அதிகாரமளிக்கலாம், மற்றும் அவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரத்தைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்.

(3) ஆய்வாளரோ மாவட்ட ஆட்சித் தலைவரோ அறிவிக்கையின் வாயிலாக ஆணையரின் நிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும் கிராம ஊராட்சி எதையும் பொறுத்து அல்லது கிராம ஊராட்சிகளின் வகை எதனையும் பொறுத்து அல்லது ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகள் அனைத்தையும் பொறுத்து அந்த ஆய்வாளரிடமோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ, இந்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களில் ஏதொன்றையும் செலுத்தி வருவதற்கு அதிகாரமளிக்கலாம், மற்றும் அவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

(4) உட்பிரிவுகள் (1) முதல் (3) வரையிலான ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களில் எதையும் செலுத்தி வருவதானது, வகுத்துரைக்கப்படக்கூடிய கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவோ அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக் கூடியதாகவோ மற்றும் ஒப்படைத்த அதிகார அமைப்பினால் அல்லது அத்தகைய அதிகார அமைப்பு அரசாக

இருக்குமிடத்து இதன் பொருட்டு அரசினால் அதிகாரமளிக்கப்படக் கூடிய அலுவலரால் கட்டுப்பாடு மற்றும் மேலாய்வு செய்யப்படுவதற்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும். அரசினால் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலா் எவரின் செயல்களையோ நடவடிக்கைகளையோ கட்டுப்பாடு செய்வதற்கும் மேலாய்வு செய்வதற்குமான அதிகாரத்தையும் பெற்றிருக்கும்.

(5) இந்தப் பிரிவின் உட்பிரிவுகள் (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகள் உள்ளடங்கலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதனாலும் ஆய்வாளருக்கோ ஆணையருக்கோ வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதையும் செலுத்தி வருவதானது, அத்தகைய அதிகாரம் ஆய்வாளராலேயே அல்லது மாவட்ட ஆட்சித் தலைவராலேயே செலுத்திவரப்படுவதாயினும் அல்லது உட்பிரிவுகள் (2) மற்றும் (3)ன்படி ஒப்படைக்கப்பட்ட அலுவலா் எவராலும் செலுத்தி வரப்படுவதாயினும் வகுத்துரைக்கப்படக்கூடிய வரைமுறைகள், நிபந்தனைகள் ஆகியவற்றிற்கும் அரசின் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்படக் கூடிய அலுவலராலோ கூட்டி செய்யப்படுவதற்கும் உட்பட்டதாயிருக்க வேண்டும். அரசு அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலா் எவருடைய செயல்களையும் நடவடிக்கைகளையும் கட்டுப்பாடு செய்வதற்கான அதிகாரங்களையும் பெற்றிருக்கும்.

**219. மேலாய்வுகள்**

(1) அரசு ஆய்வாளரை மாவட்ட ஆட்சித் தலைவா் அல்லது தான் பொருத்தமென கருதக்கூடிய பிற அலுவலா் அல்லது அதிகார அமைப்பைக் கலந்தாலோசித்த பின்னா் எந்தச் சமயத்திலும், தாமாக முற்பட்டோ அல்லது விண்ணப்பத்தின் போரிலோ

(அ) ஆய்வாளராலோ மாவட்ட ஆட்சித் தலைவராலோ அல்லது பிரிவு 218 உட்பிரிவு (2) உட்பிரிவு அல்லது உட்பிரிவு (3)ன்படி ஆய்வாளரால், அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலா் எவராலுமோ அல்லது

(ஆ) பிரிவு 218 உட்பிரிவு (1)ன்படி அரசினாலோ அல்லது உட்பிரிவு (4)ன்படி அதனால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலா் எவராலுமோ அல்லது

(இ) பிற அதிகார அமைப்பு அல்லது அலுவலா் எவராலும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது பதிவு செய்யப்பட்ட நடவடிக்கை எதனையும் பெற்று அத்தகைய ஆணையின் சட்டமுறைமை அல்லது பொருத்தமுடைமை குறித்தோ அத்தகைய நடவடிக்கையின் சட்டமுறைமை அல்லது பொருத்தமுடைமைக் குறித்தோ அத்தகைய நடவடிக்கையின் முறைகளை குறித்தோ தான் தெளிவுறக் காணும் நோக்கத்திற்காக அவற்றை ஆய்வு செய்யலாம் மற்றும் அது குறித்து அரசு பொருத்தமென கருதும் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(2)உட்பிரிவு (1) குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் அரசினால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்படக்கூடிய அதிகார அமைப்பாலோ அல்லது அலுவலராலோ செலுத்தி வரப்படலாம்.

## அத்தியாயம் - XI
## பொது மற்றும் பல்வகை
## உரிமங்களும் அனுமதிகளும்

**220. உரிமம் மற்றும் அனுமதிகள் தொடர்பான பொதுவான வகைமுறைகள்**

(1) இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யப்பட்டவாறு அல்லது வகுத்துரைக்கப்பட்டவாறு தவிர, இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன் கீழ் இயற்றப்படும் விதி, துணை விதி அல்லது, ஒழுங்குமுறை விதி எதன்படியும் உரிமம் அல்லது அனுமதி எதற்குமான அல்லது அதனைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் எந்த முந்திய தேதி முதற்கொண்டு அல்லது (ஒரு ஆண்டாகவோ அல்லது அவ்விண்ணப்பத்தில்

சொல்லப்பட்டுள்ள கால அளவுக்குக் குறைவானதாகவோ இருக்கின்ற) எந்தக் கால அளவிற்கு அந்த உரிமம் அல்லது அனுமதி தேவைப்படுகிறதோ அந்த மிக முந்திய தேதிக்கு அல்லது அந்தக் கால அளவின் தொடக்கத்திற்கு முன்னா் முப்பது நாட்களுக்குக் குறையாமல் ஆனால் தொண்ணூறு நாட்களுக்கு மேற்படாமல் உள்ள கால அளவிற்குள் செய்து கொள்ளப்பட வேண்டும்.

உரிமம் வழங்க காலவரையறை – [G.O.138 R.D t.21.7.99]

(2) மேற்சொன்னவாறு தவிர, அத்தகைய உரிமம் அல்லது அனுமதி ஒவ்வொன்றிற்காகவும் ஊராட்சி தீா்மானிக்கக் கூடிய அலகுகளிலும் விகிதங்களிலும் கட்டணங்கள் விதிக்கப்படலாம். ஆனால் அவ்விகிதங்கள் வகுத்துரைக்கப்படக்கூடிய அதிகபட்ச அளவுக்கு மேற்படக்கூடாது.

(3) மேற்சொன்னவாறு தவிர அத்தகைய உரிமம் அல்லது அனுமதி எதற்குமான விண்ணப்பத்தின் மீது பிறப்பிக்கப்படும் ஆணைகள் கிராம ஊராட்சியின் செயல் அதிகாரியாகவோ அல்லது ஆணையராலோ அல்லது செயலாளராலோ அந்த விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்குப் பின்னா் முப்பது நாட்களுக்குள்ளாகவோ அல்லது நிா்ணயிக்கப்பட்ட கூடுதல் காலத்திற்குள்ளாகவோ அவ்விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்பட வில்லையெனில், அந்த விண்ணப்பமானது பொதுவாக எந்தக் கால அளவுக்கு அனுமதிக்கப்பட்டிருந்திருக்குமோ அந்தக் கால அளவுக்கு மற்றும் இச்சட்டத்தின் விதிகள் துணை விதிகள் ஒழுங்குமுறை விதிகளில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்திற்கும் உட்பட்டு அனுமதிக்கப்பட்டிருப்பதாக கருத வேண்டும்.

(4) அத்தகைய உரிமம் அல்லது அனுமதி எதற்காகவும் கட்டணங்கள் முன்னரே செலுத்தப்படுவதை ஏற்றுக் கொள்வதானது, அவ்வாறு முன்னரே செலுத்துகின்ற நபருக்கு உரிமம் அல்லது அனுமதி வழங்கப்பட்டதாக கருத முடியாது. ஆனால் அந்த உரிமமோ அனுமதியோ மறுக்கப்படுகின்ற நேரத்தில் அவா் செலுத்திய கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு மட்டுமே உரிமையுடையவராவாா்.

(5) அத்தகைய உரிமம் அல்லது அனுமதியுடன் மட்டுமே செய்யப்படும் செயலானது அத்தகைய உரிமமோ அல்லது அனுமதியோ இன்றி செய்யப்படுமாயின் அல்லது உரிமம் அல்லது அனுமதியின் வரையறைகள் மீறி செய்யப்படுமானால், அப்போது

(அ) செயல் அதிகாரியோ அல்லது ஆணையரோ அல்லது செயலாளரோ அறிவிப்பின் வாயிலாக அத்தகைய செயலை செய்கின்ற நபரை இதனால் பாதிக்கப்படும் அசையும் அல்லது அசையாச் சொத்தாக உள்ள பொது அல்லது தனியாா் சொத்தாக உள்ள சொத்து முழுவதையுமோ அதன் பகுதி எதனையுமோ அந்த அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் காலத்திற்குள்ளாக மாறுதல் செய்யுமாறு அகற்றிவிடுமாறு அல்லது எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அது முன்பிருந்த நிலைக்கே மீட்டுத் தருமாறு கேட்டுக் கொள்ளலாம். மேலும்

(ஆ) அத்தகைய செயல் செய்யப்பட்டதற்காக இந்தச் சட்டத்தின்படி தண்டனை வழங்குவதற்கு வகை செய்யப்பட்டிருக்கவில்லையானால், அத்தகைய குற்றச் செயலுக்காக ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படலாம்.

(6) உரிமம் அல்லது அனுமதி எதனையும் பெறத் தவறிய குற்றத்தை புரிந்த நபா் எவரும் தண்டனைத் தீா்ப்பு அளிக்கப்படும் பொழுது குற்றவியல் நடுவா், விதிக்கப்படக்கூடிய அபராதத்துடன் அந்த உரிமம் அல்லது அனுமதிக்காக விதிக்கப்படத்தக்க கட்டணத் தொகையைச் சுருக்க முறையில் வசூலித்து சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்பிடம் கொடுத்துவிட வேண்டும். மேலும் தமது உளத்தோ்வின்படி இக்குற்ற வழக்கின் செலவுத் தொகையாகத் தாம் முடிவு செய்யக்கூடிய தொகை ஏதேனுமிருப்பின், அதையும் சுருக்கமான முறையில் வசூலித்து ஊராட்சியிடம் கொடுக்கலாம்.

**விளக்கம்**:- இந்த உட்பிரிவின்படியான உரிமம் அல்லது அனுமதி ஒன்றிற்கான கட்டணத்தை வசூலிப்பதானது தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்ட நபரை அந்த உரிமத்திற்கோ அனுமதிக்கோ உரிமையுடையவராக்காது.

## 221. அரசும் சந்தைக் குழுக்களும் உரிமம் மற்றும் அனுமதிகளைப் பெற வேண்டியதில்லை என்பது

இந்தச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் இயற்றப்படும் விதி, துணை விதி அல்லது ஒழுங்குமுறை விதி எதிலும் மத்திய அல்லது மாநில அரசின் அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள இடம் எதனையும் அல்லது 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 27/1989) நிறுவப்பட்ட சந்தைக் குழுவைப் பொறுத்து அல்லது மத்திய அல்லது மாநில அரசின் சொத்து எதனையுமோ அத்தகைய சந்தைக் குழுவிற்குச் சொந்தமான சொத்து எதனையுமோ பொறுத்து இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன்கீழ் இயற்றப்பட்ட விதி, துணை விதி அல்லது ஒழுங்குமுறைவிதி எதன்படியும் உரிமம் எதையும் பெற வேண்டும் என்று கோருவதாகப் பொருள் கொள்ளப்படக் கூடாது.

## 222. அறிவிப்பு மற்றும் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கான காலம் மற்றும் தவறுகையில் வலியுறுத்தி நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரம்

(1) எந்த நபரும் இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன் கீழ் இயற்றப்பட்ட விதி, துணைவிதி அல்லது ஒழுங்குமுறை விதி எதன்படியுமான அறிவிப்பு, கோரிக்கை அல்லது ஆணை எதன் மூலமாகவும் பணி எதனையும் நிறைவேற்றுமாறோ, நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்குமாறோ அல்லது எந்தச் செயலையும் செய்யுமாறோ கேட்டுக்கொள்ளும் பொழுது, எந்த நியாயமான கால அளவிற்குள் அந்தப் பணி நிறைவேற்றப்பட வேண்டுமோ அல்லது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அல்லது அந்தச் செயல் செய்யப்பட வேண்டுமோ அந்தக் கால அளவு அத்தகைய அறிவிப்பிலோ கோரிக்கையிலோ, ஆணையிலோ குறிக்கப்பட வேண்டும்.

(2) அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் அத்தகைய அறிவிப்பு, கோரிக்கை அல்லது ஆணைக்கு இணங்கி நடக்கவில்லையானால்,

(அ) சந்தர்ப்பத்திற்கேற்ப செயல் அதிகாரி அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப, ஆணையர் அல்லது செயலாளர் அத்தகைய வேலையை நிறைவேற்றுமாறு செய்விக்கலாம். அல்லது அறிவிப்பிற்கு கோரிக்கைக்கு அல்லது ஆணைக்கு உரிய செய்திறன் கொடுப்பதற்கு தேவைப்படக்கூடியது என்று அவர் கருதுகிற நடவடிக்கை எதனையும் எடுக்கலாம் அல்லது செயல் எதனையும் செய்யலாம். மேலும்

(ஆ) அத்தகைய அறிவிப்பு, கோரிக்கை அல்லது ஆணைக்கு இணங்கி நடக்கத் தவறியதற்கு இந்தச் சட்டத்தில் தண்டனை எதற்கும் தனியாக வகை செய்யப்பட்டிருக்கவில்லையானால் மேற்சொன்ன நபர் மீது அத்தகைய குற்றச் செயல் ஒவ்வொன்றிற்கும் ஐம்பது ரூபாய்க்கு மிகைப்படாமல் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படலாம்.

## 223. நுழைவதற்கும், ஆய்வு செய்வதற்கும் அதிகாரங்கள்

(G.O.No.148, R.D. dt.21.7.99)

(1) வகுத்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, செயல் அதிகாரி அல்லது ஆணையர் அல்லது செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரும்

(அ) விசாரணை, ஆய்வு சோதனை, ஆராய்ச்சி, நில அளவை, அளவை அல்லது மதிப்பீடு எதனையும் செய்வதற்கு அல்லது இந்தச் சட்டத்தின் அல்லது விதி எதனின் வகைமுறைகளினால் ஒழுங்குமுறை விதி அல்லது அதன்படி வெளியிடப்பட்ட ஆணையால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணி எதனையும் நிறைவேற்றுவதற்கு அல்லது இந்தச் சட்டத்தின் நோக்கங்களின் எதற்காகவும் அல்லது மேற்சொன்ன வகைகளில் எதற்கும் இணங்கி நடக்கச் செய்ய அல்லது நிறைவேற்றத் தேவையானதாக இருக்கும், அல்லது

(ஆ) மேற்சொன்ன வகைமுறைகளில் எதன்படியும் உரிமம் அல்லது அனுமதி பெற வேண்டும் எனக் கூறப்பட்டு அத்தகைய உரிமம் அல்லது அனுமதியின்றி அல்லது பெறப்பட்ட அந்த உரிமம் அல்லது அனுமதியின் நிபந்தனைகளுக்கு இணங்கியவாறு அல்லாமல் பிறவாறு அத்தகைய இடத்தில், கட்டிடத்தில் அல்லது நிலத்தில் ஒன்றும் செய்யப்படவில்லை என்று தாமே மனநிறைவு கொள்வதற்கு, வேறு அலுவலரின் உதவியுடனோ அல்லது இல்லாமலோ அல்லது வேலையாட்களுடனோ இல்லாமலோ இடம், கட்டிடம் அல்லது நிலம் எதன் மீதும் அல்லது உள்ளும் நுழையலாம்.

(2) உட்பிரிவு 1ன்படி அதிகாரம் செலுத்துவதினால் அல்லது அந்த உட்பிரிவின்படி நுழைய தேவையான அதிகாரம் எதனையும் பயன்படுத்துவதினால் ஏற்பட்ட இழப்பு அல்லது பாதிப்பு எதற்கும் எதிராக கோரிக்கை எதுவும் எழுப்ப முடியாது.

## 224. எடைகளையும் அளவைகளையும் சோதனையிடுதல்

செயல் அதிகாரி அல்லது ஆணையர் அல்லது செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (மத்திய சட்டம் XLV/1860) அத்தியாயம் XIII-படி அத்தகைய எடைகள் மற்றும் அளவைகள் தொடர்பாக குற்றச் செயல்களைத் தடை செய்தல் மற்றும் அளவைகளுக்குத் தண்டனை விதிப்பதற்காக நேர்வுக்கேற்ப கிராம ஊராட்சிப் பகுதியில் உள்ள அல்லது ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள அல்லது மாவட்ட ஊராட்சிப் பகுதியிலுள்ள அங்காடிகளிலும் கடைகளிலும் பயன்படுத்தப்படுகின்ற எடைகளையும், அளவைகளையும் ஆராயலாம் மற்றும் சோதனையிடலாம்.

## 225. கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து தகவலைக் கேட்டுப் பெறுவதற்கான அதிகாரம்

(G.O. No.200, R.D dt.20.10.99)

செயல் அதிகாரி அல்லது ஆணையர் அல்லது செயலாளர் கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சியின் அதிகார வரம்புக்குள் அடங்கியிருக்கும் வருவாய் கிராம நிர்வாக அலுவலர், அத்தகைய கிராமம் அல்லது அதனின் பகுதி எதனையும் அல்லது அப்பகுதியில் உள்ள நபர் எவரையும் அல்லது சொத்து எதனையும் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட வகைமுறைகளுக்குள் தனக்கு தகவலை அளிக்கும்படி, எழுத்துவாயிலான ஆணை ஒன்றினால் வேண்டுறுத்தலாம்.

(2) அந்த ஆணையில் எந்த கால அளவிற்குள் வழங்கப்பட வேண்டுமோ அந்த கால அளவைக் குறித்துரைத்தல் வேண்டும். ஆனால் செயல் அலுவலர் அல்லது ஆணையர் அல்லது செயலாளர் அவ்வப்போது அத்தகைய கால அளவை நீட்டிக்கலாம்.

## 226. செலுத்தப்பட வேண்டியவ்றை வசூலிப்பதற்கான கால வரம்பு

இந்தச் சட்டத்தின் படியோ அல்லது இதன்படி இயற்றப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்குமுறை விதி அல்லது ஆணை எதன்படியோ ஒரு ஊராட்சிக்குச் செலுத்த வேண்டியவரி அல்லது பிற தொகை எதனைப் பொறுத்தும், வரி அல்லது பிற தொகைக்காக ஜப்தி செய்யவோ வழக்கு எதுவும் தொடரப்படவோ மற்றும் குற்ற வழக்கு தொடுக்கவோ, அத்தகைய வரி அல்லது தொகையை பொறுத்து, நேர்வுக்கேற்ப, அந்தவரி அல்லது பிற தொகைக்காக கைப்பற்றுதல் முதலில் செய்யபற்றிருக்க தேதியிலிருந்து ஒரு வழக்கு முதலில் தொடரப்பட்டிருக்க வேண்டிய அல்லது குற்ற வழக்கு முதலில் தொடுக்கப்பட்டிருக்க வேண்டிய தேதியிலிருந்து ஆறு ஆண்டு காலம் முடிந்த பின்பு செய்யக்கூடாது.

**குற்ற வழக்குகள், உரிமை வழக்குகள் முதலானவை**

**227. குற்ற வழக்குகள் தொடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள்**

இந்தச் சட்டத்தின் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, எவர் ஒருவரும் குற்றச் செயல் புரிந்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் புகார் செய்யப்பட்டிருந்தாலன்றி, காவல்துறையினரால் 1(கிராம ஊராட்சியால்) செயல் அதிகாரியால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தால், ஆணையரால் மாவட்ட ஊராட்சியினால், செயலாளரால் இந்த அமைப்புகள் அல்லது அலுவலர்களால் இதன் பொருட்டு வெளிப்படையாக, அதிகாரமளிக்கப்பட்ட நபரால் இந்தச் சட்டத்தின் அல்லது இதன்படி இயற்றப்பட்ட ஆணை அல்லது துணை சட்டம் எதற்கும் எதிரான குற்றச்செயல் எதற்காகவும் நபர் எவரையும் குற்ற விசாரணைக்கு உட்படுத்தக் கூடாது. ஆனால் இதிலுள்ள எதுவும் பெறபட்ட தகவலின் பேரில் அல்லது அவர்கள் சொந்தமாக தெரிந்து கொண்டதின்பேரில் அல்லது சந்தேகத்தின் பேரில் குற்றச் செயலை ஏற்படுதற்கு குறித்த சில குற்றவியல் நடுவர்களுக்கு உள்ள அதிகாரம் பொறுத்து 1973ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் 2/1974) வகைமுறைகளைப் பாதிக்காது.

ஆனால் சட்டத்தின்படி உரிமத்தை எடுப்பதற்கு அல்லது அனுமதி பெற தவறியோ, இந்தப் பிரிவின் நோக்கங்களுக்கு, எந்தக் கால அளவிற்கு உரிமம் அல்லது அனுமதியோ தேவைப்படுகிறதோ, அந்தக் கால அளவு முடிவுறும் வரையில் தொடர்ந்து குற்றச் செயல் புரிந்ததாக கருத வேண்டும். காலக் கெடு எதுவும் குறிப்பிடப்படவில்லையெனில் குற்றம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 12மாதங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் வழக்கு தொடரலாம்.

**228. குற்றச் செயல்களை இணக்கமாக தீர்த்துக் கொள்ளுதல்**

செயல் அலுவலர் அல்லது ஆணையர் அல்லது செயலாளர் வகுத்துரைக்கப்படும் வகைமுறைகளுக்கு உட்பட்டு இந்தச் சட்டத்திற்கு அல்லது இதன்படி இயற்றப்பட்ட விதி அல்லது துணை விதி எதற்கும் உட்பட்டு, விதிகளின்படி இணக்கம் செய்யத்தக்கது என்று தெரிவிக்கப்பட்ட குற்றச் செயல் எதனையும் இணக்கம் செய்யலாம்.

**229. குற்ற வழக்குகள் மற்றும் இணக்கங்கள் செய்தது பற்றி கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை செய்தல்**

செயல் அலுவலர் அல்லது ஆணையர் அல்லது செயலாளரால் தொடுக்கப்பட்ட குற்ற வழக்கு அல்லது இணக்கம் செய்யப்பட்ட குற்றச் செயல் ஒவ்வொன்றும் அவரால் நேர்வுக்கேற்ப கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியக் குழு அல்லது மாவட்ட ஊராட்சிக்கு அதன் அடுத்த கூட்டத்தில் அறிக்கை செய்யப்பட வேண்டும்.

**230. குற்ற வழக்கு தொடர ஒப்புதல் அளித்தல்**

(1) கிராம ஊராட்சியின் தலைவர் அல்லது செயல் அலுவலர் ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவர் அல்லது துணைத் தலைவர் ஆணையர் அல்லது செயலாளர் அல்லது உறுப்பினர் எவரும், அவர்தம் அலுவல் முறையிலான கடமையை ஆற்றும் பொழுது அல்லது செயல்படும் பொழுது அல்லது செயல்படுவதாகப் புலப்படும்

பொழுது அவரால் குற்றச்செயல் செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படும் போது அரசின் முன் ஒப்புதல் இன்றி நீதி மன்றம் எதுவும் அத்தகைய குற்றச் செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

---

227 1 இப்பிரிவில் கிராம ஊராட்சியால் என்ற சொல் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999) பிரிவு 7ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

(2) உட்பிரிவு (1)ன்படி முன் ஒப்புதல் வழங்கும் பொழுது அவ்வழக்கு முடிவடையும் வரையிலும் கிராம ஊராட்சியின் தலைவா் செயல் அலுவலா் ஊராட்சி ஒன்றியக்குழுவின் அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவா் அல்லது துணைத் தலைவா் அல்லது ஆணையா் அல்லது நோ்விற்கேற்ப செயலாளா் எவரும் தம் கடமைகளை ஆற்றக் கூடாது என ஆணை வாயிலாக பணிப்பதற்கு அரசுக்கு உரிமையுண்டு.

**231. ஊராட்சிக்கு எதிரான செயல் பற்றிய அறிவிப்பு**

பிரிவு 232ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, உரிமை வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை எதுவும் கிராம ஊராட்சி, அல்லது அதன் தலைவா் அல்லது செயல் அதிகாரி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது அதன் தலைவா் அல்லது ஆணையா் அல்லது மாவட்ட ஊராட்சி அல்லது அதன் தலைவா் அல்லது செயலாளா் அல்லது உறுப்பினா் எவரும் அல்லது அதன் அலுவலா் அல்லது பணியாளா் எவருக்கும் எதிராக அல்லது இந்த சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதி துணை விதி, ஒழுங்கு முறை விதி, அல்லது ஆணை ஆகியவற்றை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட குற்றம் கவனக் குறைவு அல்லது தவறு எதனையும் பொறுத்து வகையிலும் அத்தகைய கிராம ஊராட்சி அல்லது அதன் தலைவா் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது அதன் தலைவா் மாவட்ட ஊராட்சி அல்லது அதன் தலைவா் அல்லது செயல் அதிகாரி, ஆணையா் செயலாளா் உறுப்பினா், அலுவலா் அல்லது பணியாளா் ஆணையின் கீழ் செய்யப்படுகின்ற நபா் எவருக்கும் எதிராக விளக்கம் கோரப்படும் இழப்பீட்டுத் தொகை, கருதப்படும் வாதியின் பெயா், குடியிருக்குமிடம் ஆகியவற்றை குறித்த எழுத்துருவிலான அறிவிக்கையானது கிராம ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தில், மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் சாா்பு செய்யப்பட்டதற்கு பின்பு மற்றும் அத்தகைய கிராம ஊராட்சியின் தலைவா், செயலாளா் உறுப்பினா், அலுவலா், பணியாளா் அல்லது நபா் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கு கருதப்படுமானாலும் அவ்வாறு அவரிடம் சாா்பு செய்யப்பட்டு அல்லது அவரது குடியிருப்பிடத்தில் கொடுக்கப்பட்டதற்கும் பின்பு இரண்டு மாதங்கள் முடிவடையும் வரையிலும் தொடுக்கப்படக் கூடாது.

(2) அத்தகைய நடவடிக்கை ஒவ்வொன்றும் அசையாச் சொத்தினைத் திரும்பப் பெறுவதற்கான அல்லது அதன் உரிமையை தெரிவிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இருந்தாலன்றி வழக்குக்குரிய காரணம் எந்தத் தேதியில் ஏற்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அல்லது தொடா்ந்ததால் ஏற்படும் தீங்குக் அல்லது நோ்விற்கேற்ப சேதம் அவ்வாறு தொடருகின்ற காலத்தில் அல்லது அது முடிவுறுவதற்குப் பின்பு ஆறுமாதங்களுக்குள்ளாக தொடங்கப்பட வேண்டும்.

(3) கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி அல்லது உட்பிரிவு (1)ன்படி எந்த நபருக்கு அறிவிக்கை கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த நபா் நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பாகவே, வாதியிடம் தொகைகளைக் கொடுத்த பின்பு தமக்கு ஏற்பட்ட செலவுத் தொகை எதனையும் திரும்ப பெறக் கூடாது. மற்றும் வாதியானவா் எதிா் வாதியால் ஏற்பட்ட செலவுத் தொகை அனைத்தையும் கொடுத்ததற்குப் பின்பு திரும்பப் பெறக் கூடாது.

**232. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மாவட்ட ஊராட்சி தலைவா் மற்றும் அலுவலரின் நல்லெண்ணத்தின் பேரிலான செயல்களுக்கு பாதுகாப்பு**

உரிமை வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை எதுவும் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர் செயல் அதிகாரி ஆணையர், செயலாளர் அல்லது செயலாளருக்கு எதிராக அல்லது ஊராட்சியின் உறுப்பினர் அலுவலர் அல்லது பணியாளர் எவருக்கும் எதிராக அல்லது ஊராட்சியொன்றியம் அல்லது அத்தகைய தலைவர் ஆணையர் செயல் அதிகாரி செயலாளர் அல்லது பணியாளரின் ஆணையின்படி செயல்படும் நபர் ஒருவருக்கு எதிராக இந்தச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட அல்லது செய்யப்பட்டுள்ளதாக தெரிகின்ற செயல் எதனையும் பொறுத்து அளவிலும் அல்லது இந்தச் சட்டத்தை அல்லது இதன்படி இயற்றப்பட்ட விதி துணை விதி ஒழுங்கு முறை விதி அல்லது ஆணையின் படியான செயல் எதனையும் நிறைவேற்றுவதில் ஏற்பட்டதென கவனக் குறைவு அல்லது தவறு எதனையும் பொறுத்து அத்தகைய செயல் அல்லது கவனக் குறைவு அல்லது தவறு நல்லெண்ணத்தின்பேரில் செய்யப்பட்டிருந்தால் நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அத்தகைய நடவடிக்கையானது பிரிவு 234ன்படி தொடுக்கப்படும் வழக்குகளைப் பொறுத்த அளவில் எந்த அளவிற்கு நீதி மன்றத்தில் அது நிலைநிறுத்தப்படத்தக்கதாக உள்ளதோ, அந்த அளவிற்கு ஊராட்சிக்கு எதிராகக் கொண்டு வரப்பட வேண்டும்.

### 233. தேர்தல் நடவடிக்கைகளில் நிறுத்த கட்டளைகள் வழங்கப்படக் கூடாது

1908ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தில் (மத்திய சட்டம் V/1908) அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள வேறு சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும் நீதிமன்றமானது வாக்களிப்போர் பெயர்ப் பட்டியல் அல்லது வாக்காளர் பட்டியல் எதனையும் தயாரிப்பதற்கென அல்லது தேர்தல் எதனையும் நடத்துவதற்கென, இந்தச் சட்டத்தின்படி எடுக்கப்பட்டு, வருகின்ற அல்லது எடுக்கப்பட இருக்கிற நடவடிக்கை எதனையும் தடுத்து நிறுத்துவதற்கு நிலையான அல்லது தற்காலிக தடை கட்டளை (injuction) எதனையும் வழங்கவோ அல்லது இடை ஆணை (Interim Order) எதனையும் பிறப்பிக்கவோ கூடாது.

### 234. சொத்து இழப்பு, வீணடிப்பு, தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் தலைவருக்கும் செயல் அதிகாரி உறுப்பினர்களுக்குமான பொறுப்புகள்

(1) கிராம ஊராட்சியின் தலைவர், செயல் அதிகாரி மற்றும் உறுப்பினர் ஒவ்வொருவரும், ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவர், ஆணையர் மற்றும் உறுப்பினர் ஒவ்வொருவரும் மற்றும் மாவட்ட ஊராட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர் ஒவ்வொருவரும் கிராம ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு அல்லது மாவட்ட ஊராட்சிக்குச் சொந்தமான அல்லது அதனிடம் வழங்கப்பட்டுள்ள பணம் அல்லது பிற சொத்து எதனையும் இழப்பு வீணடிப்பு தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு இழப்பு, வீணடிப்பு அல்லது தவறாகப் பயன்பாடு அவரின் நேரடி கவனக்குறைவு அல்லது தவறான நடத்தையின் காரணமான இருக்குமானால், அதற்கு பொறுப்பானவராவார் அத்தகையவருக்கு எதிராக இழப்பீட்டிற்காக உரிமை வழக்கு எதுவும் ஆய்வாளரின் முன் ஒப்புதலுடன் கிராம ஊராட்சியால் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் அல்லது மாவட்ட ஊராட்சியால் தகுதி வாய்ந்த அதிகார வரம்பு பெற்ற நீதிமன்றம் எதிலும் உரிமை வழக்கு தொடரலாம்.

(2) அத்தகைய உரிமை வழக்கு ஒவ்வொன்றும் வழக்கிற்குரிய காரணம் தோன்றிய தேதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்குள்ளாகத் தொடங்கப்பட வேண்டும்.

### 235. வரித்தொகை கணிப்பு முதலியவற்றிற்காக குற்றம் சாட்டப்படக்கூடாது

(1) இந்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி விதிக்கப்பட்ட வரித் தொகை கணிப்பு அல்லத கேட்பு எதுவும் மற்றும் விதிக்கப்பட்ட குற்றம் சுமத்துதல் எதுவும்

(அ) நபரின் பெயர், குடியிருப்பிடம், வணிகம் அல்லது தொழில் செய்யப்படும் இடம் அவற்றையும் பொருத்த அளவில், அல்லது

(ஆ) சொத்து அல்லது பொருள் எதனையும் விவரிக்குமளவில், அல்லது

(இ) கணிக்கப்பட்ட, கேட்கப்பட்ட சுமத்தப்பட்ட தொகையைப் பொருத்த அளவில், எழுத்துப் பிழையின் காரணத்தாலோ அல்லது தவறு எதனின் காரணத்தாலோ, குற்றம் சாட்டப்படுதலோ, அல்லது பாதிக்கப்படவோ கூடாது. ஆனால் இந்தச் சட்டத்தின் நடைமுறைகளின் பொருட்சாரத்திற்கும் பயனுக்கும் இணங்கி வகையில் அது செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை எதுவும் படிவத்தில் ஏற்பட்ட குறைப்பாட்டினால் மட்டுமே, நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்ய முடியாது.

(2) இந்தச் சட்டத்தின் அதிகாரத்தின்படி, வசூலிக்கப்பட்ட பணத் தொகை எதனையும், திரும்பப் பெறுவதற்கோ, அல்லது மேற்சொன்ன அதிகாரத்தின்படி, வரிக் கணிப்பின் அல்லது வசூலின் காரணமாக ஏற்பட்ட இழப்பீட்டினை திரும்பப் பெறுவதற்கோ நீதிமன்றம் எதிலும் உரிமை வழக்கு எதுவும் தொடுக்க முடியாது.

ஆனால் இச்சட்டத்தின் நடைமுறைகளின் பொருட்சாரத்திற்கும் பயனுக்கும் இணங்கிய வகையில் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் நடைமுறைகளும் இதன்படி இயற்றப்பட்ட விதிகளும் துணை விதிகளும், பொருட்சாரத்திற்கும் பயனுக்கும் இணங்கிய வகையில் செய்யப்பட்டிருப்பின், பிழை, தவறு, அல்லது சீட்டு, அறிவிப்பு, இணைப்புப் பட்டியல் படிவம் நீதிமன்ற வரவழைப்பானை, கேட்பு அறிவிப்பு, கைப்பற்றுவதற்கான பிடி ஆணை, விலைப் பட்டியல், அல்லது அது தொடர்பான பிற நடவடிக்கைகளில் முறையான படிவத்தில் இல்லாத நிலை ஆகியவற்றின் காரணமாக இந்தச் சட்டத்தாதின்படியான கைப்பற்றுகை அல்லது விற்பனையானது சட்ட முரணானது என்றோ அல்லது அதனைச் செய்கின்ற நபர் எவரும் அத்துமீறி நுழைந்தவரென்றோ கருத முடியாது. ஆனாலும் ஒழுங்கீனத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஒவ்வொருவரும் அவர் அடைந்த சேதம் எதற்காகவும் தீர்வு இழப்பீட்டினை திரும்பப் பெறலாம்.

## 236. பொதுச் சாலைகள், சந்தைகள், கிணறுகள் முதலானவை அனைவருக்கும் பொதுவாக இருத்தல் என்பது

ஒரு ஊராட்சி, அமைப்பிடம் அமைந்துள்ள அல்லது அதனால் பராமரித்து வரப்படும் சாலைகள், சந்தைகள், கிணறுகள், குளங்கள், நீர்த் தேக்கங்கள் நீர் வழிகள் ஆகியவை அனைத்து நபர்களுக்கும் அவர்கள் எந்தச் சாதியையும் அல்லது இனத்தையும் சார்ந்தவர்களாக இருப்பினும், பயன்படுத்தவும் அனுபவிக்கவும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.

## 237. கட்டணம் வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான அதிகாரம்

(G.O.No.277 R.D dt.22.11.01)

ஒரு ஊராட்சியானது அது பொருத்தமென நினைக்க கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன்படி இயற்றப்பட்ட விதிகளின்படி அல்லது துணை விதிகளின்படி அல்லது ஒழுங்குமுறை விதியின்படி, அதற்கு வர வேண்டிய கட்டணம் எதையும் வசூலிப்பதற்கு ஒரே சமயத்தில் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத கால அளவிற்கு குத்தகை விடுவதற்கு அதிகாரம் உண்டு.

## 238. உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையேயான பூசல்களை நீதி முறையில் தீர்த்தல்

(1) இந்தச் சட்டத்தின்மபடி அல்லது பிற சட்டத்தின் வகைமுறைகளின்படி ஒரு கிராம ஊராட்சிக்கும் அல்லது ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் அல்லது மாவட்ட ஊராட்சிக்கும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே பூசல் இருந்தால், அரசானது தொடர்புடைய அந்த கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி மற்றும் பிற உள்ளாட்சி அ்மைப்புகள் தங்களுக்கிடையே உள்ள பூசல்களை சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்ள இயலாமல் உள்ளது என்று கருதினால், அரசு அந்தப் பூசலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் பொழுது,

(அ) தங்களுக்கிடையே தீர்த்துக் கொள்ளலாம்.

(ஆ) அல்லது ஒரு நடுவருக்கு அல்லது நடுவர் குழுவிற்கு அல்லது அந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட ஒரு கூட்டுக் குழுவிற்கு விசாரணை செய்யுமாறு அறிவிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) கூறு (ஆ)ன்படி கூறப்பட்ட அறிக்கையின்படி, விசாரணை செய்து அரசிற்கு பணந்தனுப்பப்பட வேண்டும். அது தான் பொருத்தமெனக் கருதும் முறையில் அந்தப் பூசலை தீர்த்து வைக்கும்.

(3) உட்பிரிவு (1) கூறு (அ)ன்படி அல்லது உட்பிரிவு (2)ன்படி எடுக்கப்பட்ட முடிவை எதுவும் தான் பொருத்தமெனக் கருதும் முறையில் அரசால் அப்போதைக்கப்போது மாற்றப்படலாம். மற்றும் இந்த உட்பிரிவின்படி அவ்வாறு மாற்றப்பட்ட முடிவை அரசால் எந்த நேரத்திலும் ரத்து செய்துவிடலாம்.

ஆனால், அத்தகைய முடிவு அல்லது அதிலுள்ள மாறுதல் அல்லது ரத்து எதுவும், தொடர்புடைய கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக்குழு மாவட்ட ஊராட்சி, மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளில் ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்தும் நீதிமன்றம் எதிலும் எதிர்த்து வாதிட முடியாது.

(4) தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஒன்று கண்டோன்மண்ட் அமைப்பாக இருக்குமானால் அல்லது பெரும் துறைமுகம் ஒன்றின் துறைமுக அதிகார அமைப்பாக இருக்குமேயானாலும் இந்த பிரிவின்படியான அரசின் அதிகாரங்கள், மத்திய அரசின் இசைவுடன் மட்டுமே செலுத்த முடியும்.

**239. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்**

(1) கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சியின் அனைத்து தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கும் தேர்தலை நடத்துவதற்குமான கண்காணிப்பு, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவை இந்திய அரசியலமைப்பு சட்டம் சரத்து 243-கே ன்படி ஆளுநரால் நியமிக்கப்படும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரைக் கொண்டுள்ள தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் இருக்கும்.

(2) (அ) அரசுச் செயலாளரின் நிலைக்குக் குறையாத அலுவலர் அல்லது அத்தகைய அலுவலராக இருந்திருந்தாலன்றி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக அமர்த்தப்படுவதற்குத் தகுதி உடையவராக ஆகார்.

(ஆ) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் இரண்டாண்டு காலத்திற்குப் பதவி வகிப்பார். மற்றும் அதற்கு பின்னரும் இரண்டு பதவி கால அளவிற்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகதி உடையவராக இருப்பார்.

ஆனால் எந்த ஒரு நபரும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரின் பதவியை மொத்தத்தில் ஆறாண்டுகளுக்கு மேல் வகிக்க முடியாது.

மேலும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட நபரொருவர் அவர்தம் பதவி காலத்தின் போது அறுபத்து இரண்டு வயது முடியுமானால் பதவியிலிருந்து ஓய்வு பெற்று விட வேண்டும்.

(3) உட்பிரிவு (2) படியான வகைமுறைகளுக்கு உட்பட்டு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி நிபந்தனைகளும் பதவிக் காலமும், ஆளுநர் விதிகளின் வாயிலாக தீர்மானிக்கிறவாறு இருக்க வேண்டும்.

ஆனால் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையரை, உயர்நீதிமன்ற நடுவர் ஒருவரை பதவியிலிருந்து நீக்கப்படுகின்ற முறையிலும் அதனை ஒத்த காரணங்களின் பேரிலும் தவிர, பதவியிலிருந்து நீக்கப்பட முடியாது. மற்றும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி நிபந்தனைகள், அவர் நியமனம் செய்யப்பட்ட பிறகு, அவரைப் பாதிக்குமாறு மாற்றப்பட கூடாது.

(4) உட்பிரிவு (1)ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அளிக்கப்பட்ட அலுவலல்களை ஆற்றுவதற்கு தேவைப்படக்கூடுமென கருதுகிற பணியாளர் தொகுதியை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் வழங்கும்படி கேட்டுக்கொள்ளும் பொழுது, ஆளுநர் அதனைக் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

**240. வளர்ச்சித் திட்டத்தை தயாரித்தல்**

(1) ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஆண்டுதோறும் ஒரு வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்து, வகுத்துரைக்கப்படக் கூடிய தேதிக்கு முன்னரும் படிவத்திலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு பணிந்தனுப்புதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றமும், கிராம ஊராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைந்ததற்கு பின்னர், ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கான ஆண்டு வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வகுத்துரைக்கப்படக்கூடிய தேதிக்கு முன்னரும் படிவத்திலும் மாவட்ட ஊராட்சிக்கு பணிந்தனுப்புதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் ஊராட்சி ஒன்றிய குழுக்களின் திட்டங்களை ஒருங்கிணைத்ததற்கு பின்னர் அம்மாவட்டத்திற்கான ஆண்டு வளர்ச்சித் திட்டத்தைத்

தயாரித்து பிரிவு 241ன்படி அமைக்கப்படும் மாவட்டத் திட்டக் குழுவிற்கு பணந்தனுப்புதல் வேண்டும்.

**1 241. மாவட்ட திட்டக் குழு**

(1) அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட திட்டக் குழுவை (இதற்கு பின்னர் குழு என்று கூறப்படும்) மாவட்டத்திலுள்ள மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் கிராம ஊராட்சிகள், 2(பேரூராட்சிகள்), நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள், ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காகவும், மொத்தத்தில் அம்மாவட்டம் முழுமைக்குமாக ஒரு வரைவு வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்காகவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட திட்டக் குழுவை அமைத்துருவாக்க வேண்டும்.

(2) (அ) இக்குழு கீழ்க்கண்டவர்களை உள்ளடக்கியதாகும்

(i) மாவட்ட ஊராட்சித் தலைவர்

(ii) அந்த மாவட்டத்திலுள்ள மாநகராட்சி மன்றத் தலைவர்

(iii) மாவட்ட ஆட்சித் தலைவர்

(iv) அம்மாவட்டத்திலுள்ள ஊரகப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் உள்ள மக்கள் தொகைகளுக்கிடையேயுள்ள விகிதாச்சார அளவுகளுக்கேற்ப அம்மாவட்டத்திலுள்ள மாவட்ட ஊராட்சி பேரூராட்சி உறுப்பினர்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கிடையே இருந்து வகுத்துரைக்கப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறாக இக்குழுவின் உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாத அத்தகைய எண்ணிக்கையில் அமைந்த உறுப்பினர்கள்

---

241 1 இப்பிரிவில் 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1997) பிரிவு 5ன்படி சேர்க்கப்பட்டது.

241 2 உட்பிரிவு (1) பேரூராட்சிகள் என்ற சொல் 1997ஆம்ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 55/1997) பிரிவு 2ன்படி சேர்க்கப்பட்டது.

(ஆ) கீழ்க்கண்ட நபர்கள் இந்தக் குழுவின் நிரந்தர சிறப்பு அழைப்பாளர்கள் ஆவார்கள்

(i) அல்லது பகுதிக்காக பிரதிகளாக இருக்கின்ற மக்களவை உறுப்பினர்கள்

(ii) அம்மாவட்டத்தில் வாக்காளர்களாக பதிவு பெற்றுள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்

(iii) அம்மாவட்டத்திற்குள் தங்கள் தொகுதிகள் அமையப் பெற்றுள்ள தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள்

(iv) அம்மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர்கள்

(v) அம்மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி மன்றத் தலைவர்கள் அம்மாவட்டத்திலுள்ள அனைத்து பேரூராட்சித் தலைவர்கள்

(இ) கூறு (ஆ)ல் குறித்துரைக்கப்படும் நிரந்தர சிறப்பு அழைப்பாளர்கள் குழு கூட்ட நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்கு உரிமை பெற்றவர்கள் ஆவர்.

(3) மாவட்ட ஊராட்சியின் செயலாளர் தலைவர் இக்குழுவின் செயலாளர் ஆவார்

மாவட்ட திட்டக்குழு திருத்தப்படுவதற்கு முன்னர் பின்வருமாறு இருந்தது (1) அரசானது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட திட்டக் குழுவை (இதற்கு பின்னர் குழு என்று கூறப்படும்) மாவட்டத்திலுள்ள மாவட்ட ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களது கிராம ஊராட்சிகள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காகவும், மொத்தத்தில் அம்மாவட்டம் முழுமைக்குமாக ஒரு வரைவு வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்காகவும் ஒவ்வொரு மாவட்ட திட்டக்குழுவை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) இக்குழுவானது பின்வருபவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும்.

(a) அம்மாவட்டம் முழுமைக்குமாக அல்லது பகுதிக்காக சார்பாளராக (பிரதிநிதிகளாக) இருக்கின்ற மக்களவை உறுப்பினர்கள்

(4) மாவட்ட ஊராட்சி தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவர்.

(5) இக்குழு எந்த இடத்தில் கூட வேண்டும், குழு கூட்டங்களுக்கான இடைவெளி எவ்வளவு இருக்க வேண்டும். கூட்டத்தில் நடைமுறைகளைப் பற்றியும், ஒரு கூட்டத்தில் குறைந்தது எவ்வளவு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் ஆகியவை குறித்து இயற்றப்படும் விதிமுறைகளுக்கேற்ப அத்தகைய இடத்தில் கால அவகாசத்தில் நேரத்தில் கூட வேண்டும். மற்றும் அத்தகைய அலுவல் நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

(6) இக்குழுவானது மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள் நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்களால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை தொகுத்து மாவட்டம் முழுமைக்குமாக ஒரு வரைவு வளர்ச்சித் திட்டத்தை தயாரிக்கும்.

(b) அம்மாவட்டத்திமல் வாக்காளர்களாகப் பதிவு பெற்றுள்ள, மாநிலங்களவை உறுப்பினர்கள்

(c) மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள்

(d) மாவட்டங்களின் தலைமையிடங்களின் மீது அதிகார வரம்பு பெற்றிருக்கின்ற மாநகராட்சி மன்றத் தலைவர்கள் (மேயர்கள்) அல்லது நகராட்சி மன்றங்களின் தலைவர்கள்

(e) அம்மாவட்டத்திலுள்ள ஊரகப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலுள்ள மக்கள் தொகைகளுக்கிடையே உள்ள விகிதாச்சாரத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சி பேரூராட்சிகளின் உறுப்பினர்கள், மாநகராட்சி மன்றம் நகராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கிடையேயிருந்து, வகுத்துரைக்கப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார். அரசினால் குறித்துரைக்கப்படக் கூடிய இக்குழுவின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாத அத்தகைய எண்ணிக்கையிலமைந்த உறுப்பினர்கள்

(3) அம்மாவட்டத்திற்குள் தங்கள் தொகுதிகள் அமையப்பெற்றுள்ள, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும்

(4) அக்குழுவின் செயலாளர், வகுத்துரைக்கப்படக் கூடிய முறையில் கால அளவிற்குமாக அரசினால் அமர்த்தப்படுதல் வேண்டும்.

(5) அக்குழுவின் தலைவர் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்

(6) அக்குழுவானது, அம்மாவட்டத்திலுள்ள மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகள் பேரூராட்சிகள் நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைந்து, மொத்தத்தில் அம்மாவட்டம் முழுமைக்குமாக ஒரு வரைவு வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு குழுவும் வரைவு வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிக்கும் போது

(அ) (i) நீரைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பிற இயற்கை பொருள் மற்றும் இயற்கை வள ஆதாரங்கள், உள் கட்டமைப்புகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவை உள்ளடங்கலாக, அம்மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கிடையேயான பொதுவான அக்கரை நலன் குறித்தும்,

(ii) நிதி சார்ந்ததாயினும் அல்லது மற்றப்படியாயினும், கிடைக்கின்ற வள ஆதாரங்களின் அளவு மற்றும் வகை குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(ஆ) ஆளுநர், ஆணை மூலமாகக் குறித்துரைக்கக் கூடிய நிறுவனங்களையும் அமைப்புகளையும் கலந்தாலோசிக்க வேண்டும்.

(8) இக்குழுவின் தலைவர், குழுவினால் தயாரிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டத்தை அரசிற்கு அனுப்பி வைப்பார். இவ்வளர்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான மாவட்டத்தில் கிடைக்கும் வளங்கள், தேவைப்படும் நிதி ஆதாரங்கள் போன்ற விபரங்களுடன் இக்குழு பரிந்துரை செய்ய வேண்டும்.

(9) குழுவானது ஊராட்சிகளுக்கான மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான பல்வேறு செயற் திட்டங்களுக்கு நிதிகளைக் குறித்தொதுக்கி, அச் செயற் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதை கண்காணித்தல் வேண்டும்.

---

1 உட்பிரிவு (4)ல் ( ) உள்ள திருத்தமானது, 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் ஐந்தாம் (திருத்தச்) சட்டம் தமிழ்நாடு சட்டம் 24/2000)ன்படி திருத்தப்பட்டது.

**விளக்கம்**:- இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக ‘‘பேரூராட்சி’’ மற்றும் ‘‘நகராட்சி மன்றம்’’ என்றால் 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்டுள்ள பேரூராட்சி மற்றும் நகராட்சி மன்றம் என்று பொருள்படும். மற்றும் ‘‘மாநகராட்சி’’ என்றால்
1971ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்படியோ,
1981ம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின்படியோ,
1991ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின்படியோ,
1994ம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின்படியோ
1994ம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின்படியோ அமைத்துருவாக்கப் பட்டுள்ள அல்லது நேர்விற்கேற்ப, அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் அமைத்துருவாக்கப்படக் கூடிய பிறமாநகராட்சி எதுவும் என்று பொருள்படும்.

(7) ஒவ்வொரு குழுவும் வரைவு வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிக்கும் போது

(அ) (i) இது குறித்துத் திட்டமிடுதல், நீரைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பிற இயற்கை பொருள் மற்றும் இயற்கை வள ஆதாரங்கள், உள் கூட்டமைப்புகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவை உள்ளடங்கலாக, அம்மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகள்

பேரூராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கிடையேயான பொதுவான அக்கரை நலன் குறித்தும்.

(ii) நிதி சார்ந்ததாயினும் அல்லது மற்றப்படியாயினம், கிடைக்கின்ற வள ஆதாரங்களின் அளவு மற்றும் வகை குறித்தும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) ஆளுநர், ஆணை மூலமாகக் குறித்துரைக்கக்கூடிய நிறுவனங்களையும் அமைப்புகளையும் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(8) ஒவ்வொரு குழுவின் தலைவரும் அத்தகைய குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறான வளர்ச்சித் திட்டத்தை அரசுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விளக்கம்**:- இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக பேரூராட்சி மற்றும் நகராட்சி மன்றங்கள் ஆகியவை 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட பேரூராட்சிகளையும் நகராட்சி மன்றங்களையும் என்று பொருள்படும் மற்றும் நகராட்சி என்பது 1871ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின்படி அல்லது 1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகராட்சியோ அல்லது காலத்திற்கேற்ப அவ்வப்பொழுது சட்டப்படியான உருவாக்கப்படும் மாநகராட்சிகள் என்று பொருள்படும்.

## விதிகள்

### 242. விதிகளை இயற்றுவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்

(1) அரசு இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள பிற வகைமுறை எதன் வாயிலாகவும் அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு விதிகளை இயற்றுவதற்கும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை சரிவர நிறைவேற்றுவதற்கு தேவையான பொதுவான விதிகளை இயற்றுவதற்கான அதிகாரத்தைக் கொண்டதாக இருக்கும்.

(2) குறிப்பாகவும் மேற்சொன்ன பொதுவான அதிகாரத்திற்கு பாதிப்பு இன்றியும் அரசானது விதிகளை இயற்றலாம்.

---

242 [1] இந்த உட்பிரிவு ( ) 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 54/1997) பிரிவு 3ன்படி சேர்க்கப்பட்டது.

[1] (1-அ) பிரிவு 188ன் கீழ் இயற்றப்படும் விதிமுறைகள் 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு விதிக்கப்பட வேண்டும். )

242 (2 ii) [2] இக்கூறு 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு 21/1996) பிரிவு 10ன் படி சேர்க்கப்பட்டது.

(i) பிரிவு 4, உட்பிரிவு (2)ன்படி கிராமம் ஒன்றிலிருந்து உள்ளூர் பரப்பிடம் எதனையும் நீக்குவதற்கு அல்லது அதில் உள்ளூர் பரப்பிடம் எதனையும் சேர்ப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள் குறித்த

(ii) [2](அ) தேர்தல் தகராறுகள் சம்மந்தமாக அப்பகுதியை அதிகார எல்லையைக் கொண்ட மாவட்ட நீதிபதியால் தீர்த்து வைக்கப்படுதல்.

(ஆ) தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் செய்யப்பட வேண்டிய வைப்பீடுகள், அத்தகைய வைப்பீடுகள் எந்த நிபந்தனைகளினால் இழக்கப்படக்கூடுமோ, அந்த நிபந்தனைகள், விசாரணைகள் நடத்துதல், வாக்காளர் பட்டியல் தொடர்பான பூசல்களின் முடிவுகள் ஆகியவை உள்ளடங்கலாக வாக்காளர் பட்டியல்கள் மற்றும் தேர்தல்கள் தொடர்பாக இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யப்படாத அனைத்துப் பொருட்பாடுகளுக்கும் வகை செய்வது.

(iii) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மக்கள் தொகையைத் தீர்மானிப்பது குறித்து

(iv) ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைவர், துணைத்

தலைவா் மற்றும் உறுப்பினா்களின் பதவி விலகல் குறித்தும், அத்தகைய பதவி விலகல் நடைமுறைக்கு வரவேண்டிய தேதி குறித்தும்

(v) ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவா் துணைத் தலைவரை சம்பந்தப்பட்ட ஊராட்சியின் உறுப்பினா்களாலும், கிராம ஊராட்சியின் தலைவரை கிராம ஊராட்சி உறுப்பினா்களாலும் இடைமறித்து வினா எழுப்புதல் மற்றும் கூட்டங்களில் தீா்மானங்கள் கொண்டுவரப்படும் முறை குறித்தும்

(vi) ஊராட்சியின் குழுக்களை அமைத்தல் வெளி நபா்களை அக்குழுவில் சோ்த்தல், அத்தகைய குழுக்களுக்கு அலுவலா்களை ஒப்படைப்பு செய்தல் குறித்தும்,

(vii) ஊராட்சிகளின் மற்றும் அவற்றின் குழுக்களின் கூட்டங்களில் பின்பற்ற பட வேண்டிய நடைமுறை, கூட்டம் நடத்தும் முறை கூட்டத்தில் குறைவெண் வரம்பாக வரவேண்டிய உறுப்பினா்களின் எண்ணிக்கைக்கு வகை செய்வதற்கும்.

(viii) நிதி சம்பந்தமான விளைவுகளை உள்ளடக்கியது எனவும் அல்லது பிறவாறானது எனவும் ஊராட்சியின் தீா்மானங்களை வகைப்படுத்துவதற்கும், ஊராட்சிகளில் எவருடைய ஆதரவுடன் அத்தகைய தீா்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமோ அத்தகையவா்களின் எண்ணிக்கையை வரையறை செய்வதற்கும்

(ix) செலவினங்களை மேற்கொள்வது குறித்து ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவரின் மற்றும் குழுக்கள் அதிகாரங்கள், ஆணையா் மற்றும் செயலாளரின் அதிகாரங்கள் கடமைகள் ஆகியவை குறித்தும்.

(x) ஊராட்சி ஒன்றிய மன்றம் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றின் தலைவா் துணைத் தலைவா் உறுப்பினா்கள் ஆகியோருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்ட ஊராட்சிகளில் அமைக்கப்படும் குழுக்களின் உறுப்பினா்களுக்கும் பயணப்படிகளுக்கும் மற்றும் பிற படித் தொகைகளுக்கும் வகை செய்வதற்கும்,

(xi) ஊராட்சி ஒன்றிய அலுவல் எதனையும் தலைவா் உறுப்பினா், ஊராட்சியின் அலுவலா் எவருக்கும் அல்லது மத்திய அல்லது மாநில அரசின் பணியாளா் எவருக்கும் ஒப்படைப்பு செய்தல் குறித்தும்.

(xii) ஊராட்சிகள் பணத்தைச் சோ்த்து வைப்பதற்கும் வைப்பீடு செய்வதற்கும் மற்றும் அத்தகைய பணத்தைத் திரும்பப் பெறும் முறைக்கும்

(xiii) ஊராட்சியின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு - செலவு திட்டத்தில் பதிவு பெற்றுள்ள ஒதுக்கீடுகளை ஒரு தலைப்பில் இருந்து மற்றொரு தலைப்பிற்கு மாற்றுதல் குறித்தும்

(xiv) ஊராட்சிகளினால் பணிந்தனுப்பப்பட வேண்டிய வரவினங்கள் மற்றும் செலவினங்களின் மதிப்பீடுகள் விவர அறிக்கைகள் விபர உரைகள், அறிக்கைகள் ஆகியவை குறித்தும்,

(xv) கட்டுமானங்களுக்கான திட்டங்களையும் மதிப்பீடுகளையும், தயாரித்தல் மற்றும் மதிப்பீடுகளுக்குத் தற்காலிக அல்லது நிா்வாக ஒப்புதல் வழங்குவதற்காக ஊராட்சிகளுக்கும் மத்திய அல்லது மாநில அரசுப் பணியாளா்களுக்கும் உள்ள அதிகாரங்கள் குறித்தும்

(xvi) ஊராட்சிகளால் பராமரிக்கப்பட வேண்டிய கணக்குகள், அத்தகைய கணக்குகளின் தணிக்கையும் வெளியீடும், எந்த நிபந்தனைகளின்படி தீா்வை மற்றும் வரி செலுத்துபவா்கள் தணிக்கையாளா்களிடம் சமா்பிக்க வேண்டும் என்பதையும்

புத்தகங்களையும் கணக்குகளையும் ஆய்வு செய்ய பதியப்பட்ட அல்லது விட்டுவிடப்பட்ட இனங்களில் இருந்து விலக்களிப்பினைப் பெற வேண்டுமோ அந்த நிபந்தனைகள் குறித்தும்.

(xvii) இனங்களை ஏற்க மறுப்பதற்கும், தண்ட வரியிடுவதற்கும், தணிக்கையாளருக்குள்ள அதிகாரங்கள் ஏற்க மறுக்கப்பட்ட அல்லது தண்டவரியிட்ட ஆணைகளுக்கு எதிரான மேல் முறையீடுகள், ஏற்க மறுக்கப்பட்ட அல்லது தண்டவரியிடப்பட்ட தொகைகளை வசூலித்தல் ஆகியவை குறித்தும,

(xviii) தணிக்கையாளர்கள், ஆய்வு செய்யும் அலுவலர்கள், மேற்பார்வையிடும் அலுவலர்கள், விசாரணை நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் சாட்சிகளை விசாரணைக்கு அழைக்கவும் அவர்களை விசாரணை செய்யவும், ஆவணங்களை கட்டாயமாக சமர்பிக்க செய்வதற்கும், தணிக்கை, ஆய்வு மேலும் மேற்பார்வை தொடர்பான செயல்பாடுகளை தொடர்பான அதிகாரங்களை பற்றியும்,

(xix) எந்த நிபந்தனைகளின் பேரில் ஊராட்சி ஒன்று சொத்தினைக் கையகப்படுத்தலாகுமோ அல்லது ஊராட்சியிடம் வழங்கப்பட்டிருக்கும் அல்லது அதற்குச் சொந்தமான சொத்து விற்பனை, அடமானம், குத்தகை, பரிமாற்றம் என்ற வகையில் அல்லது பிறவாறாக உரிமை மாற்றம் செய்யப்படலாகுமோ அந்த நிபந்தனைகள் குறித்தும்.

(xx) ஊராட்சிகளினால் அல்லது அதன் பொருட்டு எந்த நிபந்தனைகளின் பேரில் மற்ற முறையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படக்கூடுமோ அந்த நிபந்தனைகள்

(xxi) இந்தச் சட்டத்தின்படியான விதிகளின் படி வரி மதிப்பீடு மற்றும் வரி மதிப்பீடுகளுக்காக மறு ஆய்வு குறித்தும்

(xxii) இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டிய வரி எதற்கும் பதிலாக உடலுழைப்பு, வண்டிச்சத்தம் என்ற வகையிலோ அல்லது பிறவாறாகவோ சேவை எதனையும் ஏற்றுக் கொள்ளுதல் குறித்தும்.

(xxiii) இந்தச் சட்டத்தின்படி அல்லது பிற சட்டம் எதனின் அல்லது விதிகள் அல்லது துணை விதிகள் எவற்றின் படியும், ஊராட்சி ஒன்றுக்குச் செலுத்த வேண்டிய வரி அல்லது பிற தொகை எதனையும் அசையும் சொத்தினைக் கடனுக்காக கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலமாகவோ குற்றவியல் நடுவர் ஒருவரின் முன்னிலையிலான குற்ற வழக்கு மூலமாகவோ உரிமை வழக்கு ஒன்றின் மூலமாகவோ அல்லது பிறவாறாகவோ வசூலிப்பது குறித்தும்.

(xxiv) வண்டி பேட்டைகள் மற்றம் அதையொத்தவற்றைப் பயன்படுத்துவதைப் பொறுத்து செலுத்த வேண்டிய கட்டணங்களை ஊர்தியை அல்லது தொடர்புடைய விலங்குகளை அல்லது அதன் மீது ஏற்றபட்டிருக்கும் சுமையின் பகுதி எதனையும் கைப்பற்றி விற்பனை செய்வதன் வாயிலாகவோ அல்லது பிறவாறாகவோ வசூலிப்பது குறித்தும்

(xxv) இந்தச் சட்டத்தின்படி வழங்கப்படும் அல்லது வெளியிடப்படும் உரிமங்களின், அனுமதிகளின் மற்றும் அறிவிப்புகளின் படிவமும் உள்ளடக்கமும், அவை வழங்கப்படும் முறை அல்லது சார்பு செய்யப்படும் முறை அவற்றின் மாற்றமைவு, தற்காலிக நிறுத்திவைப்புகள் அல்லது நீக்கங்கள் குறித்தும்

(xxvi) இந்தச் சட்டத்தின்படி வழங்கப்படும் அல்லது வெளியிடப்டும் உரிமங்களின், அனுமதிகளின் மற்றும் அறிவிப்புகளின் படிவமும் உள்ளடக்கமும், அவை வழங்கப்படும் முறை அல்லது சார்பு செய்யப்படும் முறை, அவற்றின் மாற்றமைவு. தற்காலிக நிறுத்திவைப்புகள் அல்லது நீக்கங்கள் குறித்தும்.

(xxvii) பொருட்பாடு எதன் மீதும் தகவலைக் கோரிப் பெறுவதற்கு, சாட்சிகளுக்கு அழைத்து விசாரணை செய்வதற்கு மற்றும் ஆவணங்களைத் தாக்கல் செய்யப்படுவதைக்

கட்டாயப்படுத்துவதற்கு செயலர் அலுவலர்கள், ஆணையர்கள், செயலாளர் ஆகியோருக்குள்ள அதிகாரங்கள்

(xxviii) ஊராட்சிகளின் செயல் அலுவலர்கள், ஆணையர்கள் செயலாளர் ஆகியோரது கையெழுத்துக்களின் கையொப்ப அச்சு பயன்படுத்துதல் குறித்தும்.

(xxix) அரசினால் அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவராலும் மந்தணம் என்று வகைப்படுத்தப்பட்ட பொருட்பாடு எதன் தொடர்பாகவும் இல்லாத ஊராட்சியின் செயல்முறை நடவடிக்கைகள் அல்லது பதிவுருவின் படிகளைப் பொது மக்களுக்கு வழங்குதல் மற்றும் அத்தகைய படிகளை வழங்குவதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் குறித்தும்

(xxx) தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குதல், பராமரித்தல், மேலாண்மை செய்தல், கண்காணித்து வருதல் ஆகியவை குறித்தும்

(xxxi) தனியார் வளாகங்களில் இருந்து குப்பைக் கூளங்கள் அல்லது கழிவுப் பொருள்களை அல்லது எவ்வகைப்பட்டதுமான குப்பைக் கூளங்களையும் அல்லது கழிவுப் பொருள்களையும் அகற்றுவதற்காக ஊராட்சிக்கும், அந்த வளாகத்தின் சொந்தக்காரருக்கும் அல்லது உடமையாளருக்கும் இடையிலான ஒப்பந்தங்களை ஒழுங்குமுறைப்படுத்தவும், அத்தகைய இடுக்காடு மற்றும் சுடுகாடுகளில் அல்லது அனுமதிக்கப்பட்ட இடங்களில் தவிர, பிற இடங்களில் சவங்களுக்கு முடிவுகட்டுவதை தடைசெய்தல் ஆகியவை குறித்தும்

(xxxii) பன்றிகளுக்கும் நாய்களுக்கும் உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் இல்லாத பன்றிகளையும் நாய்களையும் அழித்து விடுதல் குறித்தும்.

(xxxiii) கட்டிடத்தையும் கட்டிடம் கட்டுவதற்கான மனைகளைப் பயன்படுத்துவதையும் ஒழுங்குமுறைப்படுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதல் குறித்தும்

(xxxiv) ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொதுச் சாலைகளிலிருந்து எவ்வகைப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும் சாலைகளுக்கு விளைவிக்கப்படும் சேதம் எதுவும், சேதத்தை விளைவித்த நபரால் அவரது செலவில் பழுது பார்க்கப்படுவது குறித்தும்.

(xxxv) பொதுச் சாலையில் அல்லது ஊராட்சிகளிடம் பொறுப்பில் இருக்கும் அல்லது அதற்குச் சொந்தமான பிற சொத்துக்களில் அல்லது பிரிவு 134 அல்லது பிரிவு 135ன்படி ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டிருக்கிற புறம்போக்குகள் அல்லது நிலங்களின் மீது வளரும் மரங்களுக்கான உரிமை எதனையும் தீர்மானிப்பதும் அத்தகைய மரங்களின் உடைமை குறித்து ஊகங்களை வெளிக் கொணர்ந்து விளக்குவது குறித்தும்.

(xxxvi) ஊராட்சிகளின் பொறுப்பில் இருக்கும் அல்லது அவற்றிற்குச் சொந்தமான பொதுச் சாலைகளை அல்லது பிற நிலங்களை அனுமதி பெறாமல் பயன்படுத்துவதற்கு தண்டனைகளை விதித்தல் மற்றும் வசூலித்தல் மற்றும் அத்தகைய பயன்பாட்டினால் விளைந்த சேதம் எதற்குமான மதிப்பீட்டினை மதிப்பீடு செய்தல் மற்றும் வசூலித்தல் குறித்தும்

(xxxvii) பொது அல்லது தனியார் சந்தை எதனையும் அல்லது அதனைப் பயன்படுத்துபவர் எவரையும் பொறுத்து ஊராட்சியினால் அல்லது செயல் அலுவலரால் அல்லது ஆணையரால் அல்லது செயலாளரால் செலுத்தப்படும் அதிகாரங்கள் குறித்து மற்றும் அத்தகைய அதிகாரங்களை ஒட்டி பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் எவற்றையும் நிறைவேற்றுதல் குறித்தும்

(xxxviii) கிராமத்திலுள்ள வீட்டு மற்றும் பண்ணைக் கழிவுகளுக்கு வகை செய்தல், ஊராட்சியினால் நிலம் கையகப்படுத்துதல் அல்லது அத்தகைய கழிவுகள் கொட்டிவைக்கப்படக்கூடிய குழிகளைத் தோண்டுவதற்கான மனைகளைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்தல் குறித்து மற்றும் விதிக்கப்படக்கூடிய வாடகை உள்ளடங்களாக அத்தகைய

குறித்தளிப்புகள் எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செய்யப்படக்கூடுமோ அந்த நிபந்தனைகள் குறித்தும்.

(xxxix) ஊராட்சிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காநல்நடைத் தொழுவங்களில் கால்நடைகளைக் கட்டி வைக்க வேண்டுமென்று அவற்றின் சொந்தக்காரர்களை கட்டாயப்படுத்துவது பற்றியும் அதற்கு விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள் பற்றியும்

(xl) ஊராட்சிகள் அவற்றின் செயலர் அலுவலர்கள் அவற்றின் தலைவர்கள் ஆணையர்கள் மற்றும் செயலாளர் தொடர்பாக ஊராட்சி அலுவலர்களினால் செய்ய வேண்டிய கடமைகள் குறித்தும்

(xli) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு (உரிமங்களை அல்லது அனுமதிகளை வழங்குகிற அல்லது மறுக்கிற ஆணைகள் உள்ளடங்கலாக) எதிரான மேல் முறையீடுகள் குறித்து மற்றும் இந்தச் சட்டத்தினால் அல்லது விதிகளினால் அனுமதிக்கப்பட்டதாகவோ அல்லது பிறவாறாகவோ உள்ள மேல் முறையீடுகள் முன்னிலைப் படுத்தப்பட வேண்டிய கால அளவு குறித்தும்

(xlii) பொதுச் சாலைகளை மற்றும் ஊராட்சிகள் அவற்றுடன் தொடர்புடைய கண்காட்சிகளை மற்றும் திருவிழாக்களை வகைப்படுத்துதல் குறித்தும்

(xliii) இந்தச் சட்டம் அல்லது பிற சட்டம் எதன்படியும் விதிக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட வரி அல்லது வருமானம் எதன் வழியாகவும் பெறப்பட்ட பொருள்களையும் மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகளிடையே பகிர்ந்து கொள்வதை ஒழுங்குபடுத்துவது குறித்தும்.

(xliv) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடையே அவற்றில் ஒன்று ஊராட்சியாக இருந்து எழுகிற பூசல்களுக்கான முடிவு காண்பது குறித்தும்

(xlv) ஊராட்சிக்கு அரசினால் அளிக்கப்படும் மானியங்களை மற்றும் பங்களிப்புத் தொகைகளை நெறிமுறைகளுக்கு இணங்க ஒழுங்குமுறைப்படுத்துவது குறித்தும்

(xlvi) தனியார் சந்தைகளின் சொந்தக்காரர்கள், வாடகை கொடுப்பவர்கள் மற்றும் விவசாயிகளால் வைத்துவரப்பட வேண்டிய கணக்குகள் மற்றும் அத்தகைய கணக்குகளின் தணிக்கை மற்றும் ஆய்வு குறித்தும்

(xlvii) இந்தச் சட்டத்தின்படி பொது மக்களுக்கான அறிவிக்கைகள் அல்லது அறிவிப்புகள் வெளியிடப்படும் முறை குறித்து விதிகளை வகுப்பதற்கு அதிகாரம் உடையதாக இருக்கும்.

3 Provided that whenever only the president of a village panchayat is elected and the village panchayat could not be constituted the resignation of such president shall be accepted by the Inspector. (G.O.Ms.No.167, RD (C4) 1.11.2004.

## ஹு ஹுஅத்தியாயம் - XII
## தண்டனைகள்

### 243. விதிகளை மீறியதற்கான தண்டனைகள்

இந்தச் சட்டத்தின்படி அரசினால் இயற்றப்பட்ட விதிமுறைகளை மீறும் பொழுது நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும் அப்படி தொடர்ந்து விதியை மீறி நடந்து கொண்டே இருக்கும் போது, முதல் தடவை மீறி நடந்து குற்றமெனத் தீர்ப்பாகுமானால் அந்நாளிலிருந்து அப்படி மீறி நடந்து கொண்டு போகிற ஒவ்வொரு தினத்துக்கும் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் நிர்ணயித்து அபராதம் விதிக்கலாம்.

### 244. துணை விதிகள் மற்றும் அவற்றை மீறியதற்கான தண்டனைகள்

(1) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பும் இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கும் மற்றும் ஏனைய பிற சட்டத்தில் வகுத்துரைக்கப்படக்கூடிய விதிகளுக்கும் உட்பட்டு ஆய்வாளரின் ஒப்புதலுடன் எதற்கென ஊராட்சி அமைக்கப்பட்டதோ அதன் நோக்கங்கள் எவற்றையேனும் நிறைவேற்றுவதற்காகத் துணை விதிகளை இயற்றலாம்.

(2) ஊராட்சியானது துணை விதிகளை இயற்றும்போது அதனை மீறும் நபர்மீது ஊராட்சி நிர்ணயிக்கக் கூடிய பதினைந்து ரூபாய்க்கு மேற்படாத வகையில் அபராதமும் அல்லது தொடர்ந்து மீறும் சமயத்தில் முதல் முறை நடந்த மீறுகைக்காகத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து இருக்குமாயின், ஒவ்வொரு நாளுக்கும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாத உச்சபட்ச அபராதம் செலுத்த வேண்டும் என வகை செய்யலாம்.

(3) துணை விதிகளை இயற்றுவதற்கும் அதனை வெளியிடுவதற்கும் மற்றும் எந்நாளிலிருந்து அவை நடைமுறைக்கு வரும் என்பது குறித்த நடைமுறைக்கான விதிகளை இயற்ற அரசு அதிகாரம் பெற்றிருக்கும்.

**245. இணைப்புப் பட்டியில் குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டனைகள் தொடர்பான பொதுவகைமுறைகள்**

(1) எவரெல்லாம்

(அ) இச்சட்டத்தின் இணைப்பு IIல் உள் பட்டியலின் முதல் மற்றும் இரண்டாம் கலத்தில் குறித்துரைக்கப்பட்ட வகையங்கள் எவற்றையும் மீறுகிறாரோ அல்லது

(ஆ) அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட வகைமுறைகளின்படி இயற்றப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எவற்றையும் மீறுகிறாரோ, அல்லது

(இ) மேற்சொன்ன வகைமுறைகளில் எதனின் படியேனும் அல்லது அதையொட்டிச் சட்டப்படி அவருக்குக் கொடுக்கப்பட்ட பணிப்புரைகள் எவற்றிற்கும் அல்லது சட்டப்படி அவரிடம் கேட்கப்பட்ட வேண்டுகோள் எதற்கும் இணங்கி நடக்கத்தவறுகிறாரோ அவர் மேற்சொன்ன இணைப்புப் பட்டியலின் கலம் நான்கில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்ட தொகை வரையிலும் நீடிக்கக்கூடிய அபராதம் விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(2) குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர்

(அ) இச்சட்டத்தின் இணைப்புப் பட்டியல் iii முதல் மற்றும் இரண்டாம் கலத்தில் குறித்துரைக்கப்பட்ட வகைமுறைகளில் எதனையேனும் மீறுகின்ற அல்லது

(ஆ) அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட வகைமுறைகளில் எதனின் படியேனும் இயற்றப்பட்ட விதி அல்லது ஆணை எதனையேனும் மீறுகின்ற அல்லது

(இ) மேற்சொன்ன வகைமுறைகளில் எதன்படியும் அல்லது அதையொட்டி சட்டப்படி அவருக்குக் கொடுக்கப்பட்ட பணிப்புரை எதற்கும் அல்லது அவரிடம் கேட்கப்பட்ட வேண்டுகோள் எதற்கும் இணங்கி நடக்கத் தவறுகின்ற எவரொருவருக்கும் தொடர்ந்து மேற்சொன்ன வகைமுறையை அல்லது மேற்சொன்ன விதி அல்லது ஆணையை மீறுவாராயின் அல்லது மேற்சொன்ன பணிப்புரை அல்லது வேண்டுகோளுக்கு இணங்கி நடக்கத் தவறுவராயின், ஏற்கனவே குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட நாளுக்கு பின்னர் அவர் தொடாந்து குற்றச் செயல் புரியும் ஒவ்வொரு நாளுக்கும், மேற்சொன்ன இணைப்புப் பட்டியலின் நான்காம் கலத்தில் இது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரையிலும் நீடிக்கக் கூடிய அபராதம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

**<u>விளக்கம்</u>**:- இணைப்புப் பட்டியல் II மற்றும் III ன் கலப்பத்தியில் பொருள் என்ற தலைப்புக் கொண்ட பதிவுகள், அதன் முதலாம் அல்லது இரண்டாம் கலப்பத்திகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகைமுறைகளில் விபரிக்கப்பட்டுள்ள குற்றச் செயல்களுக்கான பொருள் வரையறைகளாகவோ அல்லது அந்த வகைமுறைகளின் சுருக்கங்களாகவோ கருதப்படவில்லை மாறாக, அவற்றில் சொல்லப்பட்டுள்ள பொருள்களைக் கூறுவதாக மட்டுமே கருதப்பட்டுள்ளது.

**246. தகுதியின்மை ஆகும்போது கிராம ஊராட்சியின் உறுப்பினராக, தலைவராக அல்லது துணைத் தலைவராக அல்லது ஊராட்சி ஒன்றியக்குழுவின் அல்லது மாவட்ட**

**ஊராட்சியின் உறுப்பினராக தலைவராக அல்லது துணைத் தலைவராக செயல்படுவதற்கான தண்டனை**

(1) இந்த் சட்டப்படி அல்லது இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி பதவி வகிப்பதற்கு உரிமை கொண்டவா் இல்லை அல்லது பதவி வகிக்கும் உரிமை அற்றுப்போய்விட்டது என்று அறிந்த பிறகும் கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சி ஒன்றின் உறுப்பினராகச் செயல்படும் எவரொருவரும் அத்தகைய குற்றச் செயல் ஒவ்வொன்றிற்கும் இருநூறு ரூபாய்க்கு மிகைப்படாத அபராதம் விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவா்.

(2) இச்சட்டப்படி அல்லது அதன்படி இயற்றப்பட்ட விதிகளின்படி, பதவி வகிப்பதற்கு உரிமை கொண்டவா் இல்லை என்று அல்லது பதவி வகிக்கும் உரிமை அற்றுப்போய்விட்டது என்று அறிந்த பிறகும் கிராம ஊராட்சியின் தலைவராக அல்லது தற்காலிகத் தலைவராக அல்லது துணைத் தலைவராக செயலாற்றுகிற அல்லது அவருடைய அலுவல் பணிகளில் எதையும் செய்கின்ற செயல் அலுவலராகவும் இருக்கும்மிடத்து அவருடைய அலுவலா் பணி உட்பட ஆற்றிவரும் எவரொருவரும் மற்றும் ஊராட்சி ஒன்றிய குழுவின் அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவராக தற்காலிகத் தலைவராக அல்லது துணைத் தலைவராக அல்லது ஆணையராக அல்லது செயலாளராக பணியாற்றுகின்ற அல்லது செயல் அலுவலா் பணிகளில் எதனையும் ஆற்றுகின்ற எவரொருவரும் அத்தகைய குற்றச் செயல் ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் ரூபாய்க்கு மிகைப்படாத அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படலாம்.

(3) கிராம ஊராட்சியின் தலைவராக தற்காலிகத் தலைவராக அல்லது துணைத் தலைவராக அல்லது ஊராட்சி ஒன்றிய குழு அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவராக தற்காலிகத் தலைவராக அல்லது துணைத்தலைவராக இருந்து அவருடைய பொறுப்பில் வந்துள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சி எதற்கேனும் சொந்தமான ஆவணங்கள் எவற்றையும் அல்லது ஏனைய பணங்கள் அல்லது ஏனைய சொத்துக்கள் அல்லது உடமைகள் எவற்றையும் அவருக்குப் பின்னா் பதவி ஏற்பவரிடம் அல்லது வகுத்துரைக்கப்படும் அலுவலரிடம் ஒப்படைக்க தவறுகிற நபா் எவரும்

(அ) அத்தகைய கிராம ஊராட்சியின் தலைவா், தற்காலிகத் தலைவா் அல்லது துணைத் தலைவராக அல்லது அத்தகைய ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவா் தற்காலிகத் தலைவா் அல்லது துணைத்தலைவராக பதவிக் காலம் முடிவடைகின்ற ஒவ்வொரு சந்தா்ப்பத்திலும்

(ஆ) கிராம ஊராட்சித் தலைவா் கோரியதின் பேரில் துணைத் தலைவராக இருந்த ஒரு நபா் கு றித்த சந்தா்ப்பத்தில் மற்றும்

(இ) ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சி தலைவா் கோரியதன் பேரில் துணைத்தலைவராக இருந்த ஒரு நபா் குறித்த தோ்வில் அத்தகைய ஒவ்வொரு குற்றச் செயலுக்காகவும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவாா்.

(4) After section 246 of the principal Act, the following section shall be inserted namely

"246-A Penalty for failure to obtain permission of Government for foreign trip
Whoever undertakes a trip to any foreign country in violation of section 82-A shall on conviction be punished with fine which may extend to fifty thousand rupees".
Act 52/2002 WEF 9.1.03 G.O. 9.1.03.

**247. ஒப்பந்தப் பணியில் உரிமையை வைத்துக்கொள்ளும் அலுவலா் அல்லது பணியாளருக்கு குற்றத் தண்டனை**

ஒரு கிராம ஊராட்சியின் அலுவலா் அல்லது பணியாளா் எவரேனும், தாம் அறிந்தே, ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது அதன் சாா்பில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம் அல்லது வேலை வாய்ப்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக, தாமாகவோ அல்லது ஒரு பங்குதாரா் அல்லது வேலை கொடுப்பவா் அல்லது பணியாளா் மூலமாகவோ தனிப்பட்ட பங்கு அல்லது நலன் கொண்டவராக இருப்பாராயின் அவா் 1860ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் XLV/1860) பிரிவு 168ன்படி குற்றச் செயல் புரிந்தவராகக் கருதப்படுவாா்.

ஆனால், நிறுமம் எதிலும் ஒரு பங்குதாரராக அல்லது உறுப்பினராக இருக்கின்ற காரணத்தாலேயே அத்தகைய நிறுமத்திற்கும் ஊராட்சிக்குமிடையே செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் எதிலும் நலன் கொண்டுள்ளவராக, அவா் அத்தகைய நிறுமத்தின் ஒரு இயக்குநராக இருந்தாலன்றி, அவ்வாறு கருதப்பட கூடாது.

**248. செயல் அதிகாரி அல்லது ஆணையா் அல்லது செயலாளா் அல்லது அவரது சாா்பாளரை சட்டமுறையற்ற வகையில் தடுத்து நிறுத்துதல்**

செயல் அதிகாரி அல்லது ஆணையா் அல்லது செயலாளரையோ செயல் அலுவலா் அல்லது ஆணையா் அல்லது செயலாளரால் சட்டப்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபா் எவரையுமோ எந்த ஒரு இடத்திற்குள் கட்டிடத்திற்குள் அல்லது நிலத்திற்குள் நுழைவதையும் அல்லது அந்த இடத்திற்குள் சென்று சட்டப்படியான கடமையாற்றுவதையும் தடை செய்கிற நபா் மீது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு (மத்திய சட்டம் XLV/1860) பிரிவு 341ன் குற்றச் செயல் புரிந்தவராகக் கருத வேண்டும்.

**249. ஊராட்சிகளுக்கு எதிராகத் தடங்கள் செய்வது தடை செய்யப்படுவது**

தங்களுடைய கடமையை அல்லது இந்தச் சட்டத்தின் அல்லது இதன் கீழ் இயற்றப்பட்ட விதி துணை விதி, ஒழுங்கு முறை அல்லது ஆணை எதனின் காரணமாகவோ அதனின் விளைவாகவோ ஒருவருக்கு அதிகாரமளிக்கப்பட்டு அல்லது செயலாற்ற வேண்டுமென்று கோரப்பட்டுள்ளவற்றில் எதையேனும் ஆற்றும் பொழுது கிராம ஊராட்சி அல்லது தலைவா், செயல் அலுவலா் அல்லது ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சி அல்லது அதன் தலைவா் அல்லது ஆணையா் அல்லது செயலாளா் அல்லது ஊராட்சியின் உறுப்பினா் ஒருவரை, அல்லது ஊராட்சியால் நியமிக்கப்பட்ட நபா் எவரையும் அல்லது ஊராட்சியின் சாாிபில் எவருடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளதோ அந்த நபரொருவரையும் தடுக்கின்ற அல்லது தொந்தரவு செய்கின்ற எவா் மீதும் ஐம்பது ரூபாய் வரை நீடிக்கக் கூடிய அபராதம் விதித்து தண்டிக்கப்பட வேண்டும்.

**250. அறிவிப்பை அகற்றுதல், தெளிவில்லாமல் செய்தல் ஆகியவற்றை தடை செய்தல்**

ஊராட்சியால் அல்லது செயல் அலுவலரால் அல்லது அவரது ஆணைகளின்படி அல்லது ஆணையா் அல்லது செயலாளரால் பாா்வைக்கு வைக்கப்பட்ட அறிவிப்பு எதனையும் அல்லது எழுப்பப்பட்ட சின்னம் அல்லது குறி எதனையும் அதிகாரமின்றி அகற்றுகிற, அழிக்கிற உருக்குலைக்கிற அல்லது தெளிவற்றதாகச் செய்த நபா் மீது ஐம்பது ரூபாய் வரை நீடிக்கக் கூடிய அபராதம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவாா்.

**251. தகவல் அளிக்காமல் அல்லது தவறான தகவல் அளித்தமைக்கான தண்டம்**

இந்தச் சட்டத்தின்படியோ அல்லது இதன்படி இயற்றப்பட்ட அறிவிப்பு அல்லது வழங்கப்பட்ட பிற நடவடிக்கை எதனின்படியோ தகவல் அளிக்குமாறு கோரப்பட்டுள்ள நபா் எவரும், அத்தகைய தகவல் அளிக்காமல் விட்டுவிடுவாராயின், அல்லது அவா் அறிந்தே தவறான தகவல் அளிப்பாராயின் இவா் மீது நூறு ரூபாய்க்கு மேற்படாத அளவு அபராதம் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவாா்.

## அத்தியாயம் - XIII

## பல்வகை

### 252. ஊராட்சி ஒன்றைச் சுட்டும் சுட்டுகைக்கு பொருள் கொள்ளுதல்

சட்டம், விதி துணை விதி, ஒழுங்குமுறை, அறிவிக்கை, திட்டம், படிவம் அல்லது ஆணை எதையும் ஊராட்சி பகுதி எதற்கேனும் பொருந்தச் செய்வதில், மாறான ஒரு கருத்து இந்தச் சட்டத்தில் தோன்றாத நிலையிலும் மற்றும் அரசு வேறு வகையில் பணித்திருந்தாலன்றியும் ஊராட்சி ஒன்றை இச்சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட கிராம ஊராட்சியை அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தை அல்லது மாவட்ட ஊராட்சியை அல்லது ஊராட்சி கிராமத்தை அல்லது ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை உள்ளடக்கி குறிப்பிடுகின்ற ஒரு பதமாக கருத வேண்டும்.

### 253. புதியதாக அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சிகள் தொடர்பான தனி வகையங்கள்

(1) ஒரு ஊராட்சி இச்சட்டத்தின்படி முதன்முறையாக அமைத்துருவாக்கப்படும் போது இந்தப்பிரிவின் வகைமுறைகள் பொருந்துவனவாக இருக்க வேண்டும்.

(2) ஒரு ஊராட்சி இப்பிரிவின்படி புதியதாக அமைத்துருவாக்கப்படும் போது, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், உறுப்பினர்களையும் அல்லது நேர்விற்கேற்ப தலைவரையும் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் உறுப்பினர், தலைவர் அத்தகைய ஊராட்சியை அமைத்துருவாக்குவதற்காக வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒன்றில் குறித்துரைக்கப்படும் நாளன்று பதவியேற்க இயலும்.

(3) ஒரு ஊராட்சி இப்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்டவுடன், ஆறு மாதங்களுக்கு மிகாமல் அரசு ஆணை மூலம் குறித்துரைக்கக்கூடிய கால அளவிற்கு நேற்விற்கேற்ப கிராம ஊராட்சி மற்றும் அதன் தலைவரின் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை ஆற்றவும் அலுவல்களைப் புரிவதற்காக, வட்டாட்சியரின் நிலைக்குக் குறையாத பதவியிலுள்ள தனி அலுவலர் ஒருவரை அமர்த்தலாம்.

(3 a) உட்பிரிவு (3)ல் என்ன சொல்லப்பட்டிருப்பினும் பட்டியல் V-ல் குறிப்பிட்டுள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் சம்பந்தமாக இந்த உப விதியின் கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் 2000 மார்ச் 31ம் தேதி வரையில் அல்லது அரசினுல் சான்று அறிவிப்பின் மூலம், இதற்கெனவே குறிப்பிடும் அத்தகைய குறுகிய காலம் வரை அந்த அலுவல் பெற்றிருத்தல் வேண்டும். (சட்டம் 104/98)

(4) ஊராட்சியின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்கும் வரை மேற்சொன்னவாறு நியமிக்கப்பட்ட அலுவலர் மேற்சொன்ன ஊராட்சியின் அல்லது அதன் தலைவரின் அதிகாரங்களை செலுத்துதலும் கடமைகளை ஆற்றவும் மற்றும் அலுவல் பணிகளை ஆற்ற வேண்டும்.

### 254. 1920-ஆம் ஆண்டு சென்னை உள்ளாட்சி வாரியங்கள் சட்டம் முதலானவற்றை குறிக்கும் பதத்திற்கு பொருள் கொள்ளுதல்

இந்தச் சட்டத்தின்படி ஒரு ஊராட்சி அமைக்கப்பட்ட பின்னர், சட்டம், விதி, துணை விதி, ஒழுங்குமுறை, அறிவிக்கை, திட்டம், படிவம் அல்லது ஆணை எதனையும் ஊராட்சி எதற்கும் பொருந்தச் செய்வதில், மாறான ஒரு கருத்து இச்சட்டத்தில் தோன்றாத நிலையிலும் மற்றும் அரசு வேறு விதமாகப் பணித்திருந்தாலன்றியும்

(i) கிராமம் அல்லது உள்ளூர்ப் பகுதி ஒன்றை சுட்டுகிற எதுவும், ஒரு ஊராட்சி கிராமத்தை ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை அல்லது ஊராட்சி மாவட்டத்தை சந்தர்ப்பத்திற்கேற்ப குறிக்கும் பதமாக பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ii) உள்ளாட்சி கழகங்கள் குறித்த பதம் எதுவும் மாவட்ட ஊராட்சிகளையோ ஊராட்சி ஒன்றிய மன்றங்களையோ அல்லது நேர்விற்கேற்ப கிராம ஊராட்சிகளையே குறிக்கும் பதமாக பொருள் கொள்ளப்பட வேண்டும்.

(iii) 1920-ஆம் ஆண்டு சென்னை உள்ளாட்சி கழகங்கள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் xiv/1920) குறித்த பதம் அனைத்தும் 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கழகங்கள் சட்டத்தை 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம பஞ்சாயத்துக்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1950) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் xxxv/1958) மற்றும் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தையும் குறிக்கும் பதமாக பொருள் கொள்ளப்பட வேண்டும்.

(iv) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு கடிதங்கள் சட்டம் அல்லது 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் எதுவும் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை குறிக்கும் பதமாக பொருள் கொள்ளப்பட வேண்டும்.

(v) மாவட்ட கழகத்தை அல்லது அதன் தலைவரைக் குறித்த பதம் எதுவும் அதிகார வரம்பு பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியக் குழுவை அல்லது நேர்விற்கேற்ப அதன் தலைவரை குறிக்கும் பதமாக பொருள் கொள்ளப்பட வேண்டும்.

**255. நீக்கமும் காப்பும்**

(1) இதன் பின்பு மேற்சொன்ன சட்டம் என கூறப்பட்டுள்ள 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் XXXV/1958) இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) உட்பிரிவு (1)ன் மூலம் மேற்சொன்ன சட்டம் நீக்கப்படுவதானது

(அ) மேற்சொன்ன சட்டத்தின் முந்தைய செயல்பாடு அல்லது அதன்படி இயற்றப்பட்ட அல்லது உரியவாறு பாதிக்கப்பட்ட எதனையும் அல்லது

(ஆ) மேற்சொன்ன சட்டத்தின்படி பெறப்பட்ட சேர்ந்து வந்த அல்லது உள்ளான உரிமை சிறப்புரிமை அல்லது கடமைப் பொறுப்பு அல்லது கடமை எதனையும், அல்லது

(இ) மேற்சொன்ன சட்டத்திற்கு எதிராக புரிந்த குற்றச் செயல்கள் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் அல்லது

(ஈ) மேற் கூறப்பட்டிருக்கிற அத்தகைய உரிமை சிறப்புரிமை, கடமை, தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் பொறுத்து புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் தீர்வுவழி எதனையும் அத்தகைய புலனாய்வு சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வுவழி அல்லது எதனையும் மற்றும் இந்தச் சட்டம் இயற்றப்படாதிருந்தால் விதிக்கப்படும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் நிறுவப்படலாம் அல்லது தொடரப்படலாம் அல்லது செலுத்தப்படலாகும்.

(3)உட்பிரிவு (2)ல் கூறப்பட்ட வகைமுறைக்கு உட்பட்டு மேற்சொன்ன சட்டத்தின்படி, செய்யப்பட்ட நியமனம் அல்லது ஒப்படைப்பு வழங்கப்பட்ட அறிவிக்கை, ஆணை அறிவுரை எதுவும் அல்லது பணிப்புரை, வழங்கப்பட்ட சான்றிதழ், செயல்படுத்தப்படும் விதி, அல்லது படிவம், வழங்கப்பட்ட சான்றிதழ், செயலுறுத்தப்பட்ட எந்த செயலும் எதுவும் உள்ளடங்கலாக செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்த சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாக அல்லது எடுக்கப்பட்டுள்ளதாக கொள்ளப்பட வேண்டும். மற்றும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாலன்றி தொடர்ந்து செயல்திறன் பெறுதல் வேண்டும்.

**256. ஐயப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்**

(1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நடைமுறைப்படுத்தும் பொழுது இடர்பாடு எதுவும் எழுமாயின், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை வாயிலாக ஐயப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையானது அல்லது உகந்தது என அதற்குத் தோன்றுகிற, இந்த சட்டத்தின் வகை முறைகளுக்கு முரணாக இல்லாத மற்றும் 1992ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு (எழுபத்தி மூன்றாம் திருத்த)ச் சட்டத்தின் வரைமுறைகளுக்கு இணங்கி உள்ளவாறு வகைமுறைகளைச் செய்யலாம்.

ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலம் கடந்த பின்பு செய்யப்படக் கூடாது.

(2) இந்தப் பிரிவின்படி இயற்றப்பட்ட ஒவ்வொரு ஆணையும் அது இயற்றப்பட்ட பின்பு கூடிய வரையில் சட்ட மன்றப் பேரவை முன்பு வைக்கப்பட வேண்டும்.

**257. ஊராட்சிகளின் அதிகார அமைப்பு மற்றும் பொறுப்புகள்**

இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு அல்லாமல் அரசு அறிவிக்கை வாயிலாக மற்றும் அதில் குறித்துரைக்கப்படலாகும் வகைமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஊராட்சிக்கு அல்லது இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட பிற குழு எதற்கும் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கு திட்டங்கள் தயாரிப்பது பொறுத்த அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மற்றும் இணைப்புப் பட்டியல் IV ல் கூறப்பட்டுள்ள பொருள்கள் உள்ளடங்கலாக பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அதிகாரங்களையும், அதிகார அமைப்பினையும் ஒப்படைக்கலாம்.

257 A Provision of Rain Water Harvesting Structure

(1) In every building owned or occupied by the Government or a statutory body or a company or an

(1) institution owned, or controlled by the Government, rain water harvesting structure shall be provided by the Government or by such statutory body or company or other institution, as the case may be, in such manner and within such time as may be prescribed.

(2) Subject to the provisions of sub-section (1) every owner or occupier of a building shall provide rain water harvesting structure in the building in such manner and within such period as may be prescribed.

Explanation:- Where a building is owned or occupied by more than one person every such person shall be liable under this sub-section.

(3) Where the rain water harvesting structure is not provided as required under sub-section (2) the executive authority or any person authorized by him in this behalf may, after giving notice to the owner or occupier of the building, cause rain water harvesting structure to be provided in such building and recover the cost of scuh provision along with the incidental expense there of in the same manner as property tax.

(4) Notwithstanding any action taken under sub-section (3) where the owner or occupier of the building fails to provide the rain water harvesting structure in the building before the date as may be prescribed, the water supply connection provided to such building shall be disconnected till rain water harvesting structure is provided. (Act No.4 of 21.7.2003)

## தேர்தல் குறித்த தகராறுகள்

**258. தேர்தல் மனுக்கள்**

**(1)** கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது மாவட்ட ஊராட்சியின் அல்லது உறுப்பினர் ஒருவரின் தேர்தல் எதுவும், எந்த மாவட்டத்தில் சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிபதிக்கு இந்தச் சட்டத்தின்படி தேர்தலின் முடிவு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் தேர்தல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தாலன்றி வழக்கு தொடர முடியாது.

(2) அத்தகைய தேர்தல் எதனையும் வாதிடும் தேர்தல் மனு ஒன்று பிரிவு 256ல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான காரணத்தினால் அத்தகைய தேர்தலின் வேட்பாளர் எவராலும் தொடர்புடைய தொகுதியின் வாக்காளர், எவராலும் அல்லது உறுப்பினர் எவராலும் தாக்கல் செய்யப்படலாம்.

(3) மனுதாரர் ஒருவர் அவருடைய மனுவில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரையும் எதிர்வாதிகளாகச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

(4) தேர்தல் மனு ஒன்று

(அ) எந்த முக்கிய மனுதாரர் எதை நம்புகிறாரோ அதன் முக்கிய கூறுகளைக் கொண்ட சுருக்கமான விபர அறிக்கை ஒன்று அடங்கியிருக்க வேண்டும்.

(ஆ) தேர்தலில் எந்த ஆதாரம் அல்லது ஆதாரங்களின் பேரில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆதாரங்களை போதிய விவரங்களுடன் விவரித்தல் வேண்டும்.

(இ) பொதுவரையினை சரிபார்ப்பதற்காக 1908ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறை தொகுப்புச் சட்டத்தில் (மத்திய சட்டம் V/1908) விவரிக்கப்பட்டுள்ள முறையில் மனுதாரரால் கையொப்பமிடப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டும்.

(5) [1]தேர்தல் மனுவொன்றின் விசாரணையைப் பொறுத்த அளவில் மாவட்ட நீதிபதி அவ்விசாரணையை அடுத்துவரும் நாளுக்கு அப்பால் ஒத்தி வைப்பது தேவையானதாக உள்ளது என்று முடிவு செய்தாலன்றி, நீதியின் நலனுக்கு எந்த அளவுக்கு முடியுமோ, அந்த அளவுக்கு நடைமுறைக்கு ஒவ்வுதலாக தினந்தோறும் அது முடிவடைகின்ற வரையில் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். ஆனால் ஒத்தி வைப்பதற்கான காரணங்களை எழுத்துருவில் அவர் பதிவு செய்ய வேண்டும்.

[2](6) தேர்தல் மனு ஒவ்வொன்றும் எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் விசாரணை செய்யப்பட வேண்டும் மற்றும் விசாரணையை அந்த மாவட்ட நீதிபதிக்கு எந்த தேதியன்று விசாரணைக்காக முன்னிடப்பட்டதோ அந்த தேதியிலிருந்து ஆறு மாதம் கால அளவிற்குள்ளாக விசாரணையை முடிவடையச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**259. தேர்தல்கலை செல்லத்தக்கதல்ல என அறிவிப்பதற்கான ஆதாரங்கள்**

**(1)** உட்பிரிவு (2)ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்ட மாவட்ட நீதிபதி

(அ) இந்தச் சட்டத்தின்படி ஒரு ஊராட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேட்பாளர் தேர்தல் தேதியின் போது தகுதியற்றவராகவோ தகுதி இல்லாதவராகவோ இருக்கிறார் எனக் கருதுவாராயின் அல்லது

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரால் அல்லது அவருடைய முகவரால் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அல்லது அவருடைய முகவரின் ஒப்புதலுடன் மற்றவரால் ஊழல் நடவடிக்கை புரியப்பட்டுள்ளது எனக் கருதுவாராயின் அல்லது

(இ) தேர்தல் மனு எதுவும் முறையின்றி மறுக்கப்பட்டுள்ளது எனக் கருதுவாராயின் அல்லது

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரை தேர்தலின் முடிவு எவ்விதத்திலும் குறிப்பாக பாதிப்பு ஏற்படுத்துவதற்கான

(i) தேர்தல் மனு எதுவும் முறையற்றவாறு ஏற்றுக் கொள்ளப்பட்டதினால் அல்லது

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் சொந்த நலன்களுக்காக வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் அல்லது அத்தகைய வேட்பாளர் அல்லது முகவரின் ஒப்புதலுடன் செயல்படும் நபர் ஒருவர் அல்லாது பிற நபரால் ஊழல் நடவடிக்கை எதுவும் புரியப்பட்டுள்ளதினால் அல்லது

(iii) வாக்கு எதனையும் முறையற்றவாறு ஏற்றுக் கொண்டதினால் அல்லது மறுத்ததினால் அல்லது இல்லாத வாக்கு எதனையும் ஏற்றதினால் அல்லது

(iv) இந்தச் சட்டம் அல்லது இதன்படி இயற்றப்பட்ட விதிகள் அல்லது ஆணைகளின் வகைமுறைகளுக்கு இணங்காமல் இருந்ததினால் கணிசமாக பாதிக்கப்பட்டது எனக் கருதுவாராயின்

வெற்றி பெற்ற வேட்பாளரின் தேர்தல் செல்லத்தக்கதல்ல என நீதி மன்றத்தினால் அறிவிக்க செய்ய வேண்டும்.

---

258 (5) 1 பிரிவு 258ல் உட்பிரிவு (5) 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் /2000) ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

258 (6) 2 பிரிவு 258ல் உட்பிரிவு (6) 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் /2000)ன்படி புதியதாக சேர்க்கப்பட்டது.

(2) நீதி மன்றத்தின் கருத்துப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர், முகவர் ஒருவரின் ஊழல் நடவடிக்கையினால் குற்றமற்றவராக இருந்து ஆனால் நீதி மன்றம்

(அ) அத்தகைய ஊழல் நடவடிக்கை எதுவும் தேர்தலில் வேட்பாளரால் புரியப்படவில்லை மற்றும் அத்தகைய ஊழல் நடவடிக்கை வேட்பாளரின் ஒப்புதல் இல்லாமல் புரியப்பட்டுள்ளது என்றும்,

(ஆ) தேர்தலில் ஊழல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு வேட்பாளர் தம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார் என்றும்,

(இ) பிற எல்லா வகையிலும் தேர்தலில் வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் ஊழல் நடவடிக்கை எதையும் புரியாமல் விலகி இருந்தனர் என்றும்

தெளிவுற காணுமாயின், அதன் பின்பு நீதிமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் தேர்தல் செல்லத்தக்கது என்று முடிவு செய்யலாம்.

**260. ஊழல் நடவடிக்கைகள்**

இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக பின்வரும் நடவடிக்கைகள் ஊழல் நடவடிக்கைகளாகக் கருதப்பட வேண்டும்.

(1) 1951ஆம் ஆண்டு பொது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் (மத்திய சட்டம் XLIII/1951) பிரிவு 123 கூறு (1)ல் பொருள் கூறப்பட்டுள்ளவாறு, லஞ்சம்

(2) மேற்சொன்ன பிரிவின் கூறு (2)ல் பொருள் கூறப்பட்டுள்ளவாறு முறையற்ற செல்வாக்கு

(3) சாதி, இனம், சமூகம் அல்லது மதத்தின் காரணத்தினால் பேரில் அல்லது மத சார்பான அடையாளங்களை பயன்படுத்துதல் அல்லது அவற்றைக் காண்பித்தல் அல்லது தேசியக் கொடி அல்லது தேசியச் சின்னம் போன்ற தேசிய அடையாளங்களைப் பயன்படுத்துதல் அல்லது அவற்றைக் காண்பித்ததினால் ஒரு வேட்பாளரின் தேர்தலில் வெற்றி வாய்ப்பினைப் பெற வாக்களிக்குமாறு அல்லது வாக்களிக்காமல் இருக்குமாறு வேட்பாளரால் அல்லது அவருடைய முகவரால் அல்லது பிற நபர் எவரும் திட்டமிட்டபடி வேண்டுகோள் விடுத்தல்

(4) வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் அல்லது மற்றவரால் ஏதேனும் வேட்பாளர் தொடர்பாக அல்லது அந்த வேட்பாளரின் தனிப்பட்ட குணம் அல்லது நடத்தை தொடர்பான பொய்யாக இருக்கிற மற்றும் பொய்யானது என அவர் நம்புகிற விபர உரை எதனையும் வெளியிடுதல் அல்லது தேர்தலில் அந்த வேட்பாளரின் வெற்றி வாய்ப்பிற்குக் குந்தகம் விளைவிப்பதற்காக திட்டமிடப்பட்ட விபர உரை ஒன்றாக இருந்து வேட்பாளர் எவரின் 1(போட்டியிலிருந்து) பின் வாங்குதல்

(5) இந்த சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கு இணங்க வாக்குச் சாவடிக்கு செல்வதற்கு அல்லது அதிலிருந்து வருவதற்கு (வேட்பாளர் தாமே மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அல்லது அவருடைய குடும்ப முகவர் அல்லாத) வாக்காளர் எவரையும் கொண்டு செல்வதற்காக வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் அல்லது ஏதேனும் பிற நபரால் ஊர்தி அல்லது வாகனம் எதனையும் பணம் செலுத்துவதின் பேரில் அல்லது பிறவாறாக வாடகைக்கு எடுத்தல் அல்லது வாங்குதல்

---

260 (4) உட்பிரிவு (4)ல் தொடர்பிலிருந்து என்ற சொல்லை (      )ல் கூறப்பட்டுள்ள சொல்லாக 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1999) பிரிவு 8ன்படி திருத்தப்பட்டது.

ஆனால் வாக்காளர் ஒருவரால் அல்லது பல வாக்காளர்களால் கூட்டமாக மொத்தச் செலவில் அவரையோ, அத்தகைய வாக்குச் சாவடி எதற்கும் கொண்டு செல்லும் நோக்கத்திற்காக ஊர்தி அல்லது வாகனம் ஒன்றை வாடகைக்கு எடுத்தல் அவ்வாறு வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள ஊர்தி அல்லது வாகனம் விசைத் திறனால் இழுக்கப்படுபவை அல்லாத ஊர்தி அல்லது வாகனமாக இருக்குமாயின் இந்தக் கூறின்படி ஊழல் நடவடிக்கையாகக் கருத முடியாது.

ஆனாலும் அத்தகைய வாக்குச் சாவடி எதற்கும் செல்லும் அல்லது அதிலிருந்து வரும் நோக்கத்திற்காக வாக்காளர் ஒருவரால் தன்னுடைய சொந்தச் செலவில் பொது போக்குவரத்து ஊர்தி அல்லது வாகனம் அல்லது டிராம், சீருந்து அல்லது ரெயில் எதனையும் பயன்படுத்துதல் இந்தக் கூறின்படி ஊழல் நடவடிக்கையாக கருத முடியாது.

**விளக்கம்:-** இந்தக் கூறில் ஊர்தி என்னும் சொல்லுக்கு விசைத்திறனால் இழுக்கப்பட்டாலும் அல்லது பிறவாறாக இருந்தாலும் மற்றும் பிற ஊர்திகளை இழுத்துச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டாலும் அல்லது பிறவாறாக இருந்தாலும் சாலைப் போக்குவரத்து நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிற

அல்லது பயன்படுத்தப்படுவதற்குத் தகுதியான ஊர்தி எதுவும் என்று பொருள்படும்.

(6) எந்தக் கூட்டத்தில் போதை தரும் மதுபானம் வழங்கப்படுகிறதோ அந்தக் கூட்டம் எதனையும் நடத்துதல்

(7) தேர்தலுக்கான விளம்பரங்களை அச்சிடுபவர் மற்றும் வெளியிடுபவர் பெயர் மற்றும் முகவரி இல்லாத சுற்றறிக்கை அட்டை அல்லது சுற்றறிக்கை அட்டை அல்லது சுவரொட்டி எதனையும் வழங்குதல்

(8) ஊழல் நடவடிக்கையென விதிகளின் வாயிலாக அரசு குறித்துரைக்கக்கூடிய பிற நடவடிக்கை எதுவும்

**261. இடைப்படுகால வகை**

**(1)** இந்தச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டம் தொடங்கியதற்குப் பின்னர் நடைபெறும் ஊராட்சிகளுக்கான பொதுத் தேர்தல்களுக்குப் பின்பு கிராம ஊராட்சிகளின் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சிகளின் முதல்

(2) உட்பிரிவு (1)ன்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் 1( )வரை பதவி வகிக்கலாம். கூட்டம் எந்த நாளில் நடைபெறுகின்றனவோ அந்த நாள் வரையிலும் தேவையாயின் அக்கிராம ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியக்குழுக்கள் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மாவட்ட ஊராட்சிகளின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் அலுவல்களைப் புரிவதற்குமாக அரசு அறிவிக்கையின் வாயிலாக தனி அலுவலர்களை நியமிக்கலாம்.

(2) உட்பிரிவு 1ன்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் 2005 ஏப்ரல் 24 தேதி வரை பதவி வகிக்கலாம்.

The special officers under sub section (1) in respect of village panchayats specified in schedule V shall hold offer upto 24.4.05 or for such shorter provided as the Government may by notification, specify in this behalf. (Act 36/04)

---

261 (2)1 கிராம ஊராட்சிக்கு நியமிக்கப்படும் தனி அலுவலர் பதவி காலம் மற்றும் அட்டவணையில் கிராம ஊராட்சியின் பெயர்கள் அவ்வப்போது, தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டத்தின் மூலம் மாறிக் கொண்டே இருக்கும்.

**262. சட்டமன்ற பேரவையின் முன்பு வைக்கப்பட வேண்டிய விதிகள் அறிவிக்கைகள் மற்றும் ஆணைகள்**

(1) பிரிவுகள் 3, 5 மற்றும் பிரிவு 4ஐயும் சேர்த்துப் படிக்கப்பட வேண்டிய பிரிவு 7 மற்றும் 11, 12, 20, 21, 32, ஆகிய பிரிவுகளின்படியான அறிவிக்கைகள் தவிர) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்படும் இயற்றப்படும் அல்லது பிறப்பிக்கப்படும் விதிகள் அறிவிக்கைகள் மற்றும் ஆணைகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிட வேண்டும் மற்றும் அவை குறித்த நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் என வெளியிடப்பட்டிருந்தாலன்றி அவை அரசிதழ் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

(2) பிரிவுகள்3, 5 மற்றும் பிரிவு 4ஐம் சேர்த்துப் படிக்கப்பட வேண்டிய பிரிவு 7 மற்றும் 11, 12, 20, 21, 32, ஆகிய பிரிவுகளின்படி வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தொடர்புடைய மாவட்ட அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் அவை குறித்த நாளிலிருந்து நடைமுறைக்கு வருமென வெளியிடப்பட்டிருந்தாலன்றி, அவை அரசிதழ் வெளியிடப்பட்ட நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) இந்தச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட விதி, அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அவை இயற்றப்பட்ட அல்லது வழங்கப்பட்டதற்கு பின்பு, கூடிய விரைவில் சட்ட மன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட சட்டமன்ற பேரவை கூட்டத் தொடர் முடிவதற்கு முன்பு, சட்டப்பேரவை அத்தகைய எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது அந்த விதி அறிவிக்கை அல்லது ஆணை இயற்றப்படக் கூடாது அல்லது வழங்கப்படக் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அதன் பின்பு, அந்த விதி. அறிவிக்கை அல்லது ஆணை அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வர வேண்டும் சந்தர்ப்பத்திற்கேற்ப நடைமுறைக்கே வராமலும் போகும். எனினும் அவ்வாறு மாற்றியமைத்தது அல்லது நடைமுறைக்கு வராது போக செய்தது எதுவும் முன்னதாக இயற்றப்பட்ட விதி அறிவிக்கை அல்லது ஆணையின்படி எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகம் விளைவித்தல் ஆகாது.

## I-ஆம் இணைப்புப் பட்டியல்.
## (172 (i) எனும் பிரிவைக் காணவும்)

| வகைப்பாடு (1) | | வரியானது, ஒவ்வோர் அரையாண்டிற்குமாக விதிக்கப்படுவதாயின் (2) | | | | வரியானது, ஒவ்வோர் ஆண்டிற்குமாக விதிக்கப்படுவதாயின் (3) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஓர் அரையாண்டிற்கான குறும அளவு வீதம் (i) | | ஓர் அரையாண்டிற்கான பெரும அளவு வீதம் (ii) | | ஓர் அரையாண்டிற்கான குறும அளவு வீதம் (i) | | ஓர் அரையாண்டிற்கான பெரும அளவு வீதம் (ii) | |
| (i) | கான்கிரீட் வீடுகள் மதராஸ் தளமிடப்பட்ட வீடுகள் மாடி வீடுகள் | கட்டடப் பரப்பில் 9.29 சதுர டெசி மீட்டருக்கு | ரூ.பை 0.25 | கட்டடப் பரப்பில் 9.29 சதுர டெசி மீட்டருக்கு | ரூ.பை 0.50 | கட்டடப் பரப்பில் 9.29 சதுர டெசி மீட்டருக்கு | ரூ.பை 0.50 | கட்டடப் பரப்பில் 9.29 சதுர டெசி மீட்டருக்கு | ரூ.பை 1.00 |
| (ii) | ஓடு வேயப்பட்ட வீடுகள் | மேற்படி | 0.15 | மேற்படி | 0.30 | மேற்படி | 0.30 | மேற்படி | 0.60 |
| (iii) | கூரை வேயப்பட்ட வீடுகள் 20 சதுர மீட்டர்கள் மற்றும் அதற்கு மேல் | மேற்படி | 0.10 | மேற்படி | 0.20 | மேற்படி | 0.20 | மேற்படி | 0.40 |
| (iv) | 20 சதுர மீட்டருக்குக் குறைவான கூரை வேயப்பட்ட வீடுகள் | கட்டடப் பரப்பில் 9.29 சதுர மீட்டர் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றும் | 0.20 | கட்டடப் பரப்பில் 9.29 சதுர மீட்டர் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றும் | 0.50 | கட்டடப் பரப்பில் 9.29 சதுர மீட்டர் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றும் | 0.40 | கட்டடப் பரப்பில் 9.29 சதுர மீட்டர் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றும் | 1.00 |

I-ஆம் விளக்கம்: கட்டடப் பகுதியானது காரையிடப்பட்டோ தளமிடப்பட்டோ ஓடு வேயப்பட்டோ அல்லது கூரை வேயப்பட்டோ உள்ள கட்டடங்களைப் பொறுத்த வரையில், முறையே மேற்சொன்ன வகைகளுக்குப் பொருந்துகிற வீதங்கள், ஒவ்வொரு வீதத்திலும் அடங்குகிற பகுதிகளுக்கும் பொருந்தும்.

வரம்புரை: ஆனாலும் 18.58 சதுர மீட்டருக்கு மேற்படாத கட்டடப் பரப்பினைக் கொண்டதும், முழுமையாகக் காரையிடப்பட்டோ அல்லது கூரை வேயப்பட்டோ அல்லது ஓடு வேயப்பட்டோ அல்லது பகுதி காரையிடப்பட்டோ. அல்லது கூரை வேயப்பட்டோ அல்லது ஓடு வேயப்பட்டோ உள்ளதுமான கட்டடங்களைப் பொறுத்த வரையில், வீட்டு வரியானது, அரையாண்டிற்கு இருபது ரூபாய் என்ற அளவில் விதிக்கப்படுதல் வேண்டும்.

II-ஆம் விளக்கம்:- கட்டடத்தின் பயன்பாடானது வகைப்படுத்தப்படலாம்; மற்றும் பின்வரும் வீதங்களில் வீட்டுவரி விதிப்பின் பேரில் மேல்வரியானது விதிக்கப்படுதல் வேண்டும்:-

| **பயன்பாட்டு வகை** | | மேல் வரி வீதம் |
|---|---|---|
| (i) குடியிருப்பிற்காக மட்டுமே | சிற்றூராட்சிகள் | இல்லை |
| (ii) சாதாரண வணிகம் போன்ற சிறு கடைகள் மற்றும் பிற சிறு வணிக நிறுவனங்கள் | சிற்றூராட்சிகள் | 20 % |
| (iii)பெருமளவில் வணிகஞ்சார், தொழில்சார் மற்றும் வியாபார நிறுவனங்கள், திரையரங்குகள் குடியிருப்பு விடுதிகள், தங்குவிடுதிகள், முதலியன | சிற்றூராட்சிகள் | 60 % |

முதலாம் வரம்புரை: ஆனால், கட்டடத்தின் ஒரு பகுதியை குடியிருப்பிற்காகவும் பிற பகுதியை வணிக, தொழில் முதலான நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படும் கட்டடங்களைப் பொறுத்த அளவில், முறையே மேற்சொன்ன வகைகளுக்குப் பொருந்தக்கூடிய மேல்வரிவீதமானது, பயன்பாட்டு வகை ஒவ்வொன்றிலும் அடங்குகிற பகுதிகளுக்குப் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

இரண்டாம் வரம்புரை: மேலும், இந்தச் சட்டமானது தொடங்குவதற்கு உடனடிமுன்பாக வீட்டுவரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்ட (வணிக நிலையில்லாத) கல்வி நிறுவனங்கள், இந்தச் சட்டத்தின்படி தொடர்ந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**இணைப்புப் பட்டியல் - II**
**சாதாரண தண்டனைகள்**
**பிரிவு (245 (1)ஐ காணவும்)**

| பிரிவு | உட்பிரிவு | பொருள் | விதிக்கப்படக்கூடிய அபராதம் |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 128 | (1) | ஆபத்தான கட்டுமானத்திற்கு வேலியிட அதை இடித்துவிட பாதுகாப்புச் செய்ய அல்லது பழுது பார்க்க கேட்டுக் கொண்டதிற்கு கீழ்ப்படியத் தவறுதல் | ஐந்நூறு ரூபாய் |
| 129 | (1) | ஆபத்தான மரங்களை பாதுகாப்பு செய்ய நறுக்க அல்லது வெட்டிவிடக் கேட்டுக் கொள்ளப்-பட்டதற்கு கீழ்ப்படியத் தவறுதல் | ஐம்பது ரூபாய் |
| 130 | | கட்டிடம் அல்லது நிலத்திற்கு வேலியிட அல்லது புதர்களையும் மரங்களையும் ஒழுங்கு செய்ய நறுக்க அல்லது வெட்டிவிட அல்லது சுற்றுச் சுவரின் உயரத்தை குறைக்கக் கேட்டு கொண்டதற்கு கீழ்ப்படியத் தவறுதல் | ஐம்பது ரூபாய் |
| 131 | (1) (அ) | பொதுச் சாலையில் அல்லது அதன்மீது சட்ட விரோதமாக சுவரைக் கட்டுதல், வேலி யெழுப்புதல் முதலியன | ஐம்பது ரூபாய் |
| 131 | (1)(ஆ) | பொதுச் சாலையில் அல்லது அதன்மீது சட்ட விரோதமாக குழிகளைத் தோண்டுதல் அல்லது பொருள்களைக் குவித்தல் | ஐம்பது ரூபாய் |
| 131 | (1) (இ) | பொதுச் சாலைகளுக்கு அருகிலுள்ள இடம் எதிலும் சட்ட விரோதமாகக் கல்லை வெட்டியெடுத்தல் | ஐம்பது ரூபாய் |
| 131 | (1) (ஈ) | வடிகால் மீது சட்ட விரோதமாகக் கட்டிடம் எழுப்புதல் | இருநூறு ரூபாய் |
| 131 | (1) (உ) | கிராம ஊராட்சியிடமோ ஊராட்சி ஒன்றியத்திடமோ ஒப்படைக்கப்பட்டுள்ள பொதுச் சாலை அல்லது பிற சொத்து எதனின் மீது அனுமதியின்றிச் செடிகளை நடுதல் | இருநூறு ரூபாய் |
| 131 | (1) (ஊ) | ஒரு கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொதுச்சாலை அல்லது பிற சொத்தின் மீதோ அல்லது பிரிவு 134 அல்லது பிரிவு 135 கிராம ஊராட்சியால் பயன்பாடு முறைப்படுத்துகின்றதோ அந்தப் புறம்போக்கு அல்லது நிலத்தின் மீதோ அனுமதியில்லாமல் மரங்களை வெட்டி வீழ்த்துதல் முதலியவை | இருநூறு ரூபாய் |
| 139 | | பொதுக் கேளிக்கைக்கான இடத்தை மூடிவிடத் தவறுதல் | இருநூறு ரூபாய் |
| 140 | | தொற்று நோயுள்ள குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புதல் | ஐம்பது ரூபாய் |
| 142 | | பெரியம்மை பற்றித் தகவல் அளிக்கத் தவறுதல் | ஐம்பது ரூபாய் |
| 143 | (1) | குளத்தை அல்லது பொது நல்வாழ்விற்கு அல்லது பாதுகாப்பிற்கு ஆபத்தான இடத்தை நிரப்பிவிட கேட்டு கொண்டதற்கு கீழ்ப்படியத் தவறுதல் | ஐம்பது ரூபாய் |

| | | | |
|---|---|---|---|
| 144 | (1) | அருவருப்பான நிலையிலுள்ள அல்லது நச்சுத் தன்மை வாய்ந்த தாவரம் அதிகமாக வளர்ந்துள்ள கட்டிடத்தை அல்லது நிலத்தை அகற்றுமாறு அல்லது சுத்தப்படுத்துமாறு கோரப்பட்டதற்குக் கீழ்ப்படியத் தவறுதல் | ஐம்பது ரூபாய் |
| 148 | (1) | உரிமம் இல்லாமலோ அல்லது உரிமத்திற்கு மீறிய வகையிலோ புதிய தனியார் சந்தை ஒன்றைத் தொடங்குதல் அல்லது தனியார் சந்தையொன்றைத் தொடர்ந்து திறந்து வைத்திருத்தல் | ஐந்நூறு ரூபாய் |
| 148 | (3) | சான்றிதழ் பெறாத தனியார் சந்தையில் கட்டணங்களை விதித்தல் | நூறு ரூபாய் |
| 150 | | அனுமதியில்லாமல் விலங்கு அல்லது பொருள் எதையும் பொது அல்லது தனியார் சந்தையில் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக வெளியில் வைத்தல் | இருபது ரூபாய் |
| 151. | | தடை செய்யப்பட்டதற்குப் பின்னர் அல்லது உரிமமில்லாமல் அல்லது ஒழுங்கு முறை விதிகளுக்கு மாறாக, பொதுச் சாலைகளில் அல்லது இடங்களில் பொருள்களை விற்பனை செய்தல் | பத்து ரூபாய் |
| 154 | (a) | தடை செய்யப்பட்ட இடத்தில் இறங்கும் அல்லது நிறுத்துமிடமாக அல்லது பொது இடம் அல்லது சாலை எதனையும் பயன்படுத்துதல் | ஐம்பது ரூபாய் |
| 155 | (1) | உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்திற்கு மாறாக, தனியார் கட்டை வண்டி நிறுத்துமிடம் ஒன்றைத் தொடங்குதல் அல்லது தனியார் கட்டை வண்டி நிறுத்துமிடத்தை தொடர்ந்து திறந்து வைத்தல் | இருநூறு ரூபாய் |
| 157 | (a) | விதிகளை மீறிய வகையில் பொது இறைச்சிக் கொட்டில்களுக்கு வெளியே விலங்குகளை வெட்டுதல் துண்டு போடுதல், தோலுரித்தல் முதலானவை | இருநூறு ரூபாய |
| 157 | (b) | உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்தை மீறிய வயயில் விற்பனைக்காக விலங்குகளை வெட்டுதல் | இருபது ரூபாய் |
| 158 | (3) | கட்டிடங்களின் இலக்கத்தை சட்ட விரோதமாக அழித்தல் முதலானவை | ஐந்து ரூபாய் |
| 158 | (4) | இலக்கத்தை மீண்டும் அமைக்குமாறு கேட்டு கொண்டபோது செய்யத் தவறுதல் | இருபது ரூபாய் |
| 159 | | உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்திற்கு மீறிய வகையில் ஊறு விளைவிக்கும் அல்லது ஆபத்தான தொழிலுக்காக ஒரு இடத்தை பயன்படுத்துதல் | நூறு ரூபாய் |
| 160 | | தொழிற்சாலை, பணிமனை முதலியவற்றைச் சட்ட விரோதமாக எழுப்புதல் | ஆயிரம் ரூபாய் |
| 236 | | ஒரு நபரை, பொதுச் சாலை, சந்தை, கிணறு, குளம் முதலியவற்றைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் | நூறு ரூபாய் |

# இணைப்புப் பட்டியல் - III
# தொடர்ந்து மீறுவதற்கான
# பிரிவு (245 (2)ஐ காணவும்)

| பிரிவு | உட்பிரிவு | பொருள் | விதிக்கப்படக்கூடிய அபராதம் |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 128 | (1) | ஆபத்தான கட்டுமானத்திற்கு வேலியிட, அதை இடித்துவிட பாதுகாப்புச் செய்ய அல்லது பழுது பார்க்கக் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு கீழ்ப்படியத் தவறுதல் | ஐம்பது ரூபாய் |
| 129 | (1) | ஆபத்தான மரங்களை பாதுகாப்பு செய்ய நறுக்க அல்லது வெட்டிவிடக் கோரப்பட்டதற்குக் கீழ்ப்படியத் தவறுதல் | பத்து ரூபாய் |
| 130 | | கட்டிடம் அல்லது நிலத்திற்கு வேலியிட அல்லது புதர்களையும் மரங்களையும் ஒழுங்கு செய்ய நறுக்கு அல்லது வெட்டி விட அல்லது சுற்றுச்சுவரொன்று உயரத்தை குறைக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு கீழ்ப்படியத் தவறுதல் | பத்து ரூபாய் |
| 131 | (1)(அ) | பொதுச் சாலையில் அல்லது அதன் மீது சட்ட விரோதமாக சுவரைக் கட்டுதல், வேலியெழுப்புதல் முதலியன | இருபது ரூபாய் |
| 131 | (1) (ஆ) | பொதுச் சாலையில் அல்லது அதன் மீது சட்ட விரோதமாக குழிகளை தோண்டுதல் அல்லது பொருட்களை குவித்தல் | பத்து ரூபாய் |
| 131 | (1)(இ) | பொதுச் சாலைகளுக்கு அருகிலுள்ள இடம் எதிலும் சட்ட விரோதமாகக் கல்லை வெட்டி எடுத்தல் | பத்து ரூபாய் |
| 131 | (1) (ஈ) | வடிகால் மீது சட்ட விரோதமாகக் கட்டிடம் எழுப்புதல் | ஐம்பது ரூபாய் |
| 139 | | பொது கேளிக்கைகளுக்கான இடத்தை மூடிவிடத் தவறுதல் | நூறு ரூபாய் |
| 143 | (1) | பொது நல்வாழ்விற்கு இடையூறாக உள்ள அல்லது பாதுகாப்பிற்கு ஆபத்தான பிற இடத்தை நிரப்புமாறு கேட்டு கொண்டதற்கு கீழ்ப்படியத் தவறுதல் | பத்து ரூபாய் |
| 144 | (1) | அருவருப்பான நிலையிலுள்ள அல்லது நச்சுத் தன்மை வாய்ந்த தாவரம் அதிகமாக வளர்ந்துள்ள கட்டிடத்தை அல்லது நிலத்திலிருந்து அகற்றுமாறு அல்லது சுத்தப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு கீழ்ப்படியத் தவறுதல் | பத்து ரூபாய் |
| 148 | (1) | உரிமம் இல்லாமலோ அல்லது உரிமத்திற்கு மீறிய வகையிலோ புதிய தனியார் சந்தை ஒன்றைத் தொடங்குதல் அல்லது தனியார் சந்தையொன்றைத் தொடர்ந்து திறந்து வைத்திருத்தல் | நூறு ரூபாய் |
| 148 | (3) | சான்றிதழ் பெறாத தனியார் சந்தையில் கட்டணங்களை விதித்தல் | ஐம்பது ரூபாய் |
| 150 | | அனுமதியில்லாமல் விலங்கு அல்லது பொருள் எதையும் பொது அல்லது தனியார் சந்தையில் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக வெளியில் வைத்தல் | பத்து ரூபாய் |

| பிரிவு | உட்பிரிவு | பொருள் | விதிக்கப்படக்கூடிய அபராதம் |
|---|---|---|---|
| 155 | (1) | உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்தை மீறிய வகையில் தனியாா் வண்டிபேட்டை ஒன்றைத் தொடா்ந்து திறந்து வைத்திருத்தல் | இருபது ரூபாய் |
| 159 | | உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்திற்கு மீறிய வகையில் ஊறு விளைவிக்கும் அல்லது ஆபத்தான தொழிலுக்காக ஒரு இடத்தை பயன்படுத்துதல் | இருபது ரூபாய் |
| 160. | | தொழிற்காலை, பணிமனை முதலியவற்றைச் சட்ட விரோதமாக எழுப்புதல் | நூறு ரூபாய் |

# இணைப்பு பட்டியல் - IV
# பிரிவு (245ஜ காணவும்)

1. வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்கிய வேளாண்மை
2. நில மேம்பாடு, நிலச்சீர்திருத்தத்தை கொண்டு வருதல், நில ஒருங்கிணைப்பு மற்றும் மண் வளம் காத்தல்
3. சிறு பாசனம், நீர் மேலாண்மை மற்றும் நீர்பிடிப்பு மேம்பாடு
4. கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை மற்றும் கோழிப்பண்ணை
5. மீன் வளம்
6. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்
7. சிறிய காடுகளின் உற்பத்திப் பொருள்கள்
8. உணவைப் பதப்படுத்தும் தொழில், உள்ளடங்கலான சிறு தொழில்கள்
9. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்
10. ஊரக வீட்டு வசதி
11. குடிநீர்
12. விறகு மற்றும் தீவணம்
13. சாலைகள், சிறு பாலங்கள், பாலங்கள், நீர் வழிகள் மற்றும் பிற தொடர்பு வழிகள்
14. மின்சாரம் விநியோகம் உள்ளடங்கலான ஊரக மின் இணைப்பு
15. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்
16. வறுமை ஒழிப்பு திட்டங்கள்
17. தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கலான கல்வி
18. தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் கல்வி
19. வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி
20. நூலகங்கள்
21. பண்பாடுகள் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள்
22. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்
23. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளடங்கலாக சுகாதார மற்றும் துப்புரவு
24. குடும்ப நல்வாழ்வு
25. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு
26. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நலன் உள்ளடங்கலாக சமூக நலன்
27. நலிவுற்ற பிரிவினர்களின் நலன் மற்றும் குறிப்பாக ஆதிதிராவிடர் வகுப்பினர் ஆதிதிராவிட பழங்குடியினர்
28. பொது விநியோக முறை
29. சமூகச் சொத்துக்களைப் பேணுதல்